பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# இராஜமணிமாலை.

நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமர்கள் அரசு நிலையும், அவர்கள் உபாத்தும் அமீறுல் மூமினீன் அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹவர்க ளரசுநிலையும், அவர்கள் உபாத்தும் அமீறுல் மூமினீன் உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களரசு நிலையும், அவர்கள் உபாத்தும், அமீறுல் மூமினீன் உதுமான் றலியல்லாஹு அன்ஹவர்க ளரசு நிலையும் அவர்கள் உபாத்தும், அமீறுல் மூமினீன் அலிறலி யல்லாஹு அன்ஹவர்க ளரசுநிலையும், அவர்கள் உபாத்தும்.

---

இமாம் ஹசன் றலியல்லாஹு அன்ஹு, இமாம் ஹுசைன் றலியல்லாஹு அன்ஹவர்க ளரசுநிலையும், அவர்களுபாத்தும் அசன் றலியல்லாஹு அன்ஹவர்களின் சிகாமணியாகிய குமாரர் என்னும் ஸைனுல் லாபிதீனவர்க ளரசு நிலையும்

சொல்லப்பட்ட

## இராஜமணிமாலை.

மகாகனம்பொருந்திய இளையாங்குடி நயினா முஹம்மது ஆசாஹிபவர்களிடத்தி லுரைவாங்கிச், சோதரகுடியிலிருக்கும் ஊ. பிச்சை ராவுத்தரவர்களின் குமாரர் பக்கீறு மதாறுப்புலவரவர்கள் பாடியதை

சென்னை

இட்டா-சக்கரபாணி நாயுடு

அவர்களால்

டிஷ் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1922. [ரூபா 1 4 0

ஹிஜ்ரீ 1339-ஹு

Q7
N22
22431

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# இராஜமணிமாலை

நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமர்கள் அரசு நிலையும், அவர்
கள் உபாத்தும அமீறுல் மூமினீன் அபூபக்கர் சித்தீக்கு றலி
யல்லாஹு அன்ஹவர்க ளரசுநிலையும், அவர்கள் உபாத்தும்
அமீறுல் மூமினீன் உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு
அவர்களரசு நிலையும், அவர்கள் உபாத்தும், அமீறுல்
மூமினீன் உதுமான் றலியல்லாஹு அன்ஹவர்க ளரசு
நிலையும் அவர்கள் உபாத்தும், அமீறுல் மீமினீன்
அலிறலீ யல்லாஹு அன்ஹவர்க ளரசுநிலையும்,
அவர்கள் உபாத்தும்.

---

இமாம் ஹசன் றலியல்லாஹு அன்ஹு, இமாம் ஹுசைன்
றலியல்லாஹு அன்ஹவர்க ளரசுநிலையும், அவர்க
ளுபாத்தும் அசன் றலியல்லாஹு அன்ஹவர்களின்
சிகாமணியாகிய குமாரர் என்னும் ஸைனுல்
லாபிதீனவர்க ளரசு நிலையும்
சொல்லப்பட்ட

## இராஜமணிமாலை.

மகாகனம்பொருந்திய இளையாங்குடி நயினா முஹம்மது ஆலீம்
சாஹிபவர்களிடத்தி லுரைவாங்கிச், சோதரகுடியிலிருக்
கும் ஊ. பிச்சை ராவுத்தரவர்களின் குமாரர் பக்
கீறு மதாறுப்புலவரவர்கள் பாடியதை


சென்னை

இட்டா-சக்கரபாணி நாயுடு

அவர்களால்

பிரிடிஷ் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1922. [ரூபா 1-4-0.

ஹிஜ்ரி 1339-ஞு

## பக்கீர் மதாறுப் புலவரவர்க ளியற்றியது.

கலித்துறை.

எல்லா நபிக்ட்கு முன்னமதாக விலங்கவந்த
நல்லோர் முஹம்மதும் யார்களும் பேர்கள் நானிலத்தில்
வல்லோன் கிருபையில் ராஜாங்கஞ் செய்த வசனங்களை
மல்லிகை யிராச மணிமாலையாக வழுத்தினனே.

---

## ஹபீபு முஹம்மதுப் புலவரவர்க ளியற்றியது.

விருத்தம்.

பாமணக்கு மிராஜமணி மாலையதாய்ப் புவிமீதிற் பகர்ந்தான்மேன்மை
நாமணக்குந் தன்மயதாய் நல்கின்னிம் மண்டலத்து ணயமிக்கோங்கப்
பூமணக்குந் தடஞ்சோலைப் புடைசூழ்ந்த சோதரக் குடியின்மீதில்
மாமணக்குந் தமிழ்க்கடலைக் கடந்தபக்கீற் மதார்ப்புலவன் மவுல்கின்றுனே.

---

## மீறுன் கனிப்புலவரவர்க ளியற்றியது.

விருத்தம்.

கதிபழுத்த புனிதநேறி ஹபீபிறசூல் யார்களுக்கும் கனியின்பாலர்
துதிபழுத்த சரிதையெல்லா மிராஜமணி மாலையெனத் துலக்கஞ்செய்தான்
நிதிபழுத்த சோதரக் குடிதனிலே நேர்மையுட னுதித்தனேக
மதிபழுத்த தொல்கலை முற்றுணர்ந்த பக்கீர் மதாறுநா வலனென்போனே.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# இ ரா ஜ ம ணி மா லை.

நபிஸல்லல்லாஹு அலைஹிவசல்லத்துடைய சரிதையும், நாலியார்களுடைய சரிதையும், இமாம் ஹுஸைனர் அவர்களுடைய சரிதையும் காஸீம் அலியக்குபர் முஹம்மது ஹனிபா அவர்கள் சரிதையும், ஸையினுல் ஆபிதீனவர்கள் சரிதையுஞ் சொல்லப்படும்.

## இராஜமணிமாலை.

### காப்பு—அறுசீர் விருத்தம்.

பூமலர் வாசம் போலே பொருந்தியே சமதா யெங்கும்
மேவிய வுயிர்கள் யாவும் விளங்கவே யமைத்துப் பூவிற்
சோபித மாகவெல்லாந் துலங்கிய தூய கோவே
நாவினற் கவியான் சொல்ல நாதனே காப்பு நீயே. (1)

புதியவ னுண்மைத் தூதாய்ப் புவிதனில் நபிமார்க் கெல்லாம்
அதிபதி யாகத்தோன்றி யருங்குபிர் களைந்து தீனை
மதியென வளரச்செய்த முஹம்மது நயினார் தம்மின்
கதிமலர் பாதம் போற்றி ஹக்கதனைத் துதிசெய்வோம். (2)

### தொங்கல்.

வா[illegible]னோர் தமக்கெ[illegible]லாங் குருவதாகி வல்லோன் கிருபையாற் புயில்வந்த
தே[illegible]யத் தபூபக்கர்தங் திருவடி போற்றியே பணிந்து
தானேன[illegible]ம்மதை யுவந்து போற்றிச் சங்கைபாகவே அரசுசெய்து
தீஞ்ந் து[illegible]வ தருமமீந்த திருவினுமறுகத் தாபைப் போற்றி. (3)

இறைவ ன[illegible]து நபிக்கனுப்பு மிலங்கும் வேதத்தைக் கோர்வைசெய்தே
மறை[illegible]வப்பான வுமதுமானினல் மலரடி போற்றி யான்பணிந்தே
தி[illegible]னிறையவ னருமைத் தூதாய்ச் செகத்தி லேவந்த விறசூலுல்லா
[illegible]மிகீவுள்ள மருகரலி யண்ணல் பதம்புகழ்ந் தேற்றுவனே, (4)

சுவனத் தமரர்கோன் தொட்டி லாட்டத் துயிலு நவமணி யானபாலர்
தவங்கள் தனில்வந்த ஹசனுசைனர் தாங்கள் மலரடியான் போற்றியே
கவன வாம்பரி தனைநடத்தும் காசி மலையக்குப் பறுகத்ததை
புவனந் தனில்நெஞ்ச மீதில்மிகப் புகழ்ந்து வாழ்த்தியே புகழுவேனே. (5)

திங்கள் வதனத்தி னிறசூலுல்லா செவில்தானீன்ற ஹசனர் வள்ளல்
சங்கை யாகிய தவத்தினாலே தாலந் தனில்வந்த காரணீகச்
செங்கை யுளவேந்தா யுதித்தபாலர் ஸெய்னு லாபிதீ னரசருட
தங்க மயமான பாதம்போற்றித் தாலந் தனில்யானுந் துதிசெய்வேனே. (6)

காவின் தருவளர் பகுதாதில் வாழ் கருணைக் கடலான அபுசாலிஹா
பூவி லவர்செய்த தவத்தினாலே புதியோன் கிருபைமா லுதித்தபாலர்
பாவுக் கிசைதரு முஹியித்தீனின் பாத மிரண்டு மென்சிரமேல் வைத்தே
னாவுக் கிசையவே யருள்புரிவீர் நன்முஹியித்தீன் குதுபொலியே. (7)

சுவனந் தனக்கொரு மணிவிளக்காய்த் துலங்கு முஹியித்தீன் பேராக
அவனி தனிலுள்ள மாணிக்கப்பூ ரசன்குத் தூசருள் பாலராக
நவமா மணிபோலே புவியில்வந்த நாகூர் ஹமீதொலி யாண்டகையைத்
தவமா யான்போற்றி மணிமாலையின் சரிதை தனையெடுத் துரைசெய்வேனே

மருப்பொதி மாலை புயந்தாகிய முஹம்ம திறசூலின் மணிமாலையைத்
திருப்பத்தூர் வாழுந் தீனோர்களின் செல்வனெனும் லாலா மிய்யான்சாஹிபு
வரப்ர சாதத்தா லுதித்தபாலன் மதியோன் முஹம்மது கான்சாஹிபு
தரைத்தலம்மீதில் மணிமாலையாய்ச் சாற்றும் படிசொன்ன சங்கையாலே (9)

திங்க ளழகான பள்ளிவாசற் சிறந்தங் கிலங்குமங் கலக்குடியிற்
சங்கை பொருந்தவே மணிமாலையின் சரிதை ரைசெய்ய மனமகிழ்ந்து
செங்கை பொருந்திய தீனர்வாழ்கச் செழிக்கு மழைமாரி வருஷிக்கவே
எங்கும் நிறைந்தோனே கிருபைசெய்வாய் எல்லாப் பறகத்தும் வளர்ந்தேறவே

---

## நாட்டுச்சிறப்பு.

### அறுசீர் விருத்தம்.

திருமுஹம் மதுதங் கீர்த்தி ஜெகமெலாம் பெருக மிஞ்சி
நெருங்கிய வெள்ளை மேகம் நிறைகட லிறங்கித் தண்
பருகவுஞ் சூலுண்டாகிப் பாரெல்லாப் ஜொலிக்க ப
பெருகிய நதியின் வெள்ளம் பேரொலி யான தம்மா (11)

கன்னலங் கழனி தோறுங் கதிர்நெல் விளைவ தாகி
இன்னிலந் தனிலே யாரு மின்பமு மகிழ்ச்சி பொங்க
அன்னம துண்டு மெய்யி னுசியைப் புகழ்ந்து போற்றி
நன்னிலை பொருந்து மக்கம் நற்றவம் பெற்ற நாடே. (12)

### எழுசீர் விருத்தம்.

மதிதவழ் வதுபோற் சுதைமிக விளங்க வரையெனத் துலங்கிய மாடம்
நதிகனம் பெருகித் தருமமும் வளர்ந்து நேர்மையும் வணக்கமுந் துலங்க
நதியிலும் பெருக்காய்த் தீனவர் யாரும் நாயனைத் தொழுந்தவ மோங்கிப்
பதிகளுக் கரசாய்ப் புவிதனில் விளங்கும் பலனருள் பெருகுமா மதினம். (13)

கடைகளுந் தெருவு மாளிகை யெவையும் கனகங்கொ ளிரைச்சலி ஞர்ப்பும்
தொடையல ரணிந்த பேர்கள்யா பாரந் துலங்கிய வாய்மையி ஞர்ப்பும்
கடலென முழங்கு மோதையின் மேலாய்க் கவின்முஹம் மதுசலவாத்தின்
செடிகளுந் துலங்கி மதியென வளருங் கிருபைகள் பொருந்துமா நகரம். (14)

### தொங்கல்.

எல்லாம் படைத்தவன் கிருபையரு ளிலங்கு முஹம்மதின் மணிமாலையில்
வல்லோ னபியுல்லா வறலாற்றினை வழுத்தக் கேளுங்கள் சிலகாரணம்
சல்லல் லாநபி தயாபரரைத் தனியோ னொளிவினில் வெளியாக்கியே
மல்லி மலர்வாச ரொளிவானதை மவுனத் திறையவன் சுவனமீதில். (15)

முத்து மணியாக வமைத்திறையோன் முன்பிலே வைத்தே மனம் பூரித்தான்
சுத்தம் பொருந்திய முத்தானதைத் துலங்கும் மயிலாக அமைத்ததனை
மெத்த நாள்மட்டும் கடுகையீந்தான் விளங்கும் வயதினை யிறையறிவான்
சித்த மிகவாகி யாதிநாயன் சிறந்த கிந்திலாயத் துலங்கச் செய்தான். (16)

ஆதந் தொடுப்பாக வருநபிமா ரவர்கள் தலைமுறை யைம்பத் தொன்றில்
நீதம் பெருகிய மக்கமென்ற நிலத்தி லப்துல்லா நுதலிலாகிச்
சோதியாகவே துலக்கமாகித் துலங்கும் ஆமினர் வயிற்றி லாகித்
காதம் பரிமளங் கமகமென்ன ஹபீபு முஹம்மது நபி யுதித்தார். (17)

தேசந் தனக்கெல்லா மணிவிளக்காய்ச் செல்வர் வளரும்நாட் விதுமைகோடி
போசா வயதுதா னிருபத்தைந்திற் புவியில் கதீஜாபால் நிதியம்வாங்கி
வாசம் பொருந்தவே சாமூரேகி வாணிபம்செய்தே பறக்கத் தாக
நேசர் தாம்வந்து மக்க மென்றே நிலத்திற் குபலீது மகளார் தம்மை. (18)

மணந்தான் சூட்டியே வாழுநாளில் வல்லோன் கிருபையால் தீனுண்டாக்கிக்
குணங்களாகவே யிருக்கும் நாளிற் குலத்தோ ரெழுதிய நிருபத்தாலே
கணங்கள் பொருந்திய திமுசுதேச ஹபீபு ராஜனு மக்கம் வந்தே
மனம்போல் மதிதனை யழைக்கச்செய்து மற்றுமேரொடுதானு மிசுலாத்திலாய்.

தீனுந் [illegible]லங்கவே யிருக்குநாளிற் சிறந்த பெரியவ னுதவியாலே
ம[illegible]ணை நின்ற நபிநாயகம் வந்து மதினத்தி லரசராகி
வா[illegible]ரோர்கள் மிகவும் போற்ற வையந் தனிலுள்ள அரசர்களை
நா[illegible]தனில் தீனிலாக்கி நாலியார்களும் புடைகள் சூழ. (20)

மன்[illegible] ரசுஹாபி மார்கள் வாழ்த்த வானின் கார்மேகங் குடைநிழற்ற
ம[illegible]று மரசர்கள் திறையளக்க விலகும் வாசனை கமகமென்ன
அண்ணல் முஹம்மதின் மகளார்களி லழகுபொருந்திய பாத்திமாவை
மி[illegible]னுங் கதிர்மேனி அலிதமக்கே மேலோ னுதவியால் மணஞ் சூட்டினர்.

ஆதியருளாலே பாத்திமாவு மலியு மனமகிழ்ந் திருக்கு நாளில்
நீதிபொ[illegible]வன் கிருபையாலே நிலத்தி லசனுசை னுருதித்தார்
நாதர்முஹம்மதும் பேரன்மாரை நல்லோர் அருமையாய் வளர்க்கும்போதிற்
சோதி யவனுட கிருபையாலே துலங்கும் செல்வங்கள் வளர்ந்தேறவே. (22)

மக்க மதினமும் சீனமீள மகரி புக்கட்டு கைஸர்தேசம்
மிக்க புகழான வெமன் ராச்சிய மிசுறார் குருசானி காஹா ஜங்கும்
சிக்கந் தாவுடன் திமுசுநாடுஞ் சிறந்த சுகுறுவும் திருப்பற் றாரிற்
றிக்கில் ளவிங்கிய தேசராஜர் திறைகள் தான்கட்டி வருவார்களும். (23)

நிதிகள் தனையெல்லாம் நபிநாயகம் நிலத்தில் பைத்துல்மால் தனைநிரப்பி
மனமீ துள்ள தீனோர்க்கெல்லாம் வழங்குவார் தர்ம மிகமிகவே
அதிபர் கொடுக்கின்ற வரிசைவாங்கு மசுஹாபிகளெல்லா மகிழ்ச்சிபொங்கப்
பதியில் வளர்நீதம் பெருகிவாழும் பாரிலெனும் செல்வம் வளர்ந்தேரியே. ()

சோம னழகான பள்ளிவாசற் றுலங்கு மங்கலக் குடிமீதினில்
நாமந் றுலங்கி மதிமுகத்தார் நல்லோ ரெனுமப்துல் காதிர் லெப்பைக்
கோமா னருளாலே தவங்கள் செய்து குவலயந்தனில் லீன்றபாலன்
ஈமான் மிகவுள்ள இல்முதாரி யிலங்கு மதிமுகத் தழகில் வாசன். (25)

குஞ்ச ரம்போலே மனதயாளன் குறுஆ னோதலின் குயிலோசையான்
கஞ்ச மலர்ப்பத நபியைப் போற்றுங் கனவா னைமல்லா பிச்சை லெப்பை
மஞ்சு கொடையிடும் நபியிறசூல் வள்ளல் முஹம்மதின் சரிதை கேட்டு
நெஞ்சந் தனிலேதா னோர்மையாக நிலத்தில் மிகப்பெற்ற செல்வம்போலே.

தீனுந் துலங்கவே நபியிறசூல் செழிக்கும் பயிர்விளைத் திருக்குநாளில்
மானும் புலியுடன் மாடாடொட்டை வந்தோர் துறையிலே புன லுண்ணவே
வானின் ஜிபுரீலு நபிபால்வந்து வல்லோ னெடுசொல்லும் வரிசைகளும்
தேனின் மலர்மாலை புயங்கள் தாங்கித் திருமுஹம்மது நபியிருந்தார். (27)

மல்ல லம்புய நபிநாயகம் வல்லோன் தனைப்போற்றி யிருக்கும் நேரம்
எல்லாம் படைத்தவ னெடுதான் கொண்டங் கிறங்கி னார்புவி தனிற்ஜிபுரீல்
அல்லா சலாம்சொன்னான் ஹபீபேயென்றே ஆலநபியுடசமுகத் துற்றார்
சல்லல்லாநபி பிரத்தியோதித் தனியோனெடுகேட்டே யிருக்கும்போதில். ()

அங்கே ரந்தனி லலிதம்பால ரசனு ருசைனும் நபிபால்வந்தே
மின்னும் ஜிபுரீலின் மடிமேலாக விரும்பியிருந்தாரே யிருபாலரு
மென்னும் பெரியவன் றகுமத்தரு ளென்றே அமரர்கோன் மனமகிழ்
மன்னர்மிகபோற்று நபிநாயக மனதி லொரு வெண்ணந் தானுகியே. ([illegible]9)

சந்த்ரவதனத்தின் பேரன்மாரைத் தான்பார்த் துரைசெய்வார் ஹபீபு[illegible]
[illegible]மெந்த விதத்தாலே ஜிபுரீல்மடி யிருக்க லாநீங்க ளிருபேர்களு
[illegible]ந்த நிமிஷத்தி லிறங்குமென்று ரியம்புவாரப்போ ஜிபுரீலுமே
[illegible]த ரங்குடை யிடுநபியே வரிசை முகம்மதே மணிவிளக்கே. (30)

சிந்தை பூரித்தேன் மனம்பொருந்தும் செல்வ ரெனதுட மடியிலாக
வெந்த விதத்தினாற் பேரன்மாரை யெனது மடியைவிட் டிறங்கச்சொன்னீர்
கந்தம் கஸ்தூரி வளர்நபியே கருத்தை யுரையுமென்றார் ஜிபுரியீல்
அந்த மொழிக்கெதிர் நபிநாயக மருளு வாரப்போ தமுத வாயால் (31)

எல்லா வமரர்க்கு மதிபராக விறையோ னம்மைத்தா வமைத்தானென்ன
வல்லோன் ஜெபுறயீல் மடியின்மேலே மதலை யிருக்கவுந் தகுமதாமோ
உல்லாசமுள்ள ஜிபுரியீலே யுள்ள சேதிக ளிதுதானென்ன
அல்லா வுடசொல்லை யருளுங்கோவே ஆயாசம்வேண்டா மனதிலென்றார். ()

அண்ண லுரைகேட்டே அமரர்கோனு மருள்வா ரமிர்தம்போல் நபிதம்பாலி
லென்ன முகம்மதே நபிசல்லமே யிவர்களிருவர்க்கு மிறையோன்சொல்லல்
மன்ன நான்வந்து பணிவிடைகள் வாகாகச் செய்தே யிருக்குகின்றேன்
முன்ன ராதிதா னோரிரவில் மொழிந்த வரலாற்றைக் கேளுமென்றார். (33)

அலியும் பாத்திமா வுந்துயில்கால் அழுதா ருசைனரு மவனிமீதில்
நலமா யெனைவந்து புவிமீதினில் நாயனே தொட்டி லாட்டுமென்றான்
தலமேல் நான்வந்தே யுசனருக்குத் தாலாட்டருளியே யிருந்தே னென்னக்
குலமானுடபாலர் மடிமேலானாற் குற்ற மிருக்குமோ நபிநாதரே. (34)

ஆதி யருளினா லிருபாலர்க்கு மனேகம் பணிவிடை செய்யலாகும்
சோதி துலங்கிய பேரன்மார்கள் சுயமா யெனதுட மடியிலானார்
நீதி மிகவுள்ள சுபசோபனம் நிறைந்த றகுமானும் கொடுத்தா னென்றும்
சீதம் பொருந்திய மனமீதெல்லாம் செல்வ மடைந்தேனன் யாறசூலே (35)

அதுகேட் டகுமது நபியும்சொல்வ ரகவல் தனைகேளும் ஜபுறயீலே
மதியி னழகான பேரன்மார்கள் மடிமேலாகிய கருத்தைக்கேளீர்
பதியின் மீதினிற் றேப்புகார்க்கும் பாங்கார் தகியத்துக் கல்வியாரும்
மதிபோ லழகான மாதுளத்தின் வர்க்கங் கொண்டுவந்தே யிவர்கட்கீவார். ()

அவரே தானென்றே யெனதுபேர ரருமையாயுங்கள் மடியிலானார்
தவமும்பெருகிய ஜெயபுறயீலே சார்ந்த பாலர்கள் கருத்தீதென்றார்
நவமா யமரர்கோ னிதனைக்கேட்டு நலாம் வானத்துக் கப்பாலுற்றுச்
சுவனந்தனிலுள்ள தோப்பானதிற் துலங்கு கனிகொய்தே புவியில்வந்தார். ()

வந்து நபிபா[illegible] பேரன்மார்க்கு வழங்கி னார்கனி மாதுவளைச்
சிந்தை[illegible]கிழ்ச்சியா யிருபாலரும் சிறந்த கனிவாங்கிப் பகுந்துண் கையில்
வந்தி[illegible]கிபுலீசு மிரவலர்போல் வடிவந்தானுக்கிக் கரநீட்டியே
யெந்த[illegible] பசியாற வெனக்கோர் கொட்டை ஈயவேண்டுமென் றியம்பினனே.

இதுகண் டமரர்கோ னமுதவாயா லியம்பின ரப்போ கோபமாக
மதுவன் கனிகேட்ட மாயோனிடம் வசன மோதிய வகையே தென்றார்
பதிலொன் றுரையாம லிபுலீசவன் வனவா சந்தனிலேயோடினான்
விதுவின் கதிர்மேனிச் சிபுரியீலும் விசும்பி லானாரே புவிநீங்கியே. (39)

மறுநாட் காலையில் நபியிறசூல் மாளிகையின்மீதி லிருக்கும்போது
பெரு நாளாகவே மதினமுள்ளோர் பிரிய மிகவாகிப் பாவர்க்கெல்லாம்
வரிசையாகவே துகிலுடுத்தி வாசம் பரிமள மிகத் திமிர்ந்து.
குறைஷிக்குலத்தோர்கள் செல்வரெல்லாங் கூட்டமாய்நின்றே விளையாடினர்.

அன்ன காலையி லசனுசைனு ரவர்க ளுடுப்புகள் தன்னைப் பார்த்தே
தன்னு ளிருவரு மழுது வாடித் தாரையாகவே கண்ணீர்விட்டே
பன்னு முஹம்மத ரிடத்தில் வந்தே பகர்கண்ணீர்விட்டே யியம்புலானார்
மன்னர் மிகப்போற்று நபிசல்லமே முஹம்ம தெனுமெங்கள் பேரனரே. (41)

இன்னு ளர்னது பெருநாளென்றே யிருக்கு மதினத்தார் குழந்தையெல்லா
மின்னும் பலவன்னத் துகிலணிந்து விளையாடுகிறா்கள் பலமாகவே
மன்னரே யெங்கள் முஸ்தபாவே வழங்குந் துகிலுக ளிருவர்க்கென்றே
முன்னு லசனுசைன் கண்ணீர்விட்டு முஹம்மதிடந்துகில் கேட்டுநின்றார். (42)

மறையி லுவப்பான நபிநாயகம் வச்ர மணிமாடந் தனைத் திறந்தே
அறைகள் தனைபார்த்தா ரவ்விடத்தி லவர்கள் தமக்கான துகிலில்லாமற்
றிரையின் மணிமுத்தாயிலங்குமான சிறந்த அசனுசைனர்கள் தம்மை [வார்
யுரையி னழுதவாய்ப் பாலர்கண்ணீ ருடையோனபிகையாற் றுடைத்தோது

மல்ல லம்புய நபிநாயக மடிமேற் பேரன்மார் தம்மை வைத்துச்
சல்லாபமதாக விரையைப்போற்றித் தபக்கமாகவே யிருக்கு நேரம்
அல்லா பெரியவ னிதை யறிந்தே யருளு வானப்போ ஜிபுரியீல்பால்
உல்லாச முள்ள அமரர்கோனே யுலகந் தனிலேதா னபியின்பேரர். (44)

கவன மிகவாகித் துகில் கேட்பதாற் கதிரின் வெண்துகில் விரைந்தெடுத்தே
புவனந் தனிலாகி நபிபேரர்க்குப் புகழ்ச்சியா யீந்தே வாருமென்றான்
சுவனந் தனில்வந்தே ஜிபுரியீ லும் துலங்கும் வெண்துகி லிரண்டெடுத்தே
புவியி லிறங்கியவ் வமரர்கோனும் புகழ்ச்சியாய்நபி கரத்திலீந்தார். (45)

மயிலின் வடிவென விறசூலுல்லா வாங்கித் துகில்களைப் பேரர்க்கீயத்
துயராயழுகிய அசனுசைனர் துலங்கும் வெண்பட்டு வேண்டாமென்றே
ஜெயங்கள் தானுள்ள நபிதம்பாலிற்செகப்புடன் பச்சைத் துகில்தாருமென்று
நயங்கள் பொருந்திய விருபாலரும் நபியின் வதனம்பார்த் தழுதாரப்போ.(46)

திங்கள் வதனத்தி னபிநாயகம் சிறந்த வெண்பட்டைப் பார்க்கும்போது
தங்க நிறமாகச் செகப்புப் பச்சை தானே துலங்கின்ற துகிலெடுத்தே
மங்கு லிடுங்குடை நபியிலசூல் வழங்கினாரப்போ பேரன்மார்க்கே
யெங்கும் துலங்கிய பட்டீதென்று மெடுத்தே யணிந்தார்களிருபாலரும் (47)

பச்சைத்துகில்தனை அசனணிந்தார் பாங்காயுசைனரு செம்பணிந்தார்
வச்சிர மணிப்புயந் திருப்பாலரும் வானின் துகிலுகள் தனையுடுத்தி
அச்சி லடித்தாப்போர் கதிரமேனிக்கு மழகு பொருந்திய துகிலாடைக்கு
முச்சத்திருக்கின்ற கதிரவனு மொளித்தாள் மேகத்து ளவன்வெட்கியே.(48)

அங்கே ரந்தனில் நபிநாயக மசனை ருசைனர்தம் மழகைநோக்கி
யென்று நலமுள்ள மனமகிழ்ந்தே யிறசூல் முஹம்மது மிருக்குநோ
மின்னும் சிறகுள்ள ஜிபுரியிலும் விசனமிகவாகிக் கண்ணீர்விட்டார்
மன்ன ரிறசூலு மிதையறிந்து வழூத்துவா ரப்போ ஜிபுரீலிடம். (49)

நல்லோ ரமரரே சொல்லக்கேளும் நயனத் தினிற்கண்ணீ ரேன்விட்டீர்கள்
சொல்வீ ரெனதிட மிப்போதென்று துலங்க முஹம்மது நபியுங்கேட்டார் [வா
வல்லோன் ஜிபுரீமீ திதனைக்கேட்டு வதனத் துறுங்கண்ணீர் துடைத்தேசொல்
ரெல்லா பறக்கத்தும் பெற்றகோவே யென்ன நான்சொல்வேனிப்பூமியில். (50)

தஞ்ச முடையவ னசனருக்குத் தாலந் தனிலிட்ட விதியைக் கேளீர்
மஞ்சு குடையிடும் யாறசூலே மானி லந்தனி லசனர்வள்ளல்
குஞ்ச ரங்கரித் தளங்களோடு குவல யந்தனி லரசாளுநாள்
வஞ்சக முள்ள வுமையாக்கீல வம்ப னெருத்தனற் பகையுண்டாகி. (51)

வெஞ்சமர் செய்தே அலிபாலரை வெல்ல முடியாதங் கவனலென்ன
கஞ்ச மடமாதை யிவருக்கீந்தே கலியாணம் செய்தே அசனர்வள்ளல்
பெண்சொல் லதினலே பேரனரும் புத்தி மயங்கியே யிறைவிதியால்
நஞ்சுப் பானகந் தனைகுடித்து நாத ரசனரும் பதவிசேர்வார். (52)

மதியி னழகான வுசைனர்வள்ளல் மானி லந்தனை யரசாளுநாட்
பதிவிட் டவரேகு பாலையிலே பகைவர் மிகவந்தே வளைந்துகொண்டு
சதிக ளாகவே சிரமறுப்பார் தனியோன் பதவியி லவர்சேருவார்
துதிகள் மிகச்செய்யு மிருபாலரின் துயரந் தனையெண்ணி யழுதேனென்றார்.

ஈது மொழிகேட்டே யிறசூலுல்லா இருதயக் கண்ணீர் பொழிதலாகி
யோதுவா ரப்போ ஜிபுரியீல்பா லுமையா குலத்திலே பகையாரென்றார்
நாதரே யெங்கள் நபிசல்லமே நம்பும் தமதுட தோழரென்றார்
வாது நடக்கிற பிற்காலத்தில் வையந்தனிலேதா னிருப்பதாரு. (54)

சொல்வீர் நீவிரென் றுரைத்தபோது துலக்குவா ரப்போ ஜிபுரியீலும்
வல்வீர முள்ள நாவியார்கள் வையக் தனிலேதானுபாத்தாகியே
செல்வி பாத்திமா சுவனம்சேர்ந்து ஜெகத்திற் பிற்கால நடக்குமென்றே
கல்வியார் போற்று மமரர்தாமுங் கறுபலா மண்ணைக் கரத்தாலள்ளி. (55)

நபியா முகம்மதின் கரத்திலீந்தே நவிலுவா ரப்போ ஜிபுரிமீலும்
புவியா[illegible]வுசைனரும் பதவிகாலம் பிடிமண் சோரிய தாகு மென்னத்
தவிச[illegible]லிருக்கின்ற ராஜகோவே தால மண்செப்பி லடைத்தேயுங்கள்
நவம[illegible]மனையாரி லும்முசல்மா நலமாங் கரத்திலீந் திடுவீரென்றார். (56)

அன்ன வுரைகேட்டு நபிநாயக மதுபோல் மனைவியார் கரத்தி லீந்தே
யென்னின பேரன்மார் விதிகளீதோ யெனது றகுமானே யாகுதாயே
மின்னும்படியான பாலகரும் விதிக ளிவைதானை வாங்கிவந்தீர்
மன்னர் தனக்கெல்லா மணிவிளக்கே மனங்கள் தயங்கியா வாடுவீர்கள். (57)

ஆதி றகுமானே அசனுசைனுக் கமைத்த விதிதானோ புவியி லென்று
நீதி பெருகிய நாச்சியார்க்கு நிகழ்கதினை ரப்போ திதுசேதியைச்
சோதி மயிலமாதர் மனங்கலங்கித் துலங்கும் பாலரை மடிமேல் வைத்தே
யேது நான்செய்வேன் மகவேயென்றங் கிருதயத்திலே யுருகிச்சொல்வார். (58)

## பதம்.

உங்க டனையன்னை வளர்த்தசீரை யுடையோ னறிகுவா னுயர்மணியே
தயாபரரே மகனே யுங்கழோர்மைகள் ஓர்மைக ளெவரறி வார்புவியில்
தேசமீ தரசாள் வீர்களென்றும் சிந்தையில் நினைத்தேன் மனந்தனிலே
யெனதின் பத்தின் கனியேயென்ன தீவினைதனை யறியேன் புவியில் (59)

சுவன வெண்டுகி லணிந்திடும் பலன் சோதனை யிதுவோ வெனுங்கெதியோ
அவன்விதியோ மகனே பின்னுட்டுயரங்கள் துயரங்கள்உமக்குள்ளதோபலாரே
பெற்றவயிறது பற்றியெரியுதே நற்றவமகனே நவமணியின்தவநிதியேபாலரே
ஆதி பெரியவன் பெரியவன் விதியிஃதோ செல்வரே. (60)

## தொங்கல்.

ஆல முஹம்மது நபிநாயக மருமை யாகவே வளர்த்தபாலர்
மேலோன் றுஞ்சுநா ளெனதுசெல்வர் விசன மடையவும் புவிமீதினிற்
கால விதியினு லுசைனுர்மணி கலக்க மடைவரோ கறுபலாவிற்
சால நெருக்கடி வந்திடுமோ சங்கை யிதுதானோ வென்றழுதார். (61)

மருவின மலர்க்குழல் மாதாவாடி மக்கள் தனைநோக் கியழுகும்போது
திருவி னிறையவ னவியுல்லாவும் சிந்தை கலங்கியே யழுதாரப்போ
தலரயி லுண்டான வுயிர்க ளியர்வுந் தவக்க மாகியே கண்ணீர்விட்டே
யிறையோன் சுவனத்தி னமரோர்களு மிலங்குமாதரு மழுதாரப்போ. (62)

மதியை யழைத்திடு நபிநாயக மகளா ரழுகையை மிகமாற்றியே
பொதுவான புகழ் ஹதீது சொல்லிப் புகழ்சேர் முஹம்மது மனையிலானுர்
பதியினம ரோரும் ககனிலாகிபபடைத்தோன் தனைப்போற்றியிருந்தாரிப்பால்
நதியிற் புனலினை யழைத்த வள்ளல் நாயன் தனைப்போற்றிவிசனமுற்றே (63)

இருந்தார் மனைதனில் மூன்றுநாளா யிறசூல் முஹம்மது நபிநாயக
வரங்கள் மிகவுள்ள அபூபக்கரு மன்ன ருமறுது மானவரும்
சிறந்த தீனேரு மசுஹாபிமார் தேர்ந்த மதியுள்ள மாபியாரு
மறங்கள் வளர்தோங்கும் நபிபால்வந்தே யரிதாய்வணிங்கியே சலாங்கூறினுர்.

மன்னர் முஹம்மதுப் பிரதிசொல்லி வந்த பேர்களை யிருங்களென்று
ர்ன்ன வுரைபோல முசிலிமெல்லா மகம்தி லிருந்துதா னுரைசெய்துவ
என்ன முஹம்மதே யாரசூலே யெங்கள் தனக்கெல்லா தங்க மேரே
யின்னுள் முத்தினம் வரையில் நும்பா லேதுவிசனங்க ளான திப்பே. (65)

சொன்னுற் றெரியுமென் றெல்லோர்களும் துய்ய நபிதம்மைபுவந்துகேட்டார்
கன்னல் மொழிசொல்லி யரசர்போற்றும் ஹபீபுல்லாவுமே யுரைசெய்குவா
ரென்ன நான்சொல்வேன் தீனேர்களே யெனது பேரனுர் துயரங்களைப்
பின்னு லசனுசை னுரையொரு பிலாவா னுமையாவி லுதித்து வந்தே. (66)

நஞ்சாலசனாரைக் கொல்வானென்றும் நாத ருசைனாரைக் கறுப லாவில்
வஞ்ச மாகவே வழிமறித்து வாளாற் சிரசினை யறுப்பானென்றும்
இஞ்சொல் மொழியுள்ள ஜிபுரியீலு மியம்பி விட்டவர்ககனிலானார்
பஞ்சி லெரியுற்ற பாவனை போற் பாரில் விசனமா யிருந்தேன் கேளீர். (67)

புற்றில் லாகிதிவந்திட்டாலும் பகுத்து தீனோர்க்குச் கொடுத்தேனல்லா
வீற்றை நாள்வரை யொருகுற்றங்கள் யானுந் தீனோர்க்குச் செய்திருந்தார்
சுத்த மாகவே நமதுபாலிற் சொல்லிக் கடன் வாங்கு மூமையாக்களே
வைத்துப் பின்செய்ய நினைத்தீராகில் வஞ்சத் தவராவீர் நீங்களென்றார். (68)

ஈது மொழிகேட்டு தீனோரெல்லா மிருதயக்கண்ணீர் பொழிவதாகி
யேது தான்செய்வோமிறைவாவென்று மெல்லாப்பேர்களு முருகிவாடிக்
கோதில்லாதொரு நபியைப்போற்றிக் குலத்தோர் யாவருமுறைச்செய்தார்கள்
ஆதி பெரியவா யாகுதாயே ஆல மீதல்லாம் படைத்தகோவே. (69)

ஈரே ழுலகுக்கு மாதியான விறையே யுனதருட் பெறுநாச்சியார்
பாரி லுவந்தீன்ற பாலர் மீதிற் பகையுண் டாகின்ற பாவிக்கேதா
னோராய் றகுமாநீ யவன்தனக்கு நெருப்பி னரகமே கொடுப்பாயென்றே
மாரி யதுபோலுங் கண்ணீர்விட்டு வழுத்தி யவரவர் மனைகள் சேர்ந்தார். (70)

மாவி யாவாப்போ தனித்திருந்தே வள்ளல் முஹம்மதை யுவர்ந்துபோற்றி
பூவில் நமதுட பேரன்மார்க்கும் பொருதும் பின்பகை யின்னாரேன்றே
நாவா லுரைசெய்வீர் நபிசல்லமே நாய னருள்பெற்ற முஸ்தபாவே
பாவி யுதிப்பஃ தார்குலந்தான் பகரு மெனக்கேட்டார் மாபியாரும். (71)

வல்லோ னருள் தூத ரிதனைக்கேட்டு மனது வருத்தமோ டுரைசெய்தார்கள்
நல்லோர் தோழரே சொல்லக்கேளும் நமக்கே பகையான காரணங்க
ளெல்லோர் தொழுது தான் மிகருப்விட்டிங் கெழுந்து வருகிற நாளதனிற்
பொல்லங் காகவே யுமதுபுயம் புதிதா யென்மூக்கிற் பட்டதாலே. (72)

சமையங் தனிலப்போ நான்தானெண்ணும் தன்மை தனைக்கேளு மாபிமாரே
உமையா குலத்தோற்கும் ஆஷீமோற்கு மூலகந்தனிற்பகைவருமென்றேதான்
நமதுமனமெண்ணுங்கருத்துப் பேர்லேநாயன் ஜிபுரீலுமதுபோற்சொன்னார்
புவியிற் பகைசெய்யப் பிற்காலத்திற் பிறப்பா னுமதுட மகன்தா னென்றார்.

ஈது மொழிகேட்டு மாபியாவு மிதுக்காநமதிடம் பகைதா னென்றே
யேது காரண நடக்குமென்றே யிருநி லத்தினி லடித்து வீழ்ந்தே
ஆதி றகுமானை நினைத்துவாடி யழுது குரல்விட்டே மாபியாருங்
கோ[illegible] கீதென்ன காலமென்றே குதித்து விழுந்தவ ரழுதுசொல்வார். (74)

ஆதி றகுமானே யாகுதாயே ஆலந் தனையெல்லாம் படைத்தகோவே
சோதி பெரியோனே துயில்லாத துய்ய றகுமானே சுடரின்பமே
யேதுநான் செய்வே னிப்பூமியி லெக்கா லத்துள்ள பகைகளீதோ
கோதொன் றணுகாமற் காத்தருள்வாய் தாயே நீயென்று புலம்பினாரே. (75)

## பதம்.

நாச்சியார் பெற்றபாலர் மீதினில் நான்தானே
பகையான் இந்த நானிலத்திலே
காட்சிகாண நபியைப் போற்றிக் காத்திருந்தேனே
வெகு கால மாகவே
யெண்ணி மனது மயங்குதேயிப்போ தெந்தனுதியே
விதி தந்த சோதியே
விண்ணவர் வந்துபோற்றும் பாலரை விஞ்சையாகவும்
பாவி நஞ்சையார் செய்வார்
மந்தரக்குடை வள்ளலாருக்கே மாற்ற மானேனே
பகை தோற்ற மானேனே
யெந்தன் தோழரே யாமுஹம்மதே யிருதயம் நோகுதே
மனமீறி யுருகுதே. (76)

## தொங்கல்.

முன்ன மாபியா வழுதுபாடி முகத்தி லறைந்தவர் வதனஞ்சோர்ந்து
தன்னு லெழுந்துதா னபியைப்போற்றித் தனது மணிமாடம் வந்துநின்றே
அன்ன நடைமாது மனையாளைப்பார்த் தருளுவா ரப்போ மாபியாரு [ளே
முன்னுளெனக்கென்று முளைத்திருந்தாய் முகிலின்குழல்மாதே மொழிமின்னு

பாவி மகனையும் வயிற்றில்வைத்துப் பகையுண்டாக்கவா மணம்கூட்டினேன்
ஏவ லறியாதமடமயிலே யிந்தா வுனதுட மகாவாங்கென்று
பூவி லஷறபி காத்நிலீந்து போடிநீ யென்றே தலாக்குச்சென்னர்
தாவா யேதொன்று முரைத்திடாமற் றந்தை மணிமாடம்போய்ச்சேர்ந்தனள்

ஆலந் தனிலப்போ மாபியாரு மகத்தில் நினைந்தாரே யோர்மையெண்ணம்
கோல மணஞ்செய்யும் கோதையாளைக் குவல யத்தினில் விலக்கிவிட்டோம்
வால கதிர்மேனி யலிபாலர்க்கு வையந் தனிலேதான் பகைவராது
மேலோன் தனைநாடி யிருந்துநாமும் விதியின் தவம்நாட்டமாவோமென்றே.

மனதில்மாபியா வருத்தம் நீங்கி வள்ளல் முஹம்மதை யுவத்துபோற்றிக்
கனமும் பொருந்திய வணக்கமாக ஹக்கன் தனைநாடி யிருக்கும் நாளி
லினத்தார் யாவரு மிறைதம்பேரி லின்பு மிகவுள்ள யிரியமுற்றார்
வனத்தில் மானுக்குப் பிணையாய்நின்ற வள்ளல் முஹம்மதுபிரியம்பொங்கி (80)

மேலோ னபியுல்லா மிகுருபினில் விளங்கும் வணக்கந்தான் முடிந்தபின்னர்
நாலியார்களும் புடையற்சூழ நாற்பத்தீ ரஸ்பு அசுஹாபிமார்
பாலி லிருக்கவே மாபியார்க்குப் பாங்கா யுரைசெய்தார் நபிநாயகம்
ஆல மீதினில் மிசுறுர்ப்பதி சார்ந்த நாட்டுட னரசாளவே. (81)

மாபி யாருக்கே நன்கொடைகள் வழங்கி னேனிப்போ புகழதாகப்
பூவி லனைவரு மறிவீரெனப் புகழ்சேர் முஹம்மது நபிசொன்னுர்கள்

நாவி னுரைசெய்த வசனங்கேட்டு நாலியார்களு மசுஹாபிமார்
மேவித் தவஞ்செய்யும் யாறகூலே விரும்பிப் புகழ்ந்தேத்தி யிருக்கும்போதில்

முன்னுற் கடிதமு மிசுறவர்க்கு முஹம்ம தெனுநபி யெழுதியீந்தே
மன்ன ராக்கியே மாபியாரை வானக் கதிர்போலே துயிலணிந்து
மின்னும் படியான மகுடஞ் சூட்டி வெற்றிப் பரிமீதி லேறச்செய்தே
தன்னின் முசிலிம்கள் சிலபேருடன் சங்கை யாகவே யனுப்பிவைத்தார். (83)

வந்தார் மாபியா மிசுறாருக்கு வாகார் முசிலிம்க ளெதிரியாகிச்
சந்த்ர னழகாள குடைதுலங்கச் சரியாக நின்று கட்டியங்கூற
விந்தை யாகிய முரசடிக்க விளங்குங் கவரிகள் மிகத்துலங்க
வெந்த முசிலிமும் வந்துபோற்ற விருந்தார் கதிர்ச்சிம்மா சனத்தின்பேரில்.

உமையா குலத்தோர்க ளுவந்துவாழ்த்த வுடையோதவங்களும் பெருகிவாழ்க
வமையும் நாட்டார்கள் வந்துகாண்க வருமை யாகவே திறையளக்கக்
குமிசு விளங்கிய சிம்மாசனம் குதாயி னருளென்றே யிருந்துமன்னர்
தமது மனமுள்ள தாயாளம்போலே தர்ம நீதமா யரசாளுநாள் (85)

அரச ராயுற மாபியாவு மனேக நெறிநீதம் வளருநாளி
லிறையோன் விதியது தவறிடாம லிலங்கு மாபியா ரொருநாளினில்
மருவின் மலர்மாலை புயங்கள்தாங்கி வாசம் பரிமள மிகத்திமிர்ந்தே
யிரவு தனிலேதான் பரமதாக விருந்தா ரரசரும் குளிர்காலத்தில் (86)

கங்குல் மழைமாரிக் காலமீதிற் கண்டுயில் செய்தங் கவரெழுந்திஸ்த்
திஞ்ஜா தனக் கந்தமாபியாரும் மெழிலாய் வெளிவந்தே யிருந்தாரப்போ
தங்கு மிடத்திலே மண்கட்டிதான் தகர்ந்து மழையினு லிளகலாலே
யங்க ணிருக்கின்ற சுவரானதி லாண்குறிதன்னை வைத்தா ரப்பா. (87)

தேளுச் சுவருள்ள வெடிப்பிருந்து சிறந்த வவருட கலத்திற்கொட்ட
வேளே புடவையைக் களைந்தெறிந்து விட்டுக் கதறியே விழிநீர்சிந்த
வாழும் பெயரெல்லாம் வருவீரென்று வயிற்றி லறைந்தவ ரழுகும்போதி
லூழி தனிலுள்ள வுமையாக்கூட்ட முவரி போலவே வந்துகூடி (88)

மன்னர் மாபிய சடலமீதில் வடியும் வேருவை தன்னைப்பார்த்தே [றே
யின்னுட்டேட்கொடும் விஷமீதென்றே யிருந்தபெய ரெல்லாம்வருத்தமுற்
தன்னுல் வருகிற கண்காரரைச் சலதி யுடனேதிப் பார்மினென்முர்
கன்னல் தவமுமற் குளேயடித்துங் கடுப்பங் கதிகமாய்ப் புலம்பினரே (89)

## பதம்.

வீட்டி லிருந்து வெளியி லாகவும் விதியின் காலமோ
தேளுப்பதி விருந்ததோ
வாட்டமாகிறேன் யாறகீ மல்லா வைய மீதிலே
வெகு வருத்த மாகவே

பார்க்கப் பண்டிதர் கூட்டிவாருங்கள் பாரிலுள்ளோரே
வந்த வூரி னீதரே
யார்க்கு மிவ்விதி வருவ துண்டுமோ ஆதிநாயனே
யிஃதேது காரணம்.
சகங்ம் பொருந்து மிசுறு நாடுள்ள
தயவுள்ளோர்களே நான் துயரமாகவோ
எங்கே தரிப்பே னெவ்விடஞ் சொல்குவேன்
எந்தனுதியே நானிந்த வேளையிற்
காலம் வந்தென்னைக் கோலம்செய்யவும் காரணமீதோ
விந்தப் பாரின் மீதிலே
ஆலந்தன்னிலே தேட்கடுப்புக் கவிழ்தமில்லை யோகா
ணெவ்விதம் செய்குவேன். (91)

## தொங்கல்.

எவ்விதம் செவேன் யாகுதாயே யெனது துயர்மாற்ற வொருவரில்லை
திவ்ய வேர்வையு மிகவுண்டாகித் தியங்கி மாபியா மயங்குநேரம்
புவியி லேயுள்ள பூனைக்கண்ணண் புழங்கும் தடியூன்றி நடந்தவனும்
பவித மாகவே மாபியாபாற் பாங்க தாய்வந்து சொல்லுவானே. (92)

கொட்டுத் தேளது மாபியாகவே கொடுக்கு முறிந்தது கலமீதினி
லெட்டுத் திசையுள்ள மருந்தானாலுமிந்தக் கடுப்பும் தீராதாகையால்
திட்ட மாகிய இளமயிலைச் சேர்ந்தாற் கடுப்புதகா னீங்குமென்றுங்
கட்டா யமதான மருந்திதையான் கள றினே னென்றான் பூனைக்கண்ணண். (93)

பாரி லவன் சொன்ன வசனங்கேட்டுப் பகருவா ரப்போ மாபியார்தான்
மாறுபாடான மருந்தீதுகாண் மாதை யான்சேர்ந்தால் லமலாகுவாள்
காரின் குழல்மாது மைனரீன்றால் ஹபீபு பேரர்க்குப் பகையுண்டாகும்
சீரா யினமொரு மருந்தானதைச் செப்புவீ ரென்றார் மாபியாவும். (94)

ஈது மொழிகேட்டு வைதியன்சொவா னெந்த மருந்திலும் குணமாகாது
மாதில் ஹெல்மாறுங் கிழவிதன்னை மருநீவிர் சேர்ந்தா லமலாகாது
கோதை வயதன்ன ளாகபார்த்துக்கொண்டால் நிமிசமென் றவனுரைத்தான்
சாதி ஹபஷிமா குலமீதிலே தைய விருந்தாளே யொருகிழவி. (95)

தீனே ரேகியே யழைத்துவந்தார் சென்ற வயதுக ளெண்பதுள்ளாள்
கூனித் தடிவூன்றி மிகத்தள்ளாடிக் குலுங்கச் சிரிக்கவும் பல்லில்லாமல்
மேனி நரம்பெல்லாம் வெடுவெடுத்து விழியு மாறுகண் விருத்தையாளும்
பூணிப் பாகவே மாபியார்பாற் பொங்கு வாய்சப்பி வந்தாள் மாதோ. (96)

அன்ன விரவினில் மாபியாரு மடிமை தான்வாங்கும் விருத்தையாளை
யென்னும் பெரியோனே யாகுதாயே யெனது விதிகால மிவளைச்சேரப் [தார்
பண்ணுஞ் சோதினை நீதானென்றும் பாங்காய்த் திரைபோட்டேயவளைச்சேர்ந்
அண்ணல் மாபியா சுக்கிலமு மவள்தான் வயிற்றிலே கருவாச்சுதே. (97)

மாலைதச் சேரவும் தேள்விஷந்தான் மாறிக்கடுப்பது நீங்கி யப்போ
கோதை தனைநீக்கி மாபியாருங் குவலய முள்ள மிசுறார்ப்பதி
சீதம் பொருந்திய தகுத்திருந்தே சிறந்த ராஜாங்கம் நடாத்துநாளில்
ஆதி விதியினு லம்மையாளு மமலுங் தானுகி யிருந்தாளப்போ. (98)

வற்றிவறழ்ந்திடுந் தேகமெல்லாம் வளமா மொழிலாகி மாறு கண்ணுள் [தோ
பெற்றுள் மகனென்றை யிளங்கதிர்போற் பேருமெசி தென்றே வைத்தாளங்
குற்ற மணுகாமல் மகன்தன்னையுங் குவல யந்தன்னில் வளர்க்குநாளில்
மெத்த மகிழ்ச்சியாய் மாபியாவும் விருத்தை யாளுக்கு நிதிகளீந்தார். (99)

வைத்து மகனைத்தான் வளர்த்தா ரப்போ வயது பாலனுக் கேழாகவே
வித்தை படிப்புகள் குறுஆனது மேலா யோதியே கொடுத்துவந்தார்
பத்தாம் வயதிலே மறுவானிடம் பாங்காய் மகனைத்தான் றுைப்பித்தாரே
சுத்தம் பொருந்திய மதின மேகித் துலங்கும் கசறத்துப் படிப்பாகியே.(100)

எனது மகனைத்தான் கொடுவாவென்றே யியம்பி மாபியாவனுப்பும்போது
தனதாய் மறுவானு மெசிதைக்கூட்டித் தாலமீதுள்ள மதினம்வந்தே
கனங்கள் பொருந்திய யார்கள் மக்கள் கரடிக்கூட்டத்தில் வந்துசேர்த்து
வினைபோறெசிதவன் படிப்புங்கற்று விளையாட்டுடனங்கணிருக்குநாளில் (101)

அலியார் தம்மக்கள் பதினெண்மரும் யார்களுடமக்க ளாறுபேரும்
நலமா யெசிதுடன் விளையாடையில் நல்லோ ரபூபக்கர் மகனர் தம்மை
கலக மாகவே யெசிதவனுங் கம்பாலடிக்கவே சோரிசிந்தி
நலங்கள் பொருந்திய சபாது சிரம் நதியி றூற்றுபோற் சோரியோட. (102)

வந்தாற் பாலர்கள் நபிதம்பாலில் நவின்று ரிதுசேதி வரலாறுக
ளந்த நேரமே நபிநாயக மவனைக் கொடுவரத் தூதனுப்ப
விந்த வரலாறு தனையறிந்தே யிளவ லெசிதையுமறுவானப்போ
தந்தரமாகவே யொருகல்லினுற் றலையி லவன்கீறிச் சோரியோட. (103)

மறுவா னவனுமே யெசிதைக்கூட்டி வரவே தூதரு மெதிரிற்கண்டு
விரைவாய் வாருங்களிருவரனென்றே வினையி னிருவரையழைத்தேகியே
மறையோர் சமுகத்தில் நிறுத்தும்போது வாகாய் விசாரித்தார் நபிநாயகம்
தரையி லனியாயன் மறுவானென்றும் சாரவே குற்றந் தீர்மானித்தார் (104)

மதினந் தனைவிட்டு மறுவான்றனை வழியி லொருகாதந் தூரத்துமென்று
புதியோ னருள்தூத ருரைத்தநேரம் புத்தி யிஃதென்றே யசுஹாபிமார்
சதியின் மறுவானைக் காதவழி தள்ளி வைத்தார்கள் நபிசொற்போல
புதியை நீங்கியே செிதவனும் பாங்காய்த் தாதைபால்வந்துசேர்ந்தான். (105)

நாலி யார்களும் புடைகள்சூழ நாற்பத் தீரா யிரத்தவரும்
பாலிலிருக்கவே நபிநாயகம் பாங்கா யிறையவன் தன்னைப்போற்றி
மேலா யரசாங்க நடாத்திவள்ளல் விளங்கவே தாம் மிகவேசெய்த
ஆல முகம்மது மிருக்குநாளில் ஆயாசங் கண்டசரிதைசொல்லாம். (106)

## நபிநாயக மூபாத்தான சரித்திரம்.

சங்கை யாகிய நபிமேனியின் சரீரத் தாயாசம் வெதுப்புக் கண்டு
தங்கமயமான ஆயிஷாவின் தனது மடியின்மேற் சாய்ந்தார்வள்ளல்
பொங்க மாகிய வெதுப்பினாலே புகழ்சேர் முகம்மது வருத்தமுற்றுத்
திங்கள் வதனத்தா ரிருக்கும்போதிற் சிறந்த மிகுருபில் வாங்கோதினர். (107)

வெள்ளிக்கிழமையின் ஜும்மாவுக்காய் விளங்கும் தீனோர்க ளெவரும்வந்து
பள்ளி வாசலிற் காத்திருந்தார் பாங்காய் நபியுல்லா வருவாரென்றே
யெள்ளிட்டா யெள்ளுப் பொரியுமாப்போ லிலங்கு நபிமேனி வெதுப்பினாலே
முள்ளிட்டால் முள்ளே களையுமாப்போல் முஸ்த பாநபி தேகமெல்லாம் (108)

சுரத்தி னதினாலே மயக்கமாகித் துலங்கு நபியுல்லா நீராடியே
வரத்தி லுயர்வான வள்ளலாரும் வருக மிகுருபுக் கெழுந்தபோது
நறையின் மலர்ப்புயத் திறசூசல்லா நாத ராயாச மயக்கங்கொண்டு
தறைத்தல முள்ள மாளிகையிற் சயனித் திருக்கிற சமையத்திலே. (109)

வந்தா ரமுசாவு மப்பாசுடன் வள்ளல் முஹம்மதின் மாளிகையிற்
சந்திர வதனத்தார் மயக்கங்கண்டு ஜனங்காத் திருப்பதை நபிக்கோதவே
மந்த ராசல நபிநாயகம் வாரே னுனென்றே யெழுந்தந்நேரம்
வந்த விருவரும் கைத்தாங்கலாய் வாகா யழைத்துத்தான் மிகுருபுற்றார். (110)

நபியா முஹம்மது மிகுருபாக நல்லோர் யாவரு முவந்துபோற்றப்
புவியி லிருக்கின்ற தீனோர்களே புகலக் கேளுங்க ளெமதுசொல்லைக்
குவலயத் துள்ள வெதுப்பினாலே குளிரு மிகவாகி மயக்கமானேன்
தவங்கள் பெருகிய அபூபக்கரைத்தனியோன் கிருபையாலிமாம்செய்யென்றார்

சொன்ன மொழிகேட்டே யபூபக்கரும் துலக்க மாகவேயி மாம் செய்தார்கள்
மன்னர் நபியுடன் தீனோரெல்லாம் வாகாய்ப் பின்னின்று தொழுதபின்ன
ரின்னோர் முகம்மதை யழைத்துத்தீனோ ரெல்லா பேர்களு மேவணங்க
மின்னு மாளிகை தனிலேவந்து விளங்கு மிறசூலைச் சூழ்ந்திருந்தார். (112)

அன்ன காலையிற் றெளிவதாகி யார்க்கும் நபியுல்லாவருள்வா ரப்போ
தென்னின் தோழரே ஸகுபிமாரே யெனது வசியத்தைக் கேள்மினென்ன
முன்னோன் தொழுகையும் நோம்பானதுமுடித்துச் சதக்காவுகொடுப்பீரென்று
மன்னர் மொழிகேட்டு மகிழ்ந்திருப்பீர் வைய மீதிலே நீங்களென்றார். (113)

சுரந்தா னீதென்று நினைக்கவேண்டாம் சுபுஹா னல்லாவிட்ட தூதுதானும்
வரங்கள் மிகச்செய்யும் நால்யார்களே வழுத்தக்கேளுங்காளொசியத்தென்னத்
தரங்க ளுயர்வான அபூபக்கரைத் தரணி தனையாள முடிசூட்டியே
பெருகுந் தர்மமும் வளர்ந்தேறிடப் பெருயோ னருளினா லரசாளுவீர். (114)

மன்னர் பதவிக ளானபின்னர் வாச ருமர்கத்தாப் பட்டமாகும்
பின்னா லுதுமானார் முடிசூட்டியே பெரிமோன் கிருபைமா லரசாளுவீர்
தன்னின் ராஜாங்கம் பின்னராகத் தாலந் தனையாள்வா ரலீப்புலியார்
என்னின் பேரன்மார் பட்டமாகி யிருந்து ராஜாங்க நடாத்துமென்றார். (115)

எனதுமருகேச ரலியுல்லாவே யியம்பக்கேளுங்கள் மணிவிளக்கே
மனது நலமுடன் பாலர்களை வைத்து வளர்த்துத்தான் மகிழ்திருப்பீர்
கனதி பொருந்திய ஹுசைனருக்குக் கமுகா பெனுவாளும் சுல்சுனவும்
மனது மகிழ்வுடன் கொடுத்தேனென்று வள்ளல்முஹம்மது நபியோதினர். ()

ஈது மொழிசொல்லி முடிந்தபின்ன ரியம்புவாரப்போ சகலோருக்கும்
ஏதா மொருகுற்ற மிருந்ததாஞ லென்ற னிடந்தனிற் கேட்பீரென்றார்
ஓதுமொழிக்கெதி ரொக்காசவ ரோடிக் கடன் தாருமென்றுதானே
நாதர் முஹம்மதி லாஞ்சனையை நலம்பார்த் தெழுதியே கதம்போற்றினர். ()

வானோர் போற்றிய நபிநாயகா மவுலுவா ரப்போ தீனோர்கெல்லாம்
யானும் பதவிகள் சேர்ந்தபின்ன ரழகாய் குளுப்பாட்டிக் கபனுமிட்டுக்
காணும் பரிமள மிகத்திமிர்ந்து கதவு திறந்துதா னறையில்வைத்தே
தீனோர் யாவரும் கதவடைத்தே சிறந்த வெளியினி லிருந்தபின்னர். (118)

கதவு திறந்து நந்தீனோரெல்லாம் காரணமுள்ள அபூபக்கர்தா
மதியி னழகாக முன்னே நின்று வாகா யிமாம் செய்யத் தொழுது நீங்கள்
விதியோ னருளினு லடக்கம்செய்து விளங்கு மவரவர் மனைகள் சேரும்
புதியோன் றகுமத்துக்கொடுப்பானென்றும் புகழ்சேர் முஹம்மதுநபியோதினர்

அன்றங் கிரவினிற் பாத்திமாவு மருமை யுடன்வந்து வரப்பாபாவிற்
றென்றல் மலர்க்குழல் நாச்சியாரும் திறந்தநபியுல்லா வதனம்பார்த்தே
யென்று முளநாயன் தனைநினைந்தே யிருகண்ணீர்விட்டே யழுவதானர்
குன்று விறைவனே யாகுதாயே குவலயந்தனி லெனக்காருண்டும். (120)

எங்கள் வாப்பாவே தங்கமேரே யெப்படி விட்டு நானிருப்பேன்
சங்கை யாகிய மணிவிளக்கே தாங்கள் சுவனத்தி லேகத்தாஞ
வுங்கள் மகளார்க்கு மதிகளென்ன வோதினீ ரெங்கள் நவமணியே
பங்க யக்கத மழகுள்ளோரே பகருங்க ளெங்கள் தகப்பனரே. (121)

கண்ணீர் தான்விடு மகளார்தம்மை ஹபீபு முகம்நோக்கி கவல்வாரப்போ
விண்ணோர் தாலாட்டும் பேரன்மாரை விருப்பமாய் வைத்து வளப்பீரென்ன
மண்ணிலம்விட்ட ஆறுமாதம் வல்லோன் சுவனத்தில் வருவீரம்மா
வெண்ணி ஆயாசம் நினைக்கவேண்டா மெனது கனியான மகளே யென்றார். ()

ஆதியருளினல் ஜீபுரீல்வந்தே யருளுவாரப்போ நபிதம்பால்விற்
சோதி சலாத்துட னென்சாலமுந் துலக்கினேனிப்போ யாறசூலே
நீதி பெரியவன் சொன்னதாகும் நிலத்தி லினிமேலே வகியுமில்லை
நாதரே சொர்க்கம் வரலாமென்று நவின்று ஜீபுரியீல் ககனிலானர். (123)

நல்லோ ரிசுறுயீல் புவியில்வந்து நபியாமுஹம்மதை மிகவும் வாழ்த்தி
யெல்லா பறக்கத்தும் பெற்றகோவே யெங்கள் தமக்கெல்லா மணிவிளக்கே
அல்லா அருள்பெற்ற தயாபரரே அகும தெனிமெங்கள் முஸ்தபாவே
வல்லோ னுத்தாரம் தானச்சுது வாங்கள் நபியென்றே சலாமும் சொன்னர்.

அறுபத்தி மூன்று வயதானதி லவனி தனில்மாதம் றபீகுலவ்வல்
வரிசை யுடன்தேதி பனிரண்டினில் முஹம்ம துதித்திடும் திங்கள்மீதிற்
தறஜா வரிசையும் புகழோங்கவே சையிதிறசூலும் பதவிசேர்ந்தார்
குறைஷிக் குலத்தோரு முஸ்லிம்களும் குருவா முஹம்மதையுவர்ந்து போற்றி

மதினங் தனிலுள்ள தீனோரெல்லாம் வந்தார் நபிமனை மாரிபோலே
புதியோன் கிருபையா லுலுவிம்செய்து புகழ்ச்சியாகவே தீனோரெல்லாம்
கதிரின் திருமேனி முஹம்மதரைக் காணு முதியோர்க ளொழுங்காய்நின்றே
மதியி னழகான பன்னீர்வாச மஞ்ச மாட்டிடும் சமயத்திலே. (126)

இறையோ னொரு சத்த மியம்பலானு னிதையத் திடும்சட்டை கழற்றிடாமல்
மறையி லுவப்பான வள்ளலாரை வாகாய் மெதுவுடன் குளிப்பாட்டுங்கள்
தறஜா வரிசையும் தருவேனென்று சத்தமுழங்கவே குதறத்தாக
அரசு பதியான யாறசூலை யிதுபோல் மெதுவாகக் குளிபாட்டினர். (127)

துய்ய புடவையாற் கப்ன் மூன்றிட்டுத் துலங்கும் பரிமளம் திமிர்ந்து வாச
மைய மெடுத்துத்தான் கபுரில்வைத்து வாசலடைத்தங்கு தீனோர்நின்றார்.
செய்யி திறசூலை வானோர்வந்து சிறந்த வணக்கமாய்த் தொழுகும்சத்த
மெய்கள் வருந்தியே தீனோரெல்லா மேலோன் குதறத்தென் றிருந்துபின்னர்.

வாசல் திறந்துதான் முசிலிமெல்லாம் வரிசையாகவே யொழுங்காய்நின்று
நேச ரபூபக்கர் இமாமாய்நிற்க நேர்மைவுடனேதான் தொழுதபின்னர்
சேந்தனக்கெல்லாம் பணிவிளக்காய்ச் சிறந்த முஹம்மதை யடக்கம்செய்தார்
போசர் தமக்காக பாத்திஹாவும் புகழ்ச்சியாயோதி மனைகளானர். (129)

வந்தே யவரவர் மனைகளாகி வள்ளல் முஹம்மதை மிகவும் போற்றிச்
சிந்தை யுவப்பாகத் தர்மமீந்து சிறந்த சீரணி மிக்வுமீந்தே
சந்த்ர வதனத்தி னபிதமக்கே சடங்கு மிகச்செய்தே தீனோரெல்லா
மெந்த நாளிலும் பறக்கத்தாக விருந்தார் முசிலிம்கள் மனமகிழ்ந்தே (130)

---

## அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்னகவர்க ளரசுநிலை.

வெள்ளிக்கிழமையின் குத்துபாவில் விளங்குந் தீனோர்கள் மருங்குகூடிப்
புள்ளிமானுக்குப் பிணையாய்நின்ற புதியோன் முஹம்மது வசிய்யத்தின்பாய்ப்
பள்ளி வாசலின் மிம்பர்மீதிற் பாங்கா யபூபக்கர் தானேறியே
தெள்ளமிர்தமான முத்துபாவம் தேர்வா யோதியே யிமாம்செய்தாரே. (131)

தீனோர் யாவரு மருங்கு சூழச் சிறந்த தொழுகையு முடிந்தபின்னர்
வானோர் போற்றிய அரசர் பாவில் வாரிபோலிருந் தலைவோர்களும்
தேனின் மலர்மாலை புயந்தாங்கிய சிறந்த ராஜர்க்கு முடிசூட்டவே
காணும் படியாக அரசர்க்கெல்லாம் கடித மெழுதியே யனுப்பினரால். (132)

தேச மீதுள்ள வரசரெல்லாம் சிறந்த பெருக்கமாய் மதினம் வந்தார்
வாசர் முஹம்மதின் றவுலாவாகி வணங்கி யாவரு மிறையைப்போற்றி
நேச ரபூபக்கர் தனையும்வாழ்த்தி நிறைந்த பெருக்கமா யருகிருந்தே
போச ருமர்கத்தா புதுமானலி புகழ்சே ரசுஹாபி மார்களெல்லாம். (133)

மதியி னழகான அபூபக்கரை மஞ்சன மாட்டித் துயிலணிந்து
கதிரி னழகான அங்கிமாலை கனதி பொருந்திய மவுலிசூட்டி
நிதியி லுயர்வான கணையாழியை நேர்மை யாகவே விரலணிந்து
பதியில் மணிமுத்தா யிலங்குமான பவுசு பொருந்திய தவிசிலானார். (134)

கொடியுங் குடைகளு மாலவட்டம் குணம துள்ளபேர் பிடித்துநிற்கக்
கடியின் மலர்ப்புயத் தரசர்வாழ்த்த ஹக்க னருளினால் மகிழ்ச்சியோங்க
வுடையோனருள் தங்கு முஹம்மதுமா னெழுங்காயிருந்திட அலியும்போற்றத்
தொடையல் மார்பின ரனேகமன்னர்சூழ்ந்து பணிந்தார்க ளபூபக்கரை. (135)

பேரி நவுரிகள் கிடுகிடென்னப் பிடிக ளெக்காள மடமடென்னத்
தாரை சல்லரிதிடுதிடென்னத் தம்பூர் மிரசுகள் கொடிமுழக்கச்
சாரியாய் நின்ற ராஜரெல்லாம் சங்கை யாகவே கட்டியங்கூற
மாரி வருஷிக்கச் சந்தனத்தால் மதிநே ராசமந் தணிலிருந்தார். (136)

நபியா முஹம்மதின் சலவாத் தோங்க நாய னருளெங்கும் பிரகாசிக்கப்
புவியின் மடமாதர் கவரிவீசப் புகழ்ச்சி யாகவே மறைஞர் வாழ்த்தக்
கவிகள் பாடிய பக்கீறவர்கள் ஹக்க னருளினு லுவந்துபோற்றத்
தவசி லிருந்தாரே முடிவேந்தரும் சங்கை பொருந்திய மதிபோலவே. (137)

தீனுந் துலங்கவே ஜெண்டாவோங்கச் சிறந்த மார்க்கமும் பெருகிவாழ்க
மானும் புலியொடு யானைசிங்கம் வந்தோர் துறையினிற் புனலுண்ணவே
வானோர் போற்றவும் கூறுல்ஈன்கள் மங்களங்கூறி யிறையைப் போற்றத்
தேனின் மலர்மாலை புயங்கள் தாங்கிச் சிம்மாசனத்திலே யிருந்தார்வேந்தார்.

மதினந் தனிலிருந் தபூபக்கரும் பைத்துல் மால்நிதி தனையெடுத்தே
புதியோன் தனைநாடித் தீனோர்க்கெல்லாம் புகழ்ச்சி யாகவே வரிசையீந்தார்
பதிகள் தானுள்ள முசிலீமெல்லாம் பாங்காய் மகிழ்வுற்ற செல்வம்போலே
நதிகள் வரவழைத் திடுங்காரணர் நபியா முஹம்மதின் மணிமாயை. (139)

புவியில் வளர்நீதம் பெருகிவாழும் புகழ்சேர் மங்கலக் குடிதனில்வாழ்
குவல் யந்தனில் வரப்ரசாதன் குணகான் முக்கந்தர் காதிர் சாகிப்
கவிகள் தனைக்கேட்டு மனமகிழ்ந்து ஹபீபு முஹம்மதை யுவந்துபோற்றித்
தவமு மிகசெய்யு மகிழ்ச்சிபோலேசார்ந்ததீனோர்கள் மகிழ்வுற்றாரால்.(140)

அன்னலபூபக்கர் மதினமீதி லரசா யிருந்தவ ராளுநாளி
லென்னும் வழக்கம்போற் றேசராஜ ரிலங்கும் திறைகட்டி வருவார்களும்
மன்னர் முஹம்மதுவசியத்துப்போல் மருகர் தம்மையு மகத்தில் வைத்து
மின்னுமுடிவேந்தர் தர்மமோங்க விளங்கும் தகுத்தினி லிருக்கும்போதே. ()

ஆலந் தனையெல்லா மொருகுடையி லரசர் தானாளும் காலமீதிற்
றால மீதுள்ள குபிரோர்களைச் சமர்கள் தான்செய்யப் படையனுப்ப
மாலா யிசுலாத்தில் வரவழைத்து வள்ளல்முஹம்மதின் சலாத்தோங்க
மேலோன் றகுமத்து மிகவுண்டாக மேந்த ரரசாளு நாளதனில். (142)

ஈது படிநிற்க நாச்சியாரு மிரவு தனிலவர் துயிலுநேரம்
நாதர் முஹம்மது கனவில்வந்து நவிலுவாரப்போ மகளார்க்காக
நீத மிகவுள்ள செல்வியாரே நிலத்தின் வாழ்க்கையும் சரியானதாற்
சோதி பெருகிய சுவனமீதிற் றாலகுங் கனியேநீர் வரலாமென்றார். (143)

நபிகள் நாயக மொழியானதை நாச்சியார் நன்றா யறிந்தபோதிற்
புவியின் வாழ்க்கையை மறந்துமாதா புதியோன் தனைநாடி வணக்கஞ்செய்து
தவமும் பெருகிய ஹசனுசைனார் தம்மை மடிமேல்வைத் தன்னையாரும்
குவல யந்தனில் வருத்தமுற்றுக் குதாயை நினைத்துதான் புலம்பினாரே.(144)

ஆல முஹம்மதின் பேரரான அருமைதா னுள்ள வென்பாலரே
தாலந் தனிலுள்ள வென்சுதரைத் தன்மையாய் விட்டு நானேகவோ
கோலத் திருமேனி வாடுவாரே குதாயே நானென்ன செய்வேனென்று
வாலைக் கதிர்மேனி மீலுக்கமுற்று மாதா வழுதார்கள் மயக்கத்தோடே. (145)

மாதா வழுகிற வருத்தங்கேட்டு மகனா ரிவரு மனங்கலங்கி
நீத மிகவுள்ள வெங்கள்தாயே நிலத்தி லுமைவிட்டே யிருக்கமாட்டோம்
ஆதி விதிப்பயன் சரியாச் சென்றே யழுதீ ரன்னையே பிவிமீதினி
லேது தான்செய்வோம் நுமதுபால ரெந்த விதத்தினா லிருப்போம்நாங்கள்.()

## பதம்.

நித்திரையில் நாமறக்கோம் நீதமுள்ள எம்மாதாவே
புத்திரர்கள் தம்மைவிட்டுப் போரீரோதா மாகிறத்தில்
ஆலமீதி லெங்களுக்கே ஆதரவு இல்லையம்மா
பாலரென்ன பாக்கியங்கள் பாருலகிற் செய்தோ மென்றார்.

## தொங்கல்.

அழுதபாலரைத் தழுவிமாதா அவர்க ளுடகண்ணீர் தனைத்துடைத்தே
எழுது மிறையவன் விதிகாரணம் யாரால் மாற்றவு முடியாதிப்போ
பழுதி லானருள் கிருபையாலே பாலரே நீங்கள் மயங்கவேண்டாம்
குளிர்ந்த வதனத்தின் கண்ணீர்விடக் குதாய்தா னெழுதினா லெங்கனியே. ()

சிந்தை கலங்கின்றோ மாதாவென்று தியங்கி யழுதவ ரிருக்குபோதில
அந்த நேரமே அலியாமண்ண லகவ லறிந்துதம் வதனஞ்சோர்ந்து
வந்தங் கிருந்தாரே கண்ணீர்விட்டு முஹம்ம தெனுநபி மகளார்பாலில்
மந்த ரக்குடை வருமிறசூல் மகளா ரழுதவாய் திறந்துசொல்வார். (149)

ஆல முஹம்மதின் மருகேசரே யருமை மிகவுள்ள மணவாளரே
கால விதிகளும் சரியானதால் ஹக்கன் சுவனத்தின் பதியேகிறேன்

தாலந் தனிற்செய்யு மெனதுகுற்றம் தாங்க ளேபொறுத் தெனையாளுவீர்
வாலக் கதிர்மேனி மணிவிளக்கே மவுலக் கேளுங்கள் நாயகமே. (150)

இலங்கு மிகுருபி லிருந்துவந்தீ ரெனது கால்நீட்டி யிருந்தாலும் [தும்
தருவின் கனிகொய்ய நினைக்கும் போது தர்க்கம் நான்சொன்ன மொழியான
குருவா முஹம்மது மருகேசரே குற்றம் பொறுத்தாள்வீ ரிரத்தினமே
மருவின் மலர்ப்புயத் தரிசிம்மேறே மணவாள ரேயெந்தன் மதியேயென்றார்.

ஈதுமொழிகேட்ட வலிப்புலியா ரிறையோன் கிருபையாற் பொறுத்தேனெ
நாத ருரைசெய்ய நாச்சியாரும் நாயன் கிருபையென் றவர்நினைந்தே [ன்று
நீத முளமாதர் வடிசிலாக்கி நேர்மையுடனேதான் பாலர்க்கிந்து
சீதம்பொருந்திய வெள்ளிநாவிற் றியங்கிமாதாவும் விரிபபிற்சாய்ந்தார். (152)

ஆலமுஹம்மது பதவிசேர்ந்த ஆறுந் திங்களின் றஜபுமாதம்
தாலந் தனிற்றேதி பனிரண்டினிற் சங்கை யாகிய வெள்ளிராவில்
மேலோன் முஹம்மது செல்வியான பீவி பாத்திமா நாச்சியார்தம்
வாலைச் சுவனத்தின் பதவிசேர்ந்தார் மக்கள் யாவரு மயங்கிடவே. (153)

அலியும் பாலரு மழுதுசோர்ந்தே அதிக விசனமா யிருக்குநேரம்
நலங்கள் பெருகிய அபூபக்கரும் நாத ருமர்கத்தா புதுமானரும்
தலமு மதினத்தின் சுஹாபிமார் சகல ஜனங்களு மனையில்வந்தே
குலமா னவர்களி னுபாத்தறிந்து குதாயை நினைத்துதானழுதாரப்போ. (154)

அந்தநேரத்தி லபூபக்கரு மசனார் தம்மையு மடிமேல்வைத்துச்
சந்த்ர வதனத்தி னுமர்க்கத்தாபும் தழுவி யுசைனாரை யுகந்துமன்னர்
அந்த மிலிஹக்க னருளினாலே யநேக விதம்சொல்லி யழுகைமாற்றி
வந்த பெயரெல்லாம் சலித்துவாடி வழுத்துவாரப்போ தலிதம்பாலில். (155)

சங்கையாகவே காலை மீதிற் சகல பெயர்களு மனையில்வந்தே
திங்கள் வனத்தி னச்சியாரைச் செகத்தி லடக்கமும் காண்போமென்ன
எங்கள் மனையேகிக் குருனையத்து மெடுத்து வருகிறோ மடிசிலுண்டு
சிங்கப் புலியலி யிருங்களென்று சிறந்த தீனோர்க ளெழுந்தேகினர். (156)

தீனோர் யாவரு மனைகளேகச் செல்வ ருடன்லி யாலோசித்துத்
தானே னருளின லிரவானதிற் றனது பாலர்க ளிருவருடன்
வானின் மதிமுகத் தழகினர் தம் மய்யந் தன்னையே குளிப்பாட்டித்தான்
கானின் மயிலாரைக் கபனுமிட்டுக் கடிகள் திமிர்ந்துசந் தூக்கினிலே. (157)

வைத்துச் சனஸவை மூவர்களும் வள்ளல் முஹம்மதின் மனையில்வந்து
கத்தன் குதறத்தா லிறக்கிவைத்தார் கதிரின் சிறகுள்ள ஜிபுரியீலும்
சுத்த மெழுபதா யிரம்மார்தொகுதியாநின்று தொழுதபின்னர்
எத்தீ மவர்ஹக்கன் கிருபையினா லெடுத்தங் கடக்கியே மனையில்வந்தார். (158)

அலியும் பாலரு மிறையைப்போற்றி யதிக விசனமுற் றிருக்குநேரம்
நலங்க ளாகியு தீனோரெல்லாம் நாடி யிரவினில் மனைகளாகிக்

ஞுலமா னவர்களை மிகபோற்றியே குறுஆ னவரவர் தானேதினா
தலங்கள் வெளுத்தபின் பஜிர்தொழுது தன்த்தில் மிகயுயர் தீனேரெல்லாம்.

படிக்குள் மதனத்தினுண்பெண்ணெல்லாம்பாங்காய்மனைவந்தே யிருந்துசொல்
வார், நடக்கும்படிமுறை வழுவாமலே நாச்சியார்தம்மைக் குளிப்பாட்டுங்கள்
திடச்சொற் பொருந்திய அலியேயென்று செப்பினாரப்போ தீனேரிடம்.
நடனப் பரியேறு மலியாரண்ணல் நவிலுவாரப்போ தீனேரிடம். (160)

ஜெகத்தி லடக்கியே முடித்ததென்று சிறந்த அலியுல்லா செப்பவப்போ
தகதிற் சோபந்தான் மிகவாகியே யருளுவாரப்போ தனைவோர்களும்
பகைத்து நமரோரை இரவானதிற் பாத்திமாதமை யடக்கஞ்செய்தீர்
அகத்திலிருக்கின்ற வுயிர்போனாலு மன்னை தனையெடுத் தடக்கஞ் செய்வோம்.

நல்ல திதுமதி யறிவோமென்றும் நபிகள் மனைமீதிற் கூட்டமானார்
வல்லோ னலியுல்லா விதையறிந்தே வாளைக் கரமேந்தித் துல்திலேறி
யுல்லாசமுள்ள அலிபாலர்க வொழுங்காய்ப் பதினெட்டு வீரர்களும்
எல்லி னருங்கதிர் வாட்கையேந்தி யிறையோ னலியுட னெழுந்துவந்தார்.

வந்த தீனோர்கள் வதனம்நோக்கிவாச ரலிப்புலி வழுத்திடுவார்
இந்த நேரமே முசிலிம்களே யிறசூல் நபிமகள் கபுறெடுத்தால்
எந்தன் வாள்தனக் கிரைசெய்குவே னிப்போநீங்களும் பார்மினுங்கள்
சிந்தை யுதிப்பெண்ண மறந்து நீங்கள் செல்லு மவரவர மனைதனக்கே. (163)

ஈது மொழிதனை யலியோதவே யெடுப்போ மய்யமென் றியம்புநேரம்
ஏது வறிந்துய ரபூபக்கரு மென்ன் காரண மானதென்று
நாதர் தான்வந்து தீனோர்க்கெல்லாம் நவிலுவாரப்போ தமுதவாயால்
நீதர் முஹம்மது சரிதகளை நிலத்தில் நீங்களுந் தவிரவேண்டாம். (164)

மன்ன ரலியுல்லா அடக்குமான மய்யந் தனைநீங்க ளெடுக்கவேண்டாம்
தன்னு லவரவர்க் குற்றகோபந் தன்னைமறந்தகஞ் சேருமென்றார்
சொன்ன மொழிகேட்டுச் சகலபேரும் சுக்கூர் தான்செய்து மனையேகினார்
அன்ன லபூபக்க ருமறுதுமா னலியும் பாலரு மகத்திலானார். (165)

வந்த வனைவோரும் நாச்சியார்க்கு வாகர்ய்ச சடங்குகள் தனைமுடித்தார்
சந்த்ர வதனத்தின் புார்களோடு தக்க அசுஹாபி மார்களெல்லாம்
எந்த நாளிலு மகிழ்ச்சியோடு மிருந்தா ரனைவோரும் செல்வமாக
மந்த ரக்குடை வருமிறசூல் வள்ளல் முஹம்மதின் கிருபையாலே. (166)

தேசந் தனையெல்லா மொருகுடையிற் செலுத்தி ராஜாங்க மபூபக்கரும்.
வாசம் மெருகியே புவிமீதினில் வாழ்வும் பறக்கத்து மிகவுண்டாக
ராஜர் மணிமாலை யுவந்துகேட்கும் நல்லோர் மங்கலக் குடிதனில்வாழ்
நேசன் முக்கந்தர் காதிர்சாகிப் நெடுகிலு மவர் கிளைபெருகி. (167)

புவியில் வளர்ந்தோங்கத் தர்மநீதம் புகழ்ச்சி மிகவுள்ள வபூபக்கரும்
தவிசிலிருந்தொரு விறையைபோற்றித்தாலந்தனையாண்டங்கிருந்தார் வள்ளல்

நபியா முஹம்மதின் சலவாத்தோங்க நனில மெங்கும் புகழாகவே
பவித முடன் வந்தே யரசரெல்லாம் பகுதி மிகக்கட்டி வாழ்த்துவாரே (168)

ஈதிப் படிநிற்க முடிவேந்தர்தா மிரவிற் றுயில்செய்யும் நாளதனிற்
காதம் பரிமள வாசம்வீசும் ஹபீபு நபிவந்தே கனவிற் சொன்னார்
சீத மதிமுகத் தபூபக்கரே ஜெகத்தில் வாழுநாட் சரியானகால்
நாதரேசொர்க்கம் போவோமென்று நன்றாய்த் தெரிந்துநீர் கொள்ளுமென்றே

சொன்னமொழிகேட்டு முடிவேந்தரும் சோதிபெரியவன் பண்பாமென்றே
அன்ன காலையிற் குளிருன்கண்டே ஆயாசங் கொண்டங் கிருக்குநேரம்
முன்னர் முஹம்மது மபூக்கரு முகில்வந் தடைபாரு மலைப்பொதும்பில்
மன்ன ரிருவரு மிருக்கும்போது வந்த அரவத்தின் வரலாற்றினால். (170)

சிரசி லேறித் தானிருந்தவிஷம் திறலோர் விதிகால முடிவுக்காகச்
சரீரந் தனிலெங்கு மிறங்கியேதான் சாய்ந்தார் மயக்கமாய் மெத்தைமீதில்
தறஜா மிகவுள்ள நபிநாயகம் தாலந் தனைவிட்ட வருஷமூன்றில்
வரிசை யாகியகிஜ்றத்தாண்டில் மன்னும் ஜமாதுல் லாகிர்மாதம். (171)

முன்னிடுந்தேதி யிருபத்தொன்றில் முஹம்ம தெனுநபி மாமனாராம்
பன்னு மபூக்க ரானவள்ளல் பண்பு பொருந்திய சனிக்கிழமை
மன்னு மாகிறப் பதவிச்சேர்ந்தார் வந்துசகலரு மயங்கிவாடி
யென்றுந் தவந்தோரை க்குளிப்பாட்டியே யிலங்குங்கபனிட்டு மணந்திமிர்ந்து

மதியினழகான சந்தூக்கினில் மய்யந் தனைவைத்துச் சகலோர்களும்
பதியின் முசிலிம்கள் ஷஹாதத்தோதிப் பாங்காய் றவுலாவி லிறைக்கிவைத்தே
நதியை யழைத்திடு நபிதோழரை நாதருமருகத் தாபிமாமாய்ப்
புதியோனருளினாற் றெழுதபின்னர் புகழ்ச்சியாகவே யடக்கஞ் செய்தார். ()

நபியின் வலதுபா லடக்கஞ்செய்து நாதர் தனைபோற்றிச் சகலோர்களும்
புவியி னரசர்மேல் பாத்திஹாவும் புகழ்சேர் முஸ்லிம்கள் தானோதியே
குவலய மீதிற் சடங்கும்செய்து குணமா யனைவரு மிறையைப்போற்றித்
தவமே பெருகிய முசிலிமெல்லாம் சார்ந்தா ரவரவர் மனையிடத்தே. (174)

---

## உமறுகத்தாபு றலியல்லாகு அன்ஹுவர்க ளரசுநிலை.

திருவி னொளிவான யிறையருளால் சிறக்கு மதினத்தா ரொருங்குகூடி
மருவின் மலர்ப்புயத் துமறுதம்மை மகுடமுடிசூட்ட நினைத்தெல்லோரும்
தரையி லரசாளு மரசர்க்கெல்லாம் தாக்க லறியவே நிருப்பம்விட்டு
மறையோர் துதிசெய்ய மதினமீதில் வந்தா ரரசர்கள் பெருங்கூட்டமாய். ()

சங்கை பொருந்திய மதினத்தாரும் சார்ந்த வரசரு முமறரசு
மங்குல் குடையிட வருமிறசூல் வள்ளல் முஹம்மது மருகேசரி
லெங்குந் துலங்கிய வுதுமானலி யெல்லாப் பெயர்களும் பெருக்கக்கூடி
சிங்கமேரி னுமர்கத்தாபைத் தெளிவாய் மஞ்சனந் தானாட்டியே. (176)

கதிரி னழகான துயிலணிந்து கஞ்சுகி யிட்டு மாலைசாத்தி
மதியி னழகான மணிமுத்துகள் வழங்கும் பிரகாச மகுடம்சூட்டி
நிதியி லுயர்வான கணையாழியை நேர்மை யாகவே விரலணிந்து
பதியுள் ளோரெல்லாம் ஆமீன்கூறப் பருதி போலான. குடைநிழற்ற (177)

பேரி நவுரிகள் கிடுகிடென்னப் பிடியி னெக்காள மடமடென்னத்
தாரைபோடுதம்பூர் மேளதாளம் தவுலு முழக்கவே சங்கையாகப்
பாரி லிருக்கின்ற ராஜர்வாழ்த்தப் பாங்காய் மடமாதர் கவரிவீச
நேர்மை பொருந்திய வானோர் வாழ்த்த நீத ருமறுமன் தவிசிலானார். (178)

உமது நபியுட னசுஹாபிமா ருவந்து வாழ்த்தியே யருகிருக்க
முதியோ ரனைவோரும் கட்டியங்கூற முசிலிமோரெல்லாம் புகழ்ந்தேத்திட
நதியின் பெருக்கமாய் தீனோரெல்லாம் நாயன் தனைப்போற்றித் துஆவிரக்க
மதியி னெழிலான சிம்மாதனம் வள்ள லுமருகத்தாபிருந்தார். (179)

நபியா முஹம்மதின் சலவாத்தொடு நானில மெங்கும் புகழோங்கவே
புவியிற் றர்மமும் வளர்ந்தேறிடப் புதியோன் வணக்கமும் பெருகிவாழ்க
கவிகள் பாடிய பக்கீர்மார்கள் ஹக்கனருளினா லுவந்து வாழ்த்தத்
தவமும் பெருகவே பூவிமீதினிற் சங்கையாகவும் நிதியோங்கவே (180)

வானோர் போற்றிடு முமறரசும் பைத்து மாலுள்ள பொருளதனைத்
தான் தர்மங்கள் மிசவுஞ்செய்து தனியோன் பறக்கத்து மிகவுண்டாகத்
தீனோர் யாவரு மகிழ்ச்சி பொங்கிச் செல்வம் வளர்ந்திடு வாறுபோலே
நானி லந்தனில் மணிமாலையை நவிலத் தான்கேட்டு நிதிகளீந்தேன். (181)

தாரா தளமுள்ள தீனோர்களும் சாந்திங் கிருக்கிமங் கலக்குடிவாழ்
வாரீச மலர் வதனமுள்ளான் வணக்கமிகவான காதிர்சாகிப
நேர்மை யாகவே யீன்றபால னீத னுகைவங் துதித்தபூபள்
ராவுத்தர் கமீ தென்னுநேச னன்கொடை செய்த மகிழ்ச்சிபோலே. (182)

ஜெகமேழ் துலங்கவே யுமறிகத்தாப் சிறத்த ராஜாங்கம் நாடாத்துநாளில்
மிகவும் வணக்மா யரசர்வந்து விளங்குந் திறைகட்டி வருவார்களும்
மகிழ்வ தாகவே யானைசிங்க மானும் புலிகளும் பசுக்கூட்டமும்
அகந்தான் மகிழ்ந்தொரு துறையில்நின்றே யழகாய் நீருண்டங் கேகுந்தானே.

பருந்துங் கிளியுமே பொருந்திநிற்கும் பாம்பும் கீரியு முவந்திருக்கும்
மருவின் மலர்வாச ரிராஜாங்கத்தில் வளரும் நீதங்கள் மதிபோலவே
பெருகுச் செல்வமும் புவிமீதெல்லாம் பெரியோன் வணக்கமு மிகவுண்டாகித்
தறஜா வரிசையும் புகழோங்கிடத் தகுத்தி விருந்தாரே யுமறரசர் (184)

தீனுக் கடங்காத றாமிகளைச் சிறந்த விசுலாத்தில் வரவழைத்தே
மானர் மொழிகேட்டு மபஷிகளை வதைகள் மிகச்செய்து கருவத்தேரு
யேணிப் படியேறும் நபியிறசூலில்மு வளர்ந்தேறத் துலக்கமாக்கி
வானின் கடைமாத ருவந்துபோற்ற வையந் தனையாண்டா ருமறரசர். (185)

பைத்துல் மாலுள பொருள்களெல்லாம் வந்த மிஸ்கீன்கள் தமக்களித்தே
சுத்த மாகவே பொருளில்லாமற் றுலங்கு முடிவேந்த ராலோசித்துக்
கத்த னருள்தங்கு முதுமானுரை ஹக்க னலிப்புலி தனையழைத்தே
சித்ர மானிடந் தனியிருத்திச் செப்புவா ரப்போ தமுதவாயால். (186)

பூமி தனிலேதான் நபிகலிமாப் புகலா குபிரோர்க ளிருக்குந்தேசம்
நாம ளிடத்திலே சொல்வீரென்று நலங்கள் பொருந்திய வுதுமானுரே
க்ஷேமக் காரனு யிருக்கும்ராஜன் ஜெகத்தி லுறைவதை யுரையென்றோதக்
கோமா னருள்பெற்ற வவ்வுதுமான் குறிப்பா பாய்ந்துதா னுரைசெய்குவார்.

எல்லாப் பறக்கத்து மிகவுண்டாகி யிருந்தி ராஜாங்கம் நடத்தும்பூவே
சொல்லத் தான்கேளும் புவிமீதிலே துலங்கும் நிதியுள்ள கைசர்தேசம்
வல்லப முள்ள நவசேருவான் வழிபா டறியாம லரசாள்கிறான்
கல்லுக் கரைந்தாலு மவன் மனதைக் கரைக்க முடியாத பகிலியவன். (188)

சொல்ல முடியா திங்கவன் வாழ்க்கையைத் துட்டு தொட்டேனு மீகைசெய்
கல்லுக் கரைந்தாலு மவனுடைய கல்பு கரையாது நாயகமே [யான்
யுல்லாச முள்ள படையின்தள மொருநூறாயிரம் பெருக்கமுள்ளான்
வெல்ல மனம்வைத்தாலலிப்புலியை விமலன் சமுகத்துக் கனுபபுமென்றார்.()

ஈது மொழியோத வுதமானவ ரின்ப முடன்கேட்டே யுமருகத்தாப்
சோதி பெரியவன் னலிதன்பாலிற் சொல்லி னுரும றரசர்தரமும்
ஏது மறியாதான் கைசர்தேச மிப்போ தேகியே வருவீரென்றே
நீதி மிகவுள்ள அசுஹாபிமார் நேர்மை யுளபதி னுயிரம்பேர் (190)

தளங்கள் சூழவே யெழுந்துநீங்கள் சார்ந்து கைசரி லருகிருந்தே
குளிர்ந்த வசனமா யவன்தனக்குக் கொடுப்பீர் நிருபமு மதிவரவே
வழிபா டாகவே நபிதீனிலே வந்தா லவனையே அரசாய்வைத்தே
யெழில்லாய்த் திறையது மதினத்தில்நீங் கெப்போதுங் கட்டவியம்பிவாழ்மின்.

சொன்னபிரகாரமவன் கேளாட்டாற் றுலங்கும் சமர்செய்து கருவறுத்தே
மன்னன் கோட்டையைப் பிடித்துதீனை வழங்கும் படிசெய்தே இசுலாமாக்கி
மின்னு முடிசூட்டி மகதியரை விளங்குந் தகுத்தினில் வைப்பீரென்றும்
பொன்னு டௌபாண்ட மானதெல்லாம் புரவி தனிலேற்றி வாழ்மினென்றார்.()

நல்ல தெனச்சொல்லி யலிப்புலியார் நாடி யெழுந்தவர் மனையில்வந்து
வெல்லும் படியான அசுஹாபியில் விளங்கும் படைபதி னுயிரரும்
வில்லா யுதமுதல் வேல்வாள்குந்தம் வீர ரனைவோரு மிகவணிந்தே
மல்ல லம்புய நபியிறசூல் வள்ளல் முகம்மதை மிகப்போற்றியே. (193)

சடில மேறியே யலிப்புலியார் தானை யுடனங்க ணெழுந்தபோதிற்
கொடிகள் குடைகளு மிகுந்தேவரக் குரக தந்தனில் மகுதியரும்
கொடிக ளாகவே புவிமீதினிற் கிருபை யோனலி நடக்கும்போது
படியுங் கிடுகிடப் பரிநடத்திப் பதினு யிரஞ்சனம் நடந்ததம்மா. (194)

அண்டர் புகழ்ந்தேத்து மலியாரண்ண லவர்கள் படையுட னடக்கும்போது
தென்றல் மலர்வாசங் கமகமென்னச் சிறந்த கனியுள்ள தோப்பைக்கல
மண்டலந்தனிற் காதிர்சாகிப் மகிபன் ராவுத்தர் ஹமீதுநேசன்
என்றைக் கும்செல்வ மிலங்கல்போல விருக்கும் பூஞ்சோலை கடந்தாரப்போ.

காடு வனங்களும் வாவிகளும் கடுகி நடந்துதா னப்பாலேகிக்
கோடுந் திணைச்சார்பும் பூம்பொழிலும் குறத்திய ருள்ள பாடிகளும்
ஆடு மயிலுகள் நடனம்செய்யு மடவி கடந்தங்கண் படையின்வெள்ளம்
பாடி யூர்கண்டு பதினேழாநாட் பதியி லிருக்கின்ற கைசர் கண்டார். (196)

கைசர் மலைகளும் தோப்புகளும் கண்டே யலியுல்லா தளத்திநேடு
மைபோற் கருங்கல்லின் மலைச்சார்பினில் வந்தங் கிறங்கியே படங்கடித்தார்
மெய்கள் புனலாடி யடிசிலுண்டு விளங்குங் கூடாரந் தனிலிருந்தே
துய்ய முகம்மது மருகரலி தொழுதே யிறைதனை மீகப்போற்றியே. (197)

சிங்கப் புலியலி ஆலோசித்துச் சிகுறன் சேர்வானுக் கெழுதலானர்
பங்கய முள்ள வாவிசூழும் பாங்காங் கைசறை யாளுமன்ற
எங்கள் முஹம்மது நபிகலிமா யியம்பி யிசுலாத்தில் நீயாகுவாய்
சங்கை யாகவே சுவனத்தி தருவா னிறையவான் குறைவில்லாமல். (198)

திங்கள் வதனத்தா ருமறினுக்குத் திறைதா னளக்கவும் வேணுநீதா
னுங்க ளுடபுத்து கானையெல்லா முவரி தனிலேதான் தள்ளவேண்டும்
தங்கும் படியான குபிரோ ரெல்லாம் சார்ந்திங் கிசுலாத்தில் வரலாமென [மு
எங்கே யொளித்தாலும் விட்டிடேன்காணெனகுப்பதில்மொழி யெழுதுமென்

மதியி னழகான அலியா ரண்ணல் மடித்துக் கடிதத்தைத் தூதர்க்கீந்து
பதிலுத் தரமொரு நிமிஷத்திலே வாங்கி வருவீரென் றனுப்பவேகி
பதியின் கைசரின் கோட்டைவாசற் பாங்கா யடுத்தந்தத் தூதுவர்தான்
புதியன் கிருபையென் றவர்நினைத்து போற்றித் தெருவூடேயேகினால்.(200

கண்டார் வீதியின் மாடங்களு காலாட் சேனையின் பெருக்கங்களும்
ஜெண்டா யிலங்கிடப் பிரகாசமாய்ச் சிறந்த யாபார முயற்சிகளும்
அண்டங் கிடுகிட முரசதிர்ப்பு மரிகன் கரியுள னணுகிநிற்கும்
வண்டாய் வாசியார் கூட்டங்களும் வாரிபோ லுள்ள பெருக்கங்கண்டார்.(201)

மின்னும் படியான மணிகுயிற்றி விளங்குங் கதிர்சிம்மா சனத்தின்பேரில்
மன்ன னிருந்தானே யுரிகள்போலே மகுட மணிமுடி சிறந்திலங்க
அன்ன நடைமாதர் கவரிவீச வையா யிரம்ஜன மருகாய்நிற்கச்
சின்னம் பேரிகை யிடிமுழங்கச் சிம்மா சனத்திலே யிருந்தானப்போ. (202)

தீனோர் தூதரு முன்பிலாகிச் சிறந்த வணக்கமாய்ச் சலாமுஞ்செய்தார்
தீனே யார்காணும் தூதரென்றும் நிலத்தி லிருக்கின்ற மதினமென்றார்
ஆனல் நீயிங்கே வந்ததென்ன அலியார் நிருபங்கொண் டிங்குவந்தேன்
கோனுக்கு வந்திடுங் கடிதந்தன்னைக் கொடுமென் றுரைதின னவருமீந்தார். ()

பார்த்தான் கடிதத்தை நவசேருவான் பல்லைக் கடித்தானே நெறுநெறுத்துக்
காத்தா யிருக்கிறா னலியென்போனும் கருத்தை யறியானோ எனதுவாழ்க்கை
கூத்தா யிருந்துநா னரசாளையிற் கோலாந் தானோடா குலதெய்வமே
யேற்ற மிஃதோடா குமரேசனே யென்னடாயிஃ தீஸ்வரனே. (204)

சண்ட மாருதக் காற்றுபோலத் தகர்த்து நொருக்கவே னலிபடையை
அண்டங் கிடுகிட அவன்ஜனத்தை யறுத்திரணஞ்செய்வேன் பிணக்காடதாய்
நின்று பாராதே தூதனேநீ நிமிஷந் தனிலேபோய் வரச்சொல்லென்றான் [டம்
இன்றையத் தினமுயி ரானதையிறையோன் கொடுத்தா னென்றெடுத் தாரோட்

நீட்டோ லைப்படி தனையும்நீங்கி நிமிஷந் தனில்வந்தா ரலிதம்பாலி
னாட்ட மாகவே மிகவும்போற்றி நவிலுவா ரம்போ நடந்தசெய்தி
கேட்டே யலியுல்லா மனம்வெகுண்டு கிருபை யுடையவ வருளீதென்றே
போட்டி யவனுட கூட்டங்களைப் புவியில் வாளினா லரிவோமென்றார். (206)

அன்றவ் விரவினில் நவசேருவா னவனு மனையாளும் துயிலும்போது
கண்டாள் தேவியார் கனவானது கதிரின் மாடங்கள் சரிந்துவீழ்க
விண்டா ளிதுசேதி சேர்வானுக்கு வீணித்துயிலென்றா னவசேருவான்
கொண்டான் நித்திரை மன்னனுமே குறிப்பா யவனொரு கனவுகண்டான்(207)

சேரு வானுட மாளிகையிற் றிடுதி டென்னவே யிடியினாலே
காரின் மாடங்க ளிடியக்கண்டு கலங்கி விழித்தவ னுரைசெய்குவான்
கூராய்க் கனவுக ளெனதுபெண்ணே குறிப்பைக்கேளடி யிளமயிலே
மாறு பாடிதோ மயிலேகண்ணே மயிலே குலதெய்வம் நமக்கிருக்க. (208)

நோட்ட மறியோமே யெனதுகண்ணே நூதன முள்ள கனவினாலே
போட்டி நடப்பது புவிமீதினிற் புகன்றா ரில்லையே குலதெய்வங்கள்
காட்டிக் கொடுப்பாரோ மயிலேசரும் கண்ட கனவினுட் பலனானது
மூட்டுறேன் சண்டை யலிபாலென்று முறுக்கினான் மீசைநவசேருவான்.(209)

காலை தானாக வவனெழுந்தே கரையின் வாயிலிற் றானஞ்செய்து
சோலை மீதுள்ள தோப்பில்வந்தே துலங்கும் சாமியைப் பணிந்துபோற்றி
மாலா யெழுந்துதான் தகுத்திலாகி டமடம வென்று மணியடித்தான்
கோல மாகிய சத்தங்கேட்டுக் குலத்தோர் யாவரு முன்பாய்வந்தார். (210)

மந்திரி மார்களை யருகழைத்து மவுலுவா னப்போ நவசேருவா
னெந்த விதத்தாலு மலியைவெட்ட வெனக்கோ ருத்திதான் சொல்மினென்று
சந்திப் பாகவே கேட்கும்போது சாற்றுவா ரப்போ மந்திரிமார்க [றார்
ளுந்தன் மனம்போலே யலியைக்கொன்றே யுடனே யூர்வந்து சேர்வோமென்

அன்னே ரந்தனில் நவசேருவா னகமும் பூரித்தே தழுவிச்சொல்வான்
என்று நமக்கான மந்திரிமாரே யெழுந்து படையுடன் செல்மினென்றான்
மன்ன னுரைகேட்ட வமைச்சரெல்லா மருவ லார்களை யணியாய்விட்டே
எண்ணிக் கையினுடன் வசுதர்களை யிருப தாயிரம் ஜனங்களோடும். (212)

யானை பரிகளுந் தேரிரத மணியாய் விட்டானோர் சார்பினிலே
சேனைத் தலைவர்கள் ஜண்டாவோங்கச் சிறந்த வயவீர ரொருசார்பிலே
தானை பதாதிகள் தவில்முரசு தம்பூ ரெக்காள மொருசார்பிலே
தேனின் மலர்மாலை புயத்தணிந்த சிறந்த கருணீக ரொருசார்பிலே. (213)

ஜண்டாக் கொடியுடன் மள்ளர்கூட்டந் தடதடவென்றே முரசடித்தே
யண்டங் கிடுகிடென் றதிரத்தாவி யரசன் கோட்டை விட்டப்பாலாகி
வண்டன் தளங்களு மந்திரிமாரும் வருகுமுழக்கற்றை தயலியார்கண்டே
யென்றும் பெரியவனிருக்கிறானென் றெனதுகனியான அமுசாகேளீர். (214)

குமுச மாகவேமள்ளர்கூட்டம்குரைகடல்போலேவாராரிப்போ
தமுசா பரியேறி வாளுந்தாங்கி யவர்கள் கனையெல்லாம் பிணக்காடாக்கி
நமது சமுகத்தில் வரலாமென்று நாத ரலிசொல்வ வெழுந்து வீரர்
தமது பரிசையும் வாள்வேலேந்திச் சரகதி யுள்ள பரியேறியே. (215)

விட்டார் குதிரையை வேகத்தோடும் விரிகட்டர் போன்ற மருவலார்மே
லட்ட திசைகளுங்கிடுகிடென்ன ஆதிசேடனும் நடுநடுங்கப்
பட்டாளமெல்லாம் நெருநெறன்ன பாரில்மண்டுசிவிசும்பிற்றுவச்
சட்டந்தவிறு தயரிசிமேறுய்ச்சமற்களம்வந்தா ரமுசாவென்போர். (216)

வந்த படைகளு மந்திரிமாரும் வாரிபோலவே வளைந்துமள்ளர்
சந்திப் பிதுவென்றே யமுசாபேரிற் சரவா ணஞ்செய்தான் மழைமாரிபோல்
கந்தர முள்ள கவண்கல்லுகள் கடியவேகமாய் வீசுவாரும்
மந்தர மின்னல் வாள்வேல்குந்த மள்ளரேவிய பரிசையெல்லாம். (217)

தந்திர மாகவே யமுசாவீரர் தட்டா னின்றனர் வாளினாலே
கந்தரம் போலே பரிநடத்திக் காளைய ரெல்லாம் நடுநடுங்க
விந்தை யாகிய தாளினாலே வீசின ரப்போ தொருசாரியிற்
பந்தி யாய்நின்ற மன்னர்கூட்டம் பாரில் விழுந்தார்க ளிருதுண்டாக. (218)

சின்ன பின்னமாய் மருவலாரைச் சிரசில் மிகதாக்கிக் கருவறுத்து
முன்னா லோடய வசுதர்களை முடிது ளாக்யே ரணங்கள் செய்தா
ருன்னிப் பாகிய யானைகளை யுரமாய் மத்தகம் தனைப்பிளக்க
மன்னி லங்களும் திடுதிடென்ன மள்ளர் விழுந்தாரே பிணக்காடதாய். (219)

கவண்கல் லாயுதக் காரரெல்லாம் ககனி லுயர்விட்டுக் கிடப்பார்களும்
புவன மீதிலே யிரத்தசோரி பொங்கு மந்திப்போ லேயோடவே
நவசேர் வான்படைக் கூட்டங்களில் நாத ருடவாளா லிறந்தஜனம்
புவியில் விழுந்தது பதினாயிரம் புறங்காட்டி யோட மற்றோரெல்லாம். (220)

இந்த வரலாறு தன்னைக்கண்டே யிருகண் ணெருப்பெழ வெழுந்தான் மந்திரி
சந்திப் பிஃதென்றே குதிரை யேறித் தனது கதிர்வாளும் பளபளென்ன
வந்தா னலிமகன் சமுகமாக வாணப் மரிவிட்டே மடமடத்தே
யெந்த வூர்காணா நீவிரென்றான் யானும் சிங்கத்தின் குட்டியென்றார். (221)

சிங்கத் தின்குட்டி நீயாவென்று சினந்து வாட்கொண்டு மந்திரிதாக்கத்
தங்ச மயமான அமுசாவேலாற் ருங்கி யவனேயும் வாளால்வெட்டப்
பங்கிரண்டாக லவன்வீழ்துதான் பரியோ டிரந்தானே மந்திரியும்
சங்கமா யோடு மள்ளரெல்லாம் சார்ந்தார் கைசரின் கோட்டைமீதில். (222)

அங்கே ரந்தனி லலியார்செல்வ ரரியை நடத்தியே படங்கில் வந்து
மன்ன ரலியுல்லா பாதம்போற்றி மகனு ரமுசாவு மிருக்கும்போதில்
முன்னு லோடிய மள்ளர்கூட்டம் முடுகி யரசன்பா லவர்கணின்று
தன்னுல் விசனமாய் நிற்கும்போதிற் றலைவ னவசேருவா னுரைத்தானப்போ.

மந்த்ரி யெங்கடா வசுகரென்ருன் வாளுக்கிரையானர் மகாராஜரே [வந்து
யெந்த விதஞ்சொல்வோம் பட்டபாட்டை யிளஞ்சிங்கம்போலே யொருவன்
பந்தியாய் நின்ற நம்மோர்களைப் பனங்காய் போல்முடி யுருளச் செய்தான்
இந்தப் புவிமீதி லவனைப்போலே யாருங்கிடையாது மன்னேயென்ருர். (224)

ஓதுமொழிகேட்டு நவசேருவானெளிர் கண்ணெருப்பெழக் கோபங்கொண்டே
யேது தானடா குலதெய்வமே யென்னை மிகவாளு மயிலேசனே
சாதுவாகவே போனஜும் சமரி விருந்தது பதினுயிரம்
வாது விடுவேனே நவசேருவான் வாரி யெனும்படை யெழுமினென்ருன். ()

பாங்கா யுரைசெய்த வசனங்கேட்டுப் படையோர் யாவரும் சினந்துசீறி
நான்கு புறத்திலும் நதிகள்போலே நாற்ப தாயிரம் ஜனங்கள் வந்தார்
வேங்கை யதுபோலே நவசேருவான் மீசை முறுக்கியே படபடத்துத்
தீங்கா யிருக்கின்ற அலியென்போனைச் சிரசைக் கொடுவரும் நமரீரென்ருன்()

அன்று தினத்திலே யமைச்சர்மூவர் ஆயுதம் தாங்கிப் பரியிலேறி
ஜெண்டாக் கொடியுடன் முரசடித்துச் செறுனர் நாற்பதா யிரவர்சூழச்
சண்டமாருதக் கடலைபோலே தடதடவென்று கொடிமுழங்க
மண்டவர்களு மதிரத்தாவி வாரி போற்படை யெழுந்ததம்மா. (227)

சதிகள் தான்செய்ய அலியைநாடிச் சமர்க்களம் வந்து நிற்கும்போதி
லிதுகண்டலிமக னமுசாமன்ன ரிலங்கு மாயுதம் பரிசைதாங்கி
மதியி னழகான அலியாரிடம் வந்துபோற்றியே விடையும் பெற்றுக்
கெதியி லுயர்வான பரியிலேறிக் கிடுகிடெ னச்சமர்க்களத்தில் வந்தார். (228)

சரகெதி யுள்ள பரியைவாளைச் சமர்த்த ரலிமகர் தமையுங்கண்டு
திறலோர் வருகிருர் படைமீதினிற் சிறந்த பாணங்கள் பொழியுமென்று
ணரலே வாய்வந்த படைமன்னர்கள் நான்கு திசைகளும் தட்டா நின்றே
நெறுநெ றுத்திடச் சரபாணங்கள் நிறைந்த மழைமாரி போலேவினர். (229)

வருகும்படியான பணமெல்லா மன்ன ரலிமகர் கசையாற் றட்டிச்
செருனர் தனைப்பார்த்துக் கோபங்கொண்டு செந்தூட் பறக்கவே பரிநடத்தி
தரிய லார்களை முடிபிளந்து தாக்கினு ரப்போ தொருசாரியில்
மறையோர் போற்றிய அலிதம்பாலர் வாம்பரி விட்டுச் சமர்க்களத்தில். (230)

அட்ட கிரிகளும் கிடுகிடென்ன ஆதி சேடனும் நடுநடுங்க
வெட்டிப் பிளந்தாரே குபிரோர்களை வீர வாளிநாலும் வேலினாலும்
முட்டி வருவோரைப் பிடித்தடித்து மூளை சிதறவே மிகவுந்தாக்கி
கோட்டு முரசுகள் தவிலுடைத்துக் குறுக லார்தம்மைப் பிணக்காடாக்கி(231)

பற்ற லார்களில் மாண்டஜனம் பதினே ழாயிரத் தொருநூற்றுயேழ்
சுத்த வீரரும் பரிநடத்தித் துலங்கும் சமர்க்களும் நிற்கும்போதிற்
சத்தங் கூறியே மந்திரிமார் தரிய லார்களை யழைத்தநேரங்
கத்து ருன்பயல் மத்திரியென்று கடிய வேகமா யோடிச்சேர்ந்தார். (232)

அலியின் மகனாரும் பரிநடத்தி யதிக வேகமாய்ப் படங்கில்வந்து
தலத்தி லிறங்கியே அமுசாமன்னர் தந்தை பாதத்தை மிகவும்போற்றி
நலத்தோ ரலியுள்ளா விறையைப்போற்றி நாய னருளாலே யிருக்கும்நேரம்
குலத்தின் குபிரோர்க ளோடிச்சென்று கோட்டை வாசலினருகாய்நின்று. ()

மந்திரி மூவரும் மள்ளர்கூட்டம் வாரி போலாகச் சனமெழுந்தே
விந்தை யாகிய முரசடித்து விளங்கும் நவசேர்வான் சமுகநின்று
ரந்த நேரத்தி லரசானவ னருளுவா னப்போ தமைச்சர்பாலி
லெந்த விதமுரா சடித்துவந்தீ ரெமது படையோர்க ளெங்கேயென்றான்.(234)

அதுகேட்டமைச்சர்க ளருள்வாரப்போ தண்ணலாகியவரிசிம்மேறே
சதயிலகப்பட்டு யாங்கள்நின்ற தன்மை தனைக்கேளு மகாராஜரே
பதிகள்தானுள்ள தேவோஜின்னோபடைக்கு வருகுதுமனிதன்போலே
நதிகள்பதினேழாயிரஞ்சனத்தை கருக்கிக்குவித்திட்டான் ரணகளத்தில்.(235)

என்ன விதமென்று நாங்கள்சொல்வோ மெங்களுயிர்த்தப்பி வந்தோமென்றார்
மன்னன் கலங்கியே மறுக்கமுற்று மயங்கி யிருக்கிற சமயத்திலே
தன்னின் மகனான அனுமனப்போ தகப்பன் பால்வந்து தழுவிச் சொல்வான்
இன்னும் படையுட னானுமேகியிப்போ சமர்செய்து வாரேனென்றான். (236)

நல்ல தெனச்சொல்லி மகராஜனும் நாற்பத் தேழாயிரம் ஜனங்க
ளுல்லா சமதாக வரவழைத்தே யுரிமை யொடுசாமி தன்னைவாழ்த்தி
நல்லார் தெய்வமே மயிலேசனே நமது மகன்கூடப் போய்வாவென்றே
சொல்லி யரசனு மனம்வெகுண்டு துலங்கும் படைவனை யெழுமினென்றான்.

மகனே யனுமனே யுனக்குமுன்னே மயிலேசத் தெய்வம் போயிருக்கும்
சுதனே மனமது தயிரியமாய்ச சுருக்கி லலிதனைக்கொல்வா யென்றான்
கெதியே சரியென்றும் படையெழுப்பிக் கீர்த்தியாகவே பரியிலேறிப்
பதிகள் தனைநீங்கிச் சமர்க்களத்திற் பாருங் கிடுகிட முரசடித்தான். (238)

ஜெண்டாக் கொடிகளு மிகவோங்கிடச் செருநர் கூட்டங்கள் மிகவுந்துன்னத்
துண்டு வெண்மடர் புரவிசூழத் துலங்கு மாயுதம் கதிர்கள்மின்ன
மண்டலங்களுங் கிடுகிடென்ன வான்பரிக் கூட்ட மடமடத்தே
சண்டமாருதக் கடலைப்போலே சமரின் களத்துற்றா னனுமனப்போ. (239)

இதுகண் டலியவர் தந்தைபாலி லியம்பும் வரலாற்றால் மனம்வெகுண்டு
முதியோ ரபீத்தாலிப் மகனாருமே முன்னால் வருகிற வெள்ளங்கண்டு
கெதியி லுயர்வான துல்துலேறிக் கீர்த்தி மிகவுள்ள வாள்கைதாங்கி
மதியின் வதனத்தார் மகதியரு மன்ன ரமுசாவும் பரியேறினார். (240)

அலியு மமுசாவு மகதியரு மரிவா ளிலங்கவே பரிநடத்தி
யொலியின் கடல்போல வரும்படையி லுன்னி நடத்தியே ஆர்ப்பரித்துக்
கலின வாம்பரி கலகலென்னக் கர்க்கி விடுகின்ற கதியினாலே
தலங்கள் தனில்நிற்கும் குபிரோரெல்லாம் தடபுட லாகி மனநடுங்க. (241)

புகுந்து படையிலே மூன்றுபேரும் போட்டார் வாளினால் மருவலரை
மிகுந்த வசுதரை வெட்டிதாக்கி மிரளக் குபிரோர்கள் பிரளத் தூர்த்துத்
தகுந்த கருனல்கள் தலையறுத்துத் தவிடு பொடி யாக்கி தசுதர்களைத்
தொகுதி யாகவே யிறந்தஜனம் துஞ்ச லிருபத்தி யேழாயிரம். (242)

இந்த வாருதான் கொல்வானென்றே யிருந்த குபிரோர்கள் புறங்காட்டியே
சந்திப் பாகாமற் றரியலார்கள் தானே மிகவோடி மறைந்தார்கேணி
அந்த நேரமே நவசேருவா னருமை யுளமக னனுமந்தானே
சிந்தை யுறுங்கோப மதிகமாகித் திடுதிடென்னவே பருநடத்தி. (243)

வந்தான் கதிர்வாளுங் கரத்திலேந்தி வள்ள வலியுட சமுகமாகிச்
சந்திப் பாய்நின்றே யவன்வாளாலே தாக்கினானப்போ தலியார்தம்மை
விந்தை யாகிய வேலாற்றுங்கி வீசினா ரப்போ வாளிநாலே
மந்த்ர கதிர்வாளால் மன்னனவன் வள்ள லலிவாளை மிகத்தாக்கியே. (244)

தகுதி யாகிய கசையினாலே தாக்கினா னப்போ தனுமராஜன்
மிகுதி பெலமுள்ள அலியார்ண்ணல் விளங்கும் புகர்வாளா லதனைத்தட்டிச்
செகமும் நடுங்கவே யவனைப்பாய்ந்து சிரசிற் கூந்தலைக் கரத்தாற்சுற்றி
மகுதி யர்கரங் தன்னிலீந்தார் வசுதன் தனைச்சுற்றிக் கயிற்றாற் கட்டி. (245)

தெடுங் தவத்தினர் மூன்றுபேரும் செருக்களம் விட்டுப் பரிநடத்தி
வாடும் பயிர்க்கொரு மழைமாரிபோல் வந்தங் கிறங்கினார் கூடாரத்திற்
பேடி யாகிய அனுமன்தன்னைப் பின்னித் தளையிட்டுக் காவல்வைத்துக்
நாடி யிறையோனை யுவந்துபோற்றி நாதரனைவரு மிருக்கும்நேரம். (246)

ஒகு மறைந்திடும் தரியலார்க ளுருகி மனதெல்லாம் கலங்கிவாடி
ஆடித் துரும்பாகக் கோட்டைவந்தே யரசன் முன்னின்று கண்ணீர்விட்டு
வாடி மிகநின்றே வசுதர்சொல்வார் வையந்தனையாளு மகாராஜரே
மோடி யாகிய நமது தெய்வ முன்போ யிருப்பதாய் மொழிந்தீர்களே. (247)

இன்று நாங்கள்தான் பட்டபாட்டை யென்ன விதமென்றே யியம்பப்போமோ
மொன்றியாய் வந்தே யொருமனிதனொருக்காவி ருக்காலும் சமர்கள்செய்தான்

கண்டோமிதுசண்டை மூவர்களைக்கண்கொண்டு பார்க்க முடியாதையா
வென்றார் நமரோரைப் பிணக்காடாக வெள்ளந் தானோட ரத்தசோரி. (248)

அதுகண் டனைவரு முயிர் தப்பினோ மனுமன் மகராஜ ரெதிரிலானார்
எதுவை யறிவோமென் றனைவர்களு மிருந்துகேணியில்மறைந்துபார்த்தோம்
மதிபோ லழகுள்ள அலியாரண்ணல் வரியின்புலிபோலே யுயிரைப்பாய்ந்து
துதியி னனுமனின் தலைமுடியைச் சுற்றிக் கரத்தினால் மருளடித்தே. (249)

இன்ன மொருவரின் கரத்திலீந்தா ரிறுக்கி யவன்கட்கு யெடுத்தேகினான்
என்ன செய்வானோ தெரியாதையா வெங்க ளுயிர்தப்பி வந்தோமென்றார்
சொன்ன வசுதர்கள் வசனங்கேட்டு சோர்ந்து நவசேர்வான் மனங்கலங்கித்
தன்னால் வதனத்திற் கண்ணீர்விட்டுத் தரையா னதைக்கீறிப் புலம்பினானே. ()

பதம்.

என்செய்வேன் சுதனே அனுமனை
 என்செய்வேன் மகனே
தஞ்சங்க ளொன்றில்லைத் தலத்தின் மீதிலே
 பஞ்சிலே யெரியுற்ற பாவனை யாகுதே
 என்செய்வேன்

அஞ்சினேன் மனதும் ஆதரிப்பாரில்லை
கெஞ்சினேன் மயிலேசரைக் கீர்த்திக்கிடம் வைத்தார்
என்செய்வேன்

மிஞ்சியே போர்வந்தால் வீட்டுக்கு வாராமல்
அஞ்சுக மென்றுன்னைப் பருந்துகொண்டேகிச்சோ
 என்செய்வேன்

கஞ்சத்தி னுனதன்னை களவு கண்டதுபோல
 விஞ்சையிற் பிடிப்பட்டு வீணாகப்போனையோ
 என்செய்வேன்

தொங்கல்.

எண்ணி யரசனும் கண்ணீர்விட்டே யேங்கி யழுகிற சத்தங்கேட்டு
மண்ணில முள்ள வன்னம்போலாய் மகராஜன் தேவி யெதிரிலாகித்
தன்னா லழுகிற வருத்தங்கண்டு தைய லுடமகன் தனையும்நாடி
மின்னும் வதனத்தில் கண்ணீர்சிந்த விழுந்தே தரைமீதிற் கிடந்தழுதாள். ()

பதம்.

இராஜரே நாமள் துயிலுங் காலையில்
நான்கண்ட கனவு துரைமகனே தரைமீதிலே
அரசே நீர்நம்பவே மனம்வெறுத்திர்
மதியால்.

என்னவே தென்றுங் கேட்டிட்டாலும்
எந்தனைப் பகைத்தீர் மனம் வெறுத்தீர் மகாராஜா
மணியே நான் எவ்வித
மெனத் தெரியே னடியாள்

போர்க்களந் தன்னிற் போயிடு மகன்
புள்ளகையாகவே தான் மிடிபடவும், அடிபடவோ
சுதனே என்ன பேதகம் பேதகம்
மதியேதெடா கனியே. (256)

பெற்றிடும் வயிறு பற்று தனுமனே
நற்றவ மணியே துரைமகனே திரைமணியே சுதனே
என்ன பேதகம் பேதகந்தனில்
எம்பட்டாய் பூவியில். (257)

## தொங்கல்

மாதா வழுத்திடும் வசனக்கேட்டு மகளார் சகர்வா னும் காக நாக
மேதோ அழிகிறுள் தாயாரென்றே யிருவர் தாம்வந்து விளங்கிமாது
போதர வுள்ள வெங்கள் துணைப் போர்க்களந்தனி லகப்பட்டாயோ
நீத மிகவுள்ள குலதெய்வமே நிலத்தில் நீயும்பார்த் திருந்திட்டயோ. (258)

எங்கள் பிறவியே தவமணியே யென்ன விதமேகி யகப்பட்டாயோ
தங்க மயமான தேகங்களைச் சமரி லாகியா பிடிகொடுத்தாய்
சங்கையாகிய மயிலேசனே தயவில்லாமல்நீ யிருந்திட்டாயோ
வுங்கள் முகங்காண வெண்பிறவி யுலகந் தனிலேதா னெந்தநாளோ. (259)

இந்த விதமாக மயில்மாதர்க ளிருந்தங் கழுகவே யரசனுன
தந்தை யாகிய நவசேருவான் தாரை யாகவே கண்ணீர் விட்டே
யெந்த விதத்தாலு மலியைக்கொல்வோ மினிமே வழுகாதீர் நீங்களென்று
வந்தங் கரசனும் தகுத்திலாகி மவுலுவானய்யோ படையோர்க்கெல்லாம்.

அலியைக் கெலிக்கவே யான்வாரதா லவசியப் படையெழுமி னென்றுன்
தலைவன் மொழிகேட்டு மந்திரிமார் தளங்கள் பெருக்கினர்கடலைப்போலே
பெலங்க ளாகிய வசுதர்தாளிற் பெருக்கம் ஜனமெண்பத் தையாயிரம்
துலங்கும் யானையில் நாலாயிரம் துரகத கும்பத் தையாயிரம். (261)

யானைத் தலைவர்க ளொருசாரியில் ஆடலம்பரி யொருசாரியிற்
சேனைத் தலைவர்க ளொருசாரியிற் சிறந்த வயவீர ரொருசாரியிற்
றுனைப் பாதாதியின் கருனல்கூட்டம் சரகதி யுள்ள பரியிலேறி
வீணை முரசுகள் பிடியெக்காளம் விளக்கி வாரிபோ லெழுந்தாரம்மா. (262)

பதினெண்ணுயுதம் பரிசை தாங்கிப் பலவனத்துயில் மாலைசேர்த்து
நிதிகள் மிகுத்திடும் நவசேருவா னிலத்தில் மயிலேசர் தமையும்போற்றிக்
கெதியி லுயர்வான பரியிலேறிக் கெடியோடும்படை தன்னிலாகி
நதியின் பெருக்காகப் படையதனை நடத்தி வருகிற நேரத்திலே. (263)

ஜெண்டாக் கொடிகளுந் தவில்முரசும் திடுதி டென்றுதான் கொடிகளோடு
கொண்ட லிடிபோலுங் குமுறிச்சத்தம் கோக்கள் பலவுமே கிடுகிடென
மண்டல மீதிற் றுகளெழும்பி வானின் கதிரவன் மறைவாகிடச்
சண்ட மாருதக் கடலைப்போலச் சமர்க்களம் வந்து நிற்கும்போதில். (264)

கண்டா ரலியுல்லா பெருங்கூட்டத்தைக் கவலுவா ரப்போதினோர்க்கெல்லாம்
இன்றிங் கிப்போது நமரோரெல்லா மெழுமி னசுஹாபி மார்களென்றார்
தென்றல் மலர்வாச ரமுசாவுடன் சிறந்த மகதிய ரலியுல்லாவும்
நன்றி மிகவுள்ள யசுஹாபிமார் நல்வ கலனணிந் தெழுந்தாரப்போ. (265)

வாளா யுதக்கார ரொருசார்பினில் வந்து மிகநின்றார் முசிலிம்களும்
காளை வயதுள்ள வயவீரர்கள் கதிர்வே லேந்தியே யருகாய்நிற்க
ஆழிக் கடல்போலப் பதினாயிரம் அசுஹாபிகளுமே பரியிலேறி
வாழி யனைவரும் ஆமீன்கூற மன்ன ரலிப்புலி துல்துலேறி. (266)

மின்னும் கதிர்வாளும் பளபளென்ன வீர ரமுசாவு மகதியரும்
உன்னி தனிலேறி யாறகலை யுவந்து மிகப்போற்றித் தீனோரெல்லாம்
இந்நாள் பீசபீ லிறைதவக்க லென்றே முரசுகள் கிடுகிடென்ன
மன்ன ரலியுல்லா முன்னிலாக மற்ற முசிலிம்கள் சலவாத்தோத. (267)

பேரி நவுரிகள் கிடுகிடென்னப் பிடியோடெக்காள மடமடென்னத்
தாரை சல்லரி தம்பூர்மேளம் தடதட வென்று மடமடக்கப்
போர்க்களம் வந்து கொடியிழுத்தார் புத்தை வணங்குவோர் கண்ணுற்கண்டு
பார்க்கப் பதினாறு கண்கள்வேணும் படையினவசேர்வான் பெருக்கந்தானே. ()

சுந்திப் பாகவே யிருபடையும் தாட்டியாய் நின்று கோட்டியாகிச்
சிந்தை யுறுங்கோப மதிகமேறிச் சினந்து பொருதினா ரமர்க்களத்தில்
விந்தை யாகிய வசுதர்களும் விளங்கு முசிலிம்க ளனைவர்களும்
பந்தி யாகவே சமர்பொருதிப் பாரில் விழும்படி கருவறுத்தார். (269)

அம்பா லெறிவாரும் கவண்கல்லினா லதிக வுரங்கொண்டுதாக்குவாரும்
பம்ப ரம்போலே வாள்சுழற்றிப் பற்றியெறிவாரும் பகுப்பாகவே
முன்பால் வருவாரும் கொம்புகூச்சி மீறி யடிப்பாரும் பாரின்மீதிற்
றெம்பாய்த் தாளின்று குபிரோர்களைச் சிரசு விழும்படி தாக்குவாரும். (270)

அலியு மமுசாவு மகதியரும் ஆடலம்பரி தனைநடத்திப்
புலிபோல் மிகப்பாய்ந்து மருவலாரைப் போட்டார் வாளினா லிருதுண்டாகக்
கலியின் வாம்பரி கலகலென்னக் கருதலார்களின் முடிதூட்செய்து
நலங்கள் பொருந்திய தவத்தோர்கள்தாம் நான்கு திசையிலும் சூறையாடி. ()

சண்ட மாருதம் போற்றுவியே தகர்த்து மூளையை வசுதர்களை
மண்டலந்தனிற் பிணக்காடாக்கி வடியும் நதிபோலே சோதியோட
வண்டன் படையிலே மாண்டஜனம் வசுத ரைம்பத்தி யையாயிரர்
கொண்டலாகிய காற்றுப்போலக் குறுகலா ரெல்லாம் பயந்தோடினார். (272)

அந்த நேரத்தில் நவசேருவான் ஆடலம்பரி நடத்திவந்தே
சந்திப் பாகவே யலிதம்பாலிற் சாற்று வான்விழி யனல்பறக்க
எந்த விதத்தாலு னலிமனனனே யெனது வாளினு லுனையும்வெட்டி
யுந்தன் ராச்சியந் தனைப்பிடித்தே யுயர்ந்த கொடிபோடத் துணிந்தேனென்றான்

ஈது மொழிகேட்ட யலியாரண்ண லியம்புவாரப்போ தருமையாகக்
கோது பேசாதே நவசேருவா குணமா யான்சொல்லு மதியைக்கேளு
நீதி முஹம்மது கலிமாத்தன்னை நீயே தான்சொல்லி யரசிருந்து
நாத ருமறுகத் தாபவர்க்கு நலமாய் திறைகட்டி வாழ்கவென்றார். (274)

தவங்கள் பொருந்திய அலியார்சொன்ன சரத மதுகேட்டு நவசேருவான்
கவனமிகவாகி யிருவிழிகள் கனலாய் பறக்கவே மிகவுஞ்சீறி
அவனிதனி லுன்னை வைப்பேனோவென் றதட்டியவன்வாளாலலியைவெட்டச்
சுவனத் தலியுல்லா வேலாற்றுங்கித் துலங்கும் புகறினு லவனைத்தாக்க.(275)

பரியும் சேர்வானு மிருதுண்டாக்கிப் பாரில் விழுந்தானே பனைகள்போலே
தரியலா ரெல்லாம் விரண்டோடிடத்தம்பூர் முரசுகள் கிடுகிடென்ன
விறையோ னலியுடன் மகுதியரு மிலங்கு மலர்மாலை யமுசாவுடன்
வரங்கள் மிகவுள்ள தீனோருடன் வந்தே யிறங்கினர் கைசர்மீதில். (276)

ஆதியிறையவன் தனையும்போற்றி யண்ணல் முஹம்மது தமையும் வாழ்த்தி
சோதி துலங்கிய தகுத்திலாகித் துய்யோ னலிப்புலி தானிருந்து
நீதி பொருந்தவே கொடியிழுத்து நேர்மையாகிய பெயர்கள் சூழ
நாதர் மொழியினற் குபிரோர்களை நலமாய் வரவழைத் திசிலாமாக்சி. (277)

சீதம் பொருந்திய கைசர்தேசம் சிறக்கும் காபிர்க ளான்பெண்ணெல்லாம்
ஏது வாய்வந்து கலிமாச்சொல்லி யிசுலா மானார்கள் சகலோர்களும்
காதம் நான்குள்ள சிற்றூரார்கள் கடிதி னோடிவந் திசுலாமானார்
நீதம் நடத்தியெ அலியாரண்ணல் நேர்மையுடனவ ரிருக்கும் போதில். (278)

கைசர் தனையாண்ட நவசேருவான் கடிமணமாதை யருகழைத்துப்
பைச லாகவே கலிமாவோதப் பகர்ந்தார் நபியுட மருகேகனார்
சலிகைவசனத்தின் ராஜன்தேவி சங்கைபொருந்தவும் கலிமாச் சொன்னாள்
வஜிகரமுள்ள சகர்வானையு மடமா னுசுநா சினையுங்கூட்டி. (279)

சொல்லு மயிலாரே கலிமாவென்றார் துலங்கு மாதர்கள் கோபமாகிப்
பல்லா யிரங்கோடிப் பேர்சொன்னாலும் பகர மாட்டோமே. கலிமாவென்றார்
நல்ல திருக்கட்டு மிருமாதரை நன்றாய்ச் சிறையினில் வைமினென்றே
அல்லாவின் சிர்றை யறியுமான அலியா ரோதவே யடைத்தார்தீனோர். (280)

நாசு நாசையும் சகர்வானையும் நலமாய்ச் சிறைச்சாலை வடைத்தபின்னர்
வா[illegible] மூகம்மது மருகரலி மவுலுவாரப்போ கணக்கர்க் கெல்லாம்
தேசந்தனையாண்ட நவசேருவான் திரவிய மென்ன விருக்குமென்றார்
ராஜன் கணக்கரிற் பதினேழுபேர் நவிலுவா ரப்போ தலிதம்பாலில். (281)

ராஜ னுடபொரு ளிவள வென்றும் நங்கை மார்நிதி கணக்கீதென்றும்
வாசனை செய்யக் கணக்கரெல்லாம் வழுத்தினு ரப்போ தலியாரண்ணல்
யோசனை யுள்ள மந்திரிமாரே யுள்ள மதிப்புக ளெவளவாகும்
பாசக் கில்லாம லுரைமினென்று பகர்ந்தார் முகம்மது மருகேசனுர். (282)

அந்த நேரமே மந்திரிமா ரருளு வாருள்ள கணக்காகவே
யெந்தப் பண்டுள்ள நிதியங்களு மெழுபதாயிரம் தொறுச்சுமையாம்
சுந்தர வதனத்தின் தயாபரரே தாங்க ளறிகவென் றுரைத்தபோது
வந்த கணக்கையும் வசப்படுத்தி வாகாய் நிதிக்கெய்லாம் காவல் வைத்தார். ()

அறங்கள்விலங்கவே பள்ளிவாச லலங்கிர் தம்செய்தா ரிபாதத்திற்காய் [செய்து
வரங்கள் பொருந்திய அலியாரண்ணல் வல்லோன் வணக்கத்தைத் துலக்கஞ்
மரங்கள் குடிகொண்ட காபிர்களை வாகாய் மார்க்கமும் மறியவைத்தார்
சிறந்த மிகுருபில் குத்துபாவும் தெளிவுண் டாகவே செய்தீரப்போ (284)

ர்து படியிற்க மகுதியர்க்கே யிலங்கு முமறுகத் தாபுரைபோற்
காதலாகவே முடிசூட்டிடக் கருத்தில் நினைந்துதா னலிப்புலியார்
சீதம் பொருந்தவும் தெருவீதிகள் சிறந்த அலங்காரம் செய்யச்சொன்னுர்
காத ருரைபபடி கைசர்தேசம் நாட்டார்மிகவந்தே அலங்கரித்தார். (285)

தெருக்கள் தோறினுங் கதலிநாட்டிச் சிறந்த மலர்ப்பந்தல் சிங்கரிப்பார்
தருக்க ளாகிய கமுகூன்றியே சாரி யாகவும் வளைபரப்பி
யருக்கன் தனித்திருந் திலங்குமாப்போ லலங்கிர்தம்செய்தார் மணிமுத்தாலே
திருக்கண் ணுடையவர் பார்க்கவேணும் சிம்மா சனத்துட பிரகாசத்தை.(286)

தீனோர் யாவரு மொருங்குகூடிச் சிறந்த அலியுல்லா சமுகமாகி
மாணிலந்தனில் மகதியர்க்கும் மஞ்சன மாட்டித் துயில்புனைந்து
தேனின் மலர்மாலை சிறந்திலங்கச் செழித்து மெழிலான மவுலிசூட்டி
வானின் மதிபோல மகதியரும் வந்தி கதிர்ச்சிம்மா சனமிருந்தார். (287)

முத்தா லழுத்திய சிம்மாசன முதலோன் கிருபையா லிருக்கும்போது
சுத்த முடன்மயதர் கவரிவீசத் துலங்கும் பூச்சக்கரக் குடைதுலங்கப்
பக்தி யுடன் வந்து நாட்டாரெல்லாம் பணிந்து வாழ்த்தியே கட்டியங்கூற
வெற்றிக் கொடிகளு மிகத்துலங்க விளங்கும் காளாஞ்சி யேந்திநிற்க. (288)

கபியா முகம்மதின் சலவாத்தோத நவுரி பேரிகை பிடிமுழங்கப்
புவியில்தீனோர்கள் ஆமீன்கூறப் புகழ்ச்சி யாகவே மகிழ்ச்சியோங்கக்
கவிகள் பாடிய பக்கீர்மார்கள் ஹக்கன் கிருபையா லுவந்துபோற்றத்
தவமும் துலங்கவே யுலகமீதிற் றர்மதானங்கள் வளர்ந்தேறவே. (289)

சங்கை யாகிய மகிழ்ச்சியோங்கத் தனியோன் பறக்கத்துப் பெருகிவாழ்க
மங்கலக் குடிதன்னில் வாழு மதியோன் சிக்கந்தர் காதிர்சாகிப்
திங்கள் வதனத்தின் மணியாய்வந்த செல்வன் ராவுத்த ஹமீதுநேசன்
தங்க நிதிகளுஞ் செல்வங்களும் சம்பத்தும் பெற்றே புவியில் வாழ்க. (290)

அரசி லிருந்தாரே மகதியரு மழகு பொருந்திய தீன் துலங்கக்
குறைவிக் குலத்துறு மவியார்சொல்வார் குணம தாகிய மகதியரே
தரும நீதிகள் தவறிடாமற் றவத்தில் ராஜாங்கம் நடத்துமென்ன
வரங்கள் மிகவுள்ள மதினத்துக்கு வருஷந் தவறுமற் றிறையளப்பீர். (291)

தீனைத் துலக்கியே வருவீரென்று சிறந்த மதியெல்லா மிகப்போதித்த
வானின் மதிபோல அலியாரண்ணல் மனது மகிழ்வினில் நிதியமெல்லாம்
தோணும் பண்டுள்ள திரவியத்தைத் தொறுக ளெழுபதா யிரத்திலேற்றி
காணும் படியான மகிழ்ச்சியோடும் ஹக்கன் தனையுமே யுவந்துபோற்றி.(292)

நாசு நூசுடன் சகர்வானையும் நல்லோ ரொட்டகந் தன்னில்வைத்துப்
பாச னுகிய அனுமன்தனைப் பரியில் மிகவைத்தே யஸிப்புலியார்
வாசம் பொருந்தவே யசுஹாபிமார் வந்த பதினயி ரவர்கள்சூழ
நேச ரெழுந்தார்கள் கைசர்விட்டு நீதி யுடையவன் தன்னைப்போற்றி. (293)

நடந்தார் பெருக்கமாய்த் தீனோர்களும் நாத ரலியுட னமுசாவுமே
தடங்கள் பொருந்திய சோலைநீங்கிச் சாலை வழிகளும் கடந்தே மன்னர்
தொடையி லணிபவர் மருங்கு சூழத் துரகதங்களும் தொறுவுமேக
அடையலா ரெல்லாம் நடுநடுங்க அடவி கடந்துதான் பதினேழானுள். (294)

ஜெண்டாக் கொடிகளும் சிறந்திலங்கச் செழிக்கு மதினமா நகரம்வந்தே
அண்டர் புகழ்ந்தேற்று முமறுகத்தா பவர்கள் சமுகம்வந் திறங்கிமன்னர்
மண்டல முள்ள நிதியங்களை வளமா யிறக்கியே வைத்தபின்னர்
கண்டே யுமறுகத் தாப்மகிழ்ந்து கைசர் நடத்தையைக்கேட்டபோதில். (295)

சங்கை யாகவும் வகைவகையாய்த் தனியோ னலியுல்லா வுரைசெய்யவே
யெங்கும் படைத்தவ னருளீதென்றே யிலங்கு மஷறபிக் காசையெல்லாம்
பொங்க மாகவே பைத்துல்மாலிற் போடும்படி செய்தார் முடிவேந்தனு
ரங்குவருமான கணக்கையெல்லா மறைகள் தனில்வைத்தே பதனஞ்செய்தார்.

அனுமன் தனையுமே சிறைச்சாலையி லடைத்தே காவலும் புவியச்செய்தார்
நனியின் மயில்மாது சகர்வானையும் நாசு நூசையும் சிறைச்சாலையில்
மனியி னிதிபோலே பதனஞ்செய்து வைக்கும் படிசெய்து விட்டுப்பின்னர்,
கெணிதம் படியாகத் தீனோர்க்கெல்லாம் கிருபை யுடனிதி யளித்தனரே.(297)

மறுநாட் காலையில் யார்களுடன் மன்னருமறுகத் தாபுவேந்தர்
பெருகுங் கூட்டத்தி னசுஹாபிமார் பிரிய முடன்சூழ்ந்தே யிருக்கும்போதி
லுரைகள் தான்செய்வா றுமருகத்தா புரிமை மிகவுள்ள காவலரே
மறையி லாகாத அனுமன் தன்னை வந்தா ருடன்கொண்டு வம்மினென்றார். ()

அன்ன வுரைப்படி காவலாளர் அனுமன் தன்னையே யழைத்துவந்து
மன்னர் முன்விட வதனம்பார்த்து மவுலுவா ரப்போ தரசரேறு
மின்னு ளனுமனே சொல்லக்கேளு மிறசூல் முஹம்மதின் கலிமாச்சொல்வீ
ரென்னு மிறையவன் சுவனபதி யிலங்கும் வீடுமக் கருள்வானென்றார். (299)

அந்த மொழிகேட்டே அனுமன்சொல்வா னட்ட திசையாளு மரசர்கோவே
யெத்தன் தகப்பனை வதைசெய்தீர்க ளென்ற னினங்களைக் கருவறுத்தீர்
சொந்த மாகவே பொருளையெல்லாம் தொழுவிலேற்றியேகொணர்ந்துவிட்டீர்
சந்த்ர வதனத்தின் தங்கைமாரைத் தனியே சிறைச்சாலை யடைக்கலானீர். ()

கதிரின் சூரியன் வடக்கானாலுங் கழுமீ தினில்வைத்தி ரணஞ்செய்தாலும்
பதியுள் ளோர்கூடி யென்தேகத்தைப் பங்கு பங்காகக் கூறிட்டாலும்
மதிக ளாகிய மயிலேசனை மறந்து கலிமாவை யுரைப்பதில்லை
யதிபரேயென்னை வருத்தவேண்டாம்அரசேமனம்போற்செய்திடுவீரென்றான்.

ஈது மொழிகூற வேவலாளர்க் கியம்புவார் வள்ள லுமறுகத்தா
பேது மறியாத மதிகேடனை யிருதுண்டாகவே துண்மிதினென்று
ரோது மொழிகேட்டுக் காவலாள ருறைவிட் டுருவியேவாள்கையேந்திக்
கோது பேசிய அனுமன் தன்னைக் கொலைதான் புரிந்தாரே யிருதுண்டாக. ()

அன்று பொழுதுபோய் மறுநாள்தன்னி லன்ன வுமறுதாம் தகுத்திலாகி
என்றும் தவமுள்ள மந்த்ரிமாரும் யார்க ளசுஹாபி மார்களோடும்
தென்றல் மலர்வாசம் வீசுமாப்போற் செப்பின ரப்போ காவலார்க்கு
மண்ட லந்தனில் நவசேருவான் மகளா ரிருவரைக் கொணர்மி னென்றே. ()

வந்த சிறைச்சாலைக் காவலாளர் மடமா ரிருவரை யழைத்து வரச்
சந்த்ர னழகான முகத்தழகும் தையல்நடையஃ தன்னம்போலும்
கந்த ரக்குழற் கதிர்மெய்மாதைக் காவ லாளர்க ளழைத்தேகியே
மந்த ரப்புயத் துமறண்ணல்பால் மதியுங் கதிரும்போல் நிறுத்தினரே. (304)

அன்ன காலையி லுமறுகத்தா யருளுவாரந்தத் திருமாதர்க்கு
மின்னுங் குயில்மாரே மதிவதனம் விளங்கும் படியான தோகைமாரே
யென்னு மிறையவன் கிருபையாலே யிறசூல்முகம்மதின் கலிமாச்சொல்வீர்
மன்னன் மகளார்க ளிருபேர்கட்கும் வழுத்தின ரப்போது மறுமன்னர். (305

சொன்னவசனத்தவர்கள்கேட்டுத்துலங்கும் வதனங்கள் சோர்ந்துசொல்வார்
என்ன கலிமாவைச் சொல்மினென்றீ ரெங்களுட வாழ்வை யழித்தமன்னே
மன்ன ருமக்கிது நீதந்தானோ வையந் தனையாளும் ராஜகோவே
யின்ன முலகத்தி லிருப்பதுண்டோ எங்கவி நந் தீனில்வரச்சொன்னீர்கள். ()

பதம்.

தீனில்வாவென்றும் ராஜரேசொல்லுவது சிந்தையிற் குறியோமனந்தரியோம்
தனமள்ளின துரையே யென்னதீவினைதீவினை தன்னைச்சொல்லுவோம்புவியில்
என் தகப்பனே டென்துணை தன்னையு மெவ்வித மறுத்தீர் சதிகொடுத்தீர்
நிதியெடுத்தீர் அரசே நாங்களெவ்வித எவ்வித மிருப்பதுண் டுலகிலே. (307)

காலகாலமும் நாம் துதி தெய்வங்கள் கைலாசங் கொடுக்கார் மனம்வெறுப்பார்
இனங் குறிப்பா ரரசேயெங்கள் காலமே கருத்துரைத்தீர் மணியே
பித்தரென் றெண்ணி யித்தகைப் புன்மொழி பேசவுந் தகுமோ நவமணியே
தவநிதியின் துரையே நாங்கள் பேதையாள் பேதையாள் றுயரங்களைத்தாவே.

## தொங்கல்.

தருவின் கரமான முடிவேந்தரே தாலந் தனிலேதா னிருமாதர்நா
முருகி மனம்வாடி மதிமயங்கி யுக்கியே நின்று தியங்கும்போது
மருவின் மலர்வாசர் கலிமாச்சொல்ல வழுத்தினீர் நல்ல வளங்களென்றும்
பெருகும் படியான மயிலேசனைப் பேதைமார் நாங்கள் மறப்பதில்லை. (309)

கதிரின் சூரியன் வடக்கானாலும்கடல்கள் தான்பொங்கி யெழுந்திட்டாலும்
பதியி விறந்தார்கள் புவியில்வந்து பாலகி முன்பாற் பகர்ந்திட்டாலும்
நிதியி லுயிர்வான குலதெய்வத்தை நினைவி லொருக்காலு மறக்கமாட்டோம்
விதியோ கலிமாவை நாங்கள்சொல்ல வேறே வசனங்க ளுரைமினென்றார். ()

மாத ரிருவரு மொழிந்த வார்த்தை மன்னர் தாம்கேட்டு மனம்வெகுண்டே
ஏது மறியாத விளமாதரை யிப்போ வதைசெய்து வம்மினென்றே
நாத ருமறுதாம் காவலர்க்கு நவின்று ரதுபோலக் காவலர்கள்
கோது வாகிய கொலைதான்செய்யக் குபிலாரிருவரை யழைத்தேகையில்.(311)

மதினந் தனிலுள்ள முசிலீமெல்லாப் வதன மிகவாடிக் கண்ணீர்விட்டுப்
பதிகள் தனையாளு முடிவேந்தர்க்குப் பாரி விதுவார்த்தை சரியோ வென்பார்
மதிபோலிருக்கின்ற இளமாதரை வதைதான் செய்திட மனமாவென்பார்
விதியோ விருவர்க்கும் புவியிலென்றே வீதிதோறினும் புலம்பினரே. (312)

ஜனங்கள் யாவரு மழுவதான சங்கதி யெல்லா மஸியாரெண்ணி
மனமான தளிலே தயவுண்டாகி வந்தங் குமறுவின் சமுகம் நின்று
தனமும் பறக்கத்தும் பெற்றகோவே சலாமும் வருகுதிங் கரசேயென்றார்
கணமும் பொருந்திய வுமறுகத்தாப் காதலாகவே பிரத்திகூறி. (313)

இருங்க ளரிசிம்மே றெனவும்சொல்ல இயம்புவாரப்போ தஸியாரண்ண
லருமை தானுள்ள முடிவேந்தரே யருளக் கேளுங்கள் நவமணியே
கருமை விழியாரைக் கொலைபுரியக் கண்ணே நீர்சொன்ன வசனத்தாலே
யுரிகி யழுகிறார் தீனேரெல்லா முங்கள் மனதிலே தயவுண்டாகி. (314)

ஆலந் தனிலேதான் மூன்றுமாத மவர்கள் தமக்காக விடைகொடுத்தால்
வாலா யமதாக மதிபோதித்து வாகாய்க் கலிமாவை வருத்தலாமித்
தாலமீதினி லுத்தாரங்கள் தருவீர் தயவுள்ள வரசேயென்றார்
வால கதிர்மேனி வுமறுகத்தாப் வழுத்துவாரப்போ தமுதம்போலே. (315)

சொன்ன பிரகார மூன்றுமாதம் துலக்கமாகவே யானுந்தந்தே
னன்ன நடைமாத ரிருபேர்களு மருமையுடன் தீனில் வந்தாராகி
லின்னுள் புவிமீதில் வைப்பேனென்ன வில்லா திருக்கிலோ அஸியுல்லாவே
மின்னும் கதிர்வாளா லிருமாதரை வெட்டும் படிசெய்வே னுருதியாக. (316)

மல்லி மலர்வாசர் வழுத்தல்கேட்டு மனமும் சரியென்றே யலிபுலியார்
வல்லோன் கிருபைதான் செய்தானென்று வந்து காவலர் தனையிறுத்திச்
செல்ல தெனுங் கூந்தற் சகர்வனையும் திருவார் நாசுநா செனுமாதையும்
நல்லோ ரலியுல்லா வழைத்தேகியே நபியா முஹம்மதின் தேவியார்பால்.

மேலோ னலியாரும் விளம்பினர்கள் விரைசேரும்முசல் மாவிடத்தில்
நாலா வேதத்தின் தயாபரராய் நானிலம் வந்த யாறசூலின்
வால கதிர்மேனி மனையாராக வந்து தவம்பெற்ற மாமணியே
ஆலர் தனிலேதா னிருமாதர்கள்குவால் தனைச்சொல்ல வறிவீரென்றே. (318)

கைசர் தனையாளும் நவசேருவான் கண்ணின் மணியாக வளர்த்தசெல்வி
பைச லானதி லுமறுகக்தாப் பாவை யிருவரும் கலிமாவோதத்
துய்ய வுமறுமன் சொல்லும்போது துலங்கு மிருவரு மோதாததால்
மெய்யின் மடவாரைக் கொலைபுரிய வேந்தர் செய்திடும்தீர்மானங்கள். (319)

காணு மிகவேகி மூன்றுமாதம் நல்லோர் வாயிதா வாங்கிவந்தேன்
தாங்கள் மனமீது தயவிரங்கித் தையலாருயிர் பாதுகாத்திம்
மானர் தனக்கான மதிபோதித்து மனம்போற் கலிமாவு மோதவைத்துத்
தீனை விரும்பிடச் செய்வீராகிற் சிறந்த பறக்கத்துப் பெறுவீரென்றார். (320)

சொன்ன வலியுல்லா வசனங்கேட்டுத் துலங்கு மாதாவு மிருகையேந்தி
யென்னும் பெரியோனே யாகுதாயே யெனது மருகேசர் கொணர்ந்துவிட்ட
மின்னின் கதிர்முகத் திருமாதரும் விளம்பும்படிசெய்வாய் கலிமாவென்றே
மன்னர்முஹம்மது தேவியாரும் வல்லோ னிடந்துஆக் கேட்டாரப்போ. (321)

ஆகியரு ளென்றே யலியெழுந்தே யவரின் மணிவாடை மதினமேகி
ஈது வகையெல்லா மதினத்தார்க ளின்ப மாகவே யறிந்தெல்லோரும்
சோதி பெரியவன் தன்னைநாடித் துஆசெய்தே மிகக் கேட்பர் தீனோர்
மாத ரிருவரும் கலிமாச் சொல்ல வல்ல் பெரியோனேகிருபைசெய்வாய். (322)

ஈது படிநிற்க முசிலிமெல்லா மிதசூல் முஹம்மது நபிதேவியார்
ஏது வாகவே யிளமாதரை யிலங்கு மஞ்சண நீராட்டியே
மாதரிருவர்கள் கூந்தல்தன்னை வார்ந்துதானந்தக் குழல் முடித்துச்
சீதம் பொருந்திய துயிலானதைத் தெளிவ தாகவு முடுத்திமாதா. (323)

முத்து மணிமாலைத் தாவடங்கள் மொய்குழ லார்க்கே கழுத்திலிட்டுச்
சுத்த மிகவுள்ள விரிப்பதின்மேற் றேகை யாரைவைத் தடிசிலூட்டிச்
சித்திரமெழுதிய பவுஞ்சத்தின்மேற் சேயிழை மாரை யருகிருத்தி
நத்தவமுள்ள வசனங்களை நவிலு வாருயர் நபிதேவியார். (224)

கண்ணின் மணியான செல்விநீங்கள் கவலை மனந்தனில் நினைக்கவேண்டாம்
மண்ணின் மீதிலே நான்தாயென்று மனதி லிருக்கட்டு மயிலன்னரே

யின்ன மெனதுட பொருள்களெல்லா மிளமா தேயுங்க ளிருவருக்கே
சொன்ன படிகேட்டு நடப்பீரெனிற் றுய்யோன் சுவர்க்கவீ டருள்வானம்மா

இந்த விதமாக மதிபோதித்தே யிருபத் தேழுநா ளானபின்னர்
சந்த்ரவதனத்தி னிருமாதர்கள் சலிப்பு நீங்கியே மகிழ்வுடனுண்டாகிச்
சிந்தை பூரிப்பா யிருக்கும்போது செப்புவா ரப்போ நபிதேவியா
ரேந்த னூரித்தான விளங்குயிகா ளியம்பத த்ரன்கேளு மிப்பூமியில். (326)

அம்மா வெனதுட செல்விமாரே யடிசில் தானுண்டங் ககமீதினிற்
சும்மா விருப்பது சரியல்லவே துலங்க விளையாடி யிருப்போ மென்ன
ஜும்மா வஃதுள்ள பகலானது தூய கிழமைநா ளானதாலும்
தம்மால் விளையாடப் பல்லாங்குழி தானேயான் சொல்லித் தாரேனென்றார். ()

மாதா மொழிகேட்டங் கிருமாதரு மகிழ்ச்சி யாகவே யுரைசெய்தனர்
ஏது விளையாட்டு மிவ்வூர்வித மெங்கள் தமக்காகச சொல்வீரென்றார்
நாதர் முகம்மது நபிதேவியார் நாயன் தனைப்போற்றி மிகவணங்கிச்
சாது வாகவும் பல்லாங்குழி சங்கையாகவே முத்தாடினார். (328)

லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர் றசூல்லாகியென்
றோய்வில் லாமலே தாமோதியே உம்மு சல்மாவும் விளையாடினார்
தூய மயில்மாத ரிருபேர்களும் சுகிர்த குணத்துடன் மூத்தை வாங்கி
நாய னருளாலே மனமகிழ்ந்து நன்மையாகவே விளையாடினார். (329)

பன்னுங் குழியிலே லாஇலாக பாங்கின் விளையாட்டி லில்லல்லாகு
என்னு முகம்மதுர் றசூலுல்லா கென்றே யேழுநாள் விளையாடினார்
மன்ன னவன்மக்கள் நித்திரையில் வருமே கலிமாவும் விளையாட்டுப்போற
றன்னல் விளையாடி யிருமாதரும் தானேமகிழ்வுற்றுச் செல்வம்போலே. (330)

எல்லாப் பறக்கத்து மிகவுண்டாகி யிலங்கு மங்கலக் குடிதனில்வாழ்
நல்லோர் சிக்கந்தர் காதிர்சாகிப் நாடுங் தவத்தினல் வந்தபூமன்
வல்லோன் வணக்கமு மறவாநெஞ்சின் மபிபஞ் ராவுத்தர் ஹமீதுபோசன்
மல்லி மலர்வாசர் மணிமலையை வழுத்தக் கேட்டிடு மகிழ்ச்சிபோலே. (331)

சகர்வா னின்மனம் தயாளமாகித் தங்கையாருடன் விளையாடுநாள்
மகிமை யாகவே நபிதேவியார் வாகாய்த் தொழுகவும் வருத்திவைத்தார்
ஜெகமும் புகழவே குறுநாயத்தும் செவ்வையா யோதிக் கொடுத்தபோதி
லகத்து லின்பமா யரசியர்க ளழகா யிருக்கும்போ தொருநாளிலே. (332)

வந்தா ரலிப்புலி பரீட்சைபார்க்க மாதா மாளிகை யதனிட்த்திற்
சந்த்ர வதனத்தா ரிருக்கின்ற தாக்கை யறிந்துதர் னபிதேவியார்
சிந்தை யுவப்புள்ள விருமாதரே சிறந்த மாதவ நங்கைமாரே
யெந்தன் மருகேச ரலிபாவிலே யியம்புங் கலிமாவு மாயத் தென்றார். (333)

பாலிலதுபோலே மாதர்வந்து பகர்ந்தார் கலிமாவை யமுதம்போலே
ஆலி யார்மன மிகப்பூரித்தே யவர்தம் மனமீதில் நினைக்கலானார்

வாலக் கதிர்மாதிங் கவர்கடம்மை மணமே செய்திட மனதிலெண்ணி
மாலா யுரைசெய்து மாதாவிடம் வல்லோன் தனைப்போற்றி யவியாரண்ணல். ()

ஆல மும்மது தேவியாரு மருமை யுடன்செல்வி யிருபேர்களும்
நாலுபேர்களு முமறுமன்பால் நாடியே வந்து சலாம்சொல்லவே
மேலோ னருளினற் பிரத்திகூறி விருங்களென் றுரைத்தார்மன்னர்
சோலை மயிலன்ன மிருபேர்களுந் துலக்கினரப்போ கலிமாத்தன்னை. (335)

நல்லோர் கலிமாவை யன்பாகவே நவின்று ராயத்துக் குயிலோசைபோல்
வல்லோ னருள்பெற்று வுமறுமஸனர் மயிலார் சகர்வானை மணஞ்செய்யவே
மல்லலயம்புயத் தரிசிம்மேறு மனதில் நினைத்துத்தா னிருமாதர்க்கும்
நல்லோ ருடைபல பலவுமீந்து நபியின் தேவிபா லனுப்பினரே. (336)

மரையின் மலர்பாதத் தரிசிம்மேறு மணஞ்செய் திடநாடிச் சகர்வானையும்
உரைக ளறியவே தூதுவிட்டா ரும்மு சல்மாவி னிடத்திலோதக்
கருதி மாதவும் சகர்வானுக்குக் கழறின ரப்போ திதுசேதியைப்
பொறுமை மிகவுள்ள மயிலன்னரும் புகல்வா ரமுதவாய் தனைத்திறந்தே. ()

எந்த னுயிர்த்தந்தை யெமக்காகவே யியல்பாய்ச் சீதனங் கொடுத்ததாயும்
தந்தார் ஐம்பஃ திருலட்சமும் தாக்கல் பின்செல்லவே னன்றுனென்ன
வந்த தூதரே போமினென்றார் வழுத்தின ரப்போ வேந்தர்பாலில்
அந்த நிமிஷமே யுமருகத்தா பைம்ப திருலக்ஷச மஷறபிகள். (338)

கொடுததே யனுப்பினர் சகர்வானுக்குக் குவலயத்துள்ள மகராஜரும்
விடுத்தார் தூதரை மயில்மாதிடம் விளங்கி வரச்சொல்லி யரியர்டையா
யுடுத்தும் புவியுள்ள குயிலன்னம்பா லுரைத்தார் தூதரு மணமொழியை
யெடுத்தே யோசனைசகர்வானுமே யியம்புவா ரப்போ வமுதம்போலே. (339)

மதினந் தன்னிலோர் புதுமாளிகை வள்ளல் செலவுடன் கட்டியீந்தால்
வதிலு மொழிப்பின்னலுரைப்பேனென்ன மவுலுமெனச்சொல்லவத் தூதுவர்
விதுவின் வதனத்தார் வசனங்கேட்டு விளம்பி னருமர் கத்தாபுபாற்
புதிய மாடமுங் கட்டியூயப யுகன்றார் மந்திரி மார்களுக்கே. (340)

அந்த நேரமே பைத்துல்மாலி லஷ்றபிக் காசு மிகவெடுத்துக்
கந்தழ குள்ள கருங்கல்லுகள் கணக்காய்த் தருவித்துச் சுவரெடுத்து
மந்த ரத்துள் மகிழ்தேக்குகள் வழங்கு முதுரைகள் தோதகத்தி
விந்தை யாகிய மரங்களெல்லாம் விளங்கு யடிவேசெய்து. (341)

தூண்கள் நிறுத்தியே சாரம்வைத்துத் துலங்கு பெருவிட்ட மிகப்பரப்பி
மான்கள் மனம்போலே யகிற்சந்தனம் வழங்கு மெதுவான பலகைசேர்த்துரீ
கோன்க ளுரைபோலே யேழுமெத்தை குறிப்பாய் நாற்படி யழகாய்கட்டி
வான்சீர் மதிபோலே சுக்ததயுந்தீற்றிமணிமுத்தருத்தியே துவக்கினரே.

துலக்கி முடிந்தபின் வேந்தர்க்கோதைக் சொல்வார் தூதுவரிடந்தனிலே
நலத்தோர் மாளிகை சரியாச்சுது நமது மணமொழி கேள்மினென்றார்

தலத்தி லரசாளும் வேந்தர்சொன்ன தாக்க லறியவே யத்தா துவர்
குலத்தின் மயில்மாது சகர்வானிடம் குணமா மணமதைக் கேட்டபோதில். ()

என்ன நான்சொல்வே னிப்பூமியில் யாறகீமுட சித்தாந்தத்தை
மனர் தான்கேட்டு மாளிகையை மனம்போல் நன்கொடை கொடுக்கவேணும்
கண்ண கண்ஞானம் தனிலெங்கட்கு கணக்கா யிருக்கிற அரசரெல்லாம்
இன்னாள் மதினத்தி லமர்கள் வந்தே யெனது மாளிகை தனிலிருந்து. (344)

விருந்து மிகவுண்டே யிறையைப்போற்றி விளங்கு மாடத்தி னனேகவும்
திருந்து மதினமா நகரவீதி சிறந்த மலங்கார மியற்றவேணும்
பொருந்தி யிவ்வளவு செலவானது புண்ய வாசரே செய்தாரெனில்
விருந்து மணமுள்ள மணமானதை வழுத்துவேனுனும்பின்னலென்முள்.(345)

மதியி னழகான மடமான்சொன்ன வசனந் தனைக்கேட்டுத்தா துவரும்
மதியி லரசாளு மமறுபாலிற் பகர்ந்தா ரிதுசேதி யொழுங்கதாக
விதுவே கலியாண கோப்பதன்றே யிதயங்குளிர்ந்தன ரரசரேறு
நதியின் பெருக்காக மனம்பூரித்து நானில் மெல்லா முகந்துபோற்ற. (346)

இருபத் திரண்டென ணரசர்களு மிலங்குந் தளத்துடன் வருகும்படி
நிருப மெழுதியே யனுப்பிவிட்டு நேர்மை தானுள்ள முடிவேந்தர்தாம்
பிரிச மிகவாகி மதினமெல்லாம் பெரியோன் கிருபையாற் சிங்காரிக்க
மருவின் மலர்வாச ருரைத்தபோது வழங்குமூசிலிமிகள் சகலோர்களும்.(347)

புதிய மாடங்க ளலங்காரமும் புழங்கும் வீதிகள் சிங்காரிப்பார்
கதிர்போ லழகான மணிமுத்தாலே காவண மிட்டே சரந்தூக்குவார்
பதிக டோறினுங் கதலிநாட்டிப் பாங்கா யலங்கரம் செய்வார்களு
மதிகள் போலான மரகதத்தால் வழங்கு மவர்பந்தற் செய்வார்கோடி. (348)

வேந்தர் புதுமனை முகப்பானதில் விரையார் மலர்பந்தல் மிகச்சோடித்து
லாந்தர் மரகதம் பச்சையானும் நல்லோர் வரமித்துங் கதிர்கள் மின்னச்
சர்ந்த வரசர்கள் பூசுமான சங்கை யாகிய வாசனையும்
ஏந்த லாகிவ முடிவேந்தர்க ளிருக்கும் படியான தவிசுகளும். (349)

வானி லிலங்கின்ற கதிர்மதியும் வந்து காவண மிருந்ததுபோல்
நானி லம்புகழ் மதினமீதில் நல்லோ ரலங்காரம் செய்தபின்னர்
தேனின் மலர்மாலைப் புயந்தாங்கிய திமுசு மாபியா மகனுமாதத்
தானை பதாதியின் கூட்டத்தோடும் சங்கை யாகிய மதினம்வந்தார். (350)

மக்கமதினமும் சீனமீள மகரிபுக் கட்டு காகஜங்கு
மிக்க புகழான மெமன்ராச்சியம் விளங்குங் கைசரின் மகதியரும்
சிக்கந் தாவுடன் திருப்பாத்தியூர் சிறந்த சுகுறவும் ஹபஷினுடும்
தக்க பெரியவன் கிருபையாலே சகல ராஜரு மதினம்வந்தார். (351)

வந்த பெயரெல்லாம் றவுலாவாகி வள்ளல் முகம்மதை மிகப்போற்றியே
சந்த்ர வதனத்தி னுமருகத்தாபைச் சங்கை யுடன்போற்றி யாவர்களும்

பந்தி யாகவே யடிசிலுண்டு பாங்கா யிருக்கின்ற சமையத்திலே
சிந்தை பூரிப்பா யுமர்கத்தாபு செப்பினு ரப்போ தூதருக்கே. (352)

மனம்போல் மாடமும் சகர்வானுக்கு வாகாய் நன்கொடைகொடுத்தேனென்ன
தனங்கள் செலவாக்கிச் சிங்காரங்கள் தகுந்த படிசெய்து விருந்துமாச்சு
கனமும் பொருந்திய வரசரெல்லாம் காத்தங் கிருக்கின்றார் மதினமீதி
லினத்தார் மகிழவே மணமுடிக்க விளமான வசனங்க லறிமினென்றார். (353)

அன்ன காலையிற் றூதரேகி யதனை யுரைசெய்யச் சகர்வானுக்கு
மன்னன் மகளாரும் ஆலோசித்து மவுலுவா ளப்போ தூதரிடம்
இன்னுன் வருகின்ற அரசர்களி லியல்பா யொவ்வொரு பேராய்வந்தா
லென்னின் மனங்கொண்ட சமையத்தையே யியம்புவேன் கலியாணமென்றாள்

எந்த ராஜர்க்கோ விறையவனு மென்ற னிருதயம் புகுதும்போது
வந்து கலியாண முடிக்கவேணும்வார்த்தை மறுபேச்சுக் கிடையாதென்றாள்
அந்த மொழிகேட்டங் குமறுபாலி லகவ லுரைசெய்தார் தூதரப்போ
சிந்தை மயங்கியே முடிவேந்தரும் செப்பு வார்மனம் விசனத்தோடே. (355)

பொன்னைக் கொடுத்தனன் மடமானுக்குப் புதிய மாடமுங் கட்டியிந்தேன்
மன்னன் மகள்சொன்ன வசனமெல்லா மாற்ற மிஃதென்று மறிந்தேனில்லை
யென்ன சதிமானம் செய்தனல்மா தென்னைப் படைத்தோனே யாகுதாயே
தன்னால் மனமெண்ணி மதிமறந்தோம் தாலத் தரசர்கள் கூட்டமானர்.

பதம்.

பெண்சொற் கேட்டு மதி யறியாமல் நான் பொருளையும்
கொடுத்தேன் மதிவிடுத்தேன் விதிவசத்தா லாதியே
யிந்தப் பூமியில் பூமியிலிது நீதமோ நாயனே.
மாடங் கட்டிடக்கோடி பொருள்களு மன்னவர் நிதியம்

மனமந்திரம் கனதந்திரம் மடமான் புவியின் மாங்குயில்
மாங்குயில் மனமேரியே னிறையே.
காவ ணங்களும் அலங்கிரதஞ்செய்யக்
காரிழை யுரைத்தாள் கனதிறத்தாள்

மனமறுத்தா ளிறையே.
என்ன காரணம் காரணம் அறிகிலேனே புவியிற்
றேச ராஜரு மதினம் வந்திடச்
சேதிக ளுரைத்தேன் செகந்தனிலே.

யென தின்பத்தா லாதியே
யிந்தச் சேயிழை
வசனத்தினு லிறையே.

## தொங்கல்.

தன்னு லரசரும் வியனமுற்றூர் தனித்து மந்திரிமார்கள் வந்தே
யென்ன ஆயாச மிப்போதினி யெங்கள் தம்புத்தி சொல்லக்கேளீர்
அன்ன நடைமாத ரருளும்சேதி யதுவே சரியான மதிதானென்று
மூன்னுல் முடிவேந்தர் வருவாரென்று முகில்மானுரைபோலே யெழுமினெரு

சங்கை யாகிய வசனங் கேட்டுத் தாலத் தரசரு மகிழ்ச்சியாகித்
தங்க மயமான துகிலணிந்தே சட்டை சருபந்து மிகவியற்றித்
திங்கள ழகான மவுலிசூடிச் சிறந்த பரிமன மிகத்திமிர்தே
யெங்குந் துலங்கிய பரிவட்டமு மெடுத்தங் கியற்றியே மகாருஜமார். (358)

மன்ன ரழகையும் பார்கவென்றே மனதில் நினைந்துள அரசரேது
முன்னு லிருக்கின்ற கண்ணாடியில் முகத்தி னழகினைப் பார்க்கும்போது
தன்னு லவர்தாடி நரையைக்கண்டு தாலத் தரசரு விசனமுற்றே
யின்ன மணையுள்ள செஞ்சாயத்தா லிலங்கும் படிசெய்தே யெழுந்தாரம்மா.

மாலையுடமைகள் மிகத்துலங்க மகுட முடிவேந்தர் பரிமேலுற்று
பாலிலசுஹாபி மார்கள்சூழப் பாங்காய் முசிலிம்கள் கட்டியங்கூற
மேலோன் முகம்மது சலவாத்தோங்க விரைசோ மாதர்கள் கவரிவீச
வால கதிர்போலே ஆலவட்ட மன்னரருகாக நிழற்றிவர. (360)

பேரி நவுரிகள் கிடுகிடன்னப் பிடியினெக்காளந் திடுதிடென்னப்
பாருள் ளரசர்கள் பணிந்துபோற்றப் பரிமே லேறியே யுமர்க்கத்தாபும்
தாரா தரமுள்ள முடிவேந்தரும் சங்கை யாகிய மணக்கோலமாய்
நேர்மை யுடன்வந்தே மணிமாடத்தி னிறைந்த மலர்ப்பந்த லிறங்கினரால்.

வானின் கதிர்சிம்மா தனமிலங்க வள்ள லிருந்தாரே மதிபோலுமே
ஞானிலமுள்ள அரசர் வாழ்த்த நல்லோர் யாவரும் புகழ்ந்துபோற்றத்
தானேன் முகம்மது சலவாத் தோங்கச் சகர்வான் மனைமீதி லிருக்கும்போதில்
மானூர் தனக்காக வும்முசல்மா மவுலுவா ரப்போ தமுதம்போலே. (362)

புதிய மாடமுங் கொடுத்தாரம்மா பெருளுமன்னம்போலே யதிகந்தந்தார்
பதிகள் தனையாளும் வேந்துமறின்பற்ற மரவாதே சகருவானே
சதிக ளாகாதே யிப்பூமியிற் றுயே யெனதுசொற் கேட்பாயென்ன
வதிமர்தமக்குதான் மணம்புரிய வருமையுடன் சொல்லுமின்னேயென்றூர். ()

ஏழை மனமுள்ள மாதாவேநீ ரிப்படி வார்த்தை சொல்லலாமோ
காளையர் போலே சாயம்பூசிக் கலியாணம் செய்ய கருதிவந்தார்
வாழும் வயதாக நானிருக்க வயது மிகுந்தவர் தமக்காகவே
கேளா வசனங்க ளோதவேண்டாம் கிருபை மிகவுள்ள வென்னன்னையே. ()

சக்ர்வா னுரைதனை மாதாகேட்டுத் தாக்கல் கொடுக்கவே யரசர் பாவிற்
ஜெகமேல் முடிவேந்தர் விசனற்று செப்புவா ரப்போ திரையைநாடித்

ககனம் போற்றிய புவிமீதினிற் கன்னி யழகைப்போல் யானிங்காணே
ணகத்தி லுறைந்திடும் யாறகீமே ஆதியே வுன்றன் பண்பாலென்றார். (365)

ஈது படிநிற்க வுதுமானாரு மிலங்கும் படியான துயிலணைந்து
காத லாகவே பறியிலேறிக் காவனம் வந்தே யிறங்கும்போது
மாதா வுரைசெய்வார் சகர்வானுக்கே மணங்கள் புரிகுவீ ரிவருக்கென்றே
யோதும் படியான வசனங்கேட்டு யுரைப்பார் மயிலாரு மகிழ்ச்சியாக. (366)

இலகு மகுபூலு பலகைபார்த்தே யெழுது முதுமானார் குருவதாகு
முலகி லிதுசேதி யுரைக்கவேண்டா முண்மை யாகிய வென்தனையே
யலியு நகவகைத் துயிலணைந்தே யவரின் துல்துலென் றேபெயர்கொள்
கலின வாம்பரி கலகலெனக் காவனம் வந்தே யிறங்கினாரால். (367)

அன்ன காலையில் மாதா சொல்வா ரருமை யாகிய சகர்வானேகேள்
மன்ன ரலியுல்லா தமக்காகவே மணந்தான் புரியவு மனஞ்செய்யென்றார்
மின்னு மயில்மாது மிதனைக்கேட்டு விளம்புவா ரப்போ தமுதம்போலே
யென்ன துயிர்காத்த வள்ளலெனக் கேதந் தயாருகு மென்றுரைத்தார். (368)

இந்த விதமாகப் பலூலூன்வந்தா ரிலங்கும் ஆசறு ராஜர்வந்தார்
அந்த நேரமே அசனார்வந்தா ரண்ணல் முகம்மது ஹனிபாவந்தார்
பந்தி யாகவே யிருப்பத்துநால் பாங்கா மரசர்கள் தானும்வந்தா
ரெந்த ராஜர்க்கும் பொருந்திடமா விளமா னிருக்கிற சமையத்திலே. (369)

உசைனா ரவர்களும் கலன்கள் தாங்கி யுயர்ந்த மணிமுத்து மாலைமின்னத்
திசையி லெழிலது திகழ்ந்திலங்க சிறந்த பறிமேலே யவர்வருக
வெசிது மணிமாலை மிக்காகவே யிலங்கும் பரியின்மே லவனுமேறிச்
சதியின் கதிர்போலே யிருபேர்களும் சடிலம் நடத்தியே யொழுங்காய்வந்தார்.

வந்தங் கிறங்கவே மலர்ப்பந்தலில் மாதா வுரைசெய்தார் சகர்வானுக்கே
யிந்த விருவரி லெவர்சம்மத மியம்பு வீரன வேயுரைத்தார்
சந்த்ர வதனத்தி ளிளமாதரும் சாற்றுவா ரப்போ மகிழ்ச்சியாக
வந்த யிருவரி லொருவருக்கே யானும் பாரியா ளாவென்றார். (371)

எல்லா வசரு மிதனைக்கேட்டே யியம்புவா ரப்போ துமறுபாலிற்
சொல்லுங்கள் ஞாய மகமேருவே துலங்கி வருகின்ற பெருக்காகவே
வல்லோ னருள்பெற்ற வரசரேறு மவுலுவாரப்போ சபைமீதினிர் [ணேன்.
புல்லா யிரங்கோடி யுயிர்கள் யாவும்படைத்தா னிளமான்போ லெங்குங்கா

ஓதும் படிசொன்ன சபையோர்களே யுள்ள தீர்மானம் சொல்வேன்கேளும்
நீதமாகவே யிருபேர்களும் நிலத்தி லொருகாதத் தொலையிலாகி
வீதம் பொருந்திய பறியிலேறி வேகத் துடன்சாரி வருகும்போது
காதலுடன் முந்தி வந்த பேர்க்குக் கழுத்தில் மணமாலை யிடுவீரென்றார். ()

சொன்ன பிரகார மிருபேர்களும் துரித மாகிய பரியிலேறிக்
கண்ணகன் ஞாலங் கிடுகிடென்னக் காக்கி நடத்தியே வருகும்போது

மன்னர் மாபியா மகனசீது வாம்பரி முந்தும் சமயத்திலே
மின்னுங் கதிர்மேனி யுசைனர்வள்ளல் விளங்கு மிருகரந்தா னேந்தியே.(374)

என்னைப் படைத்திடு மிறையவனேயிறசூல் முகம்மது நபிசல்லமே
யன்னை யாகிய பாத்திமாவே யரியவுங்களின் கிருபையென்றார்
சொன்ன வசனத்தி லிறையருளாற் றுசும னெசீதுட பரியின்கலை
மின்னும் நிலந்தானும் குழம்பைக்கவ்வ வள்ளல்நபிபேரர் குதிரைமுந்த.(375)

வந்த வேகத்தி லுசைனர்பரி மலரின் காவனம் புகுந்தேநிற்கச்
சிந்தை பூரித்த மகிழ்ச்சியோடும் சிறந்த அலிமகன் மாலையிட்டார்
அந்த மிலஹக்கன் தூதரான வண்ணல் முகம்மதின் கிருபையென்றே
சந்த்ர வதனத்தி னுசைனர் தம்மைத் தகுத்தில் மிகவைத்தேமகிழ்வுற்றாரால்.

ஹாஷீம் குலத்தோர்கள் மகிழ்ச்சியானார் காசினியி லந்த மணிமாலையை
நேசன் ராவுத்தர் ஹமீதுயூக னிலத்தில் முகம்மதின் புகழைக்கேட்டு
மாசொன் றணுகாத மனம்பூரித்து மகிழ்ச்சி பெருகிய செல்வம்போலே
வாசம்பரிமளங் கமழும்வள்ளல் முகம்மது சலவாத்தோங்கவே. (377)

மதிபோ லழகான வுசைனர் தம்மை மணத்தின் கோலமாய் சிங்காரித்துப்
பதியுள் ளோர்களு முவந்துபோற்றிப் பரிமே லேற்றியே சிறந்துசூழ
அதிப ருடனுமே முழக்கத்தோடு மாதிமுகம்மதை மிகப்போற்றியே
புதியோ னருளினாற் பவனியாகப் புறப்பட் டார்நபி பேரரன்றே. (378)

குடையும் கொடிகளு மதிபோலாகக் குயிலின் மயில்மாதர் கவரிவீசக்
கடியின் மலர்புயத் தரசர்வாழ்த்தக் ககனத் தரம்பைய ராமின்கூறப்
படியில் முசிலிம்க ளுவந்து போற்றிப் பாங்காய் முரசுகள் கிடுகிடென்னக்
கடலி னலைபோபோலே யிடிமுழக்க ஹபீபு நபிபேரார் பவனிவந்தார். (379)

மதின மீதுள்ள தீனோரெல்லா மங்களங்கூறி யருகாய்வர
நதியின் பெருக்கமாய் மடமாதர்கள் நல்லோ ராலாத்தி யேந்திநிற்பார்
கதிசெய் மதிபோலே யிருபேரையும் ஹக்க னேஜோடி சேர்த்தானென்பார்
விதுவின் மலர்முகச் சகர்வானுக்கு வெய்யோன் கதிர்மேனிக்கணவரென்பார்

இந்த விதமாக அனைவோர்களு மிறையோ னலிமகர் தம்மைவாழ்த்த
வந்தங் கிறங்கினார் மணவறையில் வள்ளல் முகம்மது சலவாத் தோங்கக்
கந்தரக்கொடை வருமிறசூல் ஹபீபு பேரர்தா னுசைனருக்கு
மந்த ரக்குழல் சகர்வானையு மணந்தான் முடித்தாரே மகிழ்ச்சியோங்க. (381).

வானோர் சோபன மகிழ்வுகூற வரிசை பொருந்திய வரசர்வாழ்த்தத்
தீனோர் யாவரும் ஆமீன்கூறச் சிறந்த முகம்மது சலவாத் தோங்கத்
தானோன் கிருபையால் சகர்வானுடன் சங்கையாகவே யுசைனர்வள்ளல்
மரனா ருடனிருந் தரசிலங்க மகிழ்வுற் றிருந்தாரே மதிபோலவே. (382)

வந்த ராஜரும் பதாதிகளும் வள்ளல் முகம்மது றவுலாவாகி
யந்த மில்ஹக்க னபியைப்போற்றி யண்ண லாருக்கும் பயணங்கூறிப்

பந்தி யகவே யரசரெல்லாம் பாங்கா யவரவ ரூர்கள் சார்ந்தார்
சந்த்ர வதனத்தி னுமருகத்தாப் தாலங் தனையாண்டே யிருக்குநாளில். (383)

பருதி கறுக்கவும் சிவக்கப்பார்த்தார் பாங்காய் நிருபத்தால் நதியழைத்தார்
சுருதி மறைவழி தவறுசெய்த சுதனர் தனையுமே வதைசெய் யென்றார்
தரையின்மீ தெண்ணெய் கவிழ்த்துவந்த தையலாருக்குக்கொடுக்கச்சொன்னர்
குறஷீக் குலத்தோர்க ளுவந்துபோற்றக் குவலய மெல்லா மாளும்போதில். ()

மானு ராகிய நாசுநூசை மன்னர் முகம்ம தபூபக்கர்தாம்
நானி லந்தனில் மணந்தான் செய்தே நல்ல விருப்பமாய் மகிழ்ந்திருந்தார்
நீனில மெல்லா மொருகுடையில் நேர்மை யுடன்வேந்த ராளும்நாளில் [போ
வானின் மதிபோன்ற வுமறுகத்தாப் வல்லோன் தனைபோற்றி யிருந்தாரப்

## உமறுகத்தாபு றலியல்லாகு அன்கவர்க ளுபாத்துச்செய்தி.

ஈது படிநிற்கவு மறுகத்தா பியல்பாய் ராஜாங்கம் நடத்தும்போதில்
ஏது வாகிய பலுலூன்வந்தே யியம்பின ரப்போ வேந்தர்பாலில்
நாத ராகிய மணிவிளக்கோ நானில மெல்லா மாளுங்கோவே
போதரே யெங்க ளரசரே புவியி லுமையாதம் குலத்திலேதான். (386)

ஆயிரம் தங்க வஷறபிக்கி யடிமை யிவனையும் வாக்கிவந்தே
வாய மாகவே யடிசிலுண்டென் வசனங் தனைகேட்கி முனில்லையே
நேயரே யுங்கள் ராஜாங்கத்தில் நிதிக ளெனக்கீந்தே யிவனைவாங்கித்
தேயங் தனிலுள்ளபூஞ்சோலைக்குச் சிறந்தவேலைக்காய் வைப்பீரென்றே.(387)

சொன்ன பிரகாரம் பலுலூன்கையிற் றுலங்கு மஷறபி தானுமீந்தே
மன்னர் தனக்காக வடிமைவாங்கி வழுத்துவா ரப்போ தவன்தனக்கே
என்னின் பூஞ்சோலை தனிலிருந்தே யியல்பாய் வேலைகள் பார்மினென்றார்
அன்ன காலையி லடிசிலுண்டேயவனு பூங்காவிற் படுத்திருந்தான் (388)

இந்த விதமாக மிருதிங்களு மிலங்கும் பூஞ்சோலை தனிலிருந்தான்
சந்த்ர வதனத்தா ரிதையறிந்து சடத்த மிகவுள்ள பயலைக்கூவி
எந்த விதத்தாலே பூஞ்சோலையில் விதமாயுத் துயில்வது சொல்லென்றுரேதக்
கீர்தரப் புயன்கடுகடுப்பாய்க் கண்கள் சிவக்கவே யிவரைநோக்கி.

மன்னரே யுங்கள் பூஞ்சோலையில் மாதம் ரண்டாக வேலைபார்க்
என்ன விதத்தாலே கோபம்கொண்டீ ரெம்தவிதநானு மிருப்பே னென்றான்
அன்ன காலையி லும்றுகத்தா பவனை சிறைச்சாலை யடைக்கச் சொன்னர்
தன்னு லடிமையும் தண்ணீர்விட்டுத் தழும்பி யழுதுதா னுரைசெய்குவான். ()

தேசங் தனையெல்லா மொருகுடையில் செலுத்தும் படியான அரிசிம்மேறே
வாசரே தங்கள் மனமிறங்கி வருந்துஞ் சிறைச்சாலை யடைக்கவேண்டாம்
போசரே யுங்கள் பூஞ்சோலையிற் புதின மாகிய வேலை பார்த்து
ஹாஜ ருகவே யிருப்பேனென்றுன் காவல் தனைநீக்கி யும்றரசர் (391)

அடிமை தனைநோக்கி யருள்வாரப்போ தானு லினிமேலும் படுத்திராமற்
கொடுமை தனைநீக்கிப் பூஞ்சோலையிற் குணமாய் வேலைப்பார்த் திருநீயென்றார்
கிடைத்த பலனென்று காங்கையனும் கெழுமியே வந்து பூங்காவினிற்
படுத்தங்கவன்றானுமாலோசித்துப் பாங்காய்மனந்தனிலெண்ணங்கொண்டான்.

ஈட்டி யதினாலே யுமர்கத்தாபை யிதயந் தனிற்குத்தி யுயிர்போக்கியே
காட்டில் நாமேகிப் பிழைப்போமென்று கருத்தில் நினைந்தவ னெழுந்தந்நேரம்
நாட்டி லவனேகி யீட்டிவாங்கி நலங்கா தவனுமே யுறையில்வைத்தே
கோட்டி யாகவே யிருக்குநாளிற் குறிப்பங் கவன்பார்த்தே யிருக்குநேரம். ()

வெள்ளிக் கிழமையி னிரவானத்தில் வேந்த ருமர்கத்தாப் வணக்கஞ்செய்தே
யுள்ளக முள்ள பரமதானி லுமறுகத் தாபு துயிலும்போதிற்
புள்ளிமானுக்குப் பிணையாய்நின்ற புதியோன் முகம்மது கனவில்வந்து
தெள்ளு மமுதம்போல் யாறசூலும் செப்புவா ரப்போ திரவானதில். (394)

எந்த னருமையின் முடிவேந்தரே யெல்லா பறக்கத்தும் பெற்றபூவே
சந்த்ர வதனத்தி னுமர்கத்தாபே தாலந்தனில் வாழ்க்கை சரியாச்சுதே
யந்த மில்ஹறக்கன் சுவனபதி யவசியம் நீங்கள் வரலாமென்ன
மந்த ராசல நபியிறசூல் மறைமி லோதவே யெழுந்துநீதர். (395)

இரவு தனிலேதான் மிகுறுபுற்றே யியல்பா யுலுச்செய்தே யவரெழுந்து
தறஜா மிகவாக மிகுறுபுக்கள் தாலத்தர சரும் வணக்கஞ்செய்தார்
வரத்தோ னடிமையு மிதையறிந்தே வந்தான் மிகுறுபில் மனதஞ்சாமற்
புறத்திலே நின்றங் கீட்டியாலே பொறுக்கவே குத்தி யிழுத்தானப்போ.(396)

தந்த தாரையாய்ச் சோரியோடத் தயங்கி வேந்தரு மயங்கிச்சோர்ந்தா
ரந்த நிமிஷமே யடிமையோனு மவிடந் தனைவிட்டே யொளித்தோடினன்
வந்தார் முசிலிம்கள் பஜவறுகுத்தில் மன்னருட காயந் தன்னைப்பார்த்தே
எந்த விதமான மோசமென்றே யெண்ணி யழுதார்கள் தீனோரெல்லாம். (397)

வரத்தால் விளங்கிய வுமர்கத்தாபை மாளிகை மீதிற் றூக்கிவந்தே
யறத்தோர் யாவரு மழுதுவாடி யண்ணல் வயிற்றிலோ ரிளையைக் கோர்த்துப்
பொருந்தி யாறுநாட் பரமதானிற் புகழ்சே ரரசரும் படுத்திருந்தார்
கருத்தால் விளங்கிய மோதியாரும் கழற்றினு ரப்போ வாங்கையதை. (398)

நாத ரறிந்துதா னெழுந்தநேரம் நல்லோர் வயிற்றிளை யறுந்துவீழ்க
நீதர் குடலது வெளியிலாகி நிலத்தில் மிகச்சோரி தானோட
ஆதி விதியினுல் மயக்கமாகி யண்ண லிருந்தார்கள் தவத்தினோடு
சோதி மெரியவன் குதறத்தாலே துலங்கும் ராஜாங்கம் புவிமீதினில். (399)

பனிரண்டரை யாண்டா யரசிருந்து பாரில் ராஜாங்கம் நீதமாகக்
கனிவா யெளியோர்க்கும் குமராளிக்கும் கனக மிகவீந்து மனம்போலாக
இனிதா சவர்க்கும் கலத்தோரென்றே யெங்கும் துலங்கியே யிருந்துவள்ளல்
தனியோன் முகம்மது கலிமாவோடும் தரணி தனைவிட்டுப் பதவிசேர்ந்தார். ()

பதவி தான்சேர்ந்த வுமர்கத்தாபை பனிநீர் மஞ்சனம் தானூட்டியே
மதிபோ லழகான வெண்டுயிலால் வாகாய்க் கபனிட்டு மணங்கமிர்ந்து
பதியின் தீனோர்க ளூலுவுடனே பாங்காய்ச் சந்தூக்கி லழகாய்வைத்து
நதியை யழைத்திடும் நபிபேரன்மார் நாதர்தனையெடுத் தேகியப்போ. (401)

முகம்ம திறசூலின் கலிமாவோடு முதியோ ரனைவரும் றவுலாவேகிச்
செகமே லிறக்கியே யனைவர்களும் சிறந்த வணக்கமாய்த் தொழுதபின்னர்
அகுமதெனுநபி கபுர்திறந்தே யருளும் சலாம்சொல்லி முழங்கவப்போ
மகிழ்ச்சி யாகவே அபூபக்கரின் வலபா லடக்கம்செய் வீர்களென்றே. (402)

அடக்கம் தான்செய்து தீனோரெல்லாம் ஆமீன் கூறியே நிற்கும்போதில்
நடக்கும் படிமுறை வழுவாவள்ளல் நபியின்வலதுபா லபூபக்கரும்
திடத்தின் மனமுள்ள வுமர்கத்தாபு சிறந்த முகம்மத ரிடபக்கமாய்
அடக்க மானதை நகர்தீனோ ரனைவோரும் கண்டே புதுமையானார். (403)

அந்த மில்ஹக்கன் கூதறத்தென்று மனைவோரும் வந்தார் மனைமீதினி
லெந்த முகிலிமும் பறக்கத்தாக விறையோன் தனைபோற்றி சடங்குசெய்தே
வந்தமிசிக்கீன்கள் மனம்போலவே வாகாய்த் துயிலாடை நிதியமீந்து
கந்தங் கஸ்தூரி கமகமென ஹபீபு முகம்மதை யுவந்து போற்றி. (404)

ஆதி யருளாலே யவரவர்க ளழகின் மணிமாடந் தனிலேகினர்
நீதம் பொருந்திய வுதுமானரும் நேர்மை தானுள்ள அலிப்புலியும்
கோதில்லா வொரு மதினமீதிற் குலத்தோர் யாவரு மருங்குசூழச்
சோதி பெரியவன் கிருபையாலே துலங்கு முதுமானர் சரிதைசொல்வாம். ()

---

உதுமான் றலியல்லாஹு அன்ஹுவர்களின்

அரசுநிலை.

மதின மீதினில் தீனோரெல்லாம் வந்து மிகுருபி லிருந்தெல்லோரும்
புதியோ னுதுமான றலியுல்லாவைப் போற்றி யுரைசெய்வா ரனைவோர்களும்
பதிகள் தனக்கெல்லா மரசராகப் பட்டம் தான்கட்ட வுரைசெய்தார்கள்
ரதியை யழைத்திடு நபிதம்பார்கள் நமக்கி ராஜாங்கம் வேண்டா மென்றார். ()

உரைத்த மொழிகேட்டே யூராரெல்லா முலகந்தனிலுள்ள வரசர்க்கெல்லாம்
நிருப மெழுதியே வரவழைத்து நேர்மை தான்சொல்ல மிகுருபிற்போய்
மறைபி னுதுமான றலிப்புலியை வையந்தனையாளச் சொன்னபோதிற்
பெருகுந் தவமுள்ள விருபேர்களும் பிரிய மிலையெனப் புகன்றாரப்போ. (407)

உமறு கத்தாபு சேய்ஆசிமை யொழுங்கா யனைவோர்க்கும் காவியாக்கித்
தமது தகப்பனா ரணிந்திருந்த தகுந்த கணையாழி யெங்கேயென்றார்
நமது பாலில்லை மாபியாபால் நபியின் கணையாழி யிருக்குதென்றே
யுமையா குலத்துள்ள மாபியாரை யுலகத் தரசர்க ளூவந்துகேட்டார். (408)

மாவியா ரப்போ வழுத்தலானூர் மானி லத்தர சின்னூரென்றும்
பூவி லரசர்கள் சபைமீதினிற் பூராய் நேமித்தாற் றருவேனென்றூர்
மாவி யாருமே சொல்லும் போது வழுத்துவா ரப்போ தலிப்புலியார்
தாவாக் கிடையாதி ராஜாங்கத்திற் றூங்கள் முடிசூட்டு முதுமானுக்கே. (409)

இதுபோ லரசரும் சரிதானென்றே யிலங்கு முதுமானூர் தனைநீராட்டிக்
கதிரின் சுடரான துயிலுடுத்திக் கஞ்சுகி மாலை கழுத்திலிட்டார்
மதிபோ லிலங்கிய மவுலிசூட்டி மாபி யாரியும் கணையாழியை
நிதியி லுயர்வாக விரலணிந்து நேர்மை யாகவே தவிசிலானூர். (410)

நபியா முகம்மதின் சலவாத்தோங்க நவுரி பேரிகை கொடிமுழங்கப்
புவியுள் ளோரெல்லாம் புகந்துவாழ்த்தப் புனிதமடமாதர் கவரிவீசக்
கவிகை காளாஞ்சி யேந்திநிற்கக் கட்டியங் கள்கூற வுலமாவெல்லாம்
தவிசி லிருந்துதா னுதுமானூரும் தரும தானங்கள் மிகவும்செய்தார். (411)

மானில மெல்லாம் செல்வமோங்கி மகிழ்ச்சி மெருகிய வாறுபோலே
தீனோர் தவங்களும் பெருகிவாழ்கச் சிறந்த மங்கலக் குடிதனில்வாழ்
தேனின் மலர்புயத் திறசூல்பாதம் தினமுந் துதிசெய்யும் சாம்ராவுத்தன்
தானோ னருளினூ லீன்றபாலன் தனவான் முகம்மது சிக்கந்தரு. (412)

இராஜ மணிமாலை சரிதையெல்லாம் நல்லோர் மனமாகச் சொல்லக்கேட்டு
வாசம் பொருந்திய ஹபீபைப்போற்றி மகிழ்ச்சி பெருகியே செல்வம்போலே
தேச ராஜரு மனம்பூரித்தே செழிக்கு முடிவேந்தைப் பணிந்துவாழ்த்திப்
போச ரவரவர் தேசமேகிப் புகழ்சேர் முகம்மதைப் போற்றிசெய்தார். (413)

கனங்கள் பொருந்திய வுதுமானூரும் ஹக்க னருளாலே யரசாளும்நாள்
தனியோன் முகம்மது மாவியாருக்குத் தர்மா சனமீந்தே மிசுறூர்நாட்டைப்
புனித ரபூக்கர் செல்வரான புதல்வர் முகம்மதோ டபூபக்கரை
யினிதா யரசாளக் கொடுத்தேமன்ன ரியம்பினூ ரப்போ மாபியார்க்கே. (414)

திமுசு மாநகர் சாமூரையும் சிறந்த ராஜாங்கம் செய்மினென்றூர்
குமுச மிலங்கிய திமுசிலாகிக் குணமா யரசாண்டார் மாபியாரும்
அமுசு பொருந்தவே மதினமீதி லரச ருதுமானூர் புகழோங்கியே
தமது ராஜாங்கம் நெறிநடத்தித் தாலுந் தனையாண்டங் கிருக்குமநாளில். (415)

உமறு கத்தாபின் ராஜாங்கத்தி லொழுங்காய் முக்காதந் தள்ளிவைத்தோன்
பலமுங் குடிகெண்ட மறுவான்தன்னைப் பாசுரந் தன்னூல் வரவழைத்தே
தமது மதிமந்திரி யாகவைத்தார் தகுத்துக் கருகாமை யிருக்கவேதான்
உமைய்யா குலத்தோர்கட் குதவியாக வுதுமா னூரிருந் தரசாளுநாள். (416)

வெள்ளிக் கிழமையின் குத்துபாவில் விளங்கு முதற்படி நின்றோதினூர்
அள்ளிலை வேலைக் கரத்திலேந்தி மசுஹாபிகளனை வோருஞ்சொல்லார்
புள்ளி மானுக்குப் பினையாய்நின்று புகழ்சேர் முகம்மது வசன மாறி
யுள்ள படிமூன்றி லோதிடமா லொழுங்கு தவறியேன் செய்தீரென்றூர். (417)

அன்ன வுதுமானா ரிதுசொல்லக்கேட் டருளா வாரப்போ தாரார்பாவி
லென்றும தீனஃ துயரவேணு மிதற்காய் முதற்படி நின்றேனென்றார்
மன்னர் சொலுமொழி தன்னைக்கேட்டு மாறற மிஃதென்றே விசனமுற்றா
ரின்ன தோடன்னா ளுலகமீதி லோக மானதோர் பஞ்சமாச்சே. (418)

தன்னாலவரவர் மயங்கிவாடிச் சஞ்ச லக்கடல் தன்னில்மூழ்கி
அண்ண லார்பேரி லசுஹாபிமா ரதிக விசனமுற் றிருக்குநாளில்
முன்னாள் முகம்மத ரொசியத்தின்பால் முதியோர் பள்ளியின் குருவினுக்கு
மன்ன ரொருவரு வரிவாங்காமல் வந்ததுருவைக் கிவரியுங்கேட்டார். (419)

ஈது மொழிகேட்டுப் பள்ளிகுரு வியரு மியம்பினா ருதுமானார்பாற்
சோதி முகம்மது சதக்காயிந்த துருவைக் கிறைவரிக் கொடுத்தரியோம்
நீத ரபூபக்க ருமர்கத்தாபு னேர்மையாகிய ராஜாங்கத்தி
லேதா னொருகாசும் வரியுமுல்லை யெங்களரசே மணியேயென்றார். (420)

இதுகேட் டுதுமானா ரியம்புவார்க ளிறசூல் முகம்மது சதக்காவிந்த
முதியோ ராடெல்லா மிந்நாளில் முன்னு முமையாக்கள் தனையேவியே
யெதுவாய்ச் சூறைக ளேவிமன்ன ரேச மாக்கொள்ளை தானாச்சுதே
யதிலே ஹாஷீம்கள் மனங்கலங்கி யதிக வருத்தமா யிருக்குநாளில். (421)

முகம்ம தாம்நபி யொசியத்தின்பால் முன்னும் ராஜர்கள் ஷறுதில்லாம
லகங்கள் மிகவுள்ள மறுவானுக்கங் கண்ணல் விரலாழி தனையுமீந்தார்
ஜெகமேல் மறுவானும் விரலணிந்து சிறந்த முத்திரை பதிக்சசொன்னா
ரிகழாய் ஹாஷீம்கள் மனம்வெகுண்டே யிறையோனலியிடமுரைசெய்தார்கள்

அலியு மிதுகேட்டங் கருள்வாரப்போ தவரவருட ராஜாங்கத்தில்
நலமு மதிகளு மவரவர்க்கே யல்லால் நாம்பேச நபிசொல்லில்லை
தலத்தி லிருக்கின்ற ஹாஷீம்களே தாங்கள் மனதிலே வருத்தம்வேண்டாம்
குலத்தோர் யாவரு மிறையைப்போற்றிக் குவலய மீதி லிருங்களென்றார். ()

அந்த மொழிகேட்டே ஹாஷீமெல்லா மாலோ சனைசெய்து கூட்டங்கூடி
யிந்தராச்சியம் புவிமீதினி லிருந்து மிசுறாரி லரசாள்கின்ற
சந்த்ர வதனத்தி னபூபக்கர்தம் தனது புதல்வர்க ளிருபேருக்கு
மிந்த விதமெல்லா மெழுதினாம ளிருபேர் தமையுமே வரவழைத்தே. (424)

எந்தவிதத்தாலு முதுமானார்தம் மியல்பு தனையுமே நாமறிவோம்
வந்த பெயரெல்லாம் மொருமனதாய் வாகாயெழுதினா ரொருநிருப
மந்த ரப்புயத் தபூபக்கரின் மணிக ளாய்வந்த மணிவிளக்கே
சிந்தை மதியுள்ள தரமவேந்தே செல்வர் முகம்ம தபூபக்கர்க்கும். (425)

தின மீதுள்ள ஹாஷிமெல்லாம் வணக்க மாகவே யெழுதும்சேதி
புதுமா னாருட ராஜாங்கத்தி லொழுங்கு தனைக்கேளு நவமணியே
திியோ னருள்தங்கு மிகுறாபினிற் புகழ்சேர் நபிபடி தன்னில்நின்று
துவின் வதனத்தார் குத்துபாவும் விளங்க வோதியே தொழுதபின்னர்.

ஹாஷிமோ ரெல்லா மிகுருபிருந் தருளினா ரப்போ துதுமானார்பால்
நேசர் நபிபடி நின்றோதினால் நேர்மையுடன் தீனும் வளருமென்றார்
தோஷி மறுவானை மந்திரியாய்த் துலங்குங் கணையாழி தன்னையீந்தார்
பேசனாவது நமரோர்க்கில்லைப் பெரியோன் தனையெண்ணி யிருக்கலானோம்.

பள்ளிக் குருவியா ராட்சசூறை பண்ணும்படி சொன்னார் நினைத்தாரில்லை
வள்ள லலியிட மிதுசேதிகள் வழுத்த நானென்ன செய்வேனென்றார்
தெள்ளுநங் கதிர்வேலின் ஹாஷீமெல்லாந் தியங்கி மயங்கிறோ மகாராஜரே
யுள்ளுள் ளாகவே யுமையாவெல்லா முதுமா னாருக்கிங் குதவியானார். (428)

இந்தக் கடுதாசி கண்டபோதி லிருபேர் மனங்களும் தயவிரங்கி
வந்து மதினத்தி லுதுமானார்க்கு மதிகள் போதித்து மறுவானீங்கில்
எந்த விதத்தாலும் தீன் துலங்கி யிருக்கும் வழக்கமும் தவரிடாது
சந்த்ர வதனரே வருவீரென்று தாக்க லெழுதியே மடித்தாரதில். (429)

அதிக வணக்கமாய் விலாசந்தீட்டி யண்ண லுதுமானார் சமுகம் வந்தே
புதியோன முகம்மது கணையாழியாற் பொருந்தும் படியான மொகரும்வைத்தே
மதியிலுவப்பான மகராஜர்க்கு வாகா யனுப்பினார் தூதர்பாலில்
மதின மிருந்திடு மறுவானுமே வழிபாடானதை யவனரிந்தே. (430)

உதுமானாருட சமுகமீதி லுரைத்தான் மறுவான மிதுசேதியை
யதிலொன் றுறையாமல் முடிவேந்தரும் வரையு மறுவானே கடிதமென்றார்
சதியன் கரத்தினார் றாசெடுத்துத் தாக்க லெழுதினா னரசர்சொல்ல
மதினத் தாஷிங்க ளெழுதுசேதி மன்னர் மேற்குத்தம் கிடையாதுகாண். ()

முகம்ம தபூபக்க ரரிசிமேறே வள்ள லபூபக்கர் மணிவிளக்கே
யதபா யூரார்க ளொருகடித மனுப்பி யிருக்கறா ரதுபொய்யாகும்
ஜெகமே லிருக்கின்ற சாமூரையும் தீர்க்கமாகனே யுமக்களித்தேன்
சுகமா யரசரா யிருந்துநீங்கள் துலங்கி வாழுமென் றெழுதினாரால். (432)

நிருப மெழுதியே மடித்துமன்னர் நேர்மையாகவே மொகரும்வைத்துத்
திறமை யாகிய தூதர்பாலிற் சிறந்த அரசரு மனுப்பினாரே
மறுவா னவனுமே யிதையறிந்து மனதில் நினைத்தானே யொருகுற்றெண்ணம்
பெருமை யாகவே மாபியாருக்குப் பேரன்பா யீந்து சாமூர்தேசம். (433)

இந்த நேரத்தில் மிசுறாரார்க்கே யினாம்செய் தோமென்று மெழுதினாரே
சொந்த கிளையார்க்கு மாறுபாடாய்த் துலக்க மெழுதின வுதுமானாரை
யெந்த விதத்தாலும் கொல்வோமென்று வெடுத்தே யெழுதினா னொருகடிதம்
விந்தை யாகிய மாபியார்க்கு விருப்ப மாகியமந்த்ரியாரே. (434)

உங்கள் தனக்காகச் சாமூர் நாட்டை யொழுங்காயரசாள யானுந்தந்தேன்
செங்கை யுடையதோர் மிசுறார்மன்னர் சிறந்தசாமுரைச் சேர்க்கவாரார்
சங்க மாகிய படைகள் சேர்த்துத் தயாரா யிருந்துநீ சமர்ப்புரிவா
யெங்கள் மனம்போலே யிருப்பீரென்று யெதி மடித்தவன் மொகரும்வைத்

பரியினுடசேணற் தனிலேவைத்துப் பாங்கா யவன்மூட்டிப் பரிமேலிட்டு
திறவா னொருதன்பா லதனையீந்து சிறந்த ஷாமூரிற் கொடுபோவென்முன்
அரியின் மேலாகத் தூதவனு மதிக வேகமாய் நடத்தினனே
மருவின் மதினத்தின் ஹாஷிமெல்லாம் வரைந்த கடிதங்கொண்டேகுந்தூதன்

பாங்காய் மிசுறூரின் பதியைச்சேர்ந்து பாகரந்தன்னை யரசர்க்கீந்தான்
வாங்கி யிருவரும் வாசித்தண்ணல் வள்ள லுதுமானுர் மதிகளீதோ
வேங்கை யலியுல்லா பதில்சொல்லமல் விசனமானரே நமரோரெல்லாம் [ர்.
சாங்கிலியங்கள் தான்செய்த வேந்தின் சமர்த்தை யறிகுவோ மெனப்பகர்ந்தா

அன்னே ரந்தனிற் கடிதங்கொண்டே யஞ்சலாய்த் தூதன் கரத்திலீந்தா
லென்ன காரண மறிவோமென்று மிருபேரரசரும் நிருபம்பார்த்தார்
மன்ன ருதுமானுர் கடிதமீதில் மனம்போல் சாமூருங் கொடுத்துதனென்று
தன்னின் கணையாழி மொகருடனே சங்கையாகியவெழுத்தைநோக்கி. (439)

நல்ல திருக்கட்டு நமரோர்களே நாளைப் பணியுள்ள பரிசைதாங்கி
வல்லபந்தங்கும் பெலத்தோர்களாய் வாங்கவ பதினையி ரவர்களென்முர்
சொல்லுமரசகள் வசனங்கேட்டுத் துரகதர் சேனைத் தலைவரோடும்
அல்லா பெரியவன் கிருபையாலே யாயுதந் தாங்கிப் பரியிலேரி. (439)

சரகதி யுள்ள பரியனேகந் தளங்கள் சேனைக ளெழுந்தபோதிற்
பெரிய முரசுகள் பிடிமுழங்கப் பேதை மடைமாதர் கவரிவீச
அரிக ணடத்யே யரசர்களும் அவர்கள் பதிநீங்கி வருகும்போது
தரியலாரெல்லாம் கிடுகிடென்னச் சாலை வழிமீதில் நடக்குநேரம் (440)

சோலை வனங்களும் தோப்புகளும் துலங்கும் பூஞ்சோலைக் காவுங்கண்டே
யேல்வதாகிய நிணல்மீதினி லிறங்கி யிருந்தார்கள் சகலோர்களு
மேலோ ரருளினற் றொழுகையாகி விளங்கு மடிசிலுண் டிருந்தபின்னர்
லால கதிர்மேனி முகம்மதற்கு வழுததுவா ரப்போ தபூப்கக்கரும். (441)

நபியா முகம்மதெம் நாயகமும் நானு மாகவே பூஞ்சோலையில்
அவசரத்துடன் வந்திருந்தோ மருளினர்ப்போ நபிநாயகம்
புவியில் நீங்களு மரசர்ளுநாட் பொலிவாங் காவில்வந் தேயிருப்பீர்
வருவான் பரியேறி யொருதூதுவன் மாறு பாடான கடிதங்கொண்டே. (4௪2)

சந்திப் பாகவே வருவோன்சூழ்ச்சி தாக்கல் தளையறுந் தெழுமினென்றே
அந்த மில்ஹக்க னருள்பெற்றேங்கூ மாதிமுகம்மது முரைத்தாரப்போ
திந்த நிமிஷத்தில் யாதுவந்தே யானு முறைத்தேனென் றருளினரே
சொந்த மாகிய துணைவர்கேட்டுச் சொல்லுவா ரப்போ மந்திரிமார்க்கே. )4௪3)

..கள் நாயக மொழியானது நாம ளறிந்துதான் போவோமென்று
..சுக் குடையதோர் மகராஜரும் தண்ணார் சோலையி லிருக்கும்போதிற்
..யிற் றுகளெழப் பரிநடத்திப் புளகி தத்துட னொருவன் வந்தான்
..வல யத்துள்ள வரசர்கூவக் குரக தம்விட்டு மிறங்கித்தூதன். (444)

பணிந்தே யவனங்கு நிற்கும்நேரம் பரிசை யவனையும் சோதித்தார்க
ளணிவாற் குதிரையின் சேணமதை சறுத்துப் பார்க்கவே நிருப்பங்கண்டு
மனையின் சுயசோதி யரசர்களும் வாசித் ததைப்பார்த்தே யுரைசெய்வார்கள்
கணங்கள் பொருந்திய வுதுமானுர்க்கு கபடமேனிந்த வுலகமீதில். (445)

ஷாமூர் நகரங்க ளேகவேண்டாம் சங்கை பொருந்திய மதினமேகிப்
பூமி தனையாளு முதுமானுரை புதிய மதிமந்திரி மறுவான்றனை
நேமி யெனுங்கதிர் வாளால்வெட்டி நிறுத்துவேமிந்தக்கலகமென்றே
நாமள்படையுட னெழுமினென்று நவுபத்தடிக்கவே யுரைசெய்தார்கள். (446)

பேரி நபுரிக பிடிமுழங்கப் பிரயாணஞ் செய்தார் படைகளோடும்
வாரார் முகம்ம தபூபக்கரும் வாம்பரியேறி வாளிலங்கப்
பாரும் கிடுகிட படைநடந்தீ பதினே ழாவது நாளானதில்
மாருப் புகழ்தங்கு மக்கமீதில் வந்தே யிறங்கினர் படைகயோருடன். (447)

மக்கத் தார்வந்தே யுவந்துபோற்றி வள்ள ளுதுமானுர் வரலாறுரைத்தி
ஹக்கு பெரியவ னருளினலே காரண முள்ள வரசருடன்
மக்கத்தார்களுங் கூட்டமாக வாகா யெழுந்தார்கள் படைகளோடுங்
திக்கில் விளங்கிய மதினநாடிச சிறந்த பெருக்கமாய் நடந்தார்மன்னே. (448)

நதியுங் கடந்துதான் பதிமூன்றுநாள் நல்லோர் மதினமா நகரம்வந்து
மதினந் தனிலாகித் தலங்கள்சூழ முகம்ம தபூபக்க ரிருக்கும் நேரம்
புதியோ னுதவிகள் செய்தானென்றும் புகழ்ச்சி யாகவே ஹாஷீமெல்லாம்
கதிர்மெய் வாசரை யுவந்துபோற்றிக் காரணர் பக்கமிருந் தெல்லோரும்(449)

விருந்து மிகச்செய்து மதினத்தார்கள் விளங்கு மரசர்பா லிருக்கும்போதில்
மறுவா னவனுமே யிதையறிந்து மாற்றம் வரலாச்சே யரசர்க்கென்றே
யிருந்தால் நம்மையும் ரணங்கள்செய்வாரென்றே மனதெண்ணி வெளிவாகியே
யொருவ ரறியாமற் தற்காலத்தி லோடி யொளித்தானே வனவாசத்தில்.(450)

விடிந்த காலையில் மிசுறார்வேந்தர் விளம்புவா ரப்போ படையோர்க்கெல்லாம்
படியி லணியாய் மிகவாகவே பள்ளிக் குருவியா ரொருவவ்விய
துடிய ராகிய வுமையாக்களைத் துலங்கும் வாளினல் வீசுமென்றே
கடியின் மலர்புயத் தபூபக்கரின் கண்ணின் மணியான புதல்வர்சொன்னர். (•)

மதின தார்களும் ஹாஷீம்களும் வந்து படையுடன் தானெழுந்து
சதியின் மனமுள்ள வுமையாக்களை தடபுடலாகக் கருவறுத்தே
யதிப ராகிய வுதுமானுரை யரச ரிருவரும் தேடும்போதி
லுதுமா னவர்களு மாளிகையி லுடையோன் தவக்கலாய் துயிலுநேரம். (452)

இறசூல் முகம்மது நபிநாயக மெழிலாய்த் தான்வந்து கனவிற் சொன்னர்
தமஜா மிகவுள்ள வுதுமானுரே தவத்தி னின்வாழ்க்கை சரியாச்சதால்
வரிசை பொருந்திய கவனபதி வரலா மரசரே யெனப்பகர்ந்தார்
அரச ரதுகேட்டங் கவரெழுந்தே யதிக மபக்கமா யிருக்கும்போதில். (45

அன்றை யத்தின முதுமானாரை யபூபக்கர் மக்கள் தேடும்சேதி
நன்றா யறிந்துதான் தூதரோத நல்லோர் வேந்தரும் நவில்வாரப்போ
தென்றும் பெலமுள்ள அலியுல்லாயா லியம்பிவாருமென்றெருத்தார்க்கோதத்
தென்ற லமர்வாசா சமுகம்வந்து தெளிவோ டுரைசெய்தார் தூதரப்போ. ()

அன்ன காலையி லலிப்புலியா ரருளுவார்மக்கள் பதினெண்பேர்க்கு
மின்ன னுதுமானார் தம்மைக்கொல்ல இங்கார் முகம்ம தபூபக்கர்தான்
மன்னர் தனைத்தேடித் திரிவதாறல வாளேந்தி நீங்கள் வாசல் நின்று
தன்னார் பிறரங்கே வறவொட்டாமற்சங்கையுடன் காவல் நில்மினென்றார்(455)

அதுபோ லலிமக்கள் மதினென்பேறு மவர்க ளெழுந்தான் கதிர்வாலேந்தி
யுதுமா னார்மாடற் தலைவாசலி லொழுங்காக நின்றா ரலியின்பாலர்
எதுவாய் மிகத்தேடி மிசுறார்மன்ன ரிருக்கும் தலைவாசல் வருகும்போது
பதியி லிருக்கின்ற வேங்கைபோலே பதினெண்பேர் நின்றார் கதிர்வாளேந்தி.()

கிங்கப் புலிமங்கள் தன்னைக்கண்டு சிறந்த முகம்மதோ டபூபக்கரும்
இங்கு தலவாசல் நடக்கொணாதே யேகிப் பிறபுற மாகவந்து
தங்கு மாளிகைச் சுவரானத்திற் றலைவ ருரைபோலே கண்ணம்வைத்துத்
திங்க ளழகான தவத்தோர்மக்கள் சிறந்த முகம்மதோ டபூபக்கரும். (457)

வந்தார் மாளிகை தனிலாகிய வள்ள லுதுமானார் தன்னைப்பாக்கச்
சந்த்ர வதனத்தி லுதுமான வேந்தர் தவசி லிருந்துதான் குறுனோதுங்கால்
அந்தச் சமயத்தி லருகாகியே யருளுவா ரப்போ மிசிறிராஜர்
சிந்தை துலங்கிய வுதுமானாரே தேசந்தனையாண்ட கோலமென்ன. (458)

வெள்ளிக் கிழமையில் குத்துவாவில் விரைசேர் நபிபடி நின்றோதியும்
பள்ளிக் குருவியா ராட்டைச்சூறை பண்ணச் செய்தும் நீ ரஃதெல்லாமீ
துள்ளார் தன்னிலே மறுவான்றன்னை யருமையாகிய மந்திரியாக்கி
யெள்ளள வினும் கவனியாம லிறசூல் கணையாழி கொடுக்கலானீர். (459)

இன்னா ளெமக்கொரு குபாடமாக வெழுதிச் சாமூர்க்கங் கனுப்பலாமா
இன்ன விதத்தாலே பலகோலங்க ளியற்றிப்பெரும்பகைவளர்த்துக்கொண்டீர்
இன்னபடி யென்று சொல்வீரென்றா ரேது பேசாம லிருந்தார்வள்ள
லிந்நேரந்தனில் வாளோங்கியே யரச ருதுமானார் தனைவெட்டினான். (460)

மன்ன ருதுமானார் கொலையாகவே வந்தார் வெளியிலே மிசுறார்வேந்தர்
மின்னுங் கதிர்வாளுங் கரத்திலேந்தி வீரத்துடனின்ற அலியார்மக்கள்
அன்ன வுதுமானார் ப்தவிசேர்ந்த அகவல் தனைக்கேட்ட யலிபாலோத
…ன்ன ரலியுல்லா விதனைக்கேட்டு மக்களேசுக்கூர் செய்மினென்றார். (461)

…து படிநிற்க விறைவிதியா லிறங்கி வானோர்கள் புவியில்வந்து
…கருதுமானார் சரீரந்தன்னை நலத்திற் பொருதியே துயிலைப்போற்றிச்
…ந பரிமளம் பனிநீர்வாசம் திமிர்ந்து ஜானசாக்கு காவல்நிற்க
…து மறியாத பெண்மாதர்க ளிருந்து மாளிகை தனிலழுதார். (462)

ஏதுகாரணம் யாகுதாயே யிலங்கும் முதுமானூர் வதையாகிட
நீதர் முகம்மதின் குருஹயத்தை நேர்மை யுடன்கோர்வை செய்யவந்தே
சோதி யார்லெளகு மகுபூலினிற் றுலங்கு மெழுத்தைப் பார்த்தெழுதினரே
நாத ரேயெங்கள் சிகாமணியே நானிலம் விட்டா பதவிசேர்ந்தீர். (463)

சந்த்ர வனத்தின் மாதரெல்லாந் தயங்க யழுகிற சமையத்திலே
சிந்தை வெகுண்டுதான் மிசுறூர்மன்னர் செப்புவா ரப்போ ஹாஷீங்கள்பால்
இந்த வுதுமானூர் சடலந்தன்னை யேழுநாட் சென்றே யடக்குமென்றே
யிந்தி னெழில்மேனி யரசரோத விதுதான் கீர்த்தியென்றனேகர்சொன்னூர்.

ஈது விபரங்க ளலியறிந்தே யென்ன விதம்செய்தா ரிவர்களென்றெ
சீதம் பொருந்திய முகமிலங்கச் சியந்த கதிர்வாளுங் கரத்திலேந்தி
நாத ருடபரி துல்துலேறி நல்லோர் பாலரு மருகாய்வரக்
காத லாகவே மிசுறூர்மன்னர் கண்டா யெதிர்வந்து சலாம் கூறினூர். (465)

மன்ன ரலியாரும் பிரத்திகூல வழுத்துவா ரப்போ தமுதம்போலே
என்ன வினத்தாலே யுதுமானூரை யேழுநாட் சென்றங் கடக்கச்சொன்னீர்
சொன்ன திதுவார்த்தை சரியல்லவே துய்யோன் தனக்கேழு வசனமாகும்
இன்னு ளடக்கந்தான் செய்வோமென்றே யிறசூல்முகம்மதுமருகர் சொன்னூர்

முகம்ம தொடுமபூ பக்கர்தாமும் வணக்க மாய்நின்றே யுறைசெய்குவார்
இகலாய் மதீனத்தி லரசுசெய்தா ரிவிடந் தளில்மய்ய மடக்கொணுது
ஜெகத்தி லொருகல்வீ செறிவீராயிற்சிறந்த கற்விழுத் தலத்தில்வைப்போ
முகம்ம திறசூலின் மருகேசரே மூவுல கோர்க்கு மணியேயென்றூர். (467)

வல்லோ னலிப்புலி மனந்தான்வைத்தே வலக்கை யாலொரு கல்லெறிந்தார்
எல்லாம் படைத்தவன் கிருபையாலே யேகுங் கல்லஃ தொருகடிகை
எல்லோர் யாவரும் சரிதானென்றே நாத ருதுமானூர் தம்மையப்போ
தல்லா வருளென்றுந் தீனேரெல்லா மகத்தி லேகியே பாக்கும்போதில்.(468)

உதுமா னூருட சரீரமெல்ல மெரன்றுய்ப் பொருப்தியே துயிலும்போதில்
மதிபோற் பரிமாள மிகந்திமிர்ந்து வாசங் கமகம கமகமென்ன
எதுவா யிருக்குமப் புனலானதை யெல்லோ ருங்கண்டே புதுமையாகிப்
புதியோன்குதறத்தென்றனேவோர்களும்புகழ்ச்சியாய்மய்யங்குளிப்பாட்டியே.

தீனோர் யாவரு முலுவுடனே சிறந்த கபனிட்டு மணந்திமிர்ந்து
வானோர் போற்றிய வுதுமானூரை வழங்கும் சந்தூக்கி லெடுத்துவைத்துக்
கானின் மானுக்குப் பிணையாய்நின்ற ஹபூபு முகம்மது கலிமாவோதித்
தீனோர் யாவரு மெடுத்தேகியே சிறந்த கல்விழுந் தலத்தில் வைத்தார். (470)

அண்ண லலிப்புலி யிமாமாய்நிற்க வனேவோர் பின்சென்று தொழுதபின்னர்
மன்ன ருதுமானூர் மணிவிளங்கை வாகா யடக்கியே வந்தாரப்போ
தென்றுந் தவத்தின் ரலிப்புலியா ரிறையோ மருளினுச் சிலகாரண
மன்ன ருதுமானூர் யுதுமைகளை வாகாயறிந்துவந் தார்வேந்தரே. (471)

வந்து மனையிற் சகவோர்களும் வள்ளல் முகம்மதை மிகப்போற்றியே
சந்த்ர வதனத்தி னுதுமானார்க்குச் சடங்கெல் லாம்செய்து மனைகளாறு
ரெந்த முசிலிமு மிறையைப்போற்றி யெழிலாய் வணக்கமு மிகவேசெய்து
சொந்த மாகிய ஹாஷீமெல்லாந் துலங்கு மதினத்தி லிருக்கும்நாளில். (472)

---

### அலிறலியல்லாகு அன்ஹுவர்களின்

### அரசுநிலை.

எங்கும் துலங்கிய வபூதாலிபி னிருகண் மணியாக வந்த செல்வர்
சங்கை பொருந்திய அலிப்புலியைத் தாலந் தனையாள முடிசூட்டியே
திங்கள் வதனத்தி னரசர்களும் சிறந்த ஹாஷீம்க ளனைவோர்களும்
பொங்கு மகிழ்ச்சியா யிறையைப்போற்றிப் பூமிதனிலுள்ள வரசர்க்கெல்லாம்

நிருப மெழுதியே வரவழைத்து நேர்மையாகிய மதினமீதில்
மருவின் மலர்மாச ரலியுல்லாவை மஞ்சன மாட்டித் துயில்புனைந்து
பெருகு மதிபோலே கட்டையிட்டுப் புருட ராகத்தால் மகுடம் சூட்டித்
திருவியின் முகம்மது கணையாழியை தெளிவ தாகவே விரலணிந்தார். (474)

நபியா முகம்மதின் சலவாத்தோங்க நல்லோர் பூச்சக்கரக் குடை துலங்கக்
கவியி லரசர்களுவந்துவாழ்த்தக் கதிரால வட்டம் சிறந்திலங்க
புவியின் வாணர்களுவந்துபாடப் பேரிகைபிடி முரசதிரத்
தவசி லிருந்தாரே யலிப்யுயார் சங்கை யாகிய மதிபோலவே. (475)

சிங்கா சனமீதி லலியிருந்தார் சிறந்த வுலமாக்கள் கட்டியங்கூற
வெங்குந் துலங்கவே சலவாத்தோசை யிலங்கும் மசுஹாபி மார்கள் வாழ்த்தத்
திங்கள் கதிர்போலே டால்துலங்கத் தெளிவின் மடமாதர் கவரிவீச
மங்களம் சொல்ல வானோர்களும் வள்ள லிருந்தாரே சிம்மாதனம். (476)

அரிசி லிருந்தது தா னுலகாளுநா ளனேக ராஜர்கள் திறையக்களக்க
குறைஷீக் குலத்தோர்க ளுவந்துவாழ்த்தக் குவலய முள்ள தீனோர்போற்றத்
தறஜா வரிசையு மிகவுண்டாகத் தாலமெங்கனும் புகழோங்கியே
வரத்தி லுயர்வான அலியாரண்ணல்வாகபய் ராஜங்கம் நடத்துநாளில். (477)

மானும் புலியிடன் பசுக்கூட்டங்கள் வனத்தி லிருக்கின்ற யானைசிங்கம்
தானுய் வனம்பேரலே யொருதுறையிற் றண்ணீர் தா னுண்டு தாகந்தீரும்
தீனோர் யாவரு முவந்துமோற்றிச் செல்வம் பெருகிய மகிழ்ச்சிபோலே
வானின் மதிபோன்ற பள்ளிவாசல் வழங்கு மங்கலக்குடிதனில்வாழ். (478)

ஏக பெரியோனை வணங்கும்நேச னேதிர்வாடி யூகன் தமற்தால்வந்த
ஈகை மிகவுள்ள ஈமானுள்ளோ னிலங்கும் வதனத்தின் காதிர்மீறுன்
மேகங் குடையிடு நபியிறசூல் விளங்கு மணிமாலைப் புகழையெல்லாம்
யூகமாய்க் கேட்டு மனமகிழ்ந்தே சுலகிய மிகப்பெற்ற செல்வம்போலே. (479)

மதின மீதுள்ள தீனோரெல்லாம் மகிழ்வுற் றரசரை மிகவாழ்த்திட
நிதிகள் பெருகின பைத்துல்மாலில் நீணில மெல்லாந் தர்மமோங்க
அதிப ராகிய அலியாரண்ண லவர்க ளுடமக்கள் பதினெண்மரும்
பதியிற் புகழோங்க வினிதிருந்து பாங்காய் மதினத்தி லிருக்கும்நாளில்.(480)

ஈது படிநிற்க மறுவானுமே யிதயங் கலங்கியே திமிசிலேகி
யேது வாகவே மாபியார்பா லியல்பாய்ச் சலாஞ் சொல்லி யருகிருந்தே
போதுவா னப்போ பட்டபாடு முதுமா னுருட விபரமெல்லாம்
நீத வான்போலே மாபியாரும் நிலத்தில்விழுந்தா னழுதுசொல்வார். (481)

எங்கள் குலத்தினி லுதித்த்வேந்தே யென்னபடி மாண்டீ ரரிசிம்மேறே
யுங்க ளுதவியாற் றிமிசெற்குற வுதவி யுபகாரம் செய்தகோவே
தங்கள் தமைவெட்டி வதைதான்செய்து தாலத்தலிப்புலி முடிசூட்டவே
சங்கை யாச்சுதா புவிமீதிலே சமர்த்தை யறிகிறேன் மாபியாரும். (482)

எமது மறுவானே சொல்லக்கேளு மிந்த வுலகத்தில் ராசாங்கமும்
நமது கிளையுள்ள வுதுமானுரை நாடி யபூபக்கர் புதல்வர்வந்தே
தமது மாளிகை யவர்புகுந்து தாக்கி வதைசெய்த கோலத்தாலே
யுமது யோசனை மனமுள்ளதை யுரைப்பீர் மறுவானென் றவருங்கேட்டார். ()

இதுகேட் டவனுமே யிதயமீதி லின்பங் குளிர்ந்துதான் மறுவான்சொல்வா
னெதுவா யலிதனை வதைதான்செய்தே யிப்பூமி யெல்லா முமக்குண்டாக்கி
நிதிகள் பெருகவே யானும்செய்வே னினைவி லிருக்கட்டு மெங்கள்வாயிற்
பதிகள் தனையாள அலிப்புலிக்குப் பாத்தியமுண்டோ பார்மினென்றான்.(484)

மறுவா னுரைகேட்டு மாபியாரு மனது மகிழ்ந்துதா னுரைகள் செய்வார்
தறையில் மதிசொல்லு மந்திரியாய்த் தகுத்துக் கருகாமை யிருமென்றோதி
விரைவில் மலர்மாலை யாபரணம் வேண துகில்நிதி யவனுக்கீந்து
மறுவா னவனையு மந்திரியாய் வைத்து மதிகெட்டார் மாபியாவே. (485)

ஹாஷிம் குலத்தோர்கள் பாடி யெல்லா மவசிய மிப்போ தழிக்கவேணும்
வாக ரலியையும் வதைதான்செய்து மாபியா பட்டங் கட்டவேணும்
தேச மீதெல்லா மொருகுடையிற் செலுத்தி யிருபேரும் கீர்த்தியாக
ஹாஜத்துடனேதான்யானினைந்தேன் கருத்தையுரையுமென்றவனுங்கேட்டான்

மாபி யாவுமே சரிதானென்று மனம்போ லிகலது பிரியுமென்னப்
பூவி லுமது சொற் படிநடப்பேன் புத்திப்படி யென்றார் மாபியாவும்
பாவி யாகிய மறுவானுமே பதினு யிரத்தஞ்ஞூ றவர்கள் சேர்த்துச்
சோபிதமாக முரசடித்துத் துர்ரெண்ணங் கொண்டே மறுவான் சொல்வான்.

ஹாஷீம் குலத்தோர்கள் பாடியெல்லா மழித்து நிதியங்க ளெடுத்தோமசி[illegible])
வாச ரலியிடம் போய்ச்சொல்வார்கள் வருவார் சமருக்குவதைதான்செய்[illegible]
மாசி லாதொரு மனதைத் தேற்று மன்ன ரேயென்று மறுவான்சொன்[illegible]
பீச பீலிலே துணிவோமென்று பெருமை யடைந்தாரே மாபியாவும். ([illegible]

மதினக் தனக்குமே ரசவர்க்கங்கள் வரத்தில் லாமலே மிகத்தடுத்தான்
சதியன் மறுவான்தன் மதியினாலே தவச மணுகாமற் செய்துபின்ன
ரெதிரி யாகவும் பதினாயிர மிலங்கும் படைகளை யனுப்பிவைத்து
நிதிகள் மிகவுள்ள சிற்றூர்களை நெருப்பிட் டுடனக்கு நிதிகவர்ந்தான். (489)

ஹாஷிம் குலத்தோர்கள் தனையடித்தே யதிகத் தடல்புடல் மிகப்புரிந்தே
மாசி னுமையாக்கள் செய்தவேலை வல்ல பெரியவன் தனக்கேறாது
பாசன் மறுவான்றன் னடைத்தைபாலே பயமாய் ஹாஷிம்கள் மதினம்வந்து
போசர லியுல்லா சமூகத்திலே புகன்றா ரிதுசேதி யவர்களெல்லாம். (490)

அலியுல் லாகேட்டங் கமிர்தவாயா லருளுவா ரப்போ தனைவோர்கள்பால்
நலங்க ளிஃதென்றே யுமையாசெய்தார் நாய னிருக்கிறான் போங்களென்றார்
தலங்கள் தனைவிட்டுச் சிற்றூரார்கள் சங்கை யாகவே யேகினார்கள்
குலங்க ளாகிய மதினத்தார்கள் கூட்டமாய் வந்தே யலியைப்போற்றி. (491)

எங்கள் தனக்கெல்லாம் தங்கமேரே யிரசூல் முகம்மது மருகேசரே
சிங்கப் புலியலி மகராஜரே சிறந்த ஆயாச மிகவாகினோம்
பங்க னாகிய மறுவானுடன் பாங்காய் மாபீயா வொன்றாகியே
சங்க மாய்வரும் ராஜவர்க்கந் தன்னை யறிந்தவ னடஞ்செய்கிறான். (492)

தங்க மேயுங்கள் ராசாங்கத்திற் றயங்கிறோம் நாங்க ளனைவோர்களு
மெங்கள் காலமோ விறைவிதியோ விருத யங்களு மிகவாடுறோம்
சிங்கமே நீங்க ளமுதவாயாற் செப்புங்க ளென்று பணிந்துகேட்டார்
சங்கை யாகிய அலியுல்லாவும் சார்ந்தங் கோதிய பெயருக்கெல்லாம். (493)

உக்கா சானவர் வதனநோக்கி யுரைப்பா ரலிப்புலி யமுதம்போலே
மிக்க வருத்தமா யூரார்சொல்ல மிகவும் பெரியவ னிருக்கிறான்
ஹக்கன் கிருபையால் பைத்துல்மாலின் கதவு திறந்துதான் சகலோருக்கும்
தக்க முறையாமற் றவசங்களைச் சல்தி யாகவே கொடுமினென்றார். (494)

ஈது மொழிகேட்டு ஹாஷீமெல்லா மிருத யங்களு மிகப் பூரித்தார்
நாத ருரைபோலே பைத்துல்மாலி னல்லோ ரொக்காசு தானிருந்தே [த்தார்
யோது முறைபோலே வந்தோர்க்கெல்லா மொழுங்காய்த் தவசங்கள் மிகவளி
காத லாகவே தீனோரெல்லாம் ஹக்க னருளென்றே பசிதீர்க்குநாள். (495)

ஈது படிநிற்க மதினமீதி லிலங்கும் பாடிகள் சிற்றூர்களி
லேதுவாகிய ஹாஷிம்களி னில்லி னிடமெல்லாம் நிதி கவர்ந்தே
கோது மிகச்செய்தே மாயியா தம் குலத்தோ ருமையாக்க ளடித்தாலும்
பாது காக்கின்ற அலிபாற்சொல்லப் பாங்காய் மிகவந்தார் ஹாஷிமோர்கள்.()

செ
[illegible]ன்ன காலையில் மதினமீதி லழுதுவருகிற ஜனத்தைக்கண்டே
பு[illegible]ன ரலிமக்க ளசனுசைனார் முகம்ம தனிபாவு மலிபால் வந்தே
பி[illegible]ரனல் நின்றுதாம் பாதம் போற்றி முதலோ னலிபாலி லுரைசெய்குவார்
வி[illegible]ணின் மணியான தந்தையரே ஹக்க னருள்பெற்ற தயாபரரே. (497)
வ

தேசந் தனையெல்லா மொருகுடையிற் செலுத்தி யரசாளும் நாளதனிற்
பாச னுமையாக்க ளடம் செய்வதைப் பார்த்தே யிருப்பது சரியல்லவே
போச ரேயுங்கள் மனமானது புதியோ னருளென்று நாமறியோம்
நேச ரேசித்த மலைதிரங்கி நிமிஷந்தனில்விடை தந்தீராகில். (498)

உமையாகக் குலத்தோரை செந்தூளாக்கி யொருநொடிப்பொழுதிங்குவாருேம்
சமைய மிதுநல்ல சமையம்பாவா தயவு நீங்களே செய்வீரென்ன
நமரோர் யாவரும் சொல்கிருர்கள் நாத ரலிப்புலி பெலமில்லையா
தமரி லிருக்கின்ற ஹாஷிமோர்கள் தானே வலசைகள் போருரென்ருர். (499)

அந்த மொழிகேட்டே யலியாரண்ண லரிபோல் மிகச்சீறி யருள்வாரப்போ
தெந்தன் பெலங்களு மிலையாவென்றே யெவர்கள்தான் சொன்ன ரிப்பூமியி
லிந்த வசனம்போ லெனதிட்த்தில் யாரு மிதுமொழி சொன்ராகிற்
கந்தரக்கத்திர் வாளால்வெட்டிக் காகம் பருந்துக்கு விருந்துசெய்வேன்.(500)

எந்தன் மணியானபாலரா லுமெனது மனங்களும் பொருத்தேனென்ன
விந்த நேரமே துல்துலையு மிருங்கதிர் வாளுங் கொணர்மினென்ருர்
சந்திப் பாகவே தீனேரெல்லாந் தானைப் பதாதியோ டெழும்னென்று
விந்தை யாகிய மாபியாதம் விதங்க ளியல்பதை யறிவோமென்ருர். (501)

சொன்ன மொழிகேட்டுப் பாலர்களுந் துலங்கும் மசுகாபி மார்களெல்லா
மென்னும் பெரியவ னருளீதென்றே யிருதய மெல்லாம் பூரிப்பொங்கி
மன்ன ருரைபோலே பரிசைதாங்கி வாம்பரி யேறிக் கொடிகள் துன்னத்
திண்ண மாகிய முரசொலிப்பத் திடுதி டென்னவே யெழுந்தா ரப்போ. (502)

அலிமகர்பதி னெண்மர்களு மாயுதம்பல பரிசை தாங்கிக்
கலன்க ளணிந்துயர் பரியிலேரிக் கதிர்வா ளிலங்கவே யெழுந்தாரப்போ
பெலனு ரரிசிம்மே றலியாரவர் பெரியோ னருளினல் வாளணிந்து
கலன்கள் பொருந்திய துல்துலேறிக்கர்த்தரெழுந்தார்கள்சமரஞ்செய்ய.(503)

பேரி நவுரிகள் கிடுகிடென்னப் பிடியு மெக்காளங் திடுதிடென்னத்
தாரை சல்லரி தவில்முழங்கத் தம்பூர் நவ்பத்துமடமடென்ன
வாரப் புகழோங்கும் நபியிறசூல் வள்ளல் முகம்மதின் சலவாத்தோங்கக்
காரின் குழல்மாதர் கவரிவீசக் கட்டியங்கூற வுலமாவெல்லாம். (504)

நாற்பத் தீரா யிரம்பேர்களும் நாலு புறத்திலும் சூழ்ந்துவர
மார்க்க நெறிநீத மறைவாகிய மாபியா தங்கும் திமுசடுத்தே
பார்த்து மறுவானு மாபியாவும் பதறி மனமிகக் கலங்கிவாடித்
தீர்க்க மாகவே மனதைத் தேற்றிச்சேர்த்தான் படைகளைச்சேகரமாய். (505)

அன்ன காலையி லலியாருமே யழகு பொருந்திய சோலைமீதில்
மன்ன ரிறங்கியே படையினேடும் வன்னக் கூடாரந் தானடித்து
மின்னும் வடிவேலர் பெரிதுசூழ விளங்கும் படியாக மாபியார்க்குத்
தன்னின் கரத்தினற் கடிதமொன்று தயவ தாகவே யெழுதினால். (506)

ஆல நபிதோழர் மாபியாரே யருமை யாகநா னெழுதுஞ்சேதி
கோல மாகவும் சிற்றூர்களை கொள்ளை தான்செய்யப் படையேவினீர்
தால மீதினில் நபிநாகம் தன்மாசன் மீந்த நாடானதை
மால.ா யிருந்துநீ ரரசாளாமல் வழக்கம் போலவும் திறை கொடாமல். (507)

உதுமா னார்தம்மைச் சதிமானஞ்செய் தோடியே வந்த மறுவான்றன்னை
மதியும் கேட்கவே மந்தரியாக்கி வம்புவளக்காதிர் புவிமீதினில்
நிதியுங் குறையாமற் றிறை யனுப்பும் நெட்டூரமெல்லா மறந்துபோடும்
சதிக ளாகிய மனம்வைத்தீரோ சமர்தான் புரிகுவோ னுமைநாமென்றே.(508)

இந்த விதமாக வெழுதியண்ண லிருந்த தூதர்பா லனுப்பிடவே
வந்த தூதுவர் மாபியாபால் வணக்க மாகவே நிருபமீந்தார்
அந்த நிருபத்தை மாபியாவு மந்த மறுவானும் யூகம்பார்த்துச்
சிந்தை வெகுண்டுதான் மறுவான்மந்திரி செப்புவா னப்போ மாபியார்பால். ()

குறைஷிக் குலத்திலே யிருபேர்பட்டம் கொண்டா ரபூபக்க ருமருகத்தாப்
அரசி லிருந்தார்க ளுவந்துவந்தீ ரண்ண லுதுமானு ரெமதுகுல
மொருவ ரரசனா ருதினமீதி லுமையா குலத்தவ ராகாதென்று
குறைஷிக் குளத்துள்ள மிசுறூர்வந்தே கொலைகள் புரிந்துதா னிருந்துமன்னர்.

அலிக்கி யரசென மகுடம்சூட்ட வவர்க்கேயொரு சொந்தம் கிடையாதென
நலமாய் தமதிட மதினம்விட்டால் ராசிதா னுவோ மில்லாவிட்டாற்
பெலம தாய்ச்சமர் செய்வோமதிர் பேதகமில்லை நமரோர் கூட்டம்
தலங்க ளிருக்கிறூர் நூறுயிரம் சனங்கள் யாவற்றும் நமக்கேயென்றான். (511)

சது மொழிகேட்டு மாபியாவு மெப்படி மதிப்பெடுத்தீர் மந்த்ரி
போது மிதுபுத்தி யிதுபோலாகப் பிரிதி யெழுதியே யனுப்புமென்றூர்
கோது மிகவுள்ள மறுவானுமே குலத்தோர் மதிபோலே யெழுதியவ
னேது வாகவே யதைமடித்தே யிறையோ னலிதூதர் பாலிலீந்தான். (512)

வாங்கி நிருப்பதை யலிவாசித்தே வழுத்துவா ரப்போ ஹாஷீம்கள்பால்
பாங்கு தவறினல் மாபியாரும் படைக ளெழும்பியே வரவும் வேண்டாம்
நாங்கள் சமர்செய்து வருவோமென்று நாத ரலியுட பாலரெல்லாம்
வேங்கை யதுபோலே தான்நெழுமி வீர வாளுடன் பரிசைதாங்கி. (513)

பதினெண் பாலரு மலிப்புலியும் பரிமே லேறினர் கோபங்கொண்டே
கெதிக ளாகவுங் குதிரைவிட்டு கிடுகிடென்னவே யனுமானித்தார்
சதிய ராகிய வுமையாகூட்டத் தலைவர் மாபியா விதனைகண்டு
மதினத் தலியாரும் வாராரென்றே வகுத்தான்படையெண்பத் தையாயிரம். ()

ஜெண்டாக் கொடிகளும் சிறந்திலங்கத் திடுதி டென்னவே முரசடித்தே
மண்ட லங்களு மதிரந்தாவி மாபி யாவுடன் மறுவானுமாய்த்
துண்டு மடல்போலே செவிகளான துரகத மோடு மாபியாவும்
அண்டங் கிடுகிட முரசடித்தே ஆழிக் கடல்போலே யெழுந்தாரப்போ. (515)

அகங்கள் மிகவுள்ள உமையாகூட்ட மனேக முழக்கமாய் வருகும்போதில்
முகம்ம தபூபக்க ரிருபேர்களும் வந்தே யலியவ ரருகாய்நிற்கப்
புகுந்தார் படையிலே யலியுல்லாவும் போட்டார் வாளினு லுமையாக்களைச்
செகமுங் கிடுகிட யலிதம்பாலா செருநர் படையிலே புகுந்தாரப்போ. (516)

## எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

தரியலர் நடுங்கத் தடதட தடெனச் சமரினிற் சூரர்கள் புகுந்தே
மருமலா கிளியை வாளினல் வதைத்து வாம்பரி நடத்தியொன் னலரைக்
குறுகலர் சடல மிருபகுப் பாக்கிக் குரகதம் பிளந்துதான் குவித்துச்
சரகெதி யதுபோ லபூபக்கர் புதல்வர் சடிலமும் நடத்தியே களத்தில். (517)

மண்டையின் மூளை சிறறிடத் தாக்கி வாம்பரி நடத்தியே யரச
ரண்டமு நடுங்கச் சேடனின் முடிக ளசைந்துதா னெறுநெறு நெறெனச்
சண்டமா ருதத்தின் மடலெனவொலித்த சமர்க்களந் தனில்வெட்டிக் குவித்து
தண்டமு மேந்தி வருமுமையாக்கள் தனைமுடிபிளந்துதான் குவித்தார். (518)

கரங்களு மறுந்து கற்கியு மிழந்து கருத்தழிந் திருப்பவர் சிலரே
சிரமது சிதறி யிருபகுப் பாகிச் செருக்களம் கிடப்பவர் சிலரே
சரமது கோர்வை செய்திடு முமையா தலைவர்கள் சிதறினர் சிலரே
மரமது மிகுந்த பாவினை யிரத்த வாரியி லோடுவர் சிலரே. (519)

சங்கமா யிறந்தார் மாபியா படையிற் ஜனங்களோ வெழுபதாயிரவர்
மங்குலின் கவிகை நபிதிரு மருகர் வாகுடன் சமர்செய்யிங் களத்திற்
றங்கியங் கிருக்கு மாபியா வுடைய தாடியைப் பிடித்தனர் ஹசனர்
இங்கிது பேரர் சரசமே வுமக்கு மெந்தனின் தாடியைப் பிடித்தீர். (520)

அங்கது தெரிந்தே யலிப்புலி யுரைப்பா ரருமைகள் பொருந்திய மகனே
தங்கிய பாபி யாவவர் தாடி தன்னைவிட்டிவ்விடம் வருவீர்
சங்கைசேர் மகனே ஹசனெனுங் கனியே தாடியை விடுமெனப் பகர்ந்தார்
மங்குலின் கவிகை நபிதிருப் பேரர் மாபியா தாடிவிட் டகன்றார். (521)

## தொங்கல்.

ஓடி மாபியா படையுளாகி யுரிமை யாய்வந்தே மறுவானிடம்
தாடி யகப்பட்ட வரலாறினைச் சாற்றின ரப்போ நடுக்கமுற்றே
ஆடி மிகநின்று சொல்லும்போதி லருமை யாகவு மறுவான்சொன்னன்
மோடியாய் நின்று மாபியாவே முதலோ னுமக்குயிர் கொடுத்தானென்றான். ()

இந்த விதமுள்ள போர்க்களமா யிருபத்து மூன்று சமரினலே
வந்த மாபியா படைமீதினில் மாண்டா ரெழுபத்து வையாபிரர்
அந்த நேரமே மாபியாவு மவர்தம் மறுவானு மாலோசித்துச்
சந்திப்பாய் நின்று சமர்செய்தோம் ஜனங்கள் சேதமு மிகுதமானர். (523)

தந்த்ர மாகவே யலியுயிரைத் தாக்குவோ மென்று மனதிலெண்ணி
வந்த படையிலே யிருந்தபேரை மாபியா கூட்டித் திமுசிலானர்

அந்த நேரமே யலியாரண்ண லவர்தம் படையொடு மதினம் வந்து
சந்த்ர வதனந்தான் மிகவிளங்கித் தவுசு தனிலிருந் தரசாளுநாள். (524)

முகம்ம தபூபக்க ரிருபேர்களும் வணக்க மாகவே யலியைப்போற்றிச்
செகத்தில் விளங்கிய மிசுறூர்பதி சேனை தளத்துடன் வந்துசேர்ந்தார்
ககனத் தரம்பையர் மிகவாழ்த்திட ஹபீபு முகம்மதின் சலவாத்தோங்க
மிகவும் பறக்கத்துந் தறஜாலோங்க வேங்கை யலிப்புலி யாசாளுநாள். (525)

திமுசி லிருந்துதான் மாபியாவும் சிந்தை கலங்கியே மறுவானுடன்
அமுச மிகவுள்ள யெசிதவனு மழகா யிருந்தவ னாலோசித்தான்
மதிகள் மயங்கியே மாபியாவு மவுலுவா ரப்போ மறுவான்பாலிற்
புதியோ னலியிடம் போராடியே போன ரெழுபதா யிரஞ்சனங்கள். (526)

விதியின் காலத்தா லசனூர்வந்து விரும்பி யிழுத்தாரே யென்தாடியைப்
பதியின் சமரினிற் பட்டபாடு பகரக்கூடுமா மறுவான்மந்திரி
நிதிகள் திறைகேட்டு வருவாரென்று நினைவு கலங்குதே புவிமீதினில்
சதிகளாகவே யலியைக்கொல்லத் தந்திரங்களைச் சொல்மினென்றார். (527)

இந்த விதமாக மாபியரிவு மியம்ப மறுவானு மாலோசித்து
மந்திரம் செய்யும் ஹபசிகளை வாகா யழைத்துத்தான் மறுவான்சொல்வா
னெந்த விதத்தாலு மலியைக்கொன்று லிப்போ தொருகாத நிலந்தருவோம்
சிந்தை யுறுமெண்ணந் தனையோசித்தே செப்புவீரென்றான் ஹபஷிகள்பால். ()

மந்த்ர வாளிகள் பதினறுபேர் மனது சரியென்றே வரிசை வாங்கித்
தந்த்ர மாகவே மதினம்வந்து சங்கையாய் நின்று சோதியர்போல்
வந்தங் கலிபாலிற் பாடல்செய்து வாகாய் நிதிகளு மவர்கள்பெற்றுச்
சிந்தை தனிலேதான் கபடமெண்ணிச் சிறந்த மதினத்தி லிரிந்தாரப்போ. ()

ஒருநா ளிரவினில் மாந்திரிய ரொழுங்கா யொருபக்கம் தனித்திருந்து
மருவின் மலர்சூட்டி மஞ்சட்பூசி வரைக்கல் லாலொரு புத்துகானை
யுருக்கள் ஸ்தாபித்தே அலியிடம்போ யுடனே கொலைசெய்து வம்மினென்றார்
சருகு மலைக்கல்லுத் தரையில் வீழ்ந்து சற்று மெழும்பாம லிருந்ததப்போ. ()

தெய்வந் தனக்கெல்லா மலிமேலென்றுஞ் சிறந்த பதிவிட்டுத் திமிசில்வந்தே
துயரந் தனைச்சொல்ல மறுவானிடம் துத்தரி நீங்கள் போடாவென்றான்
வயண மாகவே மாபியாவு மறுவா னிடமிந் தாலோசித்துக்
கய்வ னொருவனை மதினம்விட்டு கக்க வலிதமைக் கொல்வமென்றே. (531)

## வேறு.

பூமியிற் பிரென்போனைப் புகலவே மாபியாவும்
நாமமே போதுமென்று நானிலச்சூரி தீட்டிச்
சாமெனும் பதியும் நீங்கித் தனித்தவன் மதினம்வந்தே
தாமித மின்றிவேளை தன்னைப்பார்த் திருந்தானப்போ. (532)

## தொங்கல்.

வந்தங் கிருத்தோனு மதினமீதில் வள்ள லலியுல்லா அகவலெல்லாம்
சிந்தை மனந்தேற வவனறிந்து திடங்க ளாகியே கல்பானது
மெந்த விடந்தனில் வருவாரென்றே யெண்ணி யவனுமே யிரவானதீற்
றந்த்ர மாகவே கபாடமுள்ளான் தனியோ னலிதுல்துல் கட்டிடத்தில். (533)

இருந்தா னிரவினில் வருவாரென்று மிலங்கு மலிப்புலி யவிடம்வந்தார்
திருந்து பதியுள்ள துல்துலது செருமிக் கனைத்திட அலியைப்பார்த்து
வருந்து தவத்தின ரிதையறிந்தே வந்தே யிருக்கிறான் திருடனேன்றும்
பொருந்தி மனதிலே அவர்நினைத்து பூராயங் கொண்டு பார்க்குநேரம். (534)

குதிரை யடிக்கடிக் கனைத்தசத்தங் குத்த மனம்வைத்து வந்தோன்பார்த்தே
எதுவு நமக்கில்லை யிரவிலென்றே யெடுத்தா னோட்டந்தான் திடுதிடென்றே
மதியி னழகான அலியாரண்ணல் வம்ப னிருந்தோடுந் தலம்பார்க்கையிற்
சதியன் தான்வைத்த சூரிகண்டு தாலத் தரசரு மெடுத்தேவந்தார். (535)

பதினெண் பாலர்க்கு மிதுசேதியைப் பகர்ந்தா ரலிப்புலி பொறுமையாக
விதியின் காலமோ இதுதானென்றும் விசன மிகவுற்றார் பாலரெல்லாம்
கெதியிலுயர்வாக துல்துலேறுங் கிருபை பொருந்திய அலியாரண்ண
லதிப ராகவுமரசிருந்தே யழகாய் ராஜாங்கம் நடத்துநாளில். (536)

கபட மாய்வந்த பேரென்போனுங் காரணஞ் சொல்ல மாபியர்க்குச்
சபமே நீபோடா நில்லாதென்று சாற்றின ரப்போ மறுவான்மந்திரி
கவன மாகவே மாபியாவுங் கபடன் மறுவானு மாலோசித்துப்
புவனந் தனிலுள்ள கிழவியாளைப் பிரிய மாகவே யழைத்தேசொல்வார்.(537)

ஆலந் தனிலுள்ள ஜாலக்காரி யைம்பத் தேழ்வய தானகள்ளி
கோல மிகவுள்ள வித்தைக்காரி குளிகை மருந்தினிற் போரானவள்
தாலந் தன்லொரு ஜாலஞ்செய்யத் தகுமாங்கிழவியென் றுரைத்தானப்போ
காலக் கிழவியு மிதனைக்கேட்டுக் கழறுவா ளப்போ மாபியாபால். (538)

எந்தன் மனம்போல வொருவரில்லை யெனது ஜாலங்க ளறிவாருண்டோ
சந்திப் பாகாத விள தாமரை க்ஷணத்தி லிணங்கவே செய்வேனின்னும்
வந்த பெயர்களை நிதிவாங்காமல் வையந் தனிலேதான் விடுவதில்லை
யெந்த மருந்துமே யென்கையாகுமெவித மானாலுங் கேட்டேனென்றாள்.(539)

ஈது மொழிகேட்டு மாபியாவு மிவளே யலிதமைக் கொல்வாளென்று
கோது மிகவுள்ள விருபேர்களுங் குழுவர் மருந்தாளி யிடத்திற்சொல்வார்
சோதிபெரியவ னலியார்தம்மைத் துணிந்து கொலைசெய்வாய்கிழவியென்றான்
ஜாதி ஹபஷிமா குலத்துநீலி சாற்றுவா ளப்போ விருவர்பாலில். (540)

ஈதோ வெனக்கொரு பாரமாகா வெண்ணி யுரைத்தீரே ராசர்கோவே
யேது வாகவே கொலைபுரிந்தா லெனக்குத் தருவதைச் சொல்மினென்றுள்
மாதே யலிதமைக் கொலைநீசெய்தால் வாகா யொருநாடிங் குனக்கீயுவோம்
சேதி யிதுபோது மகாராசரே செப்புவேன் கேளு பதியானதை. (5

பஞ்ச வர்ணம்போ லேழுபெண்கள் பார்கா யெனதிடங் கொடுக்கவேணு
மென்சொற் றவளும லேழுபேரு மென்னோ டடங்கையா யிருக்கவேணுங்
கொஞ்சும் படியான சிலம்புதண்டை கொடுப்பீர் மாதர்க்கே யாபரண
மிஞ்சொல் லாகவே யேழுடையி லிலங்கு மஷ்றபி கொடுத்தீராகில். (542)

கூடார மொன்று குறுசியேழும் குறிப்பாக வுள்ள வுயர்ந்தமெத்தை
நாடாள் ர்ரசரே கொடுத்தீராகில் நானே ரவிதனைக் கொலைபுரிந்து
தாடாண் மையுடன் வருவேனெனத் தருவீ ரொருநாடு வரிசைகளும்
சோடிப் பாகவே கொடுப்பீரென்று சொன்னாள் கிழவியு மனமஞ்சாமல். (543)

மறுவான் மாபியா விதனைக்கேட்டு மகிழ்ச்சி மிகவாகி மனம்பூரித்துத்
துரைதன் மகள்போல யேழுமாதர் துலக்க மாகவே தான்கொடுத்தே
யுரையின் யடியான கூடாரங்க ளொழுங்கா யதுக்குள்ள சாமானெல்லாந்
திரவி யங்களி லேழுடையும் சிறந்த ஆபரணமு மீந்திட்டார். (544)

சகல சாமானும் பரிமளமும் த்குந்த பற்காவி மிகவாங்கியே
ஜெகமேற் கிழவியாள் பேரிருக்கச் செய்து வருகிறேனென் தானென்றே
யகமுங் குழரவே கிழவியாளு மப்போ தேவழி தன்னிலாகி
யிகலைச் செய்திட நினைத்திவள்தா னிலங்கு மதினமா நகரம்வந்தாள். (545)

வந்து வாயிலின் கரையிலாக வாகாய் படங்குகள் மிகச்சோடித்துத்
சந்த்ர னதுபோலே யேழுபேர்க்கும் சகல வுடையு மிகவுஞ்சூட்டி
விந்தை யாகிய துயிலுடுத்தி விளங்கும் பற்காவி மணந்திமிர்ந்து
தந்திரஞ் செம்புங் கோலமெல்லாஞ் சாற்றினு ளப்போ தேழுபேர்க்கும். (546)

ஈது படிசெய்து மூன்றுநாளு மிருந்தாள் வாவியின் கரையிடத்தி
லேது வாகவே யவியினது துல்லிலங்கும் பரிப்பாகன் குதிரையோடும்
சீதம் பொருந்திய வாவிமீதிற் சிகுறன் தான்வந்தே மிகவேநின்று
பாத நாட்டியக் துல்துலுக்குப் பாணி யவன்காட்டி நிற்கும்போதில். (547)

சிறையி லாகின வேழுபெண்ணும் சிரித்தே யவர்களின் ஸ்தனங்காட்டிட
வறையி லிருக்கின்ற பகவதிபோ லன்ன நடைமாதர் மிகவிளங்கத்
துரையின் மகனென்றே பாகனெண்ணித் துயர மெனுங்காத லதையுட்கொண்டு
கரையின் படங்கோர மிருந்தகள்ளி கண்கள் சிமிட்டவே கிழவியாளும். (548)

வாரு மாப்பிள்ளை வாலிபரே வந்து போகுமென் றவளுரைக்கப்
பார்வை யதனுட குதிரைவிட்டுப் பாகன் தான்வந்தான் படங்கோரத்தில்
நேரி னேழுபெண் ணெதிரிலாகி நிமிஷந் தனிலே தான் கரம்பிடித்தே
சீராய்ப் பவுச்சுமே லிவனைவைத்துச் செப்புவா ரப்போ தேழுபேரும். (549)

இந்த ராச்சியம் புவிமீதினி லெங்கள் தனக்கேற்ற பார்த்தாயில்லை
யிந்த மழயகினைப் பார்க்கும்போதி லுரிமை யாகிய மயலாகினோம்
சிந்தை மனம்போல நடப்பீராகிற் றெரிவை யேழ்பேரும் பாரியாவோம்
சொந்த மாகவே யேழுடையின் துலங்கு மஷ்றபி தருவோமென்றார்

கண்டே யுமைவிட மனமில்லையே காலந் தனில்வந்த கணவனாரே
நன்றா யிரியுமென் றவன்மடிமேல் நாரியரை வைத்தே சரசஞ்சாட்டி
பண்டு பழகிய நாட்டம்போலே பத்தா யிவனென்றே முத்திகொண்டு [டே.
விண்டா ளமுதம்போல் மொழியானதை விரும்பினான் பாகன் காதல்கொண்

ஆந்த மயலாகப் பாகன்சொல்வா னருமை தானுள்ள பெண்மாதரே
யெந்தன் கண்ணாட்டி நீங்காளகு மெனக்கு மறுகெதி புவியிலில்லை
யுந்தன் மனம்போலே யானடப்பே னுயிரைக் கேட்டாலுங் கொடுத்திடுவேன்
சிந்தையினி லுள்ள விபரங்களைச் செப்புவீர்நீங்கள் பெண்டுகளென்றான்.(552)

பாச வலையினுள் ளானானென்று பகட்டி யவனைத்தான் பார்த்துச்சொல்வாள்
வாச மாகிய பெண்ணேழையு மணங்கள் சூட்டியே யுமக்குத்தாரேன்
காஜத் தாகவு மேழாயிரங் காசுந் தருகுவேன் பார்மினென்னத்
தேசந் தனையாளு மலிப்புலியைத் தீர்க்க மாய்க்கோலை செய்துவாரும். (553)

இந்த மொழிகளு மேதுக்கென்றா யியம்பத் தான்கேளு மருமகனே
யந்த அரசர்க ளிருக்கும்போதுங் கழகாய் மணஞ்செய்ய மனம்பொருந்தார்
எந்த விதத்தாலு மலிபுல்லாவை யியல்பாய்க் கொலையுரிந் திங்குவந்தா [றாள்.
லுந்தன் மனம்போலே மணங்கள்செய்தே யுதவியான் செய்வேன் கிழவியென்

பேதை யாள்சொன்ன வசனங்கேட்டுப் பிரிய மிகவாகிப் பாகன்சொல்வான்
ஈதோ பெரிதென் றிங்கெனக்கே சொன்னா யிப்போ தலியையுங்குத்திவாரே
னேதோ விணைசை யெனக்கோ நாம லேழு பேர்களு முறுதி சொல்வீர்
வீதந்தானென்று மனமெண்ணுவேன் விளங்கும் படியான பெண்களென்றாள்.

சமதா யுறுமொழி யிதுதானென்று ஜால மாகவே பெண்கள்சொல்வார்
நமது பத்தாவும் நீரல்லாமல் நமக்கு வேறில்லைப் புவிமீதினி
லுமது தலைமீதி லடிப்போமென்றா ரொருமை யாகவுந் தொடுவீரென்றா
னெமர்கள் பத்தாவிங் கிவர்தாமென்றே யேழு பெண்களும் தலைதொட்டாரே.

தரையில் மகிழ்ந்துதான் குதிரைப்பாகன் சந்தோஷக்கடல் தன்னில்மூழ்கிப்
பரியைப் பிடித்தவன் மனையில்வந்து பாங்கா யதைக்கட்டி யாலோசித்தே
அரியின் கதிர்போலே வெள்ளிச்சூரி யதனை மிகத்தீட்டிக் கூர்மையாக்கி
யுறையி லேவைத்துக் குதிரைப்பாக னுசாபித் திரிந்தன னோரிரவில் (557)

அலியு மவ்விராத் துயிலும்போதி லால முகம்மதர் கனவில்வந்து
நலமும் பெருந்திய மருகேசரே நானில வாழ்க்கை சரியானதாற்
றலங்க ளாகிய சுவனபதி தாங்கள் வரலாமென் றியம்புநேரம் [யே.
பெலங்கள் மிகவுள்ள அலியாரண்ணல் பெரியோன் தவக்கமலென் றெழுந்தேகி

வந்து மிகுருபி லுலுவைச்செய்து வாங்கு மொழியாமல் பஜர்தொழுதா
ரந்த நேரத்தில் வாசிப்பாக னவனின் மனதுதா னஞ்சிடாமற்
சந்திப் பாகிய ஸ—ஜ—தினிலே தன்கை யிருந்திடும் சூரியாலே
மந்த ரப்புயத் தலியுல்லாவை வன்மங் கொண்டுதான் தாக்கினானே. (559)

வழங்கி வயிற்றிடை யவணிழுக்க வயிறு மறுந்துபோய்க் குடல்சரிந்து
விளங்கும் விரிப்பினில் ரத்தசோரி வீறிட்ட டிக்கவே நதியூற்றுபொற்
றளங்கள் தனக்கெல்லா மரசரான ஸையி திறசூலின் மருகேசனூர்
வழங்கி னவனுரென் றேபார்க்கையில்வாசிப் பாகன்கண் மறையநின்றான்.(560)

பத்தி தவறாத முடிவேந்தரும் பாயி லவனைத்தான் சுருட்டிமன்னர் [தா
சித்தம் பொருந்தியே மறைவாய்வைத்துத் தியங்கி மயங்யே விருப்பிற்சாய்ந்
ரித்தகை யுள்ள வசனங்கேட்டே யிலங்கும் பாலர்கள் பதினெண்மரும்
சத்த மலறியே கண்ணீரோட்டித் தந்தைபால் வந்து புலம்பினூர்கள். (561)

## பதம்.

எங்கள் வாபா தங்கமேரே தங்கமேரே
என்ன செய்வோ மிப்பூமியில்
சங்கையான ரத்னமே ரத்னமே
நாயகத்தி னுயகமே
பாவியவன் மாபியாவும் மாபியாவும்
பாரிற்செய்த சூதிஃதோ
பொறுமையுள்ள புண்ணியரே புண்ணியரே
புன்மை வந்து நேர்ந்ததோதான். (562)

## தொங்கல்.

எங்கள் வாபாவே தங்கமேரே யிப்படிச் செய்த பாவியாரு
சங்கை யாகிய வாய்திறந்து தாங்கள் சொல்லுமெனப் பாலர்கேட்டார்
திங்கள் வதனத்தி னலிதாமப்போ சிறந்த அமுதவாய் திறந்துசொல்வார்
தங்க மயமான என்பாலரே தனியோன் விதியினுல் நடந்ததிப்போ. (563)

விருப்பின் சுருளுக்கு ளிருக்கிறுனவன் விசனப் படுத்தாமல் விடுமென்றோத
மருவின் மலர்வாசர் வசனம்போலே வாசிப் பாகனைத் துரத்திவிட்டார்
தரையி லரசான அலிப்புலியார் தமது மக்களுக் கொசிய்யத்தோத
விறையோ னருள்தங்கு மென்பாலரே யியம்பக் கேளுங்கா ணவமணியே(564)

என்னது மகவான ஹறசனுசைனே யோர்கொள் மதினுவி லரசாளுவீர்
மனதே கலமுள்ள மணிவிளக்கே முகம்ம தனிபாவே சொல்லக்கேளு
முனக்கா யெனதுட லுல்துலுட னுதய கதிர்வாளு மீந்து விட்டேன்
தனதா யெமன்றேயங் தனிலேகியே தகுத்தி லிருந்துநீ யரசாளென்றூர்.(565)

உமறு ஜகுபறேயென்பாலரே யுங்க ளிருவர்க்கு மகரிபூரைச்
சமதாய்க் கொடுத்தன னிருபேருக்கும் தகுத்தி லிருந்துநீ யரசாள்குவீர்
தமது மகனுன பதினெண்பேர்க்கும் தகுத்தி லிருக்கவே வசிய்யத்தோதி
நமையாள் பவனுட கிருபையென்று நாத ரலிமக்க ளிருக்கும்போதில். (566)

மதினங் தனிலுள்ள முசிலிமெல்லாம் வந்தே யலியுல்லா வருத்தங்கண்டு
சதிகள் செய்திடும் மாவியாவுங் தங்க மகமேரே நாயகமே

பதிகள் தனையாளு மணிவிளக்கே பாரி லனையோர்க்கும் தர்மவேந்தே
உதவி யாருண்டும் தீனோர்க்கெல்லா முலக மீதிலைன் றழுதாரரோ. (567)

அன்ன காலேயி லலிப்புலியா ரருளுவா ரந்தத் தீனோர்க்கெல்லா [ன்று
மென்னு முகம்மதைப் போற்றிநீங்க ளிறையோன் வணக்கங்கள் செய்மினெ
நன்னிலை யாக நடந்துபூவில் நல்லோர் ஸதக்காவும் கொடுத்துவம்மி
ன்னு ளுமையாவுக் கிடங்கொடாம லிருந்தால் பறக்கத்துப்பெறுவீரென்றார்

இன்ன மென்னையுங் குளிப்பாட்டியே யிதமாய்க் கபனிட்டு மணந்திமிர்ந்து
மின்னும்படியான பேழைமீதில் மேலோ னருளினு லென்னைவைத்தே
யென்றும் பெரியவன் குதறத்தாலே யிலங்கும் ஹசனாரு முன்னேநிற்கப் [றார்
பின்னு லனைவரு மொழுங்காய்நின்று பெரியோன் தனக்காகத் தொழுமினென்

கண்ணின் மணியான வென்வாலரே கதிரி னழகான பேழைதன்னை
விண்ணோர் போற்றிய கோபுக்காவில் மேலாய்த் தான்வைத்து வருவீரப்போ
மண்ணோர் நிலத்தினில் வருகும்போது வழியைத் திரும்பியே பார்த்திடாதீர்
திண்ண மனமீதி லிருக்கவேணுந் திரும்பினாற்பெலன் கிடையாதென்றார் (570)

அன்ன வலிப்புலி யார்தாஞ் சொல்ல வாண்டோ னருளிதென் றிருக்குநேரம்
தன்னார் கலிமாவு மிகவோதியே தாலந்தனைவிட்டுப் பதவிசேர்ந்தார்
நன்னிலை யுள்ள பாலரெல்லாம் நல்லோ ருலுவுடன் கலிமாவோதி
மின்னுங்கதிர்மேனி யலியிலாவை மேலோன் கிருபையாற் குளிப்பாட்டியே.

அந்த நேரமே கபனுமிட்டங் கதிக பரிமள மிகத்திமிர்ந்தே
சந்த்ர னழகான தயாபரரைத் தால மீதுநற் பேழைவைத்து
வந்த முசலிம்க ளொழுங்காய்நிற்க வள்ளல் ஹசனாரு முன்பிலாகிச்
சிந்தை யுவப்பாகத் தீனோரெல்லாம் சிறந்த தொழுகையு மானபின்னர். (572)

சங்கை யாகவே சகலபேரும் ஷஹாதத் தோதியே யிறையைப்போற்றித்
திங்க ளழகான பேழைதன்னைச் சிறந்த வணக்கமா யெடுத்தேகியே
சிங்கப் புலியலி மணிவிளக்கைச் செகத்திற் கோபுக்கா மேலமேல் வைத்துச்
சங்க மாகவே தீனோரெல்லாந் தாரைநோக்கியே வருகும்போதில். (573)

வந்த வரத்திலே குசைனார் வள்ளல் வழிகள் திரும்பியே பார்த்தாரப்போ
தந்த நேரமே சகலோர்களு மாயாச முற்று மனையில்வந்தே
யிந்தக் காரண மனதிலெண்ணி யிலங்கு முசைனாரே திரும்பிப்பார்த்தீர்
கந்த ரப்புயத் தரிசிம்மேறே காரணங் கண்ட வகையேதென்றார். (574)

முந்தியோர் முசிலிம்கள் கேட்கும்போது முகம்மது நபிபேரர் சொல்வார்
மதிபோ லழகுள்ள தந்தையரை வானோர் தூக்கியே யேகினார்கள்
இதுவே காரண மறிந்தேனென்று றியம்புவா ரப்போ சகலோர்களும்
விதுவி னலிபெல னிவருக்கில்லை விளங்கும் பெரியவ னருளிதென்றே. [து

இருந்தங் கனைவோரு முகப்பதாக விறையோன் தனைப்போற்றிச் சடங்குசெய்
பெருகுந் தவத்தின ரனைவோர்களும் பெரியோன் கிருபையால் மனைகளானு

ரருந்தவ முள்ள அலிதம் பால ராயாசத்துட னிருக்கும்போதில்
மரங்கள் போலவே வாசிப்பாகன் மதின மீதெல்லாந் திரிந்தலைந்தான். (576)

இத்த கையுடன் மனங்கலங்கி யியம்பி வருவானே தெருவீதியிற்
சத்தியம் செய்த கண்ணாட்டிமார் தயங்க நமைக்காண துறவாரென்று
சுத்த மாகவே விழியில்லாமற் றுயரப் படுகின்றேன் றனீமேயென்று
மெத்த வாயாச மாகிப்பாகன் வீதிக்கு வீதி திரிந்தலைந்தான். (577)

ஈது படிநிற்கக் கிழவியாளு மேழு பெண்ணையு மழைத்தேகியே
கோது மிகவுள்ள மாபியாபாற் குலுங்கச் சிரித்தவள் முன்னால்நின்றே
ஏது வாயினு மலியைக்கொன்றே யிவ்விடம் யான்வந்தேன் மகாராஜரே
மாதர் தமக்கான நிதிகள் தூசும் வையந் தனிற்றருரு நாடுடனே. (578)

அம்மையார் சொன்ன வசனங்கேட்டே யகவல் தனையெல்லாம் விளங்கிமன்னர்
செம்மையாகவே கொலை புரிந்தாள் ஜெகத்தி லிவளைப்போல் கிடையாதென்றே
யிம்மாத்திரமோச மலியைச்செய்தா ளிதுபோலினிமேலும்நமையுஞ்செய்வாள்
சும்மா வுயிராய்நாம் விடில்நமையுஞ் சுருட்டுவா ளிந்தப் புவிமீதிலே. (579)

பாரா மிகவைத்தே சிறைச்சாலையிற் பசியாம லன்னங் கொடுமினென்றார்
நேரா மிகநிற்கும் காவலாளர் நிமிஷந் தனிலேதான் கிழவியாளைப்
பூராய்ச் சிறைச்சாலை தனிலடைத்துப் புதியதோர் காவல் தானுநின்றார்
வீரா யிருந்திடு மனம்போலவே விரைவின் மலர்புயத் தலியும்போனார். (580)

இனிமேல் நமக்கென்ன பயமொன்றில்லை யெல்லாத் திறைகளும் நமக்கேயாகும்
கனிவாய் மறுவானை முன்னே வைத்துக் கனகநிதிகளு மிகவளித்து
நனியின் பெண்மாத ரேழுபேர்க்கும் நாக ரீகமாய் வரிசையீந்து
கனிய் மாச்சுது நமக்கேயென்று கருத்தில் நினைந்தவ னிருக்குநாளில்.

---

## ஹசன் றலியல்லாகு அன்கவர்களின்
## அரசு நிலை.

ஆதி யருளுற லலிபாலர்கள் யாரு மகத்தினி லிருக்கும்போது
நீதம் பெருகவே ஹசனாருக்கு நிலத்தில் முடிசூட்ட வவர்களெண்ணிப்
பூதல முள்ள வரசர்க்கெல்லாம் பிரிய மிகவாக வெழுதிமன்னர்
தூத ரிடத்தினிற் கொடுத்தனுப்பத் துலங்கு மரசர்கள் மதீனம்வந்தார். (582)

புத்தியோ னருளினாற் சகலபேர்க்கும் புகழ்சேர் விருந்துகள் மிகவுஞ்செய்தார்
மதின மாநகர்த் தெருவீதிகள் மலர்கள் வாசங்கள் கமகமென்ன
வதிப ராகிய அலிதம்பால ரசனார் தமைமஞ் சனமாட்டியே
கதிரி னழகான துகில்புனைந்து கஞ்சுகி மாலை கதிரிலங்க. (583)

புவியில் முகம்மது கணையாழியைப் புருட ராதிபர் விரலணிந்து
திவிய மாகிய குடைநிழற்றச் சிறந்த முசிலிம்கள் கட்டியங்கூறக்
கவியின் வாணர்க ளுவந்துபோற்றக் கதிரால் வட்ட மிகத்துலங்கக்
குவலய முள்ள வரசர்வாழ்த்த கூறுல் ஹீன்களும் ஆமீன்கூற. (584)

ஹபீபு முகம்மது சலவாத்தோங்கக் கருதலா ரெல்லாம் நடுநடுங்கத்
தவங்கள் வளர்ந்தேறப் புவிமீதினிற் றர்ம தானங்கள் மிகவுண்டாகப்
புவனந் தனிலுள்ள தீனோரெல்லாம் புகழ்ச்சி யாகிய வாழ்வுண்டாக
நபிகள் நாயகர் பேரரான நாத ரசனாரும் தவசிலானார். (585)

பருந்து மஞ்சுகம் பொருந்திவாழும் பசுவும் புலியுமோர் துறைநீருண்ணும்
அருந்த வங்களும் பெருகிநிற்க அசனார் வள்ளலின் ராஜாங்கத்திற்
பொருளும் துயில்களு மிசிக்கீன்கள் பாற்போ தரவுடன் கொடுக்கலாலே
வருந்துந் தவங்களும் செல்வமோங்க மகிழ்ச்சி பெருகிய வாறுபோலே. (586)

திங்க ளழகான பள்ளிவாசர் சிறந்திங் கிலங்குமங் கலக்குடியி
லெங்கும் புகழோங்கும் நபிநாயக மிறசூல் சரீ அத்தை மறக்காதவன்
செங்கை பொருந்திய வரப்ரசாதன் தென்னான் முகம்மது மீரான்துரை
சங்கை பொருந்திய தவத்தால்வந்த தரணிமேல் முகிதீன் பிச்சையென்போன்.

இராச மணிமாலை யுரைசெய்வோர்க்கு நன்கொடை செய்த மகிழ்ச்சிபோலே
பாரில் முமம்மது நபியைப்போற்றிப் பலனும் பாக்கிய மிகவுண்டாகி
நேர்மை யாகவே தீன்துலங்க நிலத்திற் புகழோங்கி மதிபோலாகக்
கார்மைக் குடையிடு நபியிரசூல் ஹபீபு முகம்மதின் கிருபையாலே. (588)

மார்க்கம் நெறி நீதம் பெருகிவாழ்க வணக்க மிகுருபில் மிகவுண்டாக
வேற்கை யாகவே யுலகமெங்கு மிசுலாந் தழைத்துத்தான் வளர்ந்தேறவே
யார்க்கு நலத்தோரா யரசிருந்தே யசனா ரிராஜாங்கம் நடத்தும்நாளிற்
றீர்க்க மாகவே யலிசொல்லிடுஞ் சிறந்த வசிய்யத்துப் போலாகவே. (589)

அலியா ரருள்மக்க ளனைவோர்களு மவரவர் தேசந் தனக்கேகியே
நலங்கள் வளர்ந்தேற வரசிருந்து நானி லந்தனி லிருக்குநாளிற்
றலத்தி னுயர்வான மதினமீதிற் சங்கை பொருந்திய ஹசனார்வள்ளல்
அலங்கல் வாசனை கபகமென்ன வரிய ராஜாங்கம் நடத்துநாளில். (590)

மந்திரி மார்களை வரவழைத்து வழுத்துவா ரப்போ தலிமகனா
ரெந்த வரசர்கள் திறைகொடுத்தா ரெவர்கள் தாமதம் செய்தாரென்ன
இந்த நேரமே யெனக்கெடுத்து யியம்புவீ ரென்று சொன்னாருட
னந்த நிமிஷமே கணக்காசார மருளுவா ரப்போ விபரமாக. (591)

எந்த ராஜரும் குறைவில்லாம லிலங்குந் திறைகட்டி வருகிறார்கள்
விந்தை யாகிய கிமுசுமீதில் விளங்கு மாபுயா திறைகொடாமற்
றந்த்ர மதுசெய்தே நிதிகளெல்லாம் சமர்த்தாய் வைத்தங்கே யிருக்கிறானென்
றந்த வரலாற்றை யிப்போதிலே யருளக் கேளுங்க ளரிசிம்மேறே. (592)

மதியி னழகான நபியிறசூல் மன்ன ரபூபக்க ருமறு துமான்
பதிகள் தனையாண்ட ராஜங்கத்திற் பகுதி கொடுத்தாரே மாபியாவும்
கதிரின் திருமேனி யலியுல்லர்தம் காரண முள்ள ராஜாங்கத்தி
லெகிரி யாகவே பெரிதாகிய விகலுண் டாக்கியே சமர்க்குவந்தார். (593)

பொருத முடியாமற் மாபியாவும் போற்றி யலிமன்னர் போனநாளாய்
வருஷம் பனிரெண்டுங் கணக்கதாக மாபியா திறை யளர்ந்தாரில்லை
பொறுமை யாகவு மலியிருந்தார் புகழ்சேர் மணிமுத்து நாயகமே [னார்.
உரையின் படியாக நடப்போமென்றே யொழுங்காய்த் தானின்று கணக்கோதி

அன்ன ஹசனாரு மிதனைக்கேட்டே யவர்தங் கரத்தினா லெழுதலானார்
மன்ன ராகவே திமுசிருந்து வாழும் படியான மாபியாவே
யின்னாட் பனிரெண்டு வருஷக்கால மெங்கள் தமக்குநீர் திறைகொடாம
லென்னவித மெண்ணி யிருக்கலாநீ ரியல்பு சரியல்ல வுமக்குத்தானே. (595)

இந்த நிருபத்தைப் பார்தட்சண மெங்கள் திறைப்பண மனுப்பவேணு
மந்த நாளென்று நினைத்தீராகி லமர்செய் துமையானும் வாளால்வெட்டி
விந்தை யாகிய மறுவானுடன் விளங்கும் பருந்துக்கே யிரைகொடுப்பே
னுந்தமுளவெண்ணந் தனைமறந்தே யுடனே பகுதியையனுப்புமென்றே. (596)

எழுதி ஹசனாரு மடித்துத்தூத ரிடத்திற் கொடுக்கவே கரத்தில்வாங்கிக்
குளிர்ந்த மலர்ச்சோலைக் காவுநீங்கிக் குவலயத்துள்ள திமுசேகியே
தளரின் மலர்க்கரத் தசனார் தூதன் சார்ந்தார் மாபியா சமுகமீதில்
வழுவின் மறுவானு மிறுக்கும் நேரம் வரைந்த நிருபத்தைக்கொடுத்தாரப்போ.

மாபியாவுடன் மறுவானுமாய் வாங்கி வாசித்து மனங்கலங்கிப்
பூவில் விசனங்கள் மிகவுண்டாகிப் புகலுவா ரப்போ மாபியாவும்
கோபமாகவே நிருபரும்வந்தாற் கொடுப்பதில்லை யானும் பகுதியென்றார்
தாமத மின்றித் தூதுவரும் தாக்க லறிந்துதான் மதீனம் வந்து. (598)

சொன்னா ரிதுசேதி ஹசனார் பாலிற் றுய்ய வரசரும் கோபமாகி
யுன்ன காலையி லசுஹாபிமார் ஆயுதம் பல பரிசை தாங்கி
மின்னுங் கதிர்வாளும் பளபளென்ன வேகப் பரியேறி ஹசனார்வள்ளல்
மன்னர் படைமுப்ப தாயிரங்கள் வாரிபோலவே யெழுந்தாரரோ. (599)

மண்ட லங்களும் கிடுகிடென்ன வாரி யதுபோலே படைநடக்க
செண்டாக் கொடிகளும் சிறந்திலங்கத் திடுதி டென்னவே யந்தரந்தாவி
யண்ட மதிரவே பேரிமுரா சடித்துப் படையோடும் சாமூர்வந்து
தண்டா யுதக்காரர் பலர்கள் சூழத் தானை பதாதியோ டிறங்கினாரே. (600)

வந்தங் கிறங்கியே படங்கடித்து வள்ள லசனாரு மிருக்கும்போதி
லிந்த வரலாற்றை மாபியாபா லியம்பினாரப்போ வுமையாக்களும்
அந்த மொழிகேட்டு மறுவானிட மருளுவா ரப்போ மாபியாவு
மெந்த மதிகணா யான்சொல்லுவே னிலங்கு மகனார்தம் கோபங்கேளீர்

முன்னாட் சமரிலே யலிமகனார் முதியோர் வயதென்று மெனையெண்ணாம
லென்னின் தாடியைப் பிடித்திழுத்தே யிதமாய்க் கொலைசெய்யத் தானினைந்தா
ரன்னே ரந்தனி லலிசொல்லாட்டா லறுப்பார் கழுத்தையு மனந்துணிந்தே
யின்ன மதுபயம் நீங்கிலையெற் கிப்பால் ஷாமூர்க்கு வந்தாரென்றார். (602)

ஆனால் மறுவானே சொல்லக்கேளு மசனார் தமைப்போற்றி யெதிரிலாகித்
தீனோர் தமக்கெல்லாம் விருந்துசெய்து சொல்லும் படியான திறையைக்கட்டி
நானாய் வருவது நலமென்றெண்ணம் நாடு தெனக்கிப்போ தென்றாரவர்
தானா யோசித்த மதியாசாரம் தாங்கள் நடப்பீரென் றுரைத்தானவன். (603)

திமுசி விருந்துதான் மாபியாவுஞ் சிறந்த கரிபரி சேனைதள
மமுசா வெழுந்திட முரசடித்தே பரிமேல் மாபியா தாமேறியே
குமுச மிலங்கிய சாமூர்வந்து குதிரை தான்விட்டுக் கீழிறங்கி
யுமையா குலத்தோர்கள் மருங்குசூழ் வோர்மை யாகிய வணக்கத்தோடும். ()

முத்து மரகத மாணிக்கமு முன்பால் மிகவைத்துச் சலாமுஞ்சொல்லி
யெத்திசை யாளும் ராஜர் கோவே யெங்களுட குற்றம் பொறுத்தாளுவீர்
வெற்றி மிகவுள்ள நாயகமே விளங்கும் திமுசுக்குள் வாங்கவென்னப்
பக்தி யுடன்யானும் விருந்துசெய்து பனிரண்டாண்டுக்குந் தருவேனென்றார்.

ஈது மொழிகேட்ட யசனார்வள்ள லெழுந்து படையுடன் முரசடித்தே
யேதுவாகவே திமுசில்வந்தா ரிருக்குந் தெருவெல்லா மலங்கரித்தார்
நாதர் தான் வந்து படையினோடு நல்லோர் மதிசிம்மா சனமிறங்கி
நீத ரிருக்கவே மாபியாவும் நேர்மை யாகவே விருந்துவைத்தார். (606)

விருந்து செய்வித்தே சகலோர்களும் விதவித மான நடபாகமும்
பொருந்தும் படிசெய்து மாபியாவும் புகழ்சே ரசனாரு மிருக்கையிலே
அருந்தவ முள்ள அலிமகர்க்கங் கழகார் மாபியா விசிறிவீச
மறுவா னெசீதுமே வணங்கிநின்று வானின் கதிர்வெண்சா மரையிரட்ட. ()

இந்த விதமான பணிவிடைக ளியல்பா வியற்றியே நிற்கும்போதில்
அந்த நேரத்தி லசனார்வள்ள லருளுவா ரப்போ மூன்றுபேரு
மெந்தப் பணிவிடை நீங்கள்செய்து மெனதுமனமெண்ணுங் கருத்தைக்கேளீர்
இந்த நாளினி லுமையாக்கூட்ட மிருத யந்தனில் வஞ்சரென்றார். (608)

சொல்லு மிதுமொழி செவியிற்பாய்ந்து துயரந் தானாகி மாபியாவும்
நல்லோ ரசனார்தம் பாதம் போற்றி நவிலுவா ரப்போ மூவர்களும்
எல்லாப் பிழைகளும் பொறுக்கவேணு மெங்கள் தனைரட்சித் தருளவேணும்
அல்லா தனக்காக நவமணியே யரசருட கோபம் சுக்கூறுசெய்வீர். (609)

முத்து மணியான ரத்தினமே முஹம்ம தெனும்நபி போனாரே
சத்தம் போலவே பனிரெண்டாண்டு திறையும் செலுத்துறே நவமணியே.
யெத்திசை போற்று மரசேயென்றங் கெடுத்துக் கணக்கிட்டு வஷறபிகள்
சுத்த வெண்பத்தி நாலுலட்சம் துலங்குங் காசுகள் தெறுவிலேற்றி. (610)

முன்ப தாகவே மூன்றுலட்ச மூவர்தாம் வைத்தே யுரைசெய்தார்கள்
அன்ப ரேயுங்கள் பாதம்நோக அலைச்சல் நாம்வைத்த படியினாலே
முன்பால் வைத்திடு மூன்றுலட்ச முமையா கொடுக்கின்ற அபராதங்கள்
தன்பால் ரட்சித்தே யருளுமென்று சங்கை யாகவே தொறுவிலேற்றி. (611)

அண்ண லசனுரைப் போற்றிவாழ்த்தி யனுப்பவே யப்போ மாபியாதான்
மன்ன ரசனும் படைகளோடு வந்து மதினமா நகரஞ்சேர்ந்தே
யெந்நாளு முள்ள பைத்துல்மாலி லிலங்குந் திறையதைச் சேர்த்துவள்ளல்
கண்ணகன் ஞாலத் தரசர்போற்றக் கதிர்ச்சிம்மாதனந் தனிலிருந்தார். (612)

தலங்கள் தனையெல்லா மரசாளும்நாள் சகல தீனேரு மகிழ்ச்சியானார்
நலங்கள் மிகவுள்ள முஹியித்தீன்பிச்சை நன்கொடை செய்த பறக்கத்தாலே
யிலங்கை யாபார முயற்சியாகி யிறையோன் கிருபையாற் புவிமீதினிற்
குலங்கள் கோத்திரம் பெருகிவாழ்கக் குதாயே கிருபைதான் செய்குவாயே. ()

நபியா முஹம்மதின் சலவாத் தோங்க நாத ரரசசாளு மந்நாளிலே
புவியி லிருக்கின்ற மாபியாவின் புதல்வ னெசீதவன் மதினம்பார்க்கச்
செவிதா யவனுமே பரியிலேறிச் சிறந்த மதினமா நகரம்வந்தே
குமூச மிலங்கிய தெருக்கள்தோறும் குரகதம் விட்டே சுற்றிப்பார்த்தான். ()

மின்னும் படியான மணிகுயிற்றி விளங்கும் படியான மேன்மாடத்திற்
பொன்னிமுடிபோல முகமிலங்கப் பெண்ணு ளொருமாதை யவனுங்கண்டே
மன்னுங் காமத்தால் மிகவாடியே மயங்கித் தியங்கியே பேதகமாய்த்
தன்னுறபயமுற்று மனங்கலங்கித் தனது திமூசுமா நகரம்வந்தான். (615)

வந்தவ் வெசீதவன் மயல்நினைவால் மருந்தில் லாநபிணி யதுதான்கொண்டு
தந்த தாரையாய்க் கண்ணீர்விட்டுத் தளம்பி யடிசிலு முண்ணுமலே
சிந்தை கலங்கியே விரிப்பிலாகித் தீர னெசீதுமே படுத்திருந்தா
னெந்த விதமென்று மாபியாவு மிருதயம் வாடிப் புலம்பினரே. (616)

## பதம்.

மயக்க மென்னமகனே மயக்க மென்னசுதனே
மயக்க மென்ன மயக்கமென்ன வாஞ்சனையின்
மகனே யெசீதே மயக்கமென்ன.

தஞ்சமெனக் காரு தாலந் தனின்மீதே
என் செய்குவேன் பாலா வென்கனி யின்சீலா
வென்கனியே மகனே யெசீதே யென்ன பிணியுனக்
குள்ளதோ மயக்க மென்ன.

மிஞ்சுதேடா நோவு மேனி யதின் மீதே
அஞ்சுதேடா தேகம் ஆரிடத்திலோத
யாரிடத்தில் யான் சொல்லுவே னருமையுள்ள
மகனே யெசீதே மயக்கமென்.

தந்தை முகம்பாராய் தன்மைதனைத் தீராய்
சிந்தை துயர்தீரச் செல்வனே யென்பாலா
செல்வமுள்ள யென்சுதனே அருமையாய்
தெளிவுடனே முகம் பாராய்.

சந்திரன்போல் மேனிதான் மிகச் சோம்பி
அந்தஸ்துகள் மயங்கிய யன்ன மூணவின்றி
அன்னம் புசியாமலே நீ அயர்ந்தவித
மெனக் குரைசெய் மயக்கமென்ன-

## தொங்கல்

புலம்பி மாபியா வழுகும்போதிற் புண்மை மிகவான யெசிதவனும்
நல்லன்க ளுரையாமல மனங்கலங்கி நடுக்கந் தாளுகி யவனிருந்தான்
தலங்கள் மீதுள்ள பண்டிதரைத் தாளு யழைத்துத்தான் கைபாரென்றான்
கலங்கள் மிகவுள்ள வெசிதுதாதை கண்ணு ளிகள்பார்த்தே யுரைசெய்வாரே.

நாட்டும் பிணியல்ல மகராஜரே நாடுங் கருத்துள்ள பிணியானது
கேட்டே யிவருட மனம்போனீந்தாற் கெடுதி செயும்நோவு விலகுமென
வாட்ட மிகவுள்ள மகனைப்பூர்த்து வழுத்துவா ரப்போ மாபியாவு
மாட்டுங் கருதினே வெளியாகவே மவிலு மகனேநீ யெசிதேயென்றார். (618)

ஏது மொழியதே யெசதுரைப்பா னெனது தந்தையே மகராஜா
நீத மிகவுள்ள மதினமீதில் நேர்மை யாகநான் வருகும்போது
சீத மதிபோலு மொருபெண்ணுளைச் சிறந்த மேன்மாடந் தன்னிற்கண்டேன்
மாதை மனஞ்செய்தா லெனதுபிணிவாங்கு மோட்டமென் றவனுரைத்தான்.

அந்த நேரமே மாபியாவு மஸறபீக் காசு தொருவிலேற்றி
வந்தார் மகனைத்தான் பரிமேல்வைத்து மதின மாகிய காண்பியென்றார்
அந்த மொழிகேட்டே யெசிதுப்பாவி யப்துல் லாவின்மா மனையாள்தன்னை
யிந்தக் குயிலென்றே தானுரைத்தா னியமபினு ரப்போ மாபியாவும். (620)

எந்த னருமையி னப்துல்லாவே யான்சொல்லும் வார்த்தை கேள்மினென்ன
வுந்தன் மனையாள்மே லெனதுபால னுமைதா னுள்ள காதலாகிச்
சந்த்ர னழகான மேனியெல்லாம் தயங்கி மயங்கிறு னெனதுபால
னிந்த வஷறபி தொறுவுடனே யினுமா யெடுத்துநீர் மனையில்வைத்து. (621)

இப்போ துமதுட மனைவியாளை யியம்புந் தலாக்கென்றார் மாபியாவும்
அப்போசரியென்றேயப் துல்லாதா னஷறபியுடன் தொறுவும் பெற்றே (த்தே
தப்போ துரைபேசும் குயில்மொழியைத் தலாக்குந்தான்சொல்லி யவளைப்பார்
எப்போதுஞ்செல்வ முனக்குண்டு நீயெசிதி னிடத்திற்போய்வாழ்ந்திரென்றார்

இத்தகை யுள்ள வசனங்கேட்டே யிளமா துரைசெய்தாள் கணவனார்பால்
தத்துவ மில்லா மதிகேடரே தலாக்கிங்கேன் சொன்னீர் புவிமீதினிற்
பத்தி யடனுகும் குறைஷிக்குலம் பாரி லுமையாவின் குலத்திலேகச்
சுத்தப் பயித்தியம் பிடித்ததாலே சும்மா வெனைநீங்கி விலகுமென்றீர். (623)

ஈது மொழியெல்லா மாபியார்பா லியம்பினு ரப்போ தப்துல்லாவும்
வாது வருமென்றே யவறிந்து வழங்கு மஷறபித் தொறுவுடனே
ஏதுவாகவே எசிதைக்கூட்டி யெழுந்து திமுசுமா நகரம்வந்து
மாதி லழகுள்ள வொருதோகையை மகனு ரெசிதுக்கு மணமுடித்தார். (624)

ஈது படிநிற்க மூன்றுந்திங்க ளிறையோ னலிமகருசைனர்வள்ளல்
நீதி மயில்மாது வசனங்களை நேர்மை யறிந்துதான் மணமுடித்தார்
நாதர் மணஞ்செய்த விபரந்தனை நாடு மெரிதவன் காதிற்கேட்டுப்
போதர வுள்ள மாபியாபால் புகலுவா னப்போ தெசீதுப்பாவி. (625)

முன்னு ஞசைனுரும் நானுமாக முறையாய்ப் பரிவிட்டு வருகும்போதி
லென்னின் பரியது முந்தலாலே யிவர்கண்டரிதாளை யிழுக்கசசொன்னர்
தன்னுற் பரிதன்னை முன்னேவிட்டுச் சகர்வான் தனையுமே மணமுடித்தார்
இன்னுளெனக்காகத் தலாக்குசொன்ன விளமான் தனையுமே நிக்காகுசெய்தார்.

என்ன காலமோ விருவருக்கு மிகவிப் பாகவே யிறைவகுத்தான்
பின்னு லறிகிறே னவர்சமத்தைப் பேதக மில்லா தெசீதுவம்பன்
மன்னரே பாவா அறிவீரென்று மறுவா னிடத்திலு மிகவாய்ச்சொன்னு
னன்ன காலையில் மாபியாவுக்காய்சங் கண்டே விரிப்பிற்சாய்த்தார். (627)

ஆதி விதியினுற் பிணிகண்டுமா வவஸ்தை யாகவே வருத்தமுற்றுச்
சேர்தி பெரியவன் பண்பிலாகிச் சுவன பதவியும் சேர்ந்தாரப்போ
மாதர் மனையுள்ளோ ரழுதுவாட மகனு ரெசீதுமே கண்ணீர்ரோடச்
சாதி யுமையாக்கள் வந்துகூடிச் சனுசாக் குளிப்பாட்டிக் கபனுமிட்டே. (628)

கந்தம் பரிமள மிகத்திமிர்ந்து கலிமா ஷஹாதத்து மோதியுயர்
சந்தூக் கினில்வைத்துச் சனங்கள் தூக்கிச் சார்ந்தே யோரிடங் தனிலிறக்கி
யெந்த முசிலுமூ முவப்புமீறி யிலங்கும் ஜனுஸாவைத் தொழுதபின்னர்
சிந்தை யுறுந்தவ மாபியாரைச் சிறந்த புகழச்சியா யடக்கஞ்செய்தே. (629)

வந்து மனைமீதிற் சகலோர்களு மாபி யார்க்குள்ள சடங்குசெய்து
சொந்த மாகிய யுமையாகூட்டந் துர்ரெணங் கொண்டே யாலோசித்தார்
விந்தை யுறுமென்ன மறுவானுடன் மேவிக் குலத்தார்க ளொன்றுசேர்ந்தே
யிந்த நேரமே யெசீதுக்குத்தா னிலங்கு முடிசூட்டத்துலங்கினுரால். (630)

பூவி லெசீதையும் நீராட்டியே புதிய துயிலாடை யங்கிசேர்த்துச்
சோபித முள்ள மகுடஞ்சூட்டித் துலங்கு மணிமுத்து மாலைபூட்டி
பாவித மாக மடமாதர்கள் பாங்காய் வீசிடக் குடைநிழற்ற
நாவா லுமையாக்க ளுவந்துவாழ்த்த நவ்வுரி பேரிகை பிடிமுழங்க. (631)

வந்தங் கிருந்தானே கொலுமீதினில் மாபி யாமகனெசீதவன்தான்
விந்தை யாகிய மறுவானுமே விமலன் சமுகத்தின் மந்திரியா
யெந்த மதிகளு மெசீதுக்கோதி யிருந்தான் வினையனுங் திமுகமீதி
லந்த நாளினி லுமையாவெல்லா மவன்ற னிடமாக வுவப்பாயினுர். (632)

ஈது படிநிற்கத் திமுசூரிலே யெல்லா விபரமும் ஹாஷிமோத
நாத ரசனுரு மிதையறிந்து நலங்க ளாகவே யொருகடிதம்
நீதியாய்த் தீட்டி யெசீதுக்கா நிலத்தி லரசாளும் சூமனேக
மேது வாகவே திறைபளக்கா திருப்பது துனக்கழகல்லவே. (633)

வருஷந் தானாச்சு திறைத்தொகையை வாகா யனுப்புமென் றவரெழுதிக்
கரத்தால் வகுத்ததில் மொகரும்வைத்துக் காதிம் பாலினி லனுப்பிவைத்தார்
மரத்தோ ளிடத்திலே கடிதமீய வாங்கி வாசித்துப் புகலும்சொன்ன
னறத்தோ ரிடம்வந்து தூதரோத ஹசனார் படையுடன் சாமூர்வந்தார். (634)

எழுந்து சாம்நகர்க் கசனார்வந்த வியல்பி தனையெல்லா மெசீதறிந்து
களிறு பெறுங்கேணி விழுந்ததுபோற் கலங்கி மறுவானு மெசீதவனும்
வழியி லெதிர்காண்க வேணுமென்றே மதியில் யோசித்தேயிருபேர்களு
மெழிலா யஷரபியேழுலட்ச மிலங்குந் தொறுவேற்றி யலங்கிர்தமாய். (635)

இரண்டா யிரத்தஞ்ஞூ றவர்களோடுநிறைந்த கொடிகளு மாலவட்டம்
நன்றாய் முழங்கவே பதினெண்மேளம் நடன மடமாதர்கவரிவீச
அண்டர் மிகப்போற்று மசனாருக்கங் கதிக வணக்கமாய்க் கடிதமொன்று
மண்டலம் புகழ் ஷாமிலசன் வாசஞ் செயுமிட மனுப்பினானே. (636)

வருகுந் திறைகளு முழக்கமாக வந்துஷாமூரிலசனார்பாலிற்
பெருகு மகிழ்ச்சியா யிறங்கக்கண்டு பெலமா ரலிமக ராலோசித்து
நிருபந் தனையுடன் வாசித்தோர்ந்து நேராய் வருங்கோபம் சுக்கூறுசெய்து
வருகுந் திறைதனைத் தொறுவிலேற்றி வந்தார்படையுடன் மதினமீதில். (637)

தீனோர் யாவரு முவந்துபோற்றச் சிறந்த நிதிகளை மாலிற்சேர்ந்து
வானோர் போற்றிய நபியிறசூல் வள்ளல் முகம்மதின் பேரனாரும்
தானா னருளினா லரசிருந்து ஞாலந் தனையாண்டங் கிருக்குநாளில்
மானில மீதி லசனாருக்கு மாறுபாடெசீ துனாற்றல் சொல்வாம். (638)

தன்னா லெசீதுடன் மறுவானுமாய்த் தகுத்தி லிருந்துதா னாலோசித்தா
ரின்னா ளசனார்க்கு வருஷந்தோறு மிருக்கும் நிதியெல்லாம் பகுதிகட்ட
யென்ன வருமானம் நமக்குறுதலினிமேல் முடியாது திறையளக்க
மன்ன ரசநாரை நஞ்சாற்கொன்றால் மாற்ற நமக்கில்லை யசனைக்கொல்ல. (639)

ஆனாற் கிழவியை யழைமினென்றா னதுபோற் றூதர்க ளழைத்துவந்தார்
மானாளைப் பார்த்தெம் மம்மையரே வழுத்தக் கேளுமென் வசனம்போலே
நானில மாளு மசனார்தம்மை நஞ்சார் கொலைசெய்யு வுன்றனாலே
பூணிப் பாகுமா சொல்மினென்றான் பொக்குவாய் சப்பிக் கிழவிசொல்வாள். ()

கதிரி னழகான வொருமயிலைக் கைவசந் தாரு மரசேயெண்ணச்
சதிக ளாகவே யசனைக்கொன்று சமர்த்தாய் வருகிறேன் பார்மினென்றாள்
அதுகேட் டரசனு மறுவானுமா யவன்றன் குலத்தினி லொருபெண்ணாளை
மதிபோல் வதனத்தாள் தனையழைத்து மாலை வஸ்திரா பரணஞ்சூட்டி. (641)

பாத சரங்களுங் கொலுசுதண்டைபாங்காய் மணிமுத்து மாலைபூட்டிச்
சீத சந்திர னுதையம்போலே தெரிவை தனைகூட்டிச் செல்மினென்றான்
கோது மிகவுள்ள கிழவியாளுங் கூட்டி மயில்மாதை மதினம்வந்தாள்
சோதி யலிமகர் சமுகமாகித் துலங்கு மிருவரும் பாதம்போற்றி. (642)

அந்த வுபரியில் மூப்பியாளு மருளு வாள்ஹச னரின்பாலி
லெந்த நாளினு முமைத்தானுடி யிருந்து மயங்கிறு ளிந்தமாது
சொந்த மாகிய மன்னர்களைத் தூஷணித் திங்கு வந்தாள்மயில்
சந்த்ர னழகான மயிலினுக்கும் தங்க ளழகுக்கும் பொருந்துமேதான். (643)

மன்ன ரலியுல்லா மாகவேநீங்கள் மணம் புரிந்துக்கொள்வீர்களென்றாள்
அன்ன ஹசனரு மிதனைக்கேட்டே யழகு பொருந்திய மயிலாள்தன்னைத்
தன்னின் மனமிகச் சந்தோஷமாய்த் தாலந் தனிலேதான் மணம்புரிந்து
மின்னும் கனகயுள்ள மாளிகையில் விருத்தை யுடன்கூட வைத்தாரண்ணல். ()

விருத்தை யாளுமே தனித்திருந்து விளங்கு மாதுக்கங் குறை செய்தனள்
சறுத்துப் படியாக நயந்திடாமர் சால மிகவாக வவள்போதித்தாள்
அறத்தோ ரசனருன் மனையில்வந்தா லவர்தம் முகநோக்கிப் பாராமலிங்
குறித்தா யிருக்கின்ற விதங்கள்போலே யுள்ளம் வேறாகவிருநீயென்றாள்(645)

கள்ளி விருதையின் போதினையாற் கண்ணா லசனரைப் பார்க்கமாட்டாள்
வள்ள லசனரு நெருங்கிவந்தால் வாயைத் திறந்துதான் வசனம்பேசாள்
கொள்ளக் கிடையாத திரவியம்போற் கூனர் கிழவியும் சாலஞ்செய்வாள்
விள்ளா விசனமா யிருந்தாராகில் விருத்தை யசனர்பா லிருந்து சொல்வாள்.

எங்கள் தமக்கெல்லா மணிவிளக்கே யிறசூல் முகம்மது பேரனாரே
சங்கை யாகிய நாச்சியார்தாந் தாலந் தனிலீன்ற நவமணியே
யுங்க ளுடையநன் மனைவியாளுக் குள்ள மதியெல்லாம் நான்போதித்தே
தங்கள் மனம்போலேசிலநாளைக்குட் தனதாய்ச் சமுகத்திலிணங்கவைப்பேன்.()

மனதி லாயாசம் நினைக்கவேண்டாம் வள்ளலே யெங்கள் மணியென்றோதக்
கனமும் பொருந்திய அசனார்கேட்டுக் கருத்துள் மகிழ்ச்சியா லெழுந்தேகியே
தினமும் றகுமானை மிகப்போற்றியே சிறந்த் கதிர்ச்சிம்மா தனமிருந்து
தனவா னரசர்கள் மிகவாழ்த்திடத் தகுத்தி லிருந்தர சாளுநாளில். (648)

மதின மீதுள்ள தீனோரெல்லாம் வந்து பாதத்தை மிகவும்போற்றி
நதியை யழைத்தநம் நபியிறசூல்நட்பா யுவந்திடும் பேரனாரே
பதியில் வளமுள்ள பூங்காவெல்லாம் பதறும் விலங்கினக் கூட்டம்வந்து
சதிமா னங்களாய்த் தகர்த்துமிகத் தவிடு பொடியாக்கி யழிப்பதாலே. (646)

வேட்டை யாடினால் நாயகமே மிறளும் விலங்கினக் கூட்டமென்றார்
கேட்டங் கசருரும் மனம்வெகுண்டு கிருபை யுடையவன் தன்னைப்போற்றி
வாட்ட மணுகாத பரியிலேறி வாளா யுதத்துடன் பரிசைதாங்கி
நாட்ட மிகவாகி அசுஹாபிமார் நன்றாய்ப் பலபேர்கள் மருங்கிற்சூழ. (650)

பேரி நவிறிகள் கிடுகிடென்னப் பிடிக ளெக்காளம் மடமடென்ன
வாரி யதுபோலே முரசொலிப்ப மங்கை மார்கடான் கவரிவீச
நேரா முஸ்லிம்கள் கட்டியங்கூற நிலத்திற் பூச்சக்கரக் குடைதுலங்கப்
பாருங் கிடுகிடவெழுந்தநல்ல பாங்காய் வேட்டைக்குத் தானெழுந்தார். (651)

வேட்டை யாடவே பூங்காவந்து விலங்கி னங்களைக் கலைக்கும்போதிற்
போட்டி யாகவே மான்மரைகள் புதிய கரடிகள் காட்டானைகள்
காட்டிற் சிதறிடும் விலங்கினத்தை ஹக்க னலிமகர் வாளால்வெட்டி
கூட்ட மாய்நின்ற காட்டானையைக் குத்தினர் தண்டா யுதங்களாலே. (652)

பிணந்து யானைகள் புவியில்வீழப் புல்வாய்க் கரடிகள் வதையாகிடக்
களிறு பலபல கதறியோடக் காட்டின் மான்கலை மிரண்டோடிடக்
குளிரு மலர்க்கரத் தசனர் வள்ளல் குத்தினர் தண்டா யுதங்களாலே
யெழிலா ரசனரும் வேட்டையாடி யெழுந்து ஜனத்துடன் மதீனம்வந்தார். ()

அன்னே ரந்தனி லசுஹாபிமா ரவர வர்மனை தனிலேகினர்
மன்ன ரசனரு மனையில்வந்து மணிமுத்து மேடை தனிலிருந்து
தண்ணீர்த் தவனங்கள் மிகவாகுது ஜல்தி யாகவே கொணர்மினென்றார்
சொன்ன மொழிகேட்டு மூப்பிவந்து துலங்கு மசனர்தம் சமுகம்நின்றே. ()

சங்கை யாகிய வசனம்போலே சாற்றி வாழ்த்தியே கிழவியாளு
மெங்கள் தனக்கெல்லாம் நாயகமே பியம்பக் கேளுங்கள் தயாபரரே
யுங்கள் மனையாளுக் கிதுநாள்வரை யோதினேன் புத்தி யனேகமாகத்
தங்கள் மனம்போலே தண்ணீர்கொண்டுசங்கைமயில்மாதும் வருவாளிப்போ

வாங்கிப் பருகுங்கள் தாயாபரரே மடமா னுடபுத்தி நலமாச்சுது
பாங்கா யரசாளு மணியேயென்று பகர்ந்து கிழவியும் போனபின்னர்
தீங்கு தான்செய்ய மூப்பியாளும் சிறந்த மனைவந்து வேகமாக
நான்கு திசை யாளு மசனர்க்கீய நஞ்சைப் பானக்கந் தனிகலந்தே. (656)

கோதை கரத்திலே விரைவிலீந்து கொடுத்து வாவென்று கிழவிசொல்லப்
பேதை மயிலாளு மதனைவாங்கிப் பெலத்த புலியலி மகர்பால்வந்து
காத லாய்நின்று பானகத்தைக் கரத்தி லவளீய அசனர்வாங்கிப்
பூத லந்தனில் மிசிக்கீனுக்குப் புறையற் றிரவிய மெடுத்ததுபோல் (657)

நரைத்த கிழவிசொல் மாயத்தாலே நஞ்சு கலந்ததென் றறியாமலும்
பொருத்தும் பிஸ்மிலும் புகன்றிடாமற் புத்தி மயங்கியே யலிகனர்
கரத்தி லிருக்கின்ற பானகத்தைக் கடிய தவனத்தாற் குடித்தாரப்போ
திறத்தோர் திருமேனி நடுநடுங்கித் தெளிவில் மயக்கமாய்த் தரையிற்சாய்த்தார்

அப்போ கிழவிதான் மயிலைக்கூட்டி யதிக வேகமாய் மறைவாகினள்
தப்பா திறையவன் தனைநினைத்து தரையி லசனரும் மயங்கும்நேரந்
துப்பா லறிந்துதா னுசைனர் வள்ளல் சுறுக்காக வந்து தமையனர்பா [டே
லிப்போ திதென்ன வரசர்க்கென்றங் கிதமாய்க் கரத்தினலணைத்துக்கொண்

அந்த நிமிஷத்தில் மனையில் வந்தே யகவல் தனையெல்லாம் விளங்கும்போதி
லிந்தப் பானகம் நஞ்செனவேயிருக்கும் பண்டிதர் தனையழைத்துச்
சந்திர வதனத்தி னசனருக்குத் தகுந்த அவிழ்தங்கள் தான்கொடுத்து
மெந்த மருந்திலும் குணப்படாம லிலங்கு முசைனரும் கண்ணீர்விட்டார். ()

## பதம்.

வேட்டையாடி நீங்கள் வரவும் விதிகளானதோ விந்தவேளை மீதிலே
தாட்டிகமுள்ள வேந்தருக் கெல்லாம் தங்கமேருவே யெங்கள்சிங்கத்தேறுவே
ஆறுவேனோ மனந் தேறுவேனோ மதினந்தனிலே யெங்களசனார் வள்ளலே
மாறுபாடானதோர் நஞ்சின்பானகம் வள்ள லுண்டீரோ இந்தவையமீதினில்.

## தொங்கல்.

வையந் தனிலேதான் யாருதாயே மாபியாமகன் செய்தவேலை
மெய்கள் வருந்துதே யாறகீமே விருந்தை தான்செய்த மோசத்தாலுந்
துய்ய முகம்மது நபிசல்லமே சுவர்க்க மிருக்கின்ற வென்பிதாவே
வைய மீதிலே நானிருந்து வருத்த மடையவா என்தாயாரே (662)

அந்த நேரத்தி லசனார்தேவி யலறி மிகவந்தே கண்ணீர்விட்டே
யெந்தன் கணவரே நயேகரே யென்ன மோசத்தி லகப்பட்டீர்க
ளிந்த ராச்சியம் தன்னிலேதான் யானு மிருப்பதற் கிடந்தானுண்டோ
சந்த்ர வர்ணமே மணிவிளக்கே தால மீதுள்ள நஞ்சானதில். (663)

## பதம்.

நஞ்சை யருந்தவும் பெண்சொல்லைக் கேட்கவும்
நாதரே விதியோ யெனுங்கெதியோ மனமதியோ
மணியே ஆதிநாயகனே அரும்பொருளே யிறையே. (664)

நானிருக்கவே யின்னொரு மாதினை
நாடவும் நலனோ வெனும் பலனோ தனிமை
யிதோ புவியிற் பாவிநஞ்சையும் நஞ்சையும்
அவள் கொடுத்தா ளிறையே (665)

சங்கையாகிய நாச்சியார் பெற்ற
தவமெனும் பொருளே யெனுந்துரையே
கனதருவே மதியே பெண்ணாள் ஜாலத்தில்
ஜாலத்தி லகப்பட்டீரோ மணியே. (666)

எண்ண செய்குவே னேதுதான் செய்வேன்
இப்புவி தனிலே நவமணியே தவநிதயே அரசே
ஆதி யாறகீம் நானென் செய்குவேன் புவியில். (667)

## தொங்கல்.

அந்த நேரத்தி லசனார் மக்க ளருமையுடன் காசீ மலியக்குபர்
வந்து தகப்பனார் தம்மைக்கண்டு வாடி முகஞ்சோர்ந்து கண்ணீர்விட்டார்
தந்தை யாகிய ராஜகோவே தாலமீதுள்ள விதிகளீதோ
எந்த நகரத்தி லுள்ளவளோ விந்த மோசங்கள் செய்துபோனாள். (668)

என்னதான் செய்வோம் யாகுதாயே யெங்கள் தகப்பனா ருபாத்தாகினால்
மண்ணில் யாருந்தா னுதவியில்லை வல்ல பெரியோனே யாண்டவனே
கண்ணின் மணியான தந்தையாரே கண்ணா லேறிட்டுப் பார்க்கொணாதோ
இன்னா னுங்களின் சிறுபாலருக் கியம்பு மதியென்றே யழுதார்மக்கள். (669)

ஈது படிநிற்க அசனார் வள்ள லிலங்குந் திருமேனி மயக்கமுற்றுப்
பேதமாய்க் கண்ணைத்திறந்திடாமற் பெரியோன்தவக்கலா யிருக்கும்போதில்
நீத முகம்மது மலியுல்லாவும் நேர்மை தானுள்ள நாச்சியாருஞ்
சோதி யருளாலே கனவில்வந்து சொல்லுவா ரப்போ தசனாரிடம். (670)

எங்கள் கனியான மணிவிளக்கே யிந்தப் புவிவாழ்க்கை சரியானதாற்
சங்கை பொருந்திய சுவனகெதி தாங்கள் வரலாமென் றுரைத்தபோது
திங்கள் வதனத்தி னசனார் வள்ளல் திருக்கண்ணைத்திறந்து மனைவியைப்பார்க்கத்
தங்க ளினத்தார்கள் சூழ்ந்திருக்குந் தன்மை தனைக்கண்டங் குரைசெய்குவார்.

எமது பிறவியே யுசைனார்வள்ள லியம்பத் தான்கேளு நவமணியே
நமது தகப்பனார் போனபோதே நமது பெருமையும் பெலனும்போச்சிங்
குமது மகளாரைக் காசீ முக்கே யுற்ற கலியாணம் செய்வீரென்று [றும்
தமது மனஞ்சற்றும் சலிக்கவேண்டாந் தனியோ னிருக்கிறான் மணியேயென்

எமது பாலரே காசிமோரே யிலங்குந் திருமேனி யலியக்குபா
றுனது மனங்களு மயங்கவேண்டா முடையோ னிருக்கிறா னென்பாலரே
கனதி பொருந்திய மனைவியாரே கலங்கி மிகசலித்தழுகவேண்டா [ளென்றார்.
மனம்போல் சுவர்க்கத்தி லென்னைக்காண்பீர் வல்லோன் தனைப்போற் றிருங்க

அன்ன ரசனாருங் கண்கள்மூடி யால முகம்மதின் கலிமாவோடு
மன்னர் பதவிகள் சேர்ந்தாரப்போ வல்ல பெரியவ னருளினாலே
என்னு மசுஹாபி மார்களெல்லா மிறையோ னலிமகர் தனைநாடியே
மண்ணில மீதி லழுதுசோர்ந்து வருந்தி யனைவரும் சுக்கூர்செய்தார். (674)

மதியி னழகான அசனார் தம்மை வாகாய்க் குளிப்பாட்டி தீனோரெல்லாம்
புதிய துயிலினாற் கபனுமிட்டுப் புதியோன் கிருபையால் மணந்திமிர்ந்து
கதிரி னழகான சந்தூக்கினிற் கர்த்தர் தமைநன்றாய் வைத்தெல்லோரும்
முதியோர் யாவருந் தூக்கியேகி முகம்ம தெனுநபி பேரனாரை. (675)

இறைக்கி யோரிடந் தன்னில்வைத்தே யெல்லா சனங்களு முழுவெடுத்துச்
சாறுத்தின் படியாக குசைனிமாமாய்ச் சகல சனங்களுந் தொழுதபின்னர்
அறத்தி லுயர்வான அசனார் தம்மை யடக்கஞ் செய்துவிட் டகத்தில்வந்தார்
வரத்தி லுயர்ந்திடு முசைனார் வள்ளல்மன்னவ ரசனாரைமிகவும்போற்றி (676)

மதினந் தனிலுள்ள முசுலீமெல்லாம் வந்தங் கிருந்துதான் சடங்குசெய்தே
புதியோ னருளினா லிருக்கும்போது பூவை யாளுடன் கிழவியாளும்
திமுசு தனிலாகி யெசீதுபாலிற் செப்பினா ளப்போ விதுசேதியை
அமுசம் சரியென்றேயவன்மகிழ்ந்திங் காலத் தரசுநா னேனென்றான். (677)

அணியி லிருந்துதா னெசிதவனு மவனின் மறுவானும் பூரிப்போங்கித்
யினிமேல் ராசாங்கம் நமக்கேயாகும் யாரும் நிகரில்லை புவியிலென்றே
கனிவா யிருவர்க்கும் வரிசைநல்கிக் கண்கொள் ளாததோ ருவகைபொங்கித்
துணிவோ டிருவரு மிருக்குநாளிற் றுலங்கு முசைனர்தம் சரிதைசொல்வாம்.

---

## உசைன் றலியல்லாஹுறு அன்ஹுறு அவர்களின் அரசுநிலமை.

வெள்ளிக் கிழமையின் குத்துபாவில் மேலோன் முகம்மது பேரனும்
பள்ளி வாசலின் மின்பரேறிப் பாங்காய் குத்துபாத் தானோதியே
அள்ளிலை வேற்கள் கரத்திலேந்து மசஹாபி மாக்கள் சகலோருக்கும்
வள்ள லுசையினு ரிமாமும்செய்ப வந்தபேரெல்லாந் தொழுதபின்னர். (679)

தேசந் தனையாள வுசையினுரைச் சிறந்த முடிசூட்டத் தானினைந்தே
மாசொன் றணுகாத கதிர்மேனியை மஞ்சன மாட்டித் துயில்புனைந்து
வாசம் பொருந்திய அங்கிசேர்த்து மணிமுத்து மாலை யிலங்கச்சூட்டி
நேசர் முகம்மதின் கணையாழியை நீதர் விரலினிற் றுனணிந்தே. (680)

மதிபோ லழகான மகுடம்சூட்டி வள்ளல் முகம்மதின் சலவாத்தோங்கப்
பதியி லிருக்கின்ற தீனர்வாழ்த்தப் பாரி லுலமாக்கள் கட்டியங்கூறப்
புதிய மடமாதர் கவரிவீசப் பூச்சக் கரக்குடை நனிதுலங்க
அதிய நவுபத்துப் பிடிமுழங்க அலிதம் மகனும் தவிசிலானர். (681)

வானத் தமரர்க ளாமீன்கூற மங்களம் சொல்லி கூறில்ஹூர்கள்
தானேன் றருமத்து மிகவுண்டாகத் தர்ம தானமும் வளர்ந்தேறிடத்
தீனோர் வணக்கமும் சிறந்திலங்கச் செல்வம் பெருகியே புவிமீதினில்
நானில மெங்கு மகிழ்ச்சியோங்க நாயன் கிருபைகள் செழித்துப்பொங்க. ()

சாம்பு ராவுத்தர் சாகிப்நீதம் சங்கை பொருந்துமங் கலக்குடியிற்
பூம்பொழில் மலர்ப்புயங்கள் தாங்கும் பொறுமை தானுள்ள முகிதீன்பிச்சை
நாமந் துலங்கவே ஈமானேடும் நன்கொடை செய்த மகிழ்ச்சிபோல
க்ஷேமம் வளர்ந்தேறப் புவிமீதினிற் சிறந்த பெரியோனே கிருபைசெய்வாய்.

ஆதி றகுமானை யுவந்துபோற்றி யலிதம் மகனரு தவிசிலாகி
நீதம் பெருகிய பறக்கத்தாலே நேர்மை யுடன்வந்து மான்மறைக
ளோது வாகவே காடிசிங்க மெல்லா மொருதுரை நீரருந்தும்
நாத ருசைனர்தம் ராஜாங்கத்தில் நானில மெல்லாம் செழிப்பதாக. (684)

ஈது பட்டிநிற்கவுலகமெல்லா மிறையோன் யுலிமக ராசானுநாட்
பூதல மீது திமிரிசூனைப் புரக்கு மாபியா மகனெசீது
வாது தான்செய்ய மனதுநாடி மறுவா னவனுமே யாலோசித்து
வீதந் தவரியே யொருகடிதம் விளங்க வெழுதின னுசைனருக்கே. (685)

மிக்க புகழான அலிமகனே விளங்கும் வசனத்தை நீவிர்கேளும்
மக்க மதினமு மெனக்கேசொந்த மானில மெல்லா மரசாளுவேன்
தக்க முறையாமல் ராசாங்கத்தைத் தருவீ ரெனக்குதான் புவிமீதினில்
ஹக்கன் முஹம்மது பேரனாரே கருத்தி லறியுமென் றெழுதிமன்னன். (686)

புதிய தூசினி லதைமடித்துப் பொல்லா ஞெருதூதன் கரத்திலீந்தான்
மதினந் தான்வந்தே தூதுவனும் வள்ள லுசைனார்தம் பாதம்போற்றி
நதியை யழைபித்த நபிபேரல்பால் நல்கின னப்போ கடிதந்தன்னை
மதியி னழகான அலிதம்பாலர் வாங்கி வாசித்து மயங்கிச்சொல்வார். 687)

எனக்கு முன்னமே அசனார்வள்ள லிப்பூமி விட்டுப் பதவிசேர்ந்தார்
கனக்கப் பதினறு தம்பிமாருங் கருதி ராசாங்கத் தலையிலானார்
மனக்கண் துதிசெய்யும் யாருத்ரயே வல்ல பெரியவா யாறகீமே
தனக்கே யாசென்றிங் கெழுதலானான் தகுதி யாவனோ யெசீதென்போனும்.()

உசைனார் வருத்தமாய் கண்ணீர்விட்டே யுடையோன் தனைப்போற்றி யிருக்கும்போது
வசைய னவன் தூத னிதையறிந்து மனம்போ லரசர்க்கு வாய்த்ததென்றே
திமுசு தனில்வந்தே யெசீதுபாலிற் செப்பின னப்போ திதுசேதியை
அமுசு பொருந்தவே தவசிருந்தங் கசட னெதுசீதா னெழுதினனே. (689)

ஆல முஹம்மது பேராராக வவனி தனில்நீரு மிருப்பதாலும்
கால விதியென்றே யும்முடைய கண்ணீர் தான்விட்டங் கழுவதாலும்
மேலே ன் தனக்காக மதினமீதில் விரும்பி யிருந்துநீ ரெனக்காகவே
தாலந் தனிலுள்ள வரசர்கட்குந் தகுதி யாகிய பகுதியெல்லாம். (690)

நானே திறைவாங்கத் தகுமேயல்லால் நானில மீதி லொருவரில்லை
தானு மதினத்தி லிருப்பதாலே தகுதி யானதைச் சொல்வேன்கேளுந்
தீனோர் புகழ்ந்தேத்து மசனார்வள்ளல் செல்வராகிய அலியக்குபர்
தானு யெனதுபால் தன்னில்வந்தே சங்கை யுடனாட்சி புரியவேணும். (691)

வருஷம் தவறும லாட்சிகண்டால் வைப்பேன் மதினத்தி லும்மையானுந்
துருசாய் மாறெண்ணங் கொண்டீராகிற் றுவக்குவேன் சண்டை யுமதுபாலிற்
குறைஷி குலத்தோர்க ளனைவோரையுங் கொலைகள்தான் செய்துகருவறுப்பேன்
தறஜா மிகவுள்ள நபிபேரரே சல்தி யாய்ப்பதி லெழுதுமென்றே. (692)

இந்த விதமாக யெசீதுகையா லெழுதிக் கடிதத்தை மடித்துதானே
யந்த நிருபத்தைத் தூதன்பாலி லனுப்பி யுசைனருக் கீகவென்று
னுந்து தூதனும் நிருபம்வாங்கி யுள்ள வழிநீங்கி மதினம் வந்து
சந்த்ர வதனத்தி னுசைனார்பாலில் தக்க முறையாகக் கடிதமீந்தான். (693)

நிருபந் தனைவாங்கி யுசைனார்வள்ளல் நேரா யுடைத்ததை வாசித்தாரே
பொறுமை தனையெண்ணி மனங்கலங்கிப் புகலுவா ரப்போ கண்ணீர்விட்டு
வெறுமை யாகவே யவனெழுத விதியின் காலமோ ஆண்டவனே
திறமை தானுச்சோ யெசீதுக்கென்று செல்வர் தானேகி ஆட்சிக்காண. (694)

என்ன நான் செய்வேன் றகீமேயென்று மிருதய மெல்லாங் கலங்கிவாடி
மன்ன ரசனார்தம் மணிகளான வரிசை பொருந்திடும் பாலர்களைத்
தன்னு லுசைனாரும் வரவழைத்தே சங்கதி யுள்ள கடிதமீந்தா
ரன்ன அசன்பாலர் காசிமுட னல்லி யக்குபரும் வாசித்தாய்ந்தே. (695)

தேளுக் கடுப்பினா லுதித்தபாவி தேசந் தனையாள வேணுமென்றார்
காளையார் நாங்களாட்சிகர்ண ஹக்கன் தனக்கிது பொருத்தந்தானோ
வேழை மதியிதா தந்தையாரே யிருதய மெல்லாம் கலங்கினீர்கள்
வாழும் பிராயங்க ளெமக்காகட்டும் வம்ப னெதிர்துட சமர்த்தைப்பார்ப்போம்.

சூம னரசுக்குங் கீழரசாய்க் சுகிப்ப தினுமிந்த நகர்நீங்கியே
பூமண முள்ள கூபாவுக்கும் போயங் குறைகுவோம் நாயகமே
தாமத மின்றி ஹாஷிமோர்க்குத் தனித்தே யெழுதுங்கள் கடிதமொன்று
நாமகள் விதிகால மிதுவேயென்று நாடி வலசையாய்ப் போவோமென்றார். ()

ஈது மொழியோத அசனார்பால ரிதுவே சரியென்று மனதிலெண்ணி
நாதர் கரத்தினா லொருகடிதம் நாக ரீகமா யெழுதினார்கள்
நீத மிகவுள்ள நபியிறசூல் நேர்மை தானுள்ள பேரர்களிற்
போத ருசைனாரும் கூபாவோர்க்கு புகழ்ச்சி யாகநா னெழுதஞ்சேதி. (698)

அசனா ருபாத்தாகி யாறுமாத மண்ணல் நானாக மகுடஞ்சூட்டித்
திசைகள் தனையெல்லா மொருகுடையிற் செலுத்தி ராசாங்கம் நடத்துநாளில்
வசைய னெசீது தான் மாறுபாடாய் வையந் தனையாள மனமெண்ணியே
குஷியா யொருகடி தங்கொடுத்தான் கூவிற் சதிமானஞ் செய்வேனென்றே. ()

மக்க மதினமு மவன்சொந்தமாய் வாங்குந் திறமையல்லா மவனுக்குண்டாம்
தர்க்கம் நான்சொன்னாற் சதிசெய்வானும் தாயக மென்றா லசன்பாலகர்
திக்கில் விளங்கிய திமுசிலேகிச் செல்வ ரிராசிகள் செயவேணுமாம்
விக்கி னங்களைமிகவெழுதி விட்ட படியாலே நாங்களெல்லாம். (700)

இருந்தா லசன்பால ரிராசிகாண வெழுதி யிருப்பதா லெசீதுப்பாவி
மறந்து மதினத்தைக் கூபாவுக்கு வலசை வாரதாய் நாமுற்றனம்
திருந்தும் நமரோரே ஹாஷீம்களே சிந்தை யறியவே யெழுதலானேன்
வருகும் படியான தயிரியத்தை வதலிங் கெழுதுங்காள் தீனோரென்றே. (701)

யெழுதி மடித்துத்தா னுசைனார்வள்ள லிலங்கும் பசும்பட்டி லதைமடித்துப்
பழுதில் லாதொரு கணையாழியாற் பாங்காய் மொகர்வைத்துத் தூய்தாகநற்
களிறு போலான தூதர்கையிற் கடிதம் கொடுத்தன ரவர்கொண்டேகிக்
குளிரு மலர்சோலைக் காவுநீங்கிக் குவல யந்தனில் நடந்துசென்றே. (702)

உமையா குலத்தோர்க ளறிந்திடாம லுடையோன் தனைநினைந் தவருமேகிக்
கவையு முளையுள்ள கானம்நீங்கிக் கடந்து கடிதினிற் பதினோராநாள்
குமுச மிலங்கிய மாடகூடம் கொத்தள முள்ள கூபாவுற்று
நமரோ ராகிய கீதுகையில் நல்கினா ரந்தக் கடிதந்தனை. (703)

மதினந் தனையாளு முசைனர்வள்ளல் வரைந்த கடிதமென் றவரும்வாங்கிப்
புதியோன் முகம்மதின்கணையாழியார் பொறித்த மொகரான நிருபந்தன்னை
மதியோ ரெனுகீது கண்மெல்வைத்து வாசித்தா ரப்போ திதுசேதியைச்
சதிம் னெசிதுட கபடம்பார்த்துத் தாரை யாகவே கண்ணீர்விட்டார். (104)

அந்த நிமிஷமே ஹாஷீமோர்க ளாயிரத் தஞ்ஞூ றவர்கள்கூடி
வந்த கடிதத்தில் வரலாரெல்லாம் வாசகம் பார்த்துச் சகலோர்களும்
சிந்தை கலங்கியே ஹாஷிமோர்கள் தீயி லிடுமெழு காகவேதான்
தந்தை தாரையாய்க் கண்ணீர்விட்டுச் சகல ஜனங்களும் புலம்பினரே. (705)

## பதம்.

மாபியாருக்கே நபிமுகம்மது வாருள்ள மிசுறை
யவம் வார்க்கா லோதினர்
சோபிதமுட னுதுமானர் வள்ளல் சொந்த மாக்கினர்
திமிசை யந்த நாளில்.

அலியை மாபியா கொலைதான் செய்ததும் ஆலமீதிலே
றப்பனுயகி ஆதியே அறிவான்
வலியவொருபெண் அசனர் சமுகம் வஞ்சகனளித்துப்
பாவி நஞ்சினால் வதைத்தான்.

பஞ்சபா தகன்செய்த வேலையைப் பார்த்திருந்தாயே
ஆதிபா ருலகிலே
வஞ்சகம் செய்த மோசமிஃ தெல்லாம் வையகமறியும்
ஆதிவல்ல நாயகனே.

ஆட்சிபுரிய அசனர்பாலக ரால மேர்க்குமோ
இந்தக் கால மீதிலே
மீட்சிபெருக எசிதுக் கிறையவன் மேன்மைக்கொடுப்
பானு அவன் தீமைசெய்திட.

## தொங்கல்.

இந்த விதமாகக் கூபாவுள்ள வினத்தார் ஹாசிம்க ளமுதுவாடி
யந்த நிமிஷமே யுசைனர்க்காக ஹாஷீம் மெழுபத்தி ரண்டுசீமான்
சிந்தை யுவந்துதா னிறையைப்போற்றித் திருவின் முகம்மது நபியைவாழ்த்திக்
கந்த ரப்புய வுசைனருக்கே கடித மெழுதினர் வணக்கமாக. (706)

எங்கள் முகம்மது நபிநாயக மின்ப மிகவுள்ள பேரனரே
சங்கை பொருந்திய லோகமாக தாலந் தனிலீன்ற மணிவிளக்கே
சிங்கப் புலியலி செல்வனரே தேசந் தனக்கெல்லாம் ராஜர்கோவே
திங்கள் வதனரே யெங்கள்சலாம் செய்திங் கெழுதுவ தென்னெனிலோ. ()

கள்ள னெசிதவன் கலகத்திலே கண்ணேமதினத்தி லிருக்கவேண்டாம்
வள்ள லிவிடந்தான் வந்தீரெனில் வாச மலரடி யாங்கள்போற்றி

யுள்ள ஹாஷீம்களனைவோர்களு முங்கள் மனம்போலே நடப்போமென்ன
தெள்ள மிர்தான மணிவிளக்கே திருவடி பார்த்தே யிருப்போமென்றே.(708)

நிருப மெழுத்தி ரண்டானதும் நேர்மை யுடனவர் தானெழுதி
வருகுந் தூதர்பா லவர்களீந்து வல்லோன் தனைபோற்றி யிருக்குநேரம்
சரத்தின் வேமாய்த் தூதுவரும் சாலைவழி மீதில் நடக்கும்போதிற்
பிரத்தி லிதுசேதி கேட்டிருந்த பேதமாகிய வுமையா வென்போன். (709)

அகவல் தனையெல்லாம் விவரமாக வப்துல்லாசையா திடத்திலோத
மிகவும் கோபமாய்ப் பரியிலேறி வேகசாரியா யரிநடத்திச்
செகமீ துறுஞ்சோலைக் காவுநீங்கிச் சிகுற ளிருக்கின்ற திமிசில்வந்தே
இகலாய் விளங்கிய வெசீதைக்கண்டே யியம்பினனப்போ சையாதென்போன்.

மதினங் தனையாளு முசைனர் வள்ளல்வருவதாய்க் கூபாக் கெழுதினதால்
நிதியி லுயர்வான ஹாஷீமெல்லாம் நீதர் கடிதாசி தன்னைப்பார்த்து
வதிலு மெழுதியோர் தூதன்பாலில் வாகா யனுப்பியே யிருக்கிறார்கள்
எதுவா யுசைனரும் கூபாவுந்தா லிகலுஞ் சமருமே மிகவுண்டாகும் (711)

எந்த விதத்தா லு முசைனர் தம்மை யிவ்வூர் வழிதன்னிலிகல்புரிவோம்
தந்த்ர மிஃதெம தரசேயென்று சாற்றி மிகநின்றான் சூமனப்போ
தந்தமொழி கேட்டயெசீதவ னுமாலோசனைகேட்டு மறுவா னுடன்
இந்நாள் வாய்த்தசமயம்போல யெப்போதினுமவர் வெளியேறார்காண். ()

ஆனாற் கேளுங்க ளுமறுசாதே யப்துல் லாசையா தெனும்தீரனே
நானில முள்ள கறுபலாவில் நாற்ப தாயிறம் ஜனங்கள்வைத்தே
பூணிப் பாகவே காத்திருந்து புதியோ னலிமகர் வருதல்பார்த்துத்
தானைப் பலாதிகள் தனையெழுப்பிச் சமரம் புரிந்துதான் வதைமினென்றான்.()

திசையில் விளங்கிய கூபாவுள்ளோர் ஜெகமே லுசைனர்க்குக் கைகொடாமற்
சசிபோ லிலங்கிய கோட்டைவாசல் தனையும் கடந்தவர் வெளியேறாம
லொசிவு பொருந்திய கதிர்வாளேந்தி யொழுங்காய்ப் பதினாயிரவர்கணின்றே
பரிசி காரம்தான் காவலோடு பாரா மிகநிற்கச்செய்மினென்றான். (714)

ஈது படிசெய்தே யுசைனர்தம்மை யிக்லால் வதைசெய்து வந்தீரானாற்
பாதி நாடுக ளிரு பேர்க்கீவேன் பாரி லிதுபோலே நடத்துமென்றான்
காதலாகவே யுமர் சாதும் கணக்காய் நாற்பதா யிரவர்சூழக்
கோது புறியவே பரிசைதாங்கிக் குதிரை தானேறி வயவீரர்கள். (715)

வந்து கறுபலா வழிமீதினில் மறைவா யிருந்தார்க ளுமையா வெல்லாம்
தந்திரம் செய்யும் சையாதவன் தனது கூபாவி னகரம்வந்தே
சொந்த மாகிய வுமையாக்களிற் றுலங்கும் பதினாயி ரவர்கள்சேர்த்துக்
கந்த ரத்துறுங் கதிர்வாளேந்திக் காவல் தானிற்க நியமித்தானே. (716)

ஈது படிநிற்கக் கடிதங்கொண்டங் கேகும் தூதுவர் மதினமேகி
நாதருசைனார்தம் பாதம்போற்றி நலகினா ரப்போ ரிருபந்தன்னை

நீத ரவிமகர் தான்வாசித்து நெடியோன் கிருபையென் றவர்நினைந்தே
யேது வாகவே நமரோருட னெழுந்து கூபாவில் போவோமென்றே. (717)

மனதில் நினைந்துதா னிறையைப்போற்றி வந்தார் முகம்மது றவுலாவினிற்
கனதி பொருந்திய அப்பாசுமே கண்டு சலாம்சொல்லி யுரைசெய்தனர்
தனமும் பறக்கத்தும் பெற்றகோவே தனித்தே யிரவிலே வந்தசெய்தி
வினவுங்க ளென்று முரைத்தபோது விளம்புவா ரப்போ துசைனூர்வள்ளல். ()

மாபி யாகனெசீதெழுந்து மாறு பாடான கடிதத்தினாற்
பூவி லிருக்கின்ற மதினம்விட்டுப் போறேம் வலசைதான் கூபாவுக்குப்
பாவியெசீதவன் சூட்சமென்றே பகர்ந்தா ரவிமக ரப்பாசுபால்
மேவும் தவத்தோர்கள் வசனங்கேட்டு விசன மிகவாகி யழுதுசோர்ந்து. ()

வாடி மனத்தா லு முருக்கமாகி வல்லோன் தனைப்போற்றி யப்பாசுமே
நாடி யவருமே மக்கமேக நடந்தா ரதின்பின்ன ருசைனூர்வள்ளல்
தேடி றவுலாவின் சமுகம்வந்து திறந்து கதவதின் முன்பிலாகி
யேடார் சுவனத்தி னபிறசூ லிலங்கும் கபுறடி தனிலிருந்தே. (720)

நபியா முகம்மது தம்மைநாடி நவிலுவா ரப்போ துசைனூர்வள்ளல்
புவியி லரசரு மமரோர்களும் போற்றும் படியான ராஜர்கோவே
தவசி லிருக்கின்ற மதினம்விட்டுத் தன்மை மிகவாகி நாயகனே
குமுசங் துலங்கிய கூபாவுக்குக் குதாயி னருளாலே யான்பயணம். (721)

என்னு முசும்மதே நபிசல்லமே யெங்கட் குயர்வான தந்தையரே
மின்னுங் கதிர்மேனி யெனதுதாயார் விளங்கும் பாத்திமா நாச்சியரே
மன்ன ரசனூரே மணிவிளக்கே வலசை யான் போறேன் மதினம்விட்டே
யின்னு ளுத்தாரங் கொடுங்களென்றே யிடைந்து மனம்வாடிப் புலம்பினரே. ()

பதம்.

நபியிறசூல் ஹபீயே நபுயிறசூல் மணியே நபியிறசூல்
நபியிறசூல் நபியிறசூ நலமுடனே யெனைவளர்த்த நபியிறசூல்
பாவி யெசீதாலே பாருலகின்மீதே
பாலர்களும் யானும் பாவையருமாகப்
பாவையரும் பாலர்களு மாகப்பயணம் வைத்தோ மிரவினிலே
நபியிறசூல்

என்ன செய்வேன் யானு மில்வுலகின்மீதே
கண்ணி னிமையாகக் காத்தருளும் கோவே
சாத்தெனை வளர்த்தல்லவோ கலங்கிவிட் டிவ்விடம்வந்த
நபியிறசூல்

அரச ரரியேறே குறைஷி குலத்தோரே
அன்னைபிதா வான வென்னின் துணைவோரே
என்னின்துணை நாதர்களே யான் பயணம் கூபாவுக்கே நபியிறசூல்
நபியிறசூல்

வாடுகிறேன் பேரன் வையகத்தின்மீதே
நாடு துலங்கப் பாதம் நாதரிறசூலே
நாத ரிறசூல்நபியே நல்வரந்தான் கொடுப்பீர்
நபியிறசூலே.

## தொங்கல்.

இந்த விதமாக வுசைனார்வள்ள லிதயங் கலங்கியே யழுகும்போதி
லந்த நேரத்திற் யாறசூலு மலியும் பாத்திமா அசனாருடன்
மந்தி ரக்கதிர் மணிமுத்துகள் வழங்கும் சுவர்க்கத்தி லிருந்துநால்வர்
கந்த ரப்புயத் துசையனாரிடங் கனவி லுரைசெய்தார் கண்ணீரோடே. (723)

கனங்கள் பொருந்திய மணிவிளக்கே கண்ணே நீங்களு மழுகவேண்டாம்
தனங்கள் பறக்கத்தைக் கொடுத்தநாயன் தாக்கல் தான் செய்த விதியானதை
அனைவோ ராலுமே யழிக்கவொண்ணா தருமை தானுள்ள நவமணியே
மனம்போல் நடக்கலாம் கூபாவென்று வள்ளல் முகம்மது நபியுஞ்சொன்னார்.

நல்லோர் தான்சொன்ன வசனங்கேட்டு நாடி மனைவந்தேயுசைனார்வள்ளல்
சல்லல்லா நபி தேவியார்பாற் றுக்க லனைத்தையும் தானுரைதவே
வல்லோ னருளென்றே யும்முசல்மா வைத்திடும் செப்பை யெடுத்துவந்தே
அல்லா வருளினாற் றிறந்துபார்க்க வனைத்து மண்சோரி யாகக்கண்டே. (725)

வாச ருசைனாரு மதிமயங்கி வல்லோன் விதியென்று மிகநினைத்து
ஹாஷீமோர்களை வரவழைத்தங் கவர்கள் பயணத்தி னகவல் சொன்னார்
தேசத் தரசர்க ளுரைத்த வெண்ணந் தேர்ந்தங் கனைவரு மழுதுசொல்வார்
நேசரே யெங்கள் நவமணியே நீத ருடனேதான் பயணமென்றார். (726)

தீனோர் ஹாஷீம்க ளுரைத்தவார்த்தை தெரிந்தே யுசைனாருமுரைசெய்குவார்
நானில மீதிற் கூபாவுக்கு நாங்கள் பயணமே போவதல்லாற்
றானே யொருவரும் வருகவேண்டாந் தலத்தி லனைவரு மிருங்களென்று
வானின் மதிமுகத் துசைனார்வள்ளல் வழுத்தி யிரவினிற் பயணமானார் (727)

பரியிற் பனிரண்டு தொறுவிலேழும் பயணந் தனக்கான வஜீபனமு
முரிமை யாகிய வயவீரரி லொழுங்காய் நாற்பது பெயர்களோடும்
தரியலார் வந்தார் சமர்பொருந்த தகுந்த வாள்வில்லும் பரிசைகளும்
வரிசை பொருந்திய நபிதேவியார் மகளா ரும்முகுல் தாமவரும். (728)

மதிபோ லழகான அசனுசைனார் மனைவி மார்களும் சிறுபாலரிற்
கதிரினழகுள்ள காசீமுடன் கருத்தால் விளங்கிய அலியக்குபர்
நதியின் மணிமுத்தா யிலங்குமான நல்லோர் செயினுலா பதினுமாகப்
பதியில் வருமாதம் துல்கஜ்ஜினிற் பயண மிருபதாம் தேதிதனில். (729)

வரிசை பொருந்திய மதினம்விட்டுவாகா யிரவினி லேயெழுந்து
தரிய லார்களு மறிந்திடாமற் யடஞ்சூழ் பதிநீங்கி யேகுநேர
மருமை யாகிய ஹாஷீமன்ன ரவர்கள் மனங்களும் கலங்கிவாடி
யுரிமை மிக்வாக வெசீத்துபாலி லுவரி போலவே கூட்டமானார். (730)

ஆல முகம்மது திருப்பேரனு ரவர்கள் ஜனத்துட னடந்துபல
சோலை வனங்களுந் தோப்புகளுந் துலங்கும் வாவிகள் பலவுநீங்கித்
தாலந் தனிலுள்ள பாதைமீதிற் றரிய லார்தளு மறிந்திடமாற்
கால மேழுநாட் பாலைவனம் கடுகி நடந்தா மதிவிருந்து. (731)

சகல பெயர்களு மிகவெழுந்து தனித்த விரவினில் நடக்குநேரம்
ஜெகமுந் துலங்கவே யிருநாழிகை சிறந்தங் கிருக்கையி லிறங்கலானு
ரிகலாய் வருகின்ற தலமீதினி லிறங்கிப் பரிகட்டக் குதிரைப்பாகர்
வகையா முளைதனை யடிக்கும்போதில் வந்து விழுந்தே முதற்குழியில். (732)

அந்த நேரமே குதிரைப்பாக ரருளினு ரப்போ துசைனர்பாலிற்
சந்த்ர வதனத்தா ரச்சொற்கேட்டுத் தயங்கி மனமது மயங்கிவாடிச்
சிந்தை புழுங்கியே மணலையள்ளிச் சிறந்த வுசைனரு முகர்ந்துபார்த்தார்
விந்தை யாகிய ரத்தசோரி விழுங்கு மணங்கண்டே யலிமகனர். (733)

தந்த தாரையாய்க் கண்ணீர்விட்டுத் தயங்கி யரசரு முரைசெய்குவா [றே
ரிந்தத் தலந்தானே கருபலாமண் ணிறையோ னமைத்திட்ட தலந்தானென்
யந்தா மிலிஹறக்க னருளிதென்றே யலியார் மகனரும் படங்கடித்து
வந்த பெயரெல்லாந் தானிருந்து வல்லோன் தனைப்போற்றி யிருக்குநேரம்.()

பரியை நடத்தியே யொருதூதுவர் பாங்கா யோடிவந் துசைனர்பாலி
லிறங்கி யவறுமே பாதம்போற்றி யியம்புவா ரப்போ தூதுவரு
மறங்கள் பொருந்திய கூபாவுள்ளோ ரனுப்கினு ரென்னை யகவலோதத்
திறங்கள் பொருந்திய அரசிம்மேறே சிகுற னெசீதுட சூதைக்கேளீர். (735)

இப்போ கூபாவில் ஹாஷிமோர்க ளிவிடந் தான்வந்து கைகொடாம
லொப்பந் தத்துட னுமையாவெல்லா மொழுங்காய் வாளேந்திப் பாராவுற்றூர்
துப்ப னுகவே யுமர்சாதுவுந் துலங்கு நாற்பதா யிரவர்சூழ
வெப்ப மாகிய வனமீதினில் வீற்றங் கிருக்கிறு ரெசீதுகூட்டம். (736)

ஈது விபரத்தைக் கீதென்போர்தா மியம்பி வரச்சொன்னூர் நாயகமே
யோதி னேனிந்த வசனந்தன்னை யுரிமைதானுள்ள மணிவிளக்கே
யேது வாகவே யிருங்களென்றங் கியம்பி யரியுட னவர்நடந்தார்
நாத ருசைனரு மிதனைக்கேட்டு நாயன் தவக்கலா யிருக்குநேரம். (737)

அப்துல் லாசைய்யா தெனுந்தலைவ னன்றே யிரவினிற் படைகள்சேர்த்துச்
சத்தங் காரிடி போல்முழங்கும் ஜனங்க ளிருபதா யிரவர்சூழ
எத்தி சைகெடுங் கருபாலவி லிறங்கி யுமர்சாதி னிடத்திற்சேர்ந்து
சித்தந் தனிலேதா னிருபேர்களுஞ் சிறந்த சூதுக ளாலோசித்தார். (738)

அறுப·தாயிரஞ் சனத்தினேடு மவர்க ளிருக்கவே யுமர்சாதுவு
முருதி நாமளு மிருந்தோமாகி லுசைனர் தமைக்கொல்ல முடியாதென்று
பெருகுஞ் சனத்திலோ ராயிரரைப் பிந்தா திபுருஹீ முடனனுப்பி
வரத்தி லுயர்வான குசைனர் தம்மை வதைத்துச் சீக்கிரம் வம்மினென்றூர்.()

சொன்ன மொழிகேட்டங் கிபுறுஹீமுங் துணைவர் அசுமியோடா ரீதையும்
மன்ன னெசீதுதம் படைமீதினில் வகுத்தா னயிரம் வயவீரரைச்
சின்னம் பேரிகை முரசடித்துத் தீரர் மூவரும் பரியிலேறி
யன்ன வுசைனார்தம் படங்கச்சுற்றி யதிக முழக்கமாய் வருகும்போதில். (740)

வசையன் படைகளை நிறுத்திவைத்தே வந்தா யுபுறுஹீம் துணைவரோடு [வா
மூசைனார் பாதத்தை மிகப்போற்றியே யொழுங்காய் நின்றங்கே யுரைசெய்கு
ரெசீது தலைவமா ரெனையனுப்பி யிகலும் புரியவே சொன்னானிப்போ
துசுமனுரைகேட்டு நாங்கள்வந்தோம் துய்ய முகம்மது பேரனாரே. (741)

ஆனா லிதற்குமுன் னலிதம்பாலி லனேக நாளாக யாமிருந்து
தீனும் பசியாறி யிருந்தமனம் தீயி விடுவெமு காளுதிப்போ
நானுந் துணைவர்க ளிருபேர்களும் நல்லோ ரடைக்கல மகராஜரே
தோனு மெசீதுட படையைவெட்டத் துணிந்தோ மூவரும் புவியிலென்றார்.

அந்த நேரமே யியுறுஹீமு மழைத்து வருஞ்சன மாயிரத்தில்
வந்த ஹாஷீம்க ளைந்நூறுபேர் வள்ள லுசைனார்பால் வந்துசேர்ந்தார்
விந்தை யாகிய வுமையாக்களில் விழுங்குஞ் சனமைந்நூ றவன் பாலுற்றார்
சந்திர வதனத்தி னுசைனார்பாலிற் சமுக மிருந்திடு மிபுறுஹீமும். (743)

மனது நலமொடுந் துயிலும்போதில் வள்ளல் முகம்மது கனவில் வந்து
வினவா ரப்போ திபுறுஹீமே மேன்மை யதனைநீர் சொல்லக்கேளும்
எனது பேரனா முசைனாருக்கிங் கிப்போ துபகாரஞ் செய்வீராகிற்
றனமும் பறக்கத்துங் கொடுத்தநாயன் சங்கை யாகவே சுவனமீவான். (744)

சொல்லு மொழிகேட்டங் கவரெழுந்து துய்ய பெரியவன் கிருபயென்றே
நல்லோர் மனங்களும் பூரிப்பாகி நாடியிருக்கவே விடிந்தபின்னர்
அல்லா தனைப்புகழ்ந் தனைவோர்களு மலியின் மகனார்பா லிருக்குநேரம்
சல்லல் லாநாபி பேரபாலிற் யனித்தங் கொருதூதன் வந்துசொல்வான். (745)

எசீது வரவிட்டார் யானும்வந்தே னியம்பக் கேளுங்கள் நாயகமே
ஹசனார் மகனலி யக்குபாறுங் காசீ மும்வரிர் சமரில்லையா
மொசுவா யிதைக்கேட்டு வரச்சொல்லினா ருள்ளே மதிதனை யுரைமினென்றான்
சகியி னழகான செல்வர்பாலிற் றுக்க லுரைசெய்தா ருசைனார்வள்ளல். (746)

காளை யாகிய விருபாலரும் கவலுவா ரப்போ தாதைபாலிற்
றேளுக் கடுப்பிலே பிறந்தகோலன் தேசந் தனையாள வேணுமென்றால்
நாளை நபிபேர ரிராசிகாண நாயன் றனக்கது பொறுப்பமாகுமா
ஏழை மதிகளை நினைக்கவேண்டா மெங்கன் சமரினைப் பார்மினென்றார். (747)

இதுகேட் டெசீதுதன் தூதுவனு மெடுத்தா னோட்டமாய்ப் பாதைமீதிற்
சதிய னுமறுசா திடுத்திலோத தண்ணீர் கொடாமலே வளைந்துகொண்டா
மதியை யழைத்திடு நபியிறசூல் வள்ளல் முகம்மது பேரனாரும்
விதியை நினைத்துதா னிறையைப்போற்றி விளங்குங் கருபலா தனிலிருந்தார்.

## முதலாவது இபுருஹீகவர்கள் சண்டை.

அன்ன காலையி லுமறுசாது மப்துல்லா சைய்யா திருபேருமே
தன்னால் யோசித்துப் படையோர்களின் தளங்கள் பதிருயி ரவர்கள்குழ
மின்னுங் கதிர்வாளும் பளபளென்ன வெப்பபரிக் கூட்ட மிகவேதுன்ன
மன்னன் துல்தூசும் கர்னலாக வாம்பரி யேறி யெழுந்தாரப்போ- (749)

மண்ட லங்களுங் கிடுகிடென்ன வானி னிருபோலே முரசடித்துக்
சண்டைக் கொடிகளும் சாரியாகத் தானை பதாதிகள் தடதடத்தே
யண்டம் கிடுகிடென் றதிரத்தாவி யனேக வய்வீரர் மிகக்கெழுமி
வண்ட னெசிதுட படையின்கூட்டம் வந்து வளைந்தாரே குசைனார் தம்மை.750

அன்ன ளானது முஹர் றமாத மாகு மதன்தேதி மூன்றுனதில்
மன்ன ருசைனார்பா லிபுருகீமும் வந்து பாதத்தைப் போற்றிச்சொல்வார்
இன்ன ளெசிதுட படையைவெட்டி யானும் வருறேன் நாயகமே
யென் னுமுஹம்மா நபிபேரரே யெனக்கிங் குத்தாரங் கொடுங்களென்றார். ()

நல்லோ ருசைனரு மிறையை போற்றி நவின்று ருத்தார மமுதவாயால்
வல்லோன் தனைப்போற்றி யிபுருஹீமும் வாளைக் கரத்தேந்திப் பரியிலேறி
வெல்லு மனதுடன் பரிநடத்தி வேகத்துடன் வந்தார் சமர்க்களத்தில
வில்லை வளைத்துயர் நாணிபூட்டி விட்டார் பாணங்களெசிதுபடை. (752)

வேறு.

விட்டதோர் பாண மெல்லாம் விலக்கியே யிபுருஹீமும்
முட்டதாய் நெருங்கும் பேர்கள்முடிகளைப் பிளந்துதாக்கித்
துட்டரை யறுத்து வாளாற் சூறைதான் பலவும்செய்து
திட்டமா யிரந்த சோரி சிறுநதி யோடிற் றம்மா. (753)

வேறு,

கரங்களு மறுந்து கிடப்பவர் சிலரே காலமென் றோடுவர் சிலரே
புரங்களு மறுந்தே யுடல்களும் சிதறி யொடுங்கியே கிடப்பவர் சிலரே
சரங்களைக் கரத்திற் பிடிப்பவர் சிலரே சமர்க்களங் கிடப்பர் சிலரே
துரகத மிழந்து தரையினிற் கிடந்தே துடித்தழு திப்பவர் சிலரே. (754)

தொங்கல்,

இந்த விதமாக யேசிபடை யிறந்து மடிந்த திரண்டாயிரம்
அந்த நேரத்தி லிபுருஹீமு மதிக தவனம் துண்டாகியே
சந்த்ர வதனமுந் தயங்கிவாடிக் சடில மீதினி லிருக்குப்போதில்
வந்து துல்தூசும் வாளால்வெட்ட வல்லோன சுவனத்தின் பதவிசேர்ந்தார். ()

---

## இரண்டாவது அசுமியவர்கள் சண்டை.

எசீது படைகளி முரசடித்தே யேகமாய் வந்து வளையுப்போதில்
அசுமி யவர்களு மிக்கொழுந்தே அலிதம் மகனாரின் பாதம்போற்றி
யொசிவின் கதிர்வாளுங் கரத்திலேந்தி யுன்னி மிசையேறு வேகத்தோடும்
வசெயனெசீதுட படையில்வந்து வாம்பரி விட்டு நடத்துநேரம். (756)

சரங்கள் தனைவிட்டார் வசுதர்களும் சரியாக நின்று நாலுதிக்கும்
திரங்கள் பொருந்திய வுசுமியவர் சிறந்த லேலினு லதனைத்தட்டிக்
கரத்தில் வாளினை யெடுத்துவிரர் கருத லார்களின் முடிதூளாக்கி
வரத்தி லுயர்வான அலியைப்போற்றி வசுதர்களை வெட்டிப் பிணங்குவித்தார்.

கட்டாரி கொண்டு வீசுலாரெக் கரத்தின் வாளினுற்பிளந்துதாக்கி
முட்டாய் வருவோரைப் பிடித்தடித்து மூளை சிதறிட வடித்துமன்னர்
கெட்டி யாய்நின்று நான்குதிக்கும் கீர்த்தியாகவே சமர்பொருதப்
பட்டு விழுந்தன ரெசீதுகூட்டம் படையில் மூவா யிரத்தஞ்ஞூறே. (758)

அன்ன காலையி லசுமியரு மரிய களையுடன் தவனமானகி
மன்னி லந்தனில் நிற்கும்போது வந்து துல்தூசு வாளாற்றுக்க
கன்னி லையுள்ள அசுமியாரும் நாயன் சுவனத்தின் பதவிசேர்ந்தார்
மூன்னு மெசீதுட படைக்கூட்டங்கள் மூக்க மாய்வந்து வளைந்தரப்போ.

---

## மூன்றுவது ஆரீதவர்கள் சண்டை.

அது கண்டாரீது தாமெழுந்தே யலிதம் மகனாரின் பகதம்வோற்றி
கதிரி னழகான வேல்கைதாங்கிக் கற்கி தானேறி வேகத்தோடும்
கெதிரிப் பறிவிட்டுச் சமரில் வந்தார் கெழுமி செசீதுட படைக்கூட்டங்கள்
சதிக ளாகவே நாலுதிக்கும் சரங்கள் தனையேவி யிகல்புரிந்தார்,

ஆரி தவருட வேலாற்றட்டி யசட ர்கிய வசுதர்களைப்
பாரில் விழும்படி முகுதூளாக்கிப் பருந்துக் கிரைகொடுத் தேபூமியிற்
காரார் குடநிழல் ஹபீபைப்போற்றிக் கருத லார்களைப் பிணக்காடாக்கி
சாரியாய்நின்ற தரியலாரைத் தகர்ந்து நொருக்கியே சமர்செய்தாரே. (761)

இந்த விதமாக நாலக்திகை யிகலே புரிந்தன ராரீதப்போ
வந்த படைமதி லெசீதுபடை மாண்டா ராயிரத் தறுநூற்றெழு
அந்த நேரத்திற் றவனமாபி ஆரிது நின்றார் சமர்களத்திற்
சிந்தை வெகுண்டங்கு துல்தூசென்பேன் திடுதி டென்னவே பரிமேல்வந்தான்

வந்தங் கவனத்தின் வாளால்வெட்ட மன்ன ராரீது கசையாற்றுங்கி
விந்தை யுறுங்கதிர் வேலற்றாருக்க விமலன் துல்தூசு முடிபிளந்து
கந்து கத்தோடு மவனும் வீழ்ந்து ககனி லுயிர்விட்டுக் கிடக்கும்நேரம்
சந்திப் பாய்நின்ற வெசீதுபடை தானே புறங்காட்டி யோட்டங்கொண்டார். ()

அன்னே ரந்தனி லாரீது தர மதிக மயக்கமாய்த் தரையில்வீழ்ந்து
தன்ன லுயிர்விட்டு ஷஹீதாகியே சமர்க்களத்தினிற் கிடக்கும்போதில்
மின்னும் சூரி னடைந்திருண்டு விளங்கு யிரவாகிய விட்டபின்னர்
மன்ன ருசைனருங் களத்தில்வந்து மாண்ட மூவரை யடக்கஞ்செய்தே. (764)

கருப லாவுள்ள கூடாரத்திற் காரணர் வந்து விசனமுற்று
மருவின் மலர்புயத் தரசர்கோவே வள்ளல் முஹம்மது நபிசல்லமே
தருணந் தனக்காக வந்தமூவர் சமர்க்க ளந்தனில் ஷஹீதாகினர்
பறக்கத் தாகிய பேர்களென்றே வல்லோன் றனைப்புகழ்ந் திருந்தாருசைன். ()

விடிந்த காலையி லெசீதுடைய வீரனுமர்சாதும் சைய்யாதிவர்
துடிக ளாகிய பரியிலேறிச் சூழும் படைகளும் வானிலங்கப்
படியுங் கிடுகிட முரசடித்துப் பாங்கா யிருபதா யிரவர்சூழக்
கொடியு மிகத்துன்ன நடனஞ்செய்யுங் குரகதம் விட்டே வளைந்தார்களே. ()

அன்ன காலையில் முஹர்றமாத மழகா கியதேதி நாலானதில்
மன்ன ருசைனர்தம் சமுகமதில் வந்தா ரப்பாசப் துற்றகுமா
னென்னு முஹம்மது நபிபேரரே யிறையோ னருள்பெற்ற தயாபரரே
யின்னு ளெசீதுட படையைவெட்ட வெங்கட்குவிடை தாருமென்றார். (767)

ஈதுமொழிகேட்டங்குசைனர்வள்ளலிறையோன் றனைப்போற்றித்துஆசிர்ந்து
நாத ருத்தாரம் கொடுத்தாரப்போ நளின மாகிய பரியிலேறி
நீத ரிவர்களுங் கதிர்வாளேந்தி நிலத்திற் பரிவிட்டே நடனமாடிக்
கோதா வருகிற படைமீதினிற் குதிரை நடத்தினர் செந்தூளாக. (768)

அதுகண் டெசீதுட படைகளெல்லா மதிக முழக்காய் மிகநெருங்கிச்
சதிக ளாகவே தான்வளைந்து சரங்கள் தொடுத்தாரே மழைமாரிபோ
லெதிர தாய்நின்று கவண்கல்றுக ளெடுத்தங் கேவினர் குஞ்சரம்போற்
சதியர் விடுவதைப் பரிசையாலே தட்டி விட்டமர் செய்தார்களே. (769)

## பதம்.

சமரஞ் செய்தாரே யிருபேர்களும் சமரஞ் செய்தாரே
சிங்கத்தின் குட்டிபோற் செருனரை பாய்ந்தாரே
சிதறிட வசுதர்கள் கதறியே முடிவீழ்கச்
செங்கதிற் வாளினர் சேதங்களாய் வெட்டிட
செருனர்க ளோட்டங்கள் திடுதிடென்னவே. (சமரம்)

உமையாவின் கூட்டங்க ளோடும் பெயர்களை
யுடல்கள் விழவெட்டி நளினப் பரிநடத்தி
நமையாளு பவனுடைய நாட்டமிஃதே யென்றும்
நறுக்கித் தரியலரை நெருக்கி ரணக்களத்திற். (சமரம்)

மண்டல மதிர்தரக் கண்டபே ரஞ்சிட
வானத் தொனிகள்செய்து மணிகோர்வை செய்தனர்
அண்டங் கிடுகிடென்னச் சண்டமா ருதம்போலே
அடித்தனர் கதையினு லொடித்தனர் வசுதரை. (சமரம்)

கரமறுந் தவர்சிலர் உரமறுந் தவர்சிலர்
கங்கமு மேரியும் கருதலர் தசைதின்ன
சுரந்திடு மாறுபோற் கோரிய தோடிடத்
துட்டரை மிகவெட்டித் திட்டமாய் நின்றனர். (சமரம்)

## தொங்கல்.

இந்த விதமாக விருபேர்களு மெசிது படையிலே தாக்கும்போது
பந்தி யாகவே யிறந்தஜனம் பதினு யிரத்தஞ்ஞூ றவர்கள்மாண்டா
ரந்த கோரத்தி லப்பாசுட னப்துர் றகுமானும் தவனமாகிச்
சிந்தை மயங்கியே குரலுங்கம்மிச் செருக்க ளத்தினில் நிற்கும்போதில். (770)

கதிரு மடையவே யிருளாகிட ஹாரி தவனுமே பிறகால்வந்து
மதியி னழகான அப்பாசையும் வாளா லவன்வெட்ட ஷஹீதாகினர்
சதியன் திரும்பியே கரவேலினுற் றடதட வென்றுமுன் னுல்வந்தே
யதிக வுரத்துடன் வேலினலே யப்துர் றகுமானைத் தாக்கினனே. (771)

மன்னர்தம் வாளா லதனைத்தாங்கி வாளா லவனைத்தான் தாக்கும்போதில்
முன்னம் விழுந்தானே யிருபங்காகி முதியோன் ஹாரிது சமர்க்களத்திற்
றன்னுல் மயங்கி யப்துர்றகுமான் தரையில் மிகவீழ்ந்து பதவிசேர்ந்தே
யன்னே ரந்தானு மகரிபாகி யமர்க்களம் நின்ற வுமையாவெல்லாம். (772)

ஓடி மறைந்தார்கள் தாவடத்தி லுமறு சாதுடன் சையாதுமே
வாடி மனத்திலுள் மதிமயங்கி வந்து தாவடந் தனிலிருந்தா
னேடார் சுவனத்தி னபியிறசூ லிலங்கும் திருப்பேர ருசைனுர்வள்ளல்
நாடிச் சமர்க்களந் தனிலேவந்து நல்லோ ரிருபேரை யடக்கஞ்செய்தார். (773)

மன்ன ருசைனுரும் படங்கில்வந்து வல்லோன் தனைத்தொழு திருந்துநீதர்
தன்னு லாயாசா மிகவுண்டாகித் தளம்பி மனமது தயங்கிச்சொல்வா
ரென்னைப் படைத்தவா யாகுதாயே யிந்தக் கறுபலா வழிமீதினிற்
பெண்ணுர் மாதரும் பாலர்களும் புலம்பி யழுகவோ வைத்தாயாதி. (774)

என்ன நான்செய்வேன் என்மாதாவே யெசிது செய்திடுங் கோதுகளை
மன்னி லந்தனி லுதவியில்லை மயங்கி றேனிப்போ யாறஹீமே
யின்ன லுதவிகள் செய்வாயென்றங் கிருந்து புலம்பின ருசைனுர்வள்ளல்
அன்ன விரவுதான் விடிந்தகாலே யலிதம் மகர்வாடி யிருக்கும்போதில். (775)

உமறு சாதுவும் சையாதுமா யோசனை செய்தே படையோர்களை
நமரோர் யாவரும் துணிவதாக நாடி யெழுமினென் றவனுரைத்தான்
தமரி லுமையாக்கள் றாமிகளும் தானைப் பதாதிகள் மிகவுஞ்சூழக்
தவன வர்ம்பரி காலாட்சேனை கடல்போ லெழுந்தார்க ளெசிதுபடை. (776)

காரிடி போலே முரசதிரக் கற்கி யாவற்று வணியாய்வரப்
பேரி கவிரிகள் திடுதிடென்னப் பலத்த வயவீரர் கெழுமியாட
வாயு போலவே யெசிதுபடை வந்தே முப்பத்தை யாயிவர்
மேரு வெழுந்தார்போல் யானைகூட்டம் விளங்குமதசலமிறைத்தேகியே.(777)

கறுப லாவழி தனிலேவந்து காரிடி போலே முரசடிதான்
மருவியின் மலர்ப்புய வுசைனர் வள்ளல் மயங்கி யிருக்கிற நேரத்திலே
பெருகும் ஹாஷீம்க ளாயுஞ்ஞூறுபேர் பிரிய முடனெழுந் துசைனர்பாவில்
மரையின் மலர்பாதம் பணிந்துபோற்றி வழுத்துவாரப்போ ஹாஷிமெல்லாம்.

எங்கள் தனக்கெல்லாம் நாயகமே யிறசூல் முகம்மது பேரனரே
சங்கை மிகவுள்ள தயாபரனே தாங்க ளுத்தாரம் சமருக்கென்றார்
செங்கை யுளவேந்த ரிதனைக்கேட்டுச் செப்புவா ரப்போ திரையைப்போற்றிப்
பொங்க மாய்வரும் படையிலேகிப் போர்செய்தே யிங்கண் வாருமென்றார். ()

ஐந்நூ றவர்களு மைந்தாங்தேதி யாயுதம்பல் பரிசைதாங்கி
சுயம தாகிய விறையைப்போற்றித் துறங்க மேறியே வயவீரர்கள்
நயம தாகவும் சுவனபெதி நாயன் தருகுவா னமக்கேயென்று
ஜெயம்ஜெயமென்றே முரசடித்துச் செண்டாக் கொடியுடன் சமரில்வந்தார். ()

முன்பால் மிகச்சேர்ந்த பேர்கள்வந்தார் முழக்கெடா வானத்தொனிகளென்று
தன்பா லுடையவ ரிவர்களென்றுந் தானை யெசிதுட சேனையென்றும்
பின்முன் னறியாம லிருவெள்ளமும் பெலமதாய்ச சண்டை முழக்கும்நேரம்
என்பி ரானுட் கோலமென்றே யேக மாகவே பொருதுவாரும். (781)

பம்ப ரம்போலே சுழற்றிவாளைப் பற்றி யெறிவாரும் சிலவசுதர்
கொம்பு வீசியே யோடுவாரும் கூக்குர லிட்டே யழுகுவாரும்
தென்பா லடிப்பாரு மூளைசிந்தச் சினந்து வாட்கொண்டு தாக்குவாரும்
துன்ப மிகவாக அசர்மட்டிலுந் தொடங்கினர் சண்டை மடமடத்தே. (782)

இந்த விதத்தாலே யெசீதுஜன மேழா யிரத்தஞ்ஞூ றவர்கள்மாண்டா
ரந்த நேரமே வுமறுசாதங் கருளுவா னப்போ சையாதுபால்
வந்த படையஞ்ஞூ றவர்கள்கண்டோ மடிந்த தேழாயிரத் தஞ்ஞூறே
இந்தப் பெருஞ்சண்டை யாகாதுநா மிப்போ திதுபோரைநிறுத்துமென்றான்.

போரை நிறுத்தியே யுமர்சையாது பெட்பால்த் தாவளம் வந்துசேர்ந்து
மாறுபா டான வெசிதுபடை வந்தங் கிருக்கவே கதிரடைந்தான்
சிறியே போன ஹாஹீம்களிற் றிரும்பி யொருவரும் வாராமையால்
மாறுப் புகழோங்கு நபிதம்பேரர் வல்லோன் புறமென்றே யிருக்கும்நேரம். ()

இரவு காலந்தான் விடிந்தபின்ன ரிலங்கு முஹர்றந்தா ளிருந்தேதி
கறுப லாவழி தனிலடித்த கறங்குடன் பச்சைக் கூடாரத்தில்
விரையின் மலர்க்குழல் சகர்வான்பெற்ற விளங்கு மலியெனுஞ் சிறியபாலா
பெருங் குரலாக அழுகும்போதிற் பெரியோ னலிமக னுரைசெய்குவார்.(785)

எனது மனையாரே சொல்லக்கேளு வெந்தன் பாலக ரழுவதானற்
சுதனார் தனையெத் தழுதூட்டென்றே சொன்னா ரலிமக ருசைனார்வள்ளல்
மதியி னழகான சகர்வானுமே வழுத்துவா ரப்போ கண்ணீர்சோரக்
கதிரின் சுடர்மணிச் சிறுபாலகர் கலங்கி யழுகிற விசனந்தன்னை. (786)

என்ன நான்சொல்வே னயகமே யெனக்கே தவனங்கள் மிகவாகுது
மன்னர் குழந்தைக்கும் பாலில்லாமல் வறட்சி மிகவாகி யழுகுதிப்போ
சொன்னார் கேட்குமா ஆண்டகையே துலங்கும் பாலக னவறட்சி
யின்னாட் கறுபாலா வந்துநாம ளிடைந்து முகவாட விறையோன்செய்தான்.()

ஈது மொழியோதச் சகர்வானுமே யியம்புவா ரப்போ துசைனார்வள்ளல்
சோதி யழகுள்ள குழந்தையரைத் துலங்கும் பரிமேலே யேற்றிவைத்தே
சாதி வுமையாக்கள் தலத்துக்கேகிச் சாலிக்கே நீயுந் தண்ணீர்வாங்கி
யேது வாகவே சிருபாலருக் கிருக்கும் தவனத்தை மாற்றிவாரும். (788)

சாலி கிடத்தினி லுசைனார்வள்ளல் சங்கை யாகிய வசனமோத [பால்
பாலர் தம்மையே பரிமேல்வைத்துப் பாங்காய்க் கொண்டுவந் துமையாக்கள்
மாலாய்த் தான்வந்து சாலிகுதா மணியின் கதிர்போல குசைன்பாலரை
வால கதிர்போலப் பரிமேல்வைத்து வாகா யுமர்சாது சமுகநின்றே. (789)

சங்கை யாகவே சலாமும்சொல்லிச் சாற்றுவா ரப்போ சாலிகென்போர்
சிங்க மகமேரே யுமறுசாதே சிறந்த அப்துல்லா சையாதுவே
யுங்கள் மனமதிற் றயவிறங்கி யுடையோன் தனைநாடி தயவுண்டாகித்
தங்க மயமான சிறுபாலர்க்குத் தவனந் தீர்க்கவே தண்ணீரீந்தால். (790)

ஆதி பெரியவன் மனமிரங்கி யருளுவானிரு பேர்க்கும் சொர்க்கம்
நீத மாகவே குழந்தையார்க்கு நேர்மை யுடன்தண்ணீர் கொடுப்பீராகிற்
காதம் பரிபளங் கமழுகின்ற ஹபீபு முஹம்மது ஷபா அத்தாவீர்
நாத ருடபால ரழுகலானார் நல்குவீ ரென்றே தயவாச்சொன்னார். (791)

நலமா யுரைத்திடும் வசனந்தன்னை நன்றாய்க் கேட்டுத்தா னுமர்சாதுவும்
புலிபோ லவன்சீறி மனம்வெகுண்டு புகலுவா னப்போ திடியேறுபோற்
றலமாய் நீவந்து தண்ணீர்கேட்டே தரும விஷயத்திற் றரத்தான்வேணும்
குலமோ யலியதின் குட்டியாகும் கொடுத்தால் நமைச்சும்மா விடமாட்டாதே.

யானை விளாம்பழங் கண்டதானா லதுவே யெடுத்ததைப் பசியாரிடும்
பூனை வாய்மீதி லெலிதான்பட்டாற் புகலுமது சொன்னா லதுவிடுமோ
தீனுக் ககப்பட்ட துருவைதன்னைச் சிறந்த வரிவேங்கை விடமாட்டாதே
ஆனால் வசுதரைக் குழைந்தைமீதி லம்புப்பாணத்தை யேவுமென்றான். (793)

இதுகேட் டுமையாவின் கூட்டத்தார்களெடுத்தே வில்களைத் தாட்டாக்கியே
மதியி னழகான வுசைன்பாலரை வாணந் தனைவிட்டார் மழைமாரிபோற்
சதியால் குழைந்தைமேல் விட்டவாணம் சல்லடை யினைப்போற்றுளையிட்டிட
வுதிரம்சோரியக்கரத்தாலள்ளியுசைனார் குழைந்தைக்குக்கொடுமினென்றான்.

அன்ன காலையிற் சாலிகென்போ ரழுது முகம்வாடி மதிமயங்கி [ரை
யென்னகான் சொல்வே னுசைனர்கென்றே யேங்கி மனநொந்து குழந்தையா
தன்னின் கரத்தினை லெடுத்துப்பார்க்க ஷஹீதா யிருந்திடும் பாலகரை
மன்ன ருசைனர்பால் வந்துசேர்ந்து வசன மிகவோதி மடிமேல்வைத்தார் ()

இந்த வருத்தங்கள் மகனைப்பார்த்தே யிருதய மெல்லா முருகிவாடித்
தந்தை தாரையாய் கண்ணீர்விட்டுத் தளம்பி மனமது கலங்கிச்சோர்ந்தே
யெந்த வகையாயாலே யென்கனியே யிப்படி மோசஞ் செய்தான்பாவி
சந்த்ர வதனமே மணிவிளக்கே சங்கை பொருந்திய வென்பாலரே. (796)

பதம்.

பாலனே நீ மகனே பாலனே நீ கனியே
 பாலனே நீ மணியே பாலனே நீ
பாலனே நீ பாலனே நீ பாவிசெய்த
 மோசமிதோ பாலனே நீ

ஆலந் தனின்மீதே அருமையுள்ள பாலா
 காலவிதி தானோ கண்மணியே சீலா
கண்மணியே வுன்சரீரம் காயமது
 தானச்சே பாலனே நீ.

தாக மதனாலே தன்மை மிகவாகி
 யூக மறியாம லுன்னைவிட்டி யானும்
உன்னை விட்டேன் பகையரிட முலையிலிட்ட
 மெழுகானேன் பாலனே நீ.

தேசமதின் மீதே பாசனுமர் சாது
 வாசனையின் சேயை வாணந்தொ டுத்தானே
வாணத்தி லேதா னெம்மட்டு மாண்டிடவா
 வுனையும் விட்டேன் பாலனே நீ.

ஆதி றகுமானே யேதுசெய்வேன் பூவிற்
 கோதுசெய்த பாவி குவலயத்தின் மீதில்
குவலயத்தி லவன் மயங்கக் கொடுத்திடுவாய்
 தீவினையைப் பாலனே நீ.

தொங்கல்.

மயங்கி யுசைனரும் கண்ணீர்விட்டு மகனை மடிமேல்வைத் தழுகும்போது
தியங்கி மாதாவும் கலங்கிவாடிச் செல்வர் தனைவாங்கி மடிமேல்வைத்தே
தயங்கி மனமது வதனம்சோர்ந்து தணலில் விடுகின்ற மெழுகுபோலாய்த்
துயர மிகவாகிச் சகர்வானுமே சுதனர் தனைபார்த்தங் கழுகுவாரே. (797)

பதம்.

பெற்ற வயிறது பற்றுதே பாலனே
 நற்றவ மணியே நறைக்கனியே
துரைத்தனமே மகனே மனப்பேதகம்
 பேதக மவர்கள் செய்தார் சுதனே.

தேசமீ தெல்லாம் ஆளுவா யென்றும் சிந்தையில்
நினைத்தே னுன்னை வளர்த்தேன்
கனமுருத் தாகிய மகனே யிந்தத் தீவினை தீவினை
வசுதர் செய்தாரோ கனியே
கறுபலா வழிமீதினில் வரக்காலம் தானச்சே
மதிபோச்சே விதியாச்சே மகனே
என்ன காலமோ காலமோ
அறுகிலேன் மணியே
உன்னைநான் பெற்றுவளர்த்த வருமைமை
யுடையவ னறிவான் புவிதனிலே
எவரறிவார் மகனே ஆதியும்பர்கள்
உம்பர்க ளுவந்த கண்ணே பாலகா.

## தொங்கல்

நல்லோர் பாலரை மடிமேல்வைத்து நாதருட தேவி யழுகும்போதில்
மல்ல லம்புய நபியேரனர் வந்து மயிலார்தம் மழுகைமாற்றி
யெல்லா மவனுட விதிதானென்று மிலங்கும் பாலனை யடக்கஞ்செய்து
வல்லோன் புறமென்றங் குசைனர்வாடி மயங்கி யிருக்கின்ற ஆருந்தேதி.

விந்தை யாகிய வுமர்சாதுடன் வெறிய னப்துல்லா ஸையாதுவும்
சந்திப்பாகிய முரசடித்துத் தானை பதாதிகள் மிகச்சூழவே
வந்தார் வாரிலோற் படைமன்னர்கள் வாம்பரி யேறி மடமடத்தே
சிந்தை வெகுண்டொரு பெருவெள்ளமாய்ச் செருனர் முப்பத்தி யையாயிரர்.

அந்த நேரத்தி லப்துல்லாவு மழகு பொருந்திய ஹாரிதுவும்
வந்தே அலிமகர் பாதம்போற்றி வணக்கமாய் நின்று விடைகேட்டனர்
கந்தரப்புயத் தலிமகனர் ஹக்கன் தனைபோற்றித் துஆவிரந்து
சந்திப் பாய்வரும் படையைவெட்டிச் சங்கையுடன் வார்மி னெனப்பகர்ந்தார்.

கதிர்வா ளேந்தியே யிருபேர்களும் கற்கி தனிலேறி வேகத்தோடுங்
கெதிய தாகவே பரிநடத்திக் கிடுகி டென்னவே யனுமனித்துச்
சதிய னெசிதுட படையில்வந்து தடபுடலாக அரிகள்விட்டே
யெதிரி யானோர்கள் நடுநடுங்க இருபே ரரிவிட்டார் தூளெழவே. (801)

இத்தகை யுள்ள பரீட்சைகண்டே யெங்கு ளாரிவ ரெனயோசித்துச்
சுற்றி வளைந்துநின் றெசீதுபடை சொரிந்தார் சரங்களை மழைமாரிபோற்
சத்து ராதிகள் விடுமம்பெல்லாம் தட்டிவாளினர் பொடியதாக்கிப்
பத்தி மிகவுள்ள அப்துல்லாவும் படையில் ஹாரிதும் புகுந்தாரம்மா. (802)

துட்ட ராகிய வுமையாக்களைத் துரத்தி வாளினல் மிகவுந்தாக்கி
யட்ட திசைகளுங் கிடுகிடென்ன ஆதி சேடனு முடிபொடிய
வெட்டி பிளந்தாரே வசுதர்களை விருந்தாய்ப் பருந்துக்கு மிகவளித்தார்
கொட்டு முரசுகள் தனையுடைத்து குவியிர் குவியலாய் குவித்திவிட்டாரே. ()

இந்த விதமாக விருபேர்களு மெசீது படையினைக் கறுவறுத்தார்
சுத்திப்பாய் வந்த யிறந்தபேர்கள் தானு யிரத்தியைந் நூற்றவரே
யந்த நேரமே யிருபேர்களு மதிய தவனம துண்டாகியே
சந்தர மிகுந் தயருநேரம் கருணன் சாமீத்துப் பின்பால்வந்தே. (804)

அப்துல் லாவையும் வாளால்வெட்டி யதின்பின் ஹாரிதை யறுத்தானுடன்
புவியி லிருவரும் பதவியான புன்மை தான்கண்டே யுமறுசாது
சமைய மிஃதென்றே படையோர்களைச் சாரி யாகவே யணிவகுத்தங்
கமையும் கூடாரம் தன்னைச்சுற்றி யலிதன் மகனுரை வளைந்தானப்போ. (805)

அசனுர் மகனுன அலியக்குப் றருளி ஞர்புக ழுசைனுரிடம்
சகியின் வதனத்தி னபிபேரரே தந்தை யாகிய நாயகமே
யெசீது படைவந்து கூட்டமானுர் யான்போய்ச் சமராடி வருவதற்கே
யொசுவி னமுதவாய் திறந்துநீங்க ளுத்தாரந் தந்தே யனுப்புமென்ருர். (806)

அன்ன வுசைனுரு மிதனைக்கேட்டு அல்லா விடத்திலே துஆவிரந்தார்
என்னும் பெரியோனே யாகுத்யே யெனது துணைவரின் மகனுருக்கு
நன்னிலை யான பெலங்கொடுத்தே நல்ல வுதவிகள் செய்வாயென்ன
மன்ன ரலிமகர் விடைகொடுத்து வாழ்த்தி யனுப்பினு ரேகுமென்றே. (807)

மருவின் புயவள்ளல் வசனம்பெற்று வந்து பரிசையா யுதமணிந்து
சரநேர் கதியுள்ள பரியிலேறிச் சாரி மிகவிட்டார் துகளெழும்ப
திருமா தவர்விடும் வேகத்தாலே செருனர் மனங்களு நடுநடுங்கி
யுரைசெய் தனரெசீ தவன்படைஞ ருலகந் தனிலுள்ள ஜின்னேதேவோ. ()

அந்தமில் ஹக்க னலியுல்லாவு மவனி மீதினி லிறங்கிட்டாரே
வெந்த மனிதரோ விவர்தாமென்றங் கிடைந்தே யுமையாக்கள் நிற்கும்போது
சந்திப்பாய் நின்றே யுமறுசாது சாற்றுவா னப்போ துமையாக்கன்பா
லிந்த வீரரு மசனுர்மகனிவர்க்கு வயதுதான் பதினெட்டாகும். (809)

அலியின் புலிகுட்டி யானதாலே யனைவோர் நெருங்காமற் பின்பால்நின்றே
கலின வாம்பரி வருகும்போது கவண்கற் சரங்களை யேவுமென்றுன்
நலமென்றனைவரும் கட்டாய்நின்று நடனத் துடன்பாணந் தனைப்பொழிந்தார்
தங்கள் தனைச்சுற்றி வசுதர்நின்றே தாக்குவா ரப்போ கவண்கல்லாலே. (810)

கண்டே யசன்பாலர் கசையாற்றட்டிக் கற்கி நடத்தியே யலியக்குபார்
றென்று முளநாயன் தனைப்போற்றியே யிறசூல் முகம்மதை மிக்வும்வாழ்த்தி
வண்ட னெசீதுட படைபுகுந்தே வாளால் மிகவெட்டிச் சூறைசெய்தார்
மண்ட லங்களுக் கிடுகிடென்ன வாம்பரி விட்டே யனுமதித்தே. (811)

ஆட்டுக் கிடையுறும் புலிபோலவே யறுத்து வசுதரை பிணக்காடாக்கிப்
பூட்டி யாய்வந்த வுமையாக்களைப் பிடரி தனிலேதான் பிடித்தடித்துக்
கோட்டி மிகவுள்ள றாமிகளைக் குத்தினுர் தண்டாயுதத்தினுலே
வேட்டை யாடியே படையோர்களை மிரளத் தாக்கினுர் வாளினுலே. (812)

குட்டி மலைபோலே பிணங்குவியக் குத்தினுர் பூசை யுமையாக்களைத்
இட்ட மாகிய ரத்தச்சோரி செழுக்கும் நதிபோலே தானேடிட
வட்ட வாருதி கிடந்தசைய வாசுகி முடிநெறு நெறெனை
முட்ட வருவோரைப் பிடித்தடித்து மூளை சிதறவே தாக்கினுரால். (813)

இந்த விதமுள்ள சமரானதி லெசீது படையிலேது யுள்ளஜனம்
நந்தினதுபதி னேழாயிரம் நடுங்கி யுமர்சாது நிற்கும்போதிற்
சந்திப் பிஃதென்றே பரிநடத்தித் தடபுட லாகி யவனேடிட
வந்து சமர்க்கள மசன்மகனுர் மயக்க மிகவாகித் தவனமானுர். (814)

அந்த நேரத்தி லுசைனார்வள்ள லரிய நடத்தியே முடுங்கேகிவ
யெந்தன் கனியான விள்வரசே யேதுநான் செய்வனே தவனத்துக்குக்
கந்த மலர்வாசர் நபியிறசூல் கணையாழி தன்னைக் கழற்றியீந்தார்
சந்த்ர வதனத்தி னலியக்குபார் தயவா யொதுக்கினார் தவனந்தீர்ந்தார். (815)

மன்ன ருசைனாரும் படங்கில்வந்து வல்லோன் தனைப்புகழ்ந் திருக்கும்நேரம்
முன்னு முமர்சாது படையெழுப்பி முழக்க மாய்வந்து வளைந்தானப்போ
தன்னல பேர ரலியக்குபா ரரிவிட் டிறங்கியே மபக்கத்தோடு
மின்னுங் கதிர்வாளுங் கரத்திலேந்தி விமல னேசிதுட படைபுகுந்தார்.(816)

சுற்றி வளைந்துதா னேசிதுபடை தொனிகள் தான்செய்து குதிப்பார்களும்
சுத்திர வடிவாளால் நான்குதிக்கும் செருனர் நெருங்கியே யெறிவார்களும்
இத்தகை யுள்ளசமரினாலே யிறசூல் முகம்மதின் பேரனாரும்
புத்தி மறவாத அலியக்குபர் பாய்ந்தார் வசுதர்மேற் புலிபோலவே. (817)

தீர்க்க மாகவே கரவாளோங்கிச் செருனர் முடிமளும் சிதரத்தாக்கி
யேற்கை யாய்வந்த கருணர்களை யிருதுண்டாகவே பிளந்தெரிந்து
காக்கும பெரியவன் கிருபையென்று கசடர் தனைவெட்டிப் பிணக்காடாக்க
பார்க்கப் பதினாரு கண்கள்வேணும் பாரி லரிபேரர் சமர்செய்வதை. (818)

சுற்றி மிகநின்ற படைமன்னரைத் துரத்தி யலிபேரர் சூறையாடிப்
பத்தி யவர்களைப் பிடித்திழுத்துப் பாரில் முடிவீழ்கப் புரளத்தாத்தி
யித்தகை யுள்ள சமரினாலே யேழா யிரஞ்சனம் புவியில்மாண்டார்
ரத்த சோரியிற் பிணமிதக்க நடுங்கி வசுதர்கள் புறங்காட்டவே. (819)

அந்தச் சமயத்தி லலிதம்பேர ராயாசங் கொண்டார் தவனத்தினாற்
சந்த்ர தவனமும் சோர்ந்துவாடித் தகையோடிருக்கிற தருணத்திலே
வந்தங் கொருசூரன் வாளால்வெட்டி வதைதான் செய்திட்டானசன்பாலரைக்
கந்த ரப்புயத் தலிபேரனார் கருத லார்களங் கிடக்கும்போதில். (820)

அருண னடைந்திரு ளாயினதா லடையலா ரெல்லாந் தானேகினார்
பொறுமை மிகவுள்ள வுசைனார்வள்ளல் புதல்வர் காசிமும் தாமுமாக
உரிமையாகிய சுதரைத்தேடி யொழுங்காய் சமர்க்களம் பார்க்கும்போதி
லிறசூல் முகம்மது கணையாழியுமிலங்கு வெளிச்சத்தா லவரைக்கண்டே.(821

மதியி னழகுள்ள அலிபேரரை வாகா யிருவரும் தூக்கிவந்தே
துதிசேர் கூடாரந் தனிலிறக்கிச் சுதனார் தனைப்பார்த்தங் குசைனார்வள்ளல்
விதிக ளிதுதானோ வென்பாலரே விமல னேசிதுட கோதினாலே
சதிகள் செய்தானோ வென்கனியைத் தக்க பெரியோனே யாறகீமே. (822)

என்னை யடக்கம்நீ காண்பாயென்றே யிருதய மீதில் நானினைத்தே
னுன்னை யடக்கமா யானுங்காண வுடையோன் விதித்திட்டானென்பாலரே
மன்னர் தம்க்கெல்லா மரிசிம்மறே பாவா பெலமுள்ள மணிவிளக்கே
இன்ன கறுபலாத் தனிலிருந்தே யிடைந்தே யுருகவு மிறையோன் செய்தான்.

224311
சென்னை-600 008

இந்த விதமாகப் பெண்மாதரு மில்லாதங் கதிருநல் காசிமுமவைத்
தந்த தாரையாய் கண்ணீர்விட்டுத் தளமப் பலாத அவைகூறுசெய்தே
யந்த விரவிலே யசன்பாலரை யடக்கந் தான்செய்தா ரழகாகவே
சிந்தை மயங்கியே யிருக்கும்நேரம் செப்புவா ரப்போ காசிமுமே. (824)

எங்கள தமக்கெல்லா நாயகமே யிறசூல் முகம்மது பேரனரே
சங்கை யாகவே யேகினாளைச் சமரந் தான்செய்து வாரேனென்றார்
சிங்கப் புலிமக ரிதனைக்கேட்டுச் சிறந்த அமிர்தவாய் திறந்துசொல்வார்
செங்கை யுளவேந்த ரசனுர்வள்ளல் செல்வராய் வந்த மணிவிளக்கே. (825)

உங்கள் தகப்பனு ரொசிய்யத்தைப்போ லுமக்கே கலியாணம் செய்யவேணும்
தங்க மயமான கனியேயென்று தழுவி மிகச்சொன்னு ருசைனுர்வள்ளல்
திங்கள் வதனத்தார் வசனங்கேட்டுச் சிறந்த மகனுரும் சரிதானென்றே
சிங்கப் புலிமகர் மகளார்தம்மைச் சிறந்த காசிமார் மணமுடித்தார். (826)

தேனுஞ சீனியும் போலாகவும் சிறந்த காசிமும் தேவியாரும்
வானின் கதிர்மதி போலாகவே வாரா ரிருவருங் கூடாரத்திற்
பானின் கதிரவ னுதயமானுன் படைக ளெழுமென்று னுமர்சையாது
நானில முள்ள வசுதர்களில் நாலேந் திருபதா யிரவர்சூழ. (827)

பேரி முரசுகள் திடுதிடென்னப் பிடிகளெக் காளம் மடமடென்ன
வாரி யதுபோலே படையெழுப்பி வந்து சமர்க்களத் தனிலேநின்றார்
நேர்மை பொருந்திய காசிமுமே நிலத்திற் சமர்செய்ய மனந்துணிந்தே
கார்மைக் குடைநிழல் நபிபேரரின் கதத்தைப் போற்றியே யுரைசெய்குவார்.

அன்னு ளானது முஹர்றமாத மதனி லுறுந்தேதி யேழானதில்
மன்னர் காசிமு முசைனுரிடம் வழுத்தினு ரப்போ தமிர்தவாயா
லின்னு ளெசீதுட படையிலேகி யானும் சமர்செய்து வருவதற்கே [ரூர்.
யென்னும் பெரியவன் கிருபையாலே யெனக்கு விடைகொடுத் தனுப்புமென்

தன்னு லுசைனுரும் வதனம்பார்த்துத் தாரை யாகவே கண்ணீர்விட்டு
மன்னர் தான்சொல்வா ரெனதுகண்ணே மணத்தின் கோலமா யிருப்பதாலே
யென்ன வுத்தாரங் கேட்கலானீர் யானு மெவ்விதம் விடைகொடுப்பேன்
கண்ணின் மணியான யென்பாலரே கனியே நீர்போக வேண்டாமென்றார். ()

எங்கள் தகப்பனு ரொசிய்யத்துப்போல் யானே சமர்செய்திங் குமக்குமன்னே
பொங்க மாகிய படைமீதினிற் போயே சமர்செய்து ஷஹீதாகவே
தங்க மகமேரே விடைதா வெனத் தழுவ வுத்தாரங் கொடுத்தாரப்போ
சிங்கப் புலிபேரர் பரிசைதாங்கிச் சிறந்த பரியேறி நடத்தினரே. (831)

வெள்ள மாய்வரும் படையிலேகி வேக்த் துடனவர் பரியேகி
யள்ளிலே வேலுங் கதிர்வாள்மின்ன அலியின் பேரனர் சமரிலேகி
துள்ளிட முடன் செந்துளாகத் துரகதம் விட்டே நடத்துமபோதில்
மள்ளர் வசுதர்க ளுமையாக்கள் தாம் வழுத்துவா ரப்போ மனமஞ்சியே. (832)

சென்னை-600 008

ஜின்னே பரிதேவோ புவியில்வந்து சினந்து பரிவிள லானதேதா
னென்ன மாயமோர் தெரியவில்லையிறையோ னலிப்புலி யிறங்கிட்டாரோ
இன்று ளிதுசமர் விடவொணுதென் றேகமாய் வந்து தான்வளைந்து
மன்னர் காசிமே லம்புபாண மழைமா ரியைப்போல வசுதர்விட்டார். (833)

திருதி கெனவரு மம்பையெல்லாம் சிங்கப் புலிபேரர் கசையாற்றட்டிப்
புகுந்தார் படையிலே சிங்கேறுபோல் போட்டார் வாளாலே வசுதர்களை
மிகுந்த வுமையா:க்கள் தலையறுத்தார் வெள்ளம்போல் ரத்தச் சோரியோடத்
தகுதி யாகிய பூமிகளைத் தாக்கினு ரப்போ தலிபேரனர். (834)

பரியை நடத்தியே நான்குதிக்கும் பம்பரம் போலே மிகவுஞ்சுற்றிக்
கருத லார்களை முடிதூளாக்கிக் கவண்கற் காரரைப் புயத்தில்வெட்டி
யுரங்க ளறுந்திடச் சூரர்களை யுருளும் படியாக முடிதறித்தே
அறங்கள் விளங்கிய அசனர்மக ரவர்கள்தா நின்றார் சிம்மேறுபோல். (835)

எசீது படைமீதி லிறந்தபேர்க ளேழா யிரத்தஞ்நூ றவர்களாகும்
இசைய வமர்செய்ய முடியாதென்றே யெடுத்தா ரோட்டந்தா னெசீதுபடை
சசியின் வதனத்தி னலிபேரனர் சடிலம் திரிப்பியப் படங்கில்வந்தே
அசனர் பாலருந் தானிறங்கி யலிதம் மகனர்தம் பாதம்போற்றி. (836)

இருந்தார் காசிமுங் கூடாரத்தி லெசீது படைவந்து வளைந்தாரப்போ
மருவின் மலர்வாசர் வரமும்பெற்று வாளுங் கதிர்வேலுங் கரத்திலேந்திச்
சரகதி யுள்ள பரியிலேறிச் சாரிதான் விட்டே அசனின்பாலர்
பெருகும் பிரளயந் தனிதாகியே பிசபீற் செய்யத் துணிந்தாரம்மா. (837)

## வேறு.

வாளினாற் றாக்கி வசுதரைப் பிளந்து வாம்பரி தன்னையே நடத்தித்
தூளியே பறக்கச் செருநரை யறுத்தே துணுக்கிடச் சமர்க்களந் தனிலே
ஆளியி னுயர்வா ரவர்களைத் துரத்தி யடித்தனர் சிதறிட மடத்தே
கோளனவ் வுமறு சாதுளங் கலங்கக் குரகதம் நடத்தியே களத்தில். (838)

சேடனு நடுங்கத் திசைகளு மதிரச் சேனுல கும்பர்கள் வாழ்த்த
ஆடலம் பரியி லிருந்திடும் பெயரை யறுத்துவிட் டெறிந்துகை வாளா [துச்
லோடிட வடித்தே யொருவனைப் பிடித்தங் குயர்த்தியே யொருவன்மே லடித்
சாடிடும் பெயரைத் தகர்த்துயிர் மாய்த்துச் சடிலத்தை நடத்தினர் காசீம். ()

கரங்களு மறுந்து கற்கிவிட் டெழுந்து கதறியே கிடப்பவர் சிலரே
யுரங்களு மறுந்து உடல்களுஞ் சிதறி யுளறியே கிடப்பவர் சிலரே
மரங்கள்போற் பிணங்கள் சோரியின் மிதந்தே மாண்டுடல் கிடப்பவர் சிலரே
யறங்களின் மிடிந்த ஆலிதம்பேர ரமரினிற் றாக்கினின் றனரால். (840)

## தொங்கல்.

இந்த விதமாக அரசனர்மகரெசீது படையிலே தாக்கும்போதி
லக்க வசுதரில் மாண்டஜன மமரி லாயிரத் தஞ்ஞூறுபேர்
சந்திப் பாகாம லெசீதுபடை தன்னற் புறங்காட்டி யோடுகேரங்
சிந்தைவெகுண்டுதா னுமர்சாதுவும் தீயன்சரக்கைப் பார்த்துச்சொல்லுவான்.

ஏண்டா அசறக்கே யுனக்குநாம ளெதுக்காய் நிதியதி கமதாய்த்தாரோம்
மாண்டார் நமதுட படைக்கூட்டந்தான் வையமீதுள்ள கறுபலாவிற்
காண்டாய் நீபார்த்தே யிருப்பதென்ன காசீ முடன்சமர் பொருதிடாம
வேண்டா பலிசண்டை செய்மினென்றே யியம்பினு னப்போ துமறுசாது. ()

தனக்க வாய்சொன்ன வசனங்கேட்டுக் கசட னசறக்கு முறைசெய்குவா
னெனக்குச் சரியான புலிகளோடும் யான்று சமர்செய்வே னிப்பூமியிற்
றனக்கு மதிப்பில்லாத் தன்மையாலே சாற்றிநீ ரிப்போ திதுவசனந்
தினுக்கு மாகிய மகர்நால்வரிற் றிறலோ னொருவனை யனுப்பினுக்கால். (843)

காசீம் தனையுமே யொருநொடிக்குட் கட்டி நமதிடம் கொணர்ந்திடுவான்
தேசந் தனில்நீயு மறிவாயென்று தீர னசறக்கு மகனையேவ
வாசி தானேறி வாளுந்தாங்கி வந்தா னொருபுலி போற்சமரில்
வீசி வாளையும் பரிசைகாட்டி விமலன் மகன்வந்தான் காசீம்பாலில். (844)

வந்தங் கவனுமே வாளால்வெட்ட வள்ள லசன்பாலர் கையாற் றுங்கிச்
சந்திப் பாய்நின்ற திரலோன் தன்னைச் சங்கை யுளகாசீம் வாளாற்றுக்கப்
புந்தி மயங்கியே யிருதுண்டாகிப் புரண்டு விழுந்தானே கொடியோனிவன்
சிந்தை வெகுண்டுதா னினுமொருவன் திடுதி டென்னவே பரிநடத்தி. (845)

அலிதம் பேரனர் காசீம் தன்பா லவசியம் வந்தே வாளால்வெட்டப்
புலிபோல் மிகநின்று கசையாற்றுங்கிப் போட்டார் வாளினுல் மடமடத்தே
கலின வாம்பரி யவனுமாகக் கதறிப் பிளவதாய் விழுந்திறந்தான்
வலுவா யொருவீரன் பரிநடத்தி வந்து காசீமை வாளாற்றுக்க. (846)

சிங்கம் போல்நின்று கசையாற்றுங்கிச் சிரசி லவனைத்தான் வாளால்வெட்டப்
பங்கி ரண்டதாய் முடிபிளந்து பரியு மவனுமாய் விழுந்திறந்தான்
தங்கு மிளையவன் பரிநடத்திச் சமுகம் தான்வந்தே காசீம்தம்மைக்
கங்குல் வருமின்போல் வாளால்வெட்டக் கசையாலதைத்தாங்கி னுர்காசிமே.

துட்டன் தன்னையே வாளாற்றுக்கத் துண்டாய் விழுந்தவ னிறந்தபின்னர்
பொட்ட அசறர்குங் கோபமாகிப் புதியவா ளேந்திப் படபடத்தே
திட்ட மாகிய பரியிலேறிச் சினந்தே யரிவிட்டங் கவரிடத்தில்
வெட்டுறேன் பார்மி னுனைநானென்று வேகத் துடன்சீறி முன்னில்வந்தான்.

அந்த நேரத்தி லசனுர்மக ரருளுவா ரப்போ தசறக்கேநீ
யிந்தப் புவியுள்ள தலைவனென்று மென்முன் னேவந்து கோபங்கொண்டா -
யுந்தன் பரிவாரை யிறுக்கிடாம லொழுங்குநீ பேசத் தகும்மியெட
எந்த விதத்தினுர் சமர்த்துரைத்தா யிறுக்கெடா வாரை யசரக்கென்றுர். ()

அன்ன காசிம்தா னருளக்கேட்டே ஆச்ச ரீகமா யசறக்கவன்
பின்னுர் குனிந்தவா ரிறுக்கப்பார்த்தான் பிடரிதன்னிற் போட்டார் வாளினுல்
தன்னின் சிரசற்று தரைமேல்வீழ்ந்து சாத னிறந்தானே புவிமீதினில் )
மன்னர் காசீமும் பரிநடத்தி வந்து கூடாரந் தனிலிருந்தார். (850

ஈது படிநிற்க வுமறுசாது மென்ன மோசங்க ளானதென்றே
யேது வாகவே பதினயிர மிகலும் படைகளைத் திரட்டிமன்னன்
வாது புரியவே முரசடித்தே வந்து சமர்க்களம் தனிலேநின்றான்
நாத ரசன்பாலர் காசிமப்போ நல்லோ ருசைனர்தம் பாதம்போற்றி. (851)

ஆல முகம்மதின் பேரனரே அவசியம் வரங் கொடுங்களென்று
சால னுடபடைச் சமர்க்களத்திற் சங்கமாய் வந்து முரசடித்தான்
கால விதிதானே தந்தையரே கறுபலா வந்து விசனமுற்றோம்
மேலோன் தனைப்போற்றி விடையருளும் விளங்குமணிமுத்தேநீங்களென்றார்

பாலர் மொழிகேட்டே யுசைனர் வள்ளல் பதரி மனஃ துருகிவாடி
வாலக் கதிர்மேனி யென்பாலரே வள்ள லசனர்தம் மணிவிளக்கே
மேலோன் கிருபையால் மாதாவுக்கும் விளம்பி யீங்களின் மனையாளுக்கு
மாலா வுரையோதிப் படையிலேகுமன்னேயென தாட கனியேயென்றார்.(853)

சொன்ன பிரகாரம் படங்கில்வந்து துலங்கு மாதாவின் வரமும்பெற்றுத்
தன்னின் மனைவியார் சமுகமானர் தாட்சி யுடன்மயில் தானெழுந்தே
மின்னு மலர்ப்பாத முவந்துபோற்றி விரும்பி யிருங்களென் றுரைத்தபோதில்
மன்னர் காசிமும் கண்ணீர்விட்டு வழுத்துவா ரப்போ மனைவியார்பால். (854)

எந்தன் மனைவியே யிளங்கரும்பே யெசீது படைவந்து வளைந்துக்கொண்டார்
உந்தன் மனங்களும் பூரிப்பாகி யுத்தா ரங்கொடுத் தனுப்புமென்றார்
அந்த மொழிகேட்டே குசைனர்மகள் ஆயாசத்தோடு கண்ணீர்சோர்ந்தோ
சிந்தை கலங்கியே வதனம்வாடிச் செப்புவா ரப்போ திளமயிலாற். (855)

சுத்தம் பொருந்திய ரத்தினமே துலங்கும் நாச்சியார் பேரனரே
பத்தி மிகவுள்ள என்பத்தாவே பாரியாள் மன துருகுதிப்போ
சித்தங் கலங்கிறே னயகமே தெளிவு பொருந்தியமேனிமீதில்
ரெத்த வாடைதான் மணக்குதிதோ நேசரே யெங்க ளாண்டகையே. (856)

எந்த னுவியும் புவிமீதினில் யானு மிங்வைத்திங் கிருக்கவோதான்
சந்த்ர வதனத்தின் தாயாபரரே தயங்கு தேமன மயங்குதென்று
ரந்த நேரமே யப்துல்காசி மவர்தம் கரத்தினர் கண்ணீர்மாற்றிச்
செந்தா மரைப்பாதர் துயிலெடுத்துச் சிறந்த வாபரணமணிந்தே. (857)

வச்ர மணிப்புய தரிசிம்மேறு வந்தார் வெளிமீதில் முகமிலங்கக்
கச்சிக் குதிரையைச் சிங்காரித்தே காசி மவர்வாளும் கரத்திலேந்தி
முச்செக மெல்லாம் புகழுமான முகம்ம திரசூலே மிகவும்போற்றி
யச்ச மணுவில்லா மனதினேடு மகனர் பாலரும் பரியிலேறி. (858)

விட்டார் குதிரையை வேகத்தோடும் விமலன் படைகளு நடுநடுங்க
துட்ட ருமைபாக்கள் பயந்தஞ்சிடத் துலங்கும் சமர்க்களம் தன்னில்வந்தார்
மட்டி யாகிய வுமர்சையாது வாம்பரி யேறிமடமடத்தே
திட்ட மாய்நின்ற படையோர்களைச் சிறந்த பாணங்கள் பொழிமினென்றான்,()

நான்கு திசையில்நின் றெசிதுபடை நடன மாகவே தொனிகள்செய்தார்
பாங்காய் வருகின்ற சரபாணத்தைப் பாலர் காசிமுங் கசையாற்றட்டி
வேங்கை போலாகப் படைபுகுந்தே விரட்டி யவர்களைப் பிளத்தாக்கித்
தாங்கும் வாளினாற் கருவறுத்துக் சடலங் குவியவே ரணக்களத்தில் (860)

வந்த படையிலே மூவாயிரர் வசுதர் தங்களைக் கருவறுத்துச்
சந்திப் பாகவே காசிமவர் தவன மயக்கமு மிகவுண்டாகிச்
சிந்தை கலங்கியே நிற்குப்போதிற் செருன ஞெருவனே பின்னால்நின்று
மந்தரக் கதிர் வாளாற்குக்க மன்னர் காசிமுங் குடல்சரிந்தே. (861)

மயக்கந் தானாகிப் புவில்வீழ்ந்தார் வந்தார் வசுதர்கள் தலையறுக்கச்
செயத்தோர் பரியது சினமதாகிச் செருனர் தனைக்கடித் திழுக்கும்போதிற்
பயத்தி னுடன்படை பின்வாங்கினர் பரிமே லுசைனாருங் கதியாய்வந்து
சுயத்தி னுமையாவை வாளால்வெட்டிக் கற்கி தனில்வைத்தே காசிம்தமை. ()

அலிதம் மகனாரும் படங்கில் வந்தே யரிவிட் டிறங்கியே மகனைதெம்மைத்
தலமீ தினில்வைத்தே கண்ணீர்விட்டார் தால மிருளாகக் கதிரடைந்தான்
நலங்கள் பொருந்திய வுசைனார்வள்ளல் நல்லோரினின் பாலர் காயம்பார்த்து
பெலங்கள் குறைந்தேனென் றலிமகனார் பெரியோன் றனைநாடிப் புலம்பினரே

## பதம்.

என்ன செய்குவே னேது செய்குவே னெந்த னாதியே
எனக்கே னிந்தச் சோதனை
மன்னர் மணியே யெனது கனியே வைமீதிலே
நான் மயங்க லானேனே

பீமி தனிலே யெசிது படைகள் பொங்குதே நதிபோல்
இஃதெங் கிருந்ததோ
காமிலான பெரியவர்க் கெல்லாம் கனிதானீ யல்லோ
நவமணியின் பாலரே.

## தொங்கல்.

காணாக் கருகூல மானபாலர் கறுப லாவந்தே காயமாகத்
தானேன் தலையிலே யெழுதினனோ தங்க மயமான வென்கனியே
நானே கலங்கிறேன் நவமணியே நாய னெனக்கிட்ட விதிதானென்றார்
மானின் வடிவான மாதாவந்து மகனார் காயம்பார்த்து தழுவதானார். (864)

## பதம்.

காயமென்ன மகனே காயமென்ன கனியே காயமென்ன
காயமென்ன காயமென்ன கனியுடைய தேகத்தில் காயமென்ன
காலை மணவாசம் வாடிலையே ஆதியே
கால விதிதானோ கண்ணி நன்மணியார்க்குக்

கண்மணியே யுனைப்பார்த்துக் கருகிறேனே யுன்தாயார் காயமென்ன
வால கதிர்போற் பாலருட மேனி
ஆலந் தனின்மீதே ஆனதென்ன சோதி
ஆனதென்ன எனது கண்ணே ஆருசெய்த மோசமிது காயமென்ன.

## தொங்கல்.

காயந் தனைப்பார்த்து மாதாவுமே கலங்கி யழுகிற சமயத்திலே
மாய மிஃதென்ன காலமென்றே வந்தே யுசைனார்தம் மகளாரப்போ
தூய றகுமானே யாகுதாயே துன்ப மிஃதென்ன கணவனுக்கு
நாய னேறகு மானேயென்றும் நலமா யழுதுதான் புலம்பினரே. (865)

## பதம்.

கறுபலா வழியிற் கலியாணம் செய்திடவுங் காலமோ
விதிகற்பனை தனை யாலமீதினி லாதி நாயனே
யாரிடம் சொல்லுவே னருணைச்சியார் பாலனே
யேதுநான் செய்குவே னெனின்பத்தின் மணியே
யேது செய்குவேன் பூதலந் தனிற் பாதகருள்ள
பாரின் மீதிலே பாக்கிய மிஃதோ இந்தப் பாவனையறிய.

நானிலந் தன்னில் மாபியாவந்து நபிதமை யடுத்தார் பகைதொடுத்தார்
திசை தனிலே யிவையே அந்த நாளிலே நாளிலே சதிகொடுத்தானெசிது [சின்
ஆறுவனோ மனந்தேறுவனோ மதிஆலத் துக்கரசே அருட்குறைஷிக் குலத்தர
மணியே யென்னை யாகிற மாகிறம் அழைத்திடுவீர்- (866)

## தொங்கல்,

இந்த விதமாக வனைவோர்களு மிருதயம் வாடி யழுகும்போதி
லந்த விரவினி லசனார்பால ரதிக மயக்கமுற் றிருக்கும்நேரம்
வந்த கூறுல்ஹீன் கரத்தில்மீதில் வாச வமிர்தத்தின் கிண்ணமேந்தி
சந்த்ர வதனரே யமிர்தமுண்ணத் தாங்கள் வாருமென் றுரைத்தாரப்போ. ()

காசி மவர்களுங் கண்விழித்தே கவல்வார் கண்ணீர்தான் சொரிந்துமிகத்
தேசந் தனில்நீங்க ளழுகவேண்டாம் சிறந்த பெரியவ னுண்டுமென
நேச மிகவுள்ள மனைவியாரே நீங்கள் சுவனத்தில் வந்தீராறு
வாச மாயெனின் சட்டைமீதின் வலமாய் வருதல்கண் டறிமினென்றார் (868)

நல்லோர் வசனங்கள் மிகவோதியே நாய னருளினாற் பதவிசேர்ந்தா
ரெல்லா மவனுட பண்பாலென்று மெடுத்தங் கடக்கியே வுசைனார்வள்ளல்
அல்லா தனைத்தொழு தலிமகனா ராயாசங் கொண்டே மனதுநொந்து
வல்லோன் தனைநாடி யிரவானதில் வருத்த மிகவாகிப் புலம்பினரே. (869)

தைய லார்களும் யானுமாகத் தவங்க லாச்சுதே கறுபலாவிற்
கையி லொருவருந் துணையில்லையே ஹக்கு பெரியோனே யாகுதாயே
வைய மீதிலே யினிமேலுக்கு வாழ்வுதான் வேண்டாம் யாறகீமே
ஐயப் படுத்தாம லென்னுவியை யழைத்துக்கொள்ளென்றன் றப்பனுவே. (870)

எந்த ஞதியே யாறகூலே யெனது பிதாவான அலியுல்லாவே
சந்த்ர வதனத்தி னென்தாயாரே சங்கைபொருந்திய தமயனுரே
யிந்தக் கறுபலா வழிமீதினி லிருந்து புலம்புறே னிதயம்வாடி (வே
வந்திங் கொருதோற்றம் சொல்லொண்ணுதோ முகம்மதேயெங்கள் முஸ்தபா

எண்ணி யிவ்விதங் கரைந்துவாடி யிருந்து புலம்பியே யிருக்குநேரம்
தன்னுல் மயக்கமு மிகவுண்டாகிச் சாய்ந்தார் தரைமீதி லுசைனுர்வள்ளல்
மன்னர் முகம்மது நபிநாயகம் வந்து கனவினி லுரைசெய்தனர்
கண்ணின் மணியான பேரனுரே கலங்கநீர் வேண்டாம் புவிமீதிலே. (872)

சுத்த யுத்தங்கள் பத்தாந்தேதி துரகத மேறிச் சமராடுவீர்
மெத்த மயக்கமாய் தரையில்வீழ்ந்தே விதியின் படியாகப் புவிமீதினி
லத்தி னத்திலே யடையாளத்த னவன்தான் சங்கினும் தலையருப்பான்
கத்த னருளாளே ஷஹீதாகியென் கண்ணே சுவர்க்கத்தில் வருவீரென்ருர். ()

ஈதே பிரகாரங் கனவுகண்டங் கிடைந்தே குசைனுர்தா மெழுந்துசொல்வார்
சோதி பெரியோனே சுடர்மணியே துயிலு ணில்லாத துய்யவனே
ஆதியே யுன்ற னருளீதென்றே அலிதம் மகனுரு மிருக்குநேரம்
பூத லங்களும் வெளுப்பதாகிப் புதியோன் தனைத்தொழு திருந்தாரப்போ. ()

அன்ன காலையி லுமறுசாது மப்துல் லாசையா திருபேர்களு
மின்னுட் சமரிலே யுசைனுர்கொல்ல வெழுமின் படைகளின் றியம்பினுனே
சொன்ன படிபோல யெசீதுபடை துரக தத்தேரிச் சாரியாக
மின்னும் வாளயிற் கதிரிழங்க விளங்கு முரசுகள் பிடிமுழங்க. (875)

வந்தான் படைமுப்பத் தேழாயிரம் வாரிபோலவே சமர்க்களத்தில்
லந்த நேரத்தில் சாலிகென்போ ரலியார் மகன்பாதம் பணிந்துபோற்றி
சந்திப் பாய்நின்ற பறியிலேறித் தன்னின் கரவாளுங் கதிரிலங்க
விந்தை யாகிய சமர்க்களத்தில் வேகத் துடன்வந்து சாரிசெய்தார். (876)

அதுகண் டனைவரும் வந்துசூழ்ந்தே யம்பா லெறிவோரும் கவண்கல்லாலே
சதிகளாகவே வாளினுலே தாக்கி யதிகமாய்ப் பின்னிற்பாரும்
எதிரி யோர்விடும் பரிசையெல்லா மிளவல் சாலிகு வேலாற்றட்டிக்
கெதிக ளாகவே பரிகடத்திக் கெடியதாய் நின்றுதாக்கினுரே. (877)

சுற்றி வருகின்ற மருவலரைத் துண்ட தாகவே வாளால்வெட்டிச்
சத்தம் தொனியாகத் தரியலரைத் தடபுட லாகத் திகைக்கவிட்டுச்

பத்தி மிகவுள்ள சாலிகென்போர் பாங்காய் வசுதரைப் பிணக்காடாக்கி
யெத்த லங்களுங் கிடுகிடென்ன இலங்கும் பரிவிட்டே சமரஞ்செய்தார்.(878)

இந்த விதமான சமரானதி லிரண்டா யிரத்தினூ ரவர்கள்மாண்டா
ரந்த நேரத்தில்சாலிகுமே ஆயாசங் கொண்டே தவனமானார்
வந்து ஹச்சானும் புரத்தில்நின்று வாளாற் றுக்கினன் ஷஹீதாகினர்
சந்திப்பாகவே யுசைனர்வள்ளல் சடில மிசையேரிக் கதிர்வாட்டாங்கி. (879)

அன்ன வுசைனரும் வாராரென்றே யடையலா ரெல்லாம் விரைந்தோடினர்
மன்ன ரவிமக ரிறங்கிப்பூவில் வாகாய்ச்சாலிகை யடக்கஞ்செய்தே
முன்னும் பரியேறிப் படங்கில்வந்து முகம்ம திறசூலை யுவந்திருந்தா
ரென்னும் சூரியன் மேற்றிதிசையிலேகி யடையவு மிரவானதே. (880)

அன்று பொழுதுபோய் மறுநாளினி லப்துல்லா வையா துமறுசாதும்
வென்றி யுடன்படை மிகவும்சேர்த்து விளங்கும் படியான மதிகளோதித்
தண்டா யுதக்காரர் மிகவுஞ்சூழச் சரகதி யுள்ள குதிரைகளும்
மண்ட லந்தனிற் பெருக்கமாக்கி வாரிபோலவே யிருக்கும்போதில். (881)

கதிரோ னடைந்துதான் மறுநாளினிற் கவலுவா னப்போ துமர்செய்யாது
மதியி னழகான வுசைநார்தம்மை வதைத்து விட்டிவன் வந்தோருக்குப்
பதியி லொருநாடும்நாம்கொடுப்போம் படைகள் தனக்கெல்லாம் நிதயுமீவோம்
நதிபோ லாகவே படைவெள்ளங்கள் நாடி யெழுமினென் றுரைத்தானப்போ.

உரைத்த வசனத்தாற் படைமன்னர்க ளொழுங்காய் மிகநின்றே பரிசைதாங்
திறத்தோர்யாவரும் பரியிலேறிச் செண்டாக்கொடிகளுந் திகுதிகென்னக் [கித்
கரைத்த மதசலம் கரிபரிகள் காலாட்சேனைகள் சாரியாக
இரைச்சல் மிகவுள்ள கடலைபோலே யெழுப தாயிரம் ஜனமெழுந்தார். (883).

மண்ட லங்களுங் கிடுகிடென்ன வானி னிடிபோலே முரசதிரச்
சண்டாக் கொடிகளுங் கரிபரியும் திமிர்ந்து வருகவே பெருங்கடல்போற்
றண்டா யுத்தகாரர் சவளங் குந்தம் த்ரைவாட்கார ரணியதாகச்
சண்ட மாருதம் போலேவந்து தனியோ னவிமகர் தனைவளைந்தார். (884)

இதுகண் டுசைனருங் கலனணிந்தே யிறசூல் கொடுத்திடும் வாள்கையேந்தி
கெதியி லுயர்வான சுல்சுனவிற் கிருபை யுளநாதர் பரியிலேறி
யதிப ராகிய நபியைப்போற்றி யன்னை பிதாவையு முவந்துவாழ்த்தி
மதிபோ லிலங்கிய வுசைனர்வள்ளல் வாம்பரி மிசை யிருக்கும்போதில்.(885)

உசைன ருடதங்கை யும்மு குல்தூ முடையோன் தனைநினைந் துருகிவாடிச்
சசியி னழகான சகர்வானுமே சஞ்ச லக்கடல் தன்னில்மூழ்கி
வஜிகா முள்ள யிருமாதரும் வந்தங் குசைனர்பால் கண்ணீர் விட்டே
குசையின் பரிதனைக் கரம்பிடித்துக் குயில்மா னிருபேரு முரைசெய்குவார். ()

எங்கள் தமக்கெல்லாம் தங்கமேரே யிறசூல் முகம்மது பேரனாரே
சங்கை பொருந்திய மணிவிளக்கே சமரந் தான்செய்யத் துணிந்தீர்களே

யங்கம் பறக்குதே நவமணியே யாதா வென்ன பெண்மாதர்க்குச்
சிங்க மகமேநீ போகவேண்டாம் சிறந்த கூடார மிருங்களென்றார். (887)

அந்த மொழிகேட்டங் கலிமகனா ரருளுவா ரப்போ கண்ணீர்விட்டே
யிந்தப் படைமீதி லேகாவிட்டா லெல்லோர் தமக்குமே மோசமாகும்
சந்திப் பாகுதே வெசிதுபடை ஜல்தி யாய்க்குசை விடுமினென்றார்
தந்த தாரையாய்க் கண்ணீர்விட்டுச் சகர்வான் குல்தூமும் விலகினாரே. (888)

வாசி நடத்தியே யுசைனார்வள்ளல் வந்து சமறகளம் நிற்கும்போதிற்
பாச னெசீதுதன் படைமன்னர்கள் பாங்காய் வளைந்துதா னுலுதிக்கும்
பூச லாகவே கவண்கல்லம்பொற் புகழ்ச்சி யோர்மேலே யேவினார்கள்
போசர் நபியுல்லா பேரனாரும் பொடிப்பொடியாக வேலாற்றட்டி. (889)

அட்ட கிரிகளுங் கிடுகிடென்ன ஆதி சேடனு முடிநெறென்ன
விட்டார் குதிரையைப் படையினூடே வினைய னெசிதவன் சனநடுங்கத்
திட்ட மாகிய சமுகவாளைச் சிறந்த முடிவேந்தர் கரத்திலேந்தி
வெட்டிப் பிளந்தாரே வுமையாக்களை வெள்ளம் போல்ரத்தஞ் சோரியோட.()

முட்ட வருவோரைப் பிடித்தடித்து மூளை சிதரிட வாளாற்றாக்கித்
துட்ட ராய்வந்த வயவீரரைத் தூரததி யவர்களை முடிகள்வீழ்த்திச்
சட்டந் தவரிய பட்டர்களைத் தாக்கிப் பொல்லாரைக் கருவறுத்துக்
கட்டு மரம்போலே பிணமிதக்கக் கால்நதிசோரி யானதம்மா. (891)

இந்த விதமாக லுகர்மட்டிலு மிறையோ னபிபேரர் சமர் செய்ததாற்
பந்திப் பாய்வந்த எசீது வெள்ளச் சனங்க ளிருபதா யிரமிக்க
இந்த வாறுதான் கொல்வானென்றே யெசீது படைகளு மோடிநின்ற
ரந்தச் சமயத்தி லுசைனார் வள்ள லதிகத் தவனமுமுண்டாகியே. (892)

பரிமேல் மயங்கியே யிருக்கும்போதிற் பாங்கா யுமர்சாது மிதையறிந்து
சரங்கள் தனைவிட்டான் மழைமாரிபோற் றட்ட முடியாத மயக்கத்தாலே
இறையோ னலிமகர் கதிற்மேனியி லெழுபது காயந் தானாகியே
தரையில் மயக்கமாய்த் தான்விழுந்தார் சமர்க்க ளத்தோடு சோரிமீதில். (893)

இதுகண் டுமற்சாது மகிழ்ச்சியோடு மியம்புவா னப்போ படையோற்கெல்லா
மதியி னழகான வுசைனாற்வள்ளல் வாம்பரி விட்டு தரையில் வீழ்ந்தார்
சதிகள் தான்செய்து வாங்கஎன்று சாற்றினா னப்போ துமர்சையாது
கெதியி னோட்டமாய் படையோற்வந்து கிட்ட வனுகாமற் சுற்றிநின்றார். ()

அந்த நேரமீதி லலிமகனா ரப்போ தெளிச்சியா யெழுந்திருந்து
சந்த்ர வதனத்தி னுசைனார் வள்ளல் தவனம் பொருக்காமல் மதிமயங்கி
விந்தை யாகிய ரத்தசோரி வளங்கு மலர்க்கரந் தனிலள்ளியே
இந்த ரத்தத்தைக் குடிப்போமென்றேயெண்ணி யமிர்தவாய்ச் சமுகமீதில். ()

அன்னாற் கொடுபோக அந்தநேரம் ஆகாசந்தனிற் சத்தங்கேட்டார்
என்ன மொழியென்றும் வானிற்பார்க்க இலங்கு மாதாவு முரைசெய்குவார்

கண்ணின் மணியான என்மகனே கனியே யெனதுட நவமணியே
யெண்ணிக் கரைகிறே னுன்மாதாவு மிறசூல் முகம்மது பேரனரே. (896)

சுத்தம் பொருந்திய மணிவிளக்கே துலங்கும் படியான வுசைனார்வள்ளல்
ரத்த சோரியை யருந்தவேண்டாம் நேர்மை தவறாத சுடர்மதியே
சித்த மாகவே அமுதமேந்தித் தெரிவை மார்களுங் காத்துநின்றே
பற்றிக் கரத்தள்ளும் ரத்தவேண்டாம் பரிமே லேறுவீர் மணியேயென்றார். ()

தாயார்மொழியென்றே யுசைனார்வள்ளல் தன்கை.யிரத்தத்தைக் கீழ்விட்டாரே
தூய முகம்மதை மனதிலெண்ணித் துரகத மேறிச் சமரித்பார்க்க
ஓயாப் பெருவெள்ளம் மெசிதுபடை யொழுங்காய்க் கமிசுற்றி நிற்கக்கண்டு
நாய னருளாலே பரிநடத்தி நான்கு திசைநின்ற வுமையாக்களை. (898)

துரத்தி யவர்களை வாளால்வெட்டிச் சூறை யாடியே பிணக்காடாக்கித்
திரத்தின் வீரரை முடிபிளந்து திகைக்க வவர்களைக் கருவறுத்துச்
சரத்தின் வேகமாய் நாலுதிக்கும் தாக்கினர் வாளால் மடமடத்தே
யுரத்தால் மிகவந்த தரியலாரி லுருண்டு மடிந்தவர் மூவாயிரவர். (899)

பொருதும் படையிலே தவனமாகிப் புதியோ னலிமகர் மயக்கமுற்றுப்
பரிமே லிருந்துதாம் தரையில்வீழ்ந்து பாரில் மயக்கமாய் கிடக்கும்போது
தரிய லார்களும் சமுகமாகித் தலையை யறுக்கவே வருகும்போதில்
மருவின் மலர்வாச ருசைனார்வள்ளல் வழுத்துவா ரப்போ வசுதர்க்கெல்லாம்.

எனது சிரமதை யறுக்க மாட்டி ரேமு அடையாளத் துடையசங்கி
யுனது கூட்டத்தி லவனிருப்பா னுரைமுன் வசுதர்காள் நீங்களென்றாற்
மனமும் சரியென்றே வசுதற்வந்து வழுத்தின ரப்போ துமற்சாதிடம்
கணித மாகிய சங்கியோனைக் கண்டே யழைத்துதான் சொல்வானப்போ. ()

துணிவாங் நீயேகிச் சமர்க்களத்திற் றுலங்கு முசைனார் தங் தலையறுத்து
மணியின் னெழில்போல கொடுவாவென்றே வழுத்த வுமர்சாது மனமஞ்சாம,
றனமும் வரிசையுங் கிடைக்குமென்றே சங்கி மனங்களுந் தயாளம்பொங்கிக்
கனமு மிகவுள்ள வாள்கையேந்தி ஹக்க னலிமகர் சமுகம்வந்தான். (902)

வந்தங் கவன்நின்று பார்க்கும்போதில் வாசி மயக்கமுங் கண்டோங்கியே
சந்திப் பாய்நிற்கும் குதிரைப்பாகர் தயங்கி யேநின்ற குணமுங்கண்ட
அந்த விடத்திலே.யுசைனார் வள்ள லதிக மயக்கத்தின் கிடையும்பார்த்துச்
சந்திப் பிதுவென்றே மனமஞ்சாமற் றலையை யறுக்கவே வாட்கையோங்கி. ()

சங்கி யவனுமே மனந்துணிந்து தருங்கதிர் வாளைக் கழுத்தில்வைத்தே
செங்கை யதினாலே வுசைனாருட சிரசை யறுக்கவு முடியாதாலே
பொங்கி யேகோப மிகவுண்டாகிப் பிடித்த வாளினா லறுத்துப்பார்த்தான்
சிங்கம் யுலிமகர் கழுத்தானது தேச மதுவில்லா திருக்கும்போது. .(904)

கண்ணீர் தான்விட்டே சங்கிதானும் கலங்கி யழுதானே மதிமயங்கி
விண்ணோர் தாலாட்டு முசைனார்வள்ளல் விளம்புவா ரப்போ தவளிடத்தி

லென்னின் சிரமதை யறுத்தாயாகி விழவ லாகிய சங்கியோனே
மன்னி லந்தனி லுனக்காகவே வருகும் வெகுமதி தனேச்சொல்லென்ருர். ()

மனமு முருகியே கண்ணீரோட மவுலுவான் சங்கி யுசைனரிடந்
தனமு நிதிகளும் துயில்பொன்னுடைதருவானெசிதென்றேயவனுஞ்சொல்லக்
கனமும் பொருந்திய வுசைனர்வள்ளல் கவலுவா ரப்போ தமுதவாயால்
மனது கலங்கியே வருத்தமுற்று வருகும் நிதிபோச்சென் றமுகுவானேன். ()

விந்தை யாகிய கதிர்வாள்வைத்து விரும்பி யறுத்திடுங் கழுத்தானதிங்
கெந்த முகம்மதா மிறசூலுல்லா எனேமுத் தங்கொஞ்சுந் தலமானதா
லுந்தன் வாளுக்கிங் கறுபடாதே யுன்னி யின்னுங்கீ ழறுத்தியானல்
இந்தச் சிரந்தானு முனக்காகுமென் றியம்பின ரப்போ துசைனர்வள்ளல் ()

சந்தே கம்நீங்கிச் சங்கிதானும் தரும ராஜரென் றவனுரைத்தே
யந்தப் பிரகாரம் வாளினலே யலிதம் மகனரின் சிரமறுத்துச்
சந்த்ர னதுபோலே கரத்திற்கொண்டு தாரை தனிலவ னடந்தானப்போ
விந்தை யாகிய புசலுங்காற்றும் விழுந்துதே யப்போ கறுபலாவில். (908)

அண்ட கோணங்க ளதிரத்தாவி யண்ட கிரிகளுங் கிடுகிடென்ன
மண்ட லத்துளோர் நடுநடுங்க வசுதர் படங்கெல்லாம் வானிலேகக்
கண்ட பெயர்களே நின்றுதாவிக் காற்று மடிக்கின்ற வேகத்தாலே
சண்ட மாருதக் கடலேப்போலே தால மெங்கணு மிருந்ததம்மா. (909)

## வேறு.

காற்றினல் சுல்சு னுவும் கலக்கமும் தீர்ந்து பாரிற்
பார்த்துத்தா னுசைனர் தம்மைப் பதறியே மனங்கலங்கிச்
சீற்றமுற் றெழுந்து சீறிச் செருனர்க ளெங்கே யென்று
தோற்றிடுங் கூட்டங் கண்டு துரத்தியே மருவ லாரை.

பரியது வேகத் தோடும் பதத்துட னெழுந்து சீறித்
தரியலர் தமி னேதித்தே தடபுட லாகத் தாக்கி
யருமையின் தாளி னலே யடையலர் கூட்டத்தூடே
கருதல ரனேகம் பேரைக் கடித்தது வாயினலே.

இப்படிக் குதிரை தாக்கு மிரைச்சலின் சண்டை யாலே
தப்பிதம் செய்த பாவிதளந்தனில் மாண்ட பேர்கள்
வெப்பத்தா லிறுநூற் றெட்டு வீரர்கள் புவியில் மாண்டா
ரப்பவே யுசைனர் வாசி யழுதது படங்கில் வந்தே.

திண்ணமா யினுமே லுக்குஞ் செகந்தனி லிருப்பா யென்று
தன்னுளங் கொதித்து வாடிச் சஞ்சலக் கடலில்மூழ்கி
யென்னதான் செய்வோ மென்றே யெண்ணியே சுல்சுனுவும்
மண்ணிலே சிரசைத்தாக்கி மாண்டது குதிரை தானே.

## தொங்கல்.

பரிபவர் திறந்திடும் பான்மைகண்டு படங்கி லிருக்கின்ற பெண்மாதர்கள்
மருவின் மலர்வாசர் வரக்காணமே வல்லோன் பதவியிற் சேர்ந்தாரென்றே
தருக விடமில்லைப் பெண்மாதர்க்குத் தக்க பெரியோனே யாகுதாயே
யெரியி விட்டிடு மெழுகாகினே மென்னதான் செய்வோம் கறுபலாவில். (910)

எண்ணிக் கரைகிறோம் யாறசூலே யெங்கள் முகம்மதே யாநபியே
மண்ணின் மீதிலே யெங்களுயிர் வைத்தா யிருக்கனும் யாறகீமே
விண்ணோர் தாலாட்டும் நாயகமே விதியின் படியாச்சே கறுபலாவில்
அண்ண லேலைமயங் கிடக்குமிட மறிந்திலோமென வயர்ந்தார்களே. (911)

இந்த விதமாக நபிகிளையா ரிடைந்து மனம்வாடி யழுதுசோர்ந்து
சந்த்ர வதனத்தின் கண்ணீர்விட்டுத் தளம்பி மனநொந்தங் கழுதிருந்தா
ரந்த நேரத்திற் கதிரோனுமே யடைந்தங் கிருளாக விருக்கும்போது
சந்திப் பாய்கின்ற குதிரைப்பாகன் தனியோ னலிமக ரரைஞாணையே. (912)

வந்து கழற்றவே மனதிலெண்ணி மய்ய மடுக்கின்ற நேரத்திலே
யந்த ரத்தினி லொருசத்தங்க ளருளு மவனுட குதறத்தாலே
சிந்தை மிகவுற்ற குதிரைப்பாகா திரலோ ரரைஞாணைக் கழற்றவேண்டாம்
சந்த்ர வதனத்தார் துகிலவிழும் தானே விலகடா பாகாவென்றே. (913)

சொன்ன வசனங்க ளதனைக்கேட்டுந் துலங்கு பரிப்பாகன் பயமில்லாம
லன்ன வரைஞாணைக் கழற்றவெண்ணி அலியின் மகனார்பா லடுத்தபோதில்
மன்ன ருசைனார்தம் கரங்கள்நீண்டு வாசிப் பாகனை யடித்திடவே
கண்ணு மறைவாக வவனிற்கின்றான் ஹக்கன் குதறத்தா லதனைச்சொல்வாம்.

ஆதம் தொடுப்பாக வருநபிமா ரவர்க ளனைவோரும் புவியில்வந்தார்
நீதி நபியோடு நால்யார்களு நேர்மை தானுள்ள ஸகுபிகளும்
சோதி பாத்திமா நாச்சியாருந் துலங்கும் கதீஜாவு மசனருடன்
போதர வுள்ள வானோர்களும் புகழ்ச்சியாய் வந்தார் கறுபலாவில். (915)

வானோர் துகிலாடை விரித்திடவே வந்த பெயரெல்லா மதிலிருந்து
தானோ னருளினு லுசைனார்தம்மைச் சகலோரும் பார்த்துக் கண்ணீர்விட்டார்
தேனார் மயில்மாதர் மருங்குசூழ திவ்ய பாத்திமா நாச்சியாரும்
தீனோர் சிகாமணி யுசைனார்வள்ளல் சிரசில் லாததோர் மெய்யங்கண்டே. (916)

ஆடிப் பறக்குதே யென்கனியே யருமை தானுள்ள மணிவிளக்கே
தேடக் கிடையாத சுடர்மணியே செல்வ ராகிய வெனதுகண்ணே
சோடி யாகிய வானோர்வந்து தொட்டில் தானாட்டத் துயிலுங்கோவே
நாடும் பெரியோனே யென்றுமாதா நல்லோர் மகன்பாலி லழுதிருந்தார். (917)

ஈது படிநிற்க நபிநாயக மிலங்கும் நாச்சியா ரழுகைமாற்றி
யேது வாய்நின்ற பாகன்தன்னை யென்ன விதமென்று கேட்கும்போது

நாதர் அரைஞாணைக் கழற்ற நின்றே னடந்தகாரண மனைத்துஞ்சொன்னான்
பூதல முள்ள மக்கமேபிப் புதியோன் தனைநாடி யிருந்தயாகில். (918)

கண்ணும் தெரியுமென் றுரைத் தேவள்ளல் ககனி லானார்கள் சகலோருடன்
விண்ணோர் யாவரும் போனபின்னர் விளங்கும் பாகனும் வழிநடந்தான்
அன்ன காலையி லுமறுசாதங் கன்ப தாயிரங் தளத்தினோடு
மன்ன ருசைனார்தம் படங்கில்வந்து வாகாய் நிதியெல்லாம் கவர்ந்துவாரி. ()

நபியின் கிளையான பெண்மாதரை நல்லோர் செயினுல் லாபிதீனைப்
புவியிற் படங்கையு மெடுத்தவர்கள் பேதைமார்களை யழைத்தந்நேரம்
குவலய முள்ள திமுசுக்காகக் கொண்டு வருவதாய் முரசடித்துத்
திவிய மாகிய படங்குடனே சேனைத் தளங்களு மிகவேசூழ. (920)

வருகும் சமையத்தில் நபிகிளையார் மாலை யாகவே கண்ணீரோட்டிப்
பெரியோன் தன்னையே யுவந்துபோற்றிப் பேதையார்களும் வருமந்நேரம்
சருகு மலையோர மடுத்தபாவிற் றுவளம் போட்டா னுமறுசாது
கருத லார்களின் சங்கியோனும் கள்ளுக் குடித்தவன் போதையாகி. (921)

பாடி யூருள்ள தலையாரிபாற் பாங்க தாய்வந்தே சங்கிதானும்
நாடுந் தவமுள்ள வுசைனார்சிரம் நம்பிச் சகுதியர் கரத்திலீந்து
மோடி யாய்நின்றே யவனும்சொல்வான் முன்னுந் தலையாரி சொல்லக்கேளு
நாடி வருகுவே னுளையானும் நல்குஞ் சிரமென்றே யவனேகினான். (922)

அன்ன விரவினிற் றலையாரியு மழகு மிகவுள்ள சிறமானதைத்
தன்னின் மனைதனிற் றுகில்மேல்வைத்தான் தகதக வென்றே கிரமிலங்கப்
பெண்ணே யிதுவென்ன புதுமையென்றான் பேசுவா ளப்போ மனைவியாளு
மென்ன காரணம் யான்சொல்லுவே னிறசூல் நபிபேரர் சிரமிதுவே. (923)

மிகுதி வரங்களு மேன்மைமகளும் விளங்கு மதினத்துக் கரசரான
தகுதி யாகிய நபிமகளார் தவத்தா லீன்றிடு முசைனாருடன்
வகுலி யெசீதவன் போர்புரிந்து வாங்கி யிருக்கிறான் சிரமானதைப்
பகுதி கொடுக்கின்ற அரசர்க்கெல்லாம் பாங்காய்முடி வேந்த ரிவர்தாமென்றார்.

ஈது மொழியோதி யிருக்கும்நேரம் மிறையோன் குதறத்தா லுசைனார்சிரம்
நீத மாகிய வாய்திறந்து நிகழ்த்தும் சகுதியர்க் காகவே தான்
ஓதும் கலிமாவை நீங்களென்ன வுடையோன் சுவர்க்கமுந் தருவானென்றே.
ஆதிலாஇலாக இல்லல்லாகு அண்ணல் முகம்மத ரிறசூலல்லாஃ. (925)

சொல்லு மிதுபோலென் றுரைத்தபோது துலங்கும் சகுதியு மனைவிமக்கள்
நல்லோர் கலிமாவு மிகவோதியே நாயன் தனைப்போற்றி நபியைவாழ்த்தி
யெல்லாப் பறக்கத்தும் கொடுப்பனுதி யெந்தன் மனையாளே யென்கண்ணாட்டி
வல்லோன் கிருபையா லொருவசனம் வழுத்தநீகேளுமனையா ளென்றார். (926)

வளங்கள் பொருந்திய சிரமானதைமய்யத்துடன்வைத்தேயடக்கஞ்செய்வோங்
தளரா தவன்வந்து தலைதாவென்றாற் சாற்றுவேன் கேளு மென்கண்ணாட்டி
யுரிமை யாகிய பாலரேழி லொன்றை யறுத்துதாம் கொடுப்போமென்ன
சரியென் றிருபேரு மீமான் கொள்ளத் தாலமேற் கதிருதயமானான். (927)

விடிந்த காலையிற் சங்கிவந்து வேணுஞ் சிரமென்றான் தலையாரிபாற்
றுடின மாகிய குழைந்தைசிரந் துண்டித் தவரீந்தார் சங்கிபாவிற்
கடின மாகவே யதனைவாங்கிக் கையினாலெறிந் தவன்பின் சொல்வான்
படியி லநியாயம் நீசெய்யாதே பாங்கா யென்சிரங் கொணர்மி னென்றான். ()

இந்த விதமாகக் குழைந்தையாரை யிலங்கு முடிகொய்தங் கவனுக்கீந்தா
ரெந்தன் சிரமில்லை யிவைகளென்ன வெடுத்து வீசித்தன் பற்கடித்தா
னந்த நேரத்தி லழுதுவாடி அண்ணல் முகம்மதை மிகப்போற்றியே
தந்த தாரையாய்க் கண்ணீர் விட்டுத் தங்குமொருமகன் முடியைக்கொய்தே.

கொடுத்தார் சகுதிதான் சங்கிவாங்கிக்குணமா யவன்கண்ணாற் பார்க்குமப்போ
தெடுத்தா சகுதியே மறைத்து வைத்தா யென்றே யுனக்கிந்த மாறுபாடேன்
அடிப்பே னுனைப்பின்னா லென் றுறுக்கி யழக திலங்கிய சிரங்கையேந்தி
நடினத்துடன் வந்தே யுமர்சாதிடம் நாடித் திமுசினுக் கெழுமினென்றான். ()

அன்று கதிரோனு மடைந்தபோதி லப்துல் லாசையா துமறுசாதுந்
தென்றல் மலர்ப்புயத் திறசூலுல்லா சிறவுத கிளையாரும் சிறுபாலரும்
நன்றி யறியாத வுமையாக்களும் நரலை போலவே தானெழுந்தார்
கொன்ற சிரமதைச் சங்கியோனும் கொண்டே தரையினில் நடக்கும்போதில்.

இரவு தனிலேதான் சகுதியாரு மேழு மகவையு மடக்கஞ்செய்தே
தறஜா மிகவுள்ள வுசைனார்மய்யம் தனைக்கண் டடக்கவே ஆலோசித்து
வரிசை யாகிய சிரமானதும் வழங்கும் கபன் துயில் பரிமழமும்
திறலோர் கரத்தினில் மண்வெட்டியும் சிறந்த தோற்பையிற் பாணியோடும்.()

எழுந்தா ரிரவினிற் சகுதியாரு மிறசூல் முகம்மது நபியைப்போற்றிப்
பழுதில் லாதொரு மனதினோடும் பாங்காய் நடந்தவர் வருகும்போது
கழிறும் புலிகளுங் கடுவாயோரிகனத்த குரலோசை தன்னைக்கேட்டே
தளரின் மலர்க்கரச் சகுதியாரும் தானாய்க் கறுப்லாத் தலத்திலாகி. (933)

வந்து கறுபலா தன்னைப்பார்க்க வல்லோ னறிகுவான் ரணக்களத்தை
எந்த விடத்திலே யுசைனார்மய்ய மிலங்கு மஃதென்றே யவர்பார்க்கையிற்
சந்த்ர னதுபோல இலங்கக்கண்டு சமுகந் தானாகி மய்யத்தோடே [ர்.
யிந்தச் சிரமதைப் பொருந்துமென்றே யெடுத்தே மய்யத்தோ டிலங்கவைத்தா

பொருந்தும் படியான காரணத்தைப் புதியோன் குதறத்தென் றவர்நினைந்தே
கறுப லாவினிற் குழியும்வெட்டிக் கதிர்போ லுறுமய்யந் தனையெடுத்து
வரிசை யாகிய முறைபோலவே மணங்கள் திமிர்ந்துதா னழகாகவே
மருவின் வாசரை யடக்கஞ்செய்தே வல்லோன் கிருபையால் மனையில் வந்தார்

ஆதி யருளாலே யவரிருந்தங் கலிதம் மகனார்க்குச் சடங்குசெய்தே
சோதி பெரியவன் தன்னைப்போற்றித் துலங்கு முகம்மது நபியைவாழ்த்தி
யேது பிழைகளும் பொறுத்தாளுவா யிறையே றகுமானே யென் றுநாடி
நீதம் பெருகவே சகுதியாரும் நிலத்திற் பறக்கத்துப் பெற்றார்மாதே. (936)

அலியின் மகனார் தம்மை வாசிப்பாகன் ஆபா சத்துடன் மக்கமாகி
நலவோ ருரைபோலே கருபாவினில் நாடியிருந்தவன் புலம்பும்நேரம்
தலமவ் விடம்வந்த அபுசகறு தனித்தங் கவனிடம் விபரங்கேட்டுப்
பெலத்தா ரலிமகற் ஷஹீதறிந்து பெரியோன் விதியீதென் றவர்நினைத்தே. ()

மக்க மீதினு மதினமீதும் வள்ள லுசைனார்தா மூப்பாதானதை
மிக்க வருத்தமா யவரோதவும் விசன மிகவாகி ஹாஷிமோர்கள்
தக்க பெரியவன் பண்பாலென்று சடங்கு தான்செய்தே நபியைபோற்றி
ஹக்க னருளாலே ஹாஷிமோர்கள் காரணந்தானென் றிருக்கும்நாளில். (938)

ஈது படிநிற்க வுமர்சையா தங் கிறசூல் கிளையாரைத் திமுசுகேதா
னேது வாகவே யழைத்தேகையி லிலங்கும் சிறமதை வாள்முனையிற்
கோது பெறவைத்தே முன்கொண்டேகக் குணரத்தினம்போலே சிரமிலங்க
நாத ருசைனார்தஞ் சிரசென்றெண்ணி நபியின் கிளையார்கள் புலம்புவாரே. ()

எங்கள் தமக்கெல்லாம் தங்கமேரே யிந்த விதிகளா வாங்கிவந்தீர்
தங்க மயமான மணிவிக்கே தலையும்வாள்முனை தனிலாச்சுதோ
அங்கம் பறக்குதே யாறகிமே ஆல முகம்மதே நபிசல்லமே
திங்கள் வதனத்தின் பாத்திமாவே செல்வர் தமக்கிந்த விதிபாச்சுதே. (940)

மண்ணில மீதில் நபிகிளையார் வயிற்றிலே கண்ணீர் வடிதலோடு
மெண்ணி மனமஃ துருகிவாடி யிலங்கு மாதர்கள் வருகும்போது
மன்னும் யாபாரச் சறூயிலுமே வந்தார் தொருவுடன் துகிலுங்கொண்டே
அன்ன நடைமாத ரழுதுவாடு மாயாசங் கண்டே சறூயில்சொல்வார். (941)

அந்தப் பரனை நபிகிளையா ரழுது வருவதிங் கெதுகாரன
மெந்த விதமென்று கேட்குநேர மியம்புவா ரப்போ பெண்மாதர்கள்
சந்திப் பாகிய விபரமெல்லாந் தனித்தனியா வவருங்கேட்டுத்
தந்த தாரையாய்க் கண்ணீர்விட்டுத் தளம்பி மனம்நொந்து கரைந்துசொல்வார்

மன்ன னெசீதுதான் புவிமீதினில் வர்த்தகா ளாக நானிருக்க
வின்னு ளவனையு மென்செய்யலா மிப்பூமிக் ளெல்லா மவனேயானன்
தன்னல் மொழிசொல்ல வெனதுமனம் தயங்குதே யம்மா பெரியோர்களே
யென்னல் நடக்கிற சகாயந்தன்னை யியம்புங் காளெனச் சராயில்கேட்டார், ()

அன்ன காலையில் நபிகிளையா ரருளுவா ரப்போ கண்ணீர்சேர
மன்ன ராகிய வர்த்தகாளே மவுலக் கேளுங்கள் சிதேவியே
முன்னு லுசைனார்தம் சிரசைகொண்டு முரட னவன்சங்கி த்ானேகிறு
னின்னுள் மனமெல்லா முருகுதிப்போ திதுக்கோ ருபகாரம் செய்வீராகில். ()

ஆலமுகம்மது ஷபா அத்தாக வதிக பறக்கத்தும் கொடுப்பானயன்
மேலோ னருள்பெற்றவுசைனாசிர மெதுவாய்மறைத்தேக்சொல்வீரென்றார்
வாலாய மான மொழியைக்கேட்டு மனதுருகியே வர்த்தகாளும்
சீல மறியாத கங்கியோனைத் தெளிவா யவர்பேசித் தயவுண்டாக்கி. (945)

அந்த நேரத்தில வர்த்தகாளு மாயிரந் தங்கக் காசுதன்னைச்
சிந்தை யிரங்கவே சங்கிகையிற் றீரர் கொடுத்துதவி மறைத்தேயென்றும்
தந்த தாரையாய்க் கண்ணீர்விட்டுத் தன்மையாகிய அசன்பாலரைச்
சந்த்ர வதனத்தில் முத்தியிட்டுத் தாமரைப் பாதம் பணிந்துபோற்றி. (946)

தேசந் தனக்கெல்லாம் நவமணியே செயினுல் லாபதின் மணிவிளக்கே
போச ரவியுல்லா பேரனுரே புகழ்சே ரசனுர்தம் கண்மணியே
பாசனெசிதுட மாறுபாட்டிற் பாங்கா யகபட்டா திமுசுபோறீற்
வாசற் முகம்மதைப் படைத்தநாயன் வல்லானிருக்கிருன் கனியேயென்றும்.()

கோதம்பு ரொட்டி கூசாத்தண்ணீற் கொடுத்தா ரவர்களே பசியாரிட
சீத மதிபோலத் துகிலுமீந்து சிறந்த மனதோடு மனுப்பிவைத்தா
ரேது வாகவே துயில்பொன் னுடை யிருக்குமிருநூறு வொட்டகமும்
பாது காக்கின்ற பெயற்களிடம் பாதை வழிநீங்க ளேகுமென்ருற். (948)

சொன்ன பிரகார மவர்களேகத் துலங்கும் வர்த்தகா ளாலோசித்து
மன்னர் முகம்மது கிளையாற்களை மனங்கள் பொருத்தமாய் வெளியாக்கினுன்
னென்ன காலத்தைச்சொல்வோமென்றேயிருந்தங்கிடைந்துதாம் வதனம்வாடி
தன்னுல் மனம்நொந்தே யெசிதினையும் சார்ந்தபெயுரையும்மிகவேதிட்டி.(949)

சாலை நிழலிலே யிருக்கும்போது தடத டென்னவே யேழ்பேர்வந்தார்
சோலை நிழலிருந் தாரைவைதாய் சொல்லெடா வென்று முமையாக்கள்தான்
மேலே யடித்தாரே சவுக்கினுலே வீறிட் டடிக்கவே ரத்தசோரி
மாலாய் மயங்கியே வர்த்தகாளு மய்யம் போலவே கிடக்கும்போதில். (950)

இறந்தா ரவரென்றே யுமையாவெல்லா மேகினு ரப்போ பாதைமீதி
லறங்க ளுயர்வான சருயீலுமே யடித்த பாதையிர் படுத்திருந்தே
யிரவி லெழுந்துமெய்க் காயத்தோடு மிருகா தவழி யவர்நடந்தோர்
தருவின் பாடியூற் தனிலேவந்து தமது திரளோர்க டமைக்கண்டாரே. (951)

கண்டே யிதுசேதி காலட்கெல்லாம் கருதி யுரைசெய்து பயமதாகி
நின்று பார்க்கவும் கூடாதென்றே நிகழ்த்தி பாயாரத் தொறுக்களோடு
மண்டல முள்ள கானின் பாதை வாகாய் நடந்தவர்சிசுறாற்கண்டு
கொண்ட யாபாரந் துகிலும்விற்றுக் குதாயின் புறமென்றே திரும்பினுரால்.()

மலையின் சார்பினில் வனத்தின்பாதை மன்னர் யாபாரி வருகும்போது
தலத்தி லிருக்கின்ற சருகைசுற்றித் தாரை தனில்வந்தா ரொருபொதும்பிற
சுலையு மானபி தலமீதென்றும் சொல்லி வர்த்தகாள் வருகும்நேரம்
தலத்தி லிருந்தார்கள் நூற்றுப்பத்து தவத்தோற்தம்மைக்கண்டு பயந்தஞ்சியே

என்னும்பெரியவாள்சலாமொன்றுரைத்த வியம்பும் பிரத்தியோ டெவிடமென்று
இன்னில முள்ள விசுக்கிலானென் றியம்ப நாமத்தைச் சொல்மினென்று

ரன்ன யாபாரி சருயீலென்றே யருளத் தவத்தோர்க ளுரைசெய்வார்கள்
தன்னின் சரீரத்திற் காயமென்ன சருயீலே யென்றங் கவர்கள்கேட்டார். ()

ஈது மொழிகேட்டு வர்த்தகாளு மியம்புவா ரப்போ கண்ணீரோட
வேது நான்சொல்வேன் பெரியோர்களே யிறசூல் முகம்மதின் பேரனுரில்
பூதலந் தன்னில் லரசுசெய்த புகழ்சே ருசைனுரைக் கறுபலாவிற்
கோதாய் வளைந்துதா னெசீதுப்பாவி கொலைதான் புரிந்தவர் சிரத்தினேடும்.

ஆல முகம்மது கிளையார்களை யழைத்தங் கேகவே யானுங்கண்டு
தால மீதிலே யெசீதுசெய்த சமரெல் லாங்கேட்டு யான்கலங்கி
மாலா யவர்களை யனுப்பிவைத்தே வருகும் பாதையில் நானிருந்தேன்
கால விதியிதா வுசைனுர்க்கென்று கருத்தும் கலங்கியான் புலம்பும்போது. ()

எங்க ளிசுக்கிலான் தன்னையாளு மிளவ லரசனும் சிலபேர்களும்
சிங்கம் போல்வந்தே யென்னைச்சிறிச் சிவந்த சவுக்கின லடித்தகாய
மிங்கிதா மென்றே சருயீலன்று மிருகண் ணீர்விட்டே யழுதுசொன்னர்
சங்கை யாகிய தவத்தோர் கேட்டுத் தளும்பி யவர்களும் புலம்பினரே. (957)

ஆதி முகம்மது பேரனுரே யலியார் செல்வரே யசன்துணையே
சோதி வானவர் தொட்டிலாட்டத் துயிலும் நவமணி நாயகமே
யேது வகையாலே மதினம்விட்டங் கெழுந்து கறுபலா தனிலேவரச்
சோது புரிந்தானே யெசீதுப்பாவி குவலய மீதில் மயங்கினரே. (958)

எங்குந் துலங்கிய வுசைனுர்வள்ள லிறசூல் நபிபோலே யழகுள்ளோரே
தங்க மயமான தேகமெல்லாம் தயங்க லாச்சுதே கறுபலாவில்
அங்கம் பறக்குதே வர்த்தகாளே யலியுல்லாமகன் சேதிகேட்டுச்
சிங்கப் புலியலி செல்வனுரே சேதி யெழுதவு மறந்தீர்களோ. (959)

சங்கை யாய்வரும் வர்த்தகாளே தம்மை யடித்திடு முமையாக்களைச்
சிங்க மதுபோல நாங்கள் வந்தே சிரசையறுத்தவன் மூடிதூளாக்கிப்
பங்க னெசீதையும் வாளால்வெட்டிப் படியில் வாங்கிறோ முசைனுர்பழி
தங்க மசறபி யுமதுபாலிற் சவுதாச் செலவுக்கு முளதோவென்றார். (960)

சொல்லு முரைகேட்டு வர்த்தகாளும் துலக்குவா ரப்போ தீமானேடே
நல்ல தவத்தோரே நவிலக்கேளும் நமது மணிமீதி லிருப்பானவை
யெல்லாங் கணக்கிட்டால் யாதானதங் கெழுபத் தறுலட்ச மஷறபிகள்
செல்லும்செலவுக்கோகாணுவிட்டால்சிறந்த பொருள்வாங்கித்தாரேனென்றார்.

பன்னு முசைனுரின் பழிவாங்கினல் பறக்கத் ததுபோதும் புவியிலென்றும்
சொன்னர் சருயீலு மிதுவசனந் துலங்கும் தவத்தோர்க ளுரைசெய்குவா
ரின்னு ளிவருமே யீமான்தாரி யெப்பவும் செல்வங் குறைந்திடாது
மன்னில முள்ள விசுக்கிலானில் வருவோ மிரவினில் நீர்போமென்றார். (962)

பொறுமையோர் சொன்ன வசனத்தாலே புவியில் மகிழ்வுற்றேசருயீல்மன்னர்
நிருமையாய்ச்சென்றேமனதிலெண்ணி நிறைந்த செல்வங்களுநறைந்ததேபோல்
அருமை யுடன்தீனே ரிருந்துவாழு மழகு பொருந்துமங் கலக்குடியி
லுரிமை தானுள்ள மதியூகனு மொழுங்கு தவருத மலர்முகத்தான். (963)

மண்ணிலமீதி லீமானுள்ள மாசில் சாமுரா வுத்தர்நேசன்
கண்ணின் மணியாக வுகித்தபாலன் கனவா னயினு முகம்மதுவே
யண்ணல் முகம்மதின் மணிமாலையி லருளுங் காரண வரலாறுக்கே
வண்ணம்பொருந்தியதுகில்பொன்னுடை வரிசைகொடுத்திடுமகிழ்ச்சிபோலே.

சிந்தை பூரித்தே சருயீல்மன்னர் சிறந்த தொறுவுட் னவரெழுந்து
வந்தே யிசிக்கிலான் கோட்டைமீதில் வருகும் நிதிகூளி மாடம்சேர்த்துச்
சொந்த மாளிகை தனிலிருந்து துலங்கும் புரவியார்க் குறைசெய்வாரே
யிந்த நாள்மீதில் நடந்தசெய்தி யியம்பக் கேளுமென் றுரைத்தாரப்போ. ()

நல்லோர் பாத்திமா பிறவியார்க்கு நவிலுவா ரப்போ கண்ணீர்சோரப்
பொல்லாங் காகவே யுனையடிக்கப் புதிய கனவுகள் கண்டேயானு
மெல்லா மவனுட விதியோவென்று மெண்ணி யழுதுநா னிருக்கும்போதி
லல்லா வுதவியால் நீயும்வந்தா யகவல் தனையெனக் குரைமினென்ருர். (966)

அந்த மொழிகேட்டு சருயீல்சொல்வா ரருமை தானுள்ள பிறவியாரே
யெந்த நாளினில் நீங்கள்வந்தே யாபாரம் விற்று வருவதாகு
மிந்த நாளினில் யானுமேகி யிதுகண் டாச்சுதே பாதைமீதில்
விந்தையாகிய யெசீதால்வந்த விபரந் தனையெல்லா மொழுங்காய்ச்சொன்னர்.

ஈது மொழிகேட்டு பாத்திமாவு மிருதய மெல்லாம் கலங்கிவாடிக்
கோது புரிந்தானே யெசீதுப்பாவி குறைஷிக் குலமுள்ள வுசைனர்தம்மை
யேது நான்செய்வேன் யகுதாயே ஈரல் கருகுதே விசளங்கேட்டுச்
சோதி பெரியோனே யாரகீமே துலங்கும் பிறவியே சருயீல் மனனே. (968)

பதம்.

என் பிறவி சருயீ லென்பிறவி
துணையே என் பிறவி

என்பிறவி யென் துணையே யெந்தவித முனையடித்தா னென்பிறவி சருயீல்
பாதை வழிமீதிற் பாவியடித்தானே
பாவி யடித்திட மனது பதறினையோ வெனது கண்ணே யென்பிறவி சருயீல்
கண்ட கனவாலே வண்ட ரடித்தாரோ
வண்டரடி யாகையிலே மங்கினையோ வென்கனியே யென்பிறவி சருயீல்
எதுகள் வந்தாலு மிப்புவி யின்மீலே
இப்புவியி லெசீதைவெட்டியென்காவாட் கிரைசெய்குவேன்என்பிறவிசருயீல்
அந்தப் புறமாதர் எந்த விதத்தாலே

எந்த விதம் வெளியானுர் யாறகீமே நபிகிளேயார் என்பிறவி சருயீல்
ஈரற் கருகுதே யிவ்விசனங் கேட்டு
இவ்விதம் கேட்கையிலே யெனதுமன முருகுதிப்போ தென்பிறவி சருயீல்
எந்த விதத்தாலு மென்பொருளி னுலும் [சருயீல்
என்பொருளேச் செலவு செய்தே யெடுத்திடுவே னுசைனுர்பழி யென்றபிறவி

## தொங்கல்.

இந்த விதமாகம் பாத்திமாவு மிதய முருகியே யழுவாடித் [தில்
தந்தை தாரையாய்க் கண்ணீர் விட்டத் தனியோன் தனேநாடிப் புலம்பும்போ
அந்த நேரமே சருயீலாரு மழுகை மாற்றியே பின்னும் சொல்வா
ரிந்த விரவினிற் றவத்தோர்வாரா ரெல்லாம் பறக்கத்தும் கொடுப்பானுயன். ()

அடிசி லாக்கியே தயாராய்க்கட்டு யருமை யானபேர் வருவாரென
வுடையோ னிருக்கிருன் பிரவியாரே யுமது மனம்போலே பழிவாங்குவோம்
தடைகள் கிடையாது புவிமீதினிற் சகோதரியான பாத்திமாவே [ன்ருர்
இடையி லனேவோர்கள் மிகச்சொன்னுலுமெசிதைவதை செய்வேன் யானுமெ

அந்த நேரமே யடிசிலாக்கி யறுவகை யுள்ள பொரியல்செய்து
சந்த்ர வதனத்தா ரிருக்கும்நேரம் தால மிருளவே கதிரடைந்தான்
வந்தார் தவத்தோர்கள் நூற்றுப்பத்து வரிசை யாகிய முகமிலங்கச்
சிந்தை யுகப்பான சலாமுங்கூறச் சிறந்த பிரத்தியு மவர்களோதி. (971)

இருந்தார் விரிப்பிலே சகலோர்களு மெழிலாய்ப் பசியாற்றி மகிழ்வுகூறப்
பொருந்தும்படியான துகில்களீந்து பிரியமாகிய மணந்திமிர்ந்தே
அருந்த வத்தோரு மிருக்குநேர மருளுவா ரப்போ சருயீல்பாலில்
தரிய லாருடன் சமரஞ் செய்யச் சகல பரிசையும் வாங்குமென்றே. (972)

சொன்ன மொழிகேட்டு வர்த்தகாளும் தொறுவி லஷறபி தானேற்றியே
அன்ன காலையில் சிலபேருட னவரு மெழுந்துதா னகரமேகித்
தன்னின் கெதியுள்ள பரியானதிற் றகுந்த விலையுடன் ஆயிரமும்
நன்னிலே யென்னும் யானேகளிற் நா நூற் றைம்பதும் விலைக்குவாங்கி. (973)

தொறுவி லாயிரம் காலிதானுந் துலங்கு மாயிரத் தஞ்ஞூற்றுடன்
துருவை யானதில் ரண்டாயிரம் துய்ய கோதுமைப் பரைமுந்நூறும்
அரியின் கதிர்போலே வாளாயிரம் ஆயிரத் தஞ்ஞூற் றதுவும்வாங்கி
விரியின் வேல்குந்தம் சரபாணங்கள் மிகுதமாய் வாங்கித் தொறுவிலேற்றி. ()

வந்தே யிசுக்கிலான் கோட்டைமீதில் வாகாய் சகலமு மிறக்கிவைத்துச்
சொந்த மாகிய தோப்பானதிற் றுலங்கும் பரிகரி துருவைசாலி
விந்தை யாகிய பெருக்கமாக்கி வேலே யாளருந் தானேமித்துச்
சிந்தை பூரிப்பாய் மனேயில்வந்து சிறந்த தவத்தோர்பா லிருக்கும்நேரம். ()

அந்தச் சமபத்திற் சஞ்சலிப்பா லருளுளா ரப்போ யெரியோர்களு
மிந்த விசுக்கிலான் கோட்டைமீதி லிருக்கும் ஹாஷீம்க ளெவளவாகும்

விந்தை யாகியவுமையாக்கூட்டம் விளப்ப மிவளவென் றுறைமினென்றே
கந்த ரப்புயத் தவர்கள்கேட்கக் கவலுமா ரப்போ சருயிலுமே (976)

ஹாஷிம் குலத்தோர்க ளிசுக்கிலானில் ஆயிரத் தைந்நூறு முங்குடிகள்
பாச னெசீதுட வுமையாக்கூட்டம் பதினா யிரத்தைந்நூ றுங்குடிகள்
ஈது மொழியோகத் தவத்தோர்கேட்பா ரெந்தக் குலத்வர்க் கென்னபட்ட
மோதுமென விள்ளக் சருயிய்சொல்வா ருமையா குலத்திலே தலைவனென்றார்

சொன்ன விபரத்தை யறிந்துநீதர் துலங்கும் ஹாஷீம்கள் சகலோரையும்,
மின்னா ளிரவினி லழையுமென்று ரிருக்கும்பெயர்களெல்லா மாளனுப்பி [பால்
முன்னா லழைத்துதான் விரிப்பிலாக்கி முதியோ ருரைசெய்வார் ஹாஷீம்கள்
மன்ன ருசைனார் தம் பழிவாங்கிட மனது துணிந்துநா மிருப்பதாலே. (978)

உங்க ளுடமனப் பாகங்களை யுரைப்பீ ரனைவோரும் புவியிலென்றார்
சங்கை யாகவே தவத்தோர் சொன்ன தாக்கல் தனைகேட்டு சகலோர்சொல்வா
செங்கையுட யோரேமனம் போலாகச்சிறந்த சமர்செய்யத் துணிந்தோமென்ன
சிங்கப் புலிமக ருசைனார் பழி ஜெகத்தி லெடுத்தாலோ நாமமென்றே, (979)

ஒப்பந் தானாகி ஹா-ஷீமெல்லாம் மோர்மை யுடனவ ரிருக்கும் நாளிற்
றுப்பா னாகவே வுமையாவினிற்சொன்னா னரசனுக் கிதுசேதியை
யெப்போ சமறென்றே மனதிலெண்ணி யிருந்தா னுமையாவு மிசிக்கிலானி
லப்போ தவத்தோர்க ளாலோசித்தங் கவனிதனிலேதா னிருக்குநாளில் (980)

வெள்ளிக்கிழமையின் குத்துபாவில் விளங்கு முமையாக்கள் மூவாயிரா [ளும்
பள்ளி தனில்நின்று தொழுகும்போது பார்த்தங் கிருந்தார்கள் தவத்தோர்க
அள்ளிலை வேலுங் கரத்திலேந்தி யரிகள் போலவே மிகுறுபுற்றுத்
துளளித மான வயவீரர்கள் துலங்கு மதியினி லாலோசித்தே. (981)

வந்த பெயர்களில் முன்வாசலில் வாட்கை யேந்தியே சிலபேர்நின்றார்
தந்த்ர மாகவே வடவாசலிற் சரவே லேந்தியே சிலபேர்நின்றார்
மந்த ரக்கதிர் வடிவாளேந்தி வாகாய்த் தென்வாச லருகாய்நின்றார்
ரிந்த விதமாக வவர்கள்நின்றே யிழுத்துக் கதவுக ளடைத்துக்கொண்டே. ()

தகுதி யாய்நிற்கும் யெவரைக்கண்டு தடபுட லானா ருமையாவெல்லாம்
வகுதி யோர்களை வடாவென்று மாட்டினார் வாளால் மடமடக்தே
திகுதி கென்னவே யுமையாக்களைச் சேதப் படுத்தியே முடிதூளாக்கி
யகங்க ளாகியே செருனர்களை யறுத்துக் குவித்தாரே பிணக்காடாக்க. (983)

வெட்டு விழுகிற கீழ்வாசலை விட்டு வடவாசல் வருவோர்களைத்
தட்டிப் புயங்களை யிருதுண்டாக்கித் தாரை மீதினி லெடுத்தெறிவார்
கொட்டா விக்கொண்டு தெற்குவாசற் குதித்த பெயர்களை முடிதறிப்பார்
கட்டாய மாக வுள்ளோர்களைக் கண்டு சிரங்களை மிகத்தாக்குவார். (984)

இந்த விதமான சண்டையாலே யிரண்டாயிரத்தி யெண்ணூற்றோர்செத்தார்
சந்த்ர மாகவே யிருநூறவர் தப்பித் தோடியே காட்டிலானார்

அந்த நேரமே தவத்தோர்களும் ஹாஷிமோர்களுங் கூட்டமாகிச்
சந்திப் பிதுவென்றே தெருவில்வந்து தரியலார்களைச் சூறைவிட்டார். (985)

எங்கே யுமையாக்க ளெங்கேயென்றே யேகமாகவே தேடும்போதிற்
றெருங்கோட்ட மதாகஞ் சருதலார்கள் தொலைகளோடியே தவித்திருப்பா
ரிங்குமங்குமா யுமையாவெல்லா மெடுப்பா ரோட்டங்கள் மடமடத்தே
பொங்கமாகிய வசுதர்கூட்டம் போனுரொழித்தொழித் தனேகம்பேரே. (986)

ஓடியவர்களும் போனபின்ன ரொருவர் மனையாகச் சோதித்தார்கள்
மோடியாகவே யிதற்கு முன்பால் முதியோர் சருயிலை யடித்தாசன்
சோடியாகவு மோரறையிற் றுசும னிருபேரு மொளித்திருந்தார்
வாடா விருவரு மெனவழைத்தே மணிகயிற்றினல் வரைந்துகட்டி.(987)[வில்

என்னின் ஹாஷிம்கள் கொணர்ந்துவிட்டா ரிருபேர்தமையுமே தவத்தோர்பா
அன்ன காலையிற் சிறைச்சாலையி லடைத்தங் கவர்கள்பாற் காவல்வைத்தார்
மின்னுந் தவத்தோர்கள் நூற்றுப்பத்தும் விளங்கும் மங்குள்ள சகலோர்களு
மன்னனிசிக்கிலா னகர் கைக்கொண்டு வானின் மதிபோலே கொடியிழுத்தார்.

சருயீ லரசுநிலை.

கோட்டை பிடித்துநல் சருயில்நீதர் கொலுவும் போட்டவ ரிருக்கும்நாளிற்
சேட்டையாகிய வுமையாவெல்லாம் சிறந்த பெருக்கமாய் வணங்கினின்றே
கேட்டு நடக்கிறே மகாராஜரே கிருபை யுத்தாரம் கொடுங்களென்று
வாட்டமாய்வந்து சொன்னபேரை மாடந் தனிலேகி யிருங்களென்றுர். (989)

ஈது படிநிற்கச் சருயீல்தம்மை யிலங்குநீ ராட்டித் துகில்புனைந்து
சீத மதிபோல யங்கிசேர்த்துச் சிரசில் முடிசூட்டி மாலைசேர்த்துச்
சோதி முகம்மது சலவாத்தோங்கத் துய்ய மடமாதர் கவரிவீச
நீதர் தம்மையே யனைவோர்வாழ்த்த நேர்மை யாகிய கட்டியங்கூற. (990)

பேரிகவுரிகள் கிடுகிடென்னப் பிடியோ டெக்காள மடமடென்னத்
தாரைசல்லாரித் தம்பூர்மேளம் தடதடவென்று மடமடத்தே
நேரிற் குடைகளும் விருதுகளும் நிகழ்த்தும் சோபனம் சகலர்கூற
மாறுப் புகழென்னும் சலவாத்தோங்க மன்னர் சருயீலுங் கொலுவிலானுர்.

புவியிற் செல்வமு மிகவுண்டாகப் புதியோன் பறக்கத்தும் பெருகிவாழ்க
நபியா முகம்மதை யுவந்துபோற்றி நல்லோர் வேதமும் தீன்துலங்கக்
கவிக ளோதிய பக்கீர்மாதர் ஹக்கனு தவியா லுவந்து வாழ்த்தத்
தவிசி லிருந்தாரே சருயீல்மன்னர் சங்கை பொருந்திய மதிபோலவே. (992)

செந்நெல் விளைவுகள் சிறந்திலங்கச் செழிக்கு மங்கலக் குடிமீதினில்
மன்ன னேறுவா டியின்தவத்தால் வந்த சேய்குமுகம்மதுமீரு னு
மின்னுட் சிதேவி மனைமீதினி லிலங்குமணிமாலை யியம்பென்றுேதத்
தன்றற் பறக்கத்தும் மிகவுண்டாகித் தழைக்கு மதுபோலே சருயிலின்பால்.

ஹாஷி மோர்களி லொருவரான வழகுபொருந்திய மதியூகத்தார்
காசீன் தமையுமே மந்த்ரி யாக்கி ஹக்கன் தனைப்போற்றித் துதிகள்செய்தே
பாச வுமையாக்கள் மனங்கலங்கப் பாரில்ஹாஷீம்கள் மனந்துலங்கப்
போச ராகிய சருயீல்மன்னர் புவியில் ராஜாங்கந் தனிலிருந்தார். (994)

கோமான் கிருபையாற் றீன்துலங்கக் குலத்தில் யாவரும் பெருகிவாழ்கச் .
சீமான் தனமுள்ள சருயீலவர் சிறந்த தருத்திருந் துறைசெய்வாரே
பூமா னுகிய விருபேறையும் புதிய காவலோ டழையுமென்றே
நாமந் துலங்கிய வரசரோத நாடி யழைத்தங்கே கொணர்ந்துவிட்டார். (995)

வந்து முன்னின்ற விருபேருக்கும் வழுத்துவார்ப்போ தீர்மானங்கள்
இந்த விருபேரின் காதுமூக்கை யிலங்கும் வாளினு லறுமினென்றுர்
அந்த நிமிஷமே காவலாள ரறுத்தா ரவர்களின் காதுமூக்கைத்
தந்த தாரையாய்ச் சோரியோடத் தளம்பி நிற்கின்றூ ருமையாக்களே. (996)

நீங்க ளிருபேரு மெசீதிடம்போய் நிகழ்த்தும்படியான வசனங்கேளீர்
பாங்கா யிதுபோலே யெசீதனையும் பாவி மறுவானை யுமர்சைய்யாதைத்
தீங்காக் காதுகண் மூக்கறுத்துச் செகத்தில் விடுவானென் றுரைப்பாயென்ன
வேங்கை புலிமக னுசைனுர்பழி விளங்க வெடுப்பேனென் றுரைத்தாரண்ணல்

டாச விருபேரு மழுதுவாடிப் பயந்து நடுங்கியே விசன முற்று
நாசி யடைத்திடுங் குணுகுணுப்பும் நாவுங் குழறியே யிருபோர்களும்
தேசந் தனைநீங்கித் திமுசுக்காகத் திடுக்கத் துடனவன் வருகும்போது
மோசந் தான்செய்த வுமர்சையாது முகம்ம தெனுநபி கிளையார்தம்மை,(998)

முன்னு லுசைனுர்தம் சிரமுங்கொண்டு முழக்க மாகிய படையினேடும்
மன்னதி முசுமா நகரம்வந்து மாற்ற னெசீதுதன் னிடத்திலாகிச்
சொன்ன பிரகார முடித்தேனென்று துலக்கும் சிரம்வைத்தே புதுமையாக
வென்னின் முகம்மது கிளையாரையு மெதிரில்நிறுத்தியே சலாமும்செய்தார்.

வந்த பெருக்கமும் சிரமானதும் வள்ளல் முகம்மது கிளையாரையும்
சந்த்ர வதனத்தின் பாலரையும் தான்கண் டெசீதக மனம்பூரித்தே
யிந்த ராச்சியம் புவிமீதினி லெதிரி நமக்கில்லை நமரோர்களே
சொந்த மாச்சுதே யூர்களெல்லாம் துரையுநான் தானென்றுரைத்தானப்போ.

எந்த ராசரும் திறையளக்க வெழுதுங்காண் மந்த்திரி மறுவானென்றுன்[முன்
இந்தா யெழுதுறே னுமதுசொற்போ லினிமேற்றடையுண்டா துரையேயென்
அந்த நேரத்தி லெசீதுப்பாவி யசனுர் மகனுரை வதனம்பார்த்துச்
சந்திப் பிதுவென்றே மனதிலெண்ணிச்சாற்றுவானப்போ சூட்சமாக.(1001)

வரியின் புலியான அலிதானெங்கே வள்ள லசனுசைன் வாழ்க்கையெங்கே
குறைஷிக் குலத்தோர்கள் கூட்டமெங்கே குவலயமுள்ள குலத்தோரெங்கே
கரிகள் ரதபரி பதாதியெங்கே கனத்த படைமன்னர் பெருக்கமெங்கே
வரியின் வழிமாதர் மேன்மையெங்கே வழுத்து நபியுட கிளையாரென்றுன். ()

அந்த நேரத்தி லுஹறுக்காக அருளினர் பாங்கு மோதினரும்
சந்த்ர னழகான நபிசொல்வரத் தன்கை முகமுத்தி யெசீதுவந்தா
னந்த நிமிஷத்தி லசன்மகனு ரருளுவா ரப்போ சிறுபாலக
ரெந்தம் பேரனர் நாமம்வந்தா லெசீதே யிருகண்ணில் முத்திசெய்ய. (1003)

இன்னு ளுனக்குத்தான் மதியார்சொன்ன ரென்றார் வதைபேசத் துணிந்தாய்
மன்னனீ யென்றும் சொலத்தகுமா மாறுபா டுள்ளதேள்மருந்தே [பாவி
யென்ன வசனங்கள் பேசலானு யெங்கள் வாழ்க்கையை யிகழலாலே
சொன்னற் றெரியாதா வுனதரசு துலக்கமானது துனியாவிலே. (1004)

எங்கள் முகம்மது நபியிறசூ லிருக்கும் நாளையில் மாபியார்க்குச்
சங்கை மனைவியைத் தர்லாக்குச் சொன்ன சகாயந் தனக்காகக் கொடுத்தநாடு
சிங்கம் போலவே தகுத்திருந்து சிரிப்பாயிகழ்ந்தியே தேள்மருந்தே
யுங்கள் தவுலத்தில் நின்றுபேச வுடையோ னெழிதினன் புவிமீதினில். ()

நானும் பாலனு யிருப்பதாலே நவின்று யிம்மொழி மனமஞ்சாமற்
காணும் வயதுட னிருந்தேனுகிற் கரத்தின் வாளினு லுனையும்வெட்டி
மான மணுவில்லா மறுவானையும் வாளாயுதமுனை கொடுப்பேனென்னத் [ருர்.
தானு மகிழ்ந்தையே பெருமைபேசித் தனியோ னிருக்கிரு னெனக்கே யென்

அந்த மொழிகேட்டே யெசீதவனு மருளுவானப்போ கோபமீறி
இந்த ராச்சியப் புவிமீதினி லிலங்கும் புலிகுட்டி பூனையாமோ
சந்த்ர வதனத்தின் பாலகரைத் தாலந்தனில் வைத்தாற் பகையுண்டாகும்
எந்த விதத்தாலுங் கொல்மினென்ன வெசீதுப் பாவியு முரைத்தானரோ. ()

அன்ன காலையி லெசீதினுக்கே யந்தரக் குத்தும் வயிற்றிலாகி
மன்னன் தடுமாறி மயக்கமுற்றே மவுலுவா னப்போ மறுவானின்பால் [ம்மை
பின்னல் வதைசெய்வோம் சிறுபாலரைப் பெண்பா லுடனழைத் திவர்கள்த
இன்னுட் சிறைச்சாலை யடைமினென்றே இயம்பினு னப்போ கடிபிடியாய். ()

அடைத்தார் நிலவரைக் காவலாள ஆலமுகம்மது கிளையார் தம்மைக்
கிடைத்த பலனென்றே மயில்மாதர்கள் கிருபை யுடையவன் தனைநினைந்தே
யுடைத்த தயிர்போலே மனங்கலங்கி யோர்மை யுடனல்லோ ரிருக்குநாளிற்
படையின் ஜனங்களு முமர்சையாதும் பாங்காயவரவர் சாற்பிற்சார்ந்தார். ()

பாச மறுவானு மனம்பூரித்தே பகருவா னப்போ தெசீதுப்பாலிற்
தேசந் தனக்கெல்லாம் ராஜரானீர் ஜெயித்தே யுலகினிற் பேர்வாங்கியே
ராஜரனைவரும் திமுசுக்காக நாடிமிக வந்து திறையளப்பார்
கூச லினிமேலுங் கிடையாதென்று குலுங்கச் சிறித்தவ னிருக்கும்போதில்.

அந்நே ரந்தனில் மூக்கறுந்த வரச னுமையாக்க ளிருபேர்வந்தே
என்ன ராஜாங்கம் செய்யுலானீ ரெங்கள் கோலத்தைப் பார்மினென்ருர்
மன்ன னெசீதுடன் மறுவானுமாய் வழுத்துவா ரப்போ வருத்தமாக
இன்னு ளிக்கோலம் செய்தோனெவ னியம்படா நீங்க ளிருபேரென்ருன். ()

நாசி யடைத்திடும் குணுகுணுப்பாய் நாக்குங் குழறியே யிருபேர் சொல்வார்
கூசுதேபேச மகாராஜரே குணுகு ணுத்திடும் வசனத்தாலே
யேசு வார்க்கிடம் புவியிலாமோ மெங்கள் விதிதானோ செய்வினையோ
பாசந்தனையாளும் சிங்கத்தோரே செப்புவோம் கேளும் புவிமீதிலே. (1012)

பாரி லிருக்கின்ற விசிக்கிலானீற் படைகள் திரட்டியே சமுயில்மன்னன்
சீறுய்ச் சனஞ்சேர்த்துப் பலிசிம்மேறுய்ச் செகத்தி லுசைனார்தம் பழிகள்வா
வீறுய் நமதுடன் வாதுசெய்ய விளம்பு மவனுட சமர்த்தைக்கேளீர் [ங்க
மூரியது போல வுமையாகூட்ட மூவாயிரஞ்சனங் தொழுகும்போதில். (1013)

காட்டுப் பரதேசி நூற்றுபத்துக் காலா லேந்திய மிகுறுபுற்றுக்
கோட்டி யாகவே யுமையாக்களைக் கொலைகள் மிகச்செய்து கருவறுத்தே
மூட்டினுன் சண்டை யிசுக்கிலானில் முதலோ னறிகுவான் மகாராஜரே
பாட்டம் பாட்டமா யுமையாக்கூட்டம் பயந்து வன்வாசந் தானோடவே. ()

அடித்துத் துரத்தியே மனைகள்பூந்தே யவர்கள் மனம்போலே கொள்ளைசெய்
பிடித்தங்கிருவரை மூக்கறுத்துப் பெலவா னெசீதிடம் போய்ச்சொல்லென்று
சட்த்த வார்த்தைகள் மிகவும்பேசிச் சாற்றும் படிசொன்ன வசனங்கேளீ
ருடுத்தும் புவியிலே நாங்களோர்த யுள்ளங் கருகுதே மகாராசரே. (1015)

எங்க ளிருவரைப் பிடித்தவனு மிலங்கும் காதுமூக் கறுத்ததுபோ
லுங்க ளிடகாது மூக்கானதை யொட்டப் பிடித்துதா னறுப்பேனென்றுன்
சிங்கம் போலவே நூற்றுப்பத்துத் திறலோ ரிருக்கிறு ரவனிடத்தில்
இங்கித முள்ள மகாராஜரே யெப்படி நாமும் பிழைப்போமென்றுன். (1016)

உரைத்த மொழிகேட்டங் கெசீதவனு முள்ளங் கரிகியே மதிமயங்கித்
தரித்திர முள்ள வுமையாக்களே தாக்கல் தெரியமற் கோட்டைநீங்கி
யறுத்த மூக்குடன் சோரியோட ஆவலாய் வந்தே சொல்லலானீர்
கருத்தில் லாதிரு கசடர்களே காது மூக்கும்போய் வருகலாமோ. (1017)

மூசிப் பாகிய பகைக ளெல்லாம் முடிந்த தினியாட்சி செயநினைந்தோம்
வாஜிப் பாய்வரும் பகையைக் கொன்று வந்தார் காதுமூக் கறக்கொடுத்து
வேசை யுடமக னிருவரையும் விரட்டியே பூசை நகட்டுமென்றுன்
பாச னுரைகேட்டங் கிருவோர்களும் பதற்றத் துடனோட்டம் பிடித்தார்களே.

ஈது படிநிற்க லெசீதுப்பாவி யிதத்து று நோயு மிகவுண்டாகி
யேதுநான் செய்வேன் றகிமேயென்றங் கிடைந்து மனம்வாடி யாலோசித்தே
கோது மிகநீங்க மறுவானேநீர் குறிப்பா யொருமதி சொல்லுமிப்போ
வாதுக் கிடமாகி யிருக்குதங்தோர் வயிற்றி லிருக்கின்ற பிணிதானென்றுன்.

வசைய னுரைகேட்டு மறுவானுமே வழுத்துவா னப்போ தெசீதுபாவி
லுசைனர் தமைச்செய்த பழிபாதக முடலில் மிரட்டுதே யுமக்காகவே
யசலாய் மிகவுள்ள அபூகுறைறு ஆலிமவர்களை வரவழைத்தெ
நசல்கள் நீங்கவு மருந்துகேட்டால் நவிலுவா ரப்போ தாலிமென்றுன்.(1020)

மறுவா னுரைபோலத் தூதனேக வந்தா ராலிமு மெசீதுபாலி
லிருந்தார் பெரியவர் தகுந்தானதி லியல்பெல்லாம் சொன்னானவர்கட்காகப்
பரம னருளாலே யபூகுறைறா பகருவாரப்போ திரையைப்போற்றிக்
குறைஷிக் குலத்துள்ள வுசைனார் தம்மைக் கொலைசெய்த பாவமுனக்கானதால்.

கர்ம காண்டத்தி னசலின்க்குக் கையில் மருந்துக ளிருக்காதிப்போ
தீர்ம மிகச்செய்து மகரிபிலே தனியோன் தனைநாடித் தொழுதுவாரும்
வர்மங் விலகினால் வல்லோன்புற மருந்தி னாலிது தீராதையா
நிர்மம் பிடித்திடு மெசீதேயென்று நிகழ்த்தி ஆலிமு மனையிற்சேர்ந்தார். ()

ஈது வசனம்போ லெசீதுப்பர்வி யியல்பாய் வணங்கியே சதக்காவீந்தும்
கோது வாதுள பிணியானதுங் கொண்டே விசனமா யவினிருந்தே
பூத லந்தனி லரசாங்கமும் பிரசங்கம் செய்தே யெசீதுமன்னன்
வாது மிகச்செய்த சருயீலாரை வதைசெய்ய வேணும் புவியிலென்றே.(1023)

எண்ணி மனதிலே யாலோசித்தே யெசீது படைசேர்த்தங் கிருக்குநாளில்
மண்ணில முள்ள விசிக்கிலானில் வாச ராகிய சருயீ லுமே [ன்றே
விண்ணோர் துதிசெய்யு முசைனார்பழி மேலோன் கிருபையா லெடுப்போமெ
யெண்ணந் தானாகி மனமீதிலே யிருந்து ராஜாங்கம் நடத்துநாளில். (1024)

ஹாஷி மோர்களை வரவழைத்தே யண்ண லாருட சமுகம் வைத்தே
வாசம் பொருந்திய தவத்தோர் பாலில் வழுத்துவா ரப்போ தமுதம்போலே
தேசந் தனையாண்ட அலிப்புலியார் செல்வர் பதினெட்டுப் பேர்கள் தன்னிற்
பேர்சர் முகம்கது ஹனிபாவள்ளல் புதியோன் கிடையாற் புவிமீதிலே. ()

எமன்ராச் சியமிருந் தரசாள்வதா லெழுதி யனுப்புவோம் வரலாறெல்லாம்
அமரோர் துதிசெய்யு மலிதம்பால ரகவ லறிந்துதா னிவிடம் வந்தால்
நமையாள் பவனுட கிருபையாலும் நாடா ளெசீதையும் வதைகள்செய்தே
சமையந்தனிலேதான் சிறையுமீட்டி தனியோன் கிருபையா லிருப்போமென்றார்.

இன்ன வுரைகேட்டு ஹாஷீமெல்லர் மிதுவே சரியென்றார் தவத்தோர்களும்
மன்னர் கரத்தினால் தாசெடுத்து வரைந்தார் கடிதாசி வணக்கமாக
என்னு முகம்மது மருகேசரர் பிலங்கு மலிப்புலி யீன்றகண்ணே
மின்னுங் கதிர்மேனி நவமணியே மேலோ னருள்பெற்ற தயாபரரே. (1027)

மருவின் மலர்புயத் தரிசிம்மேறே வள்ளல் முகம்மது பேரனாரே
பெருகும் பறக்கத்தும் பெற்றகோவே பெலத்த அரசென்னு மணிவிளக்கே
பொறுமை மிகவுள்ள முடிவேந்தரே புகழ்சேர் முகம்மது ஹனிபாவள்ள
லுரிமையாய் நாங்கள் சலாமுஞ் செய்தே யுங்கள்பாதார விந்தம்போற்றி. ()

எழுதும் சேதியின் விபரங்களை யிடம்ப வறிவீர்கள் நாயகமே
முழுதும் படைத்தவன் கிருபையாலே முன்ன ரசனாரு முடிசூட்டியே
பழுதில் லாதவன் குதறத்தினால் பாரில் ராஜாங்கம் நடத்துநாளில்
வழுவி னெசீதுமே மாறுபாடாய் மன்னர் தமக்கொரு பெண்ணுமீந்தே. ()

பெண்சொல் லதினலே யசனர்வள்ளல் புத்தி மயங்கியே புவிமீதினில்
நஞ்சுப் பானகம் தனையருந்தி நாதர் ஷஹீதாகி முடிந்தயின்னர்
கஞ்ச மலர்ப்பாதத் துசைனருக்கே ஹக்க னருளாலே முடிசூட்டியே
தஞ்ச முடையவன் கிருபையாலே தரணி தனையாண்டே யிருக்குநாளில். ()

மாறுபா டாக நிருபங்களை வரைந்தே யெசீதவ னனுப்பலாலே
நேர்மை மிகவுள்ள வுசைனர்வள்ளல் நினைவில் வருத்தமாய் மதினம்நீங்கிம்
மாரில் விளங்கிய கூபாவுக்குப் பயணம் வருகவே சகலோர்களும்
தூர மிகவுள்ள கறுபலாவிற் றுய்ய வரசரு மினத்தார்களும். (1031)

வந்தங் கிறங்கியே படங்கடித்து வல்லோன் புறமென்றே யிருக்கும்நேரம்
சந்திப் பாகவே வளிமறித்துத் தலைவ னெசீதுடன் வுமர்சையாது
விந்தை யாகிய சமர்கள்செய்தே விளங்கும் காசிமோ டலியக்குபார்
சந்த்ர வதனத்தி னுசைனர்பாலர் தனையும் வதைசெய்தே யெசீதுப்பாவி. ()

மருவின் மலர்ப்பயத் துசைனர்தம்மை வசுத ரிகலியே சமரமாடிக்
கருப லாமீதிற் சிரமறுத்தே கதிரின் மயில்மாதர் சகலோரையும்
திருவி னழகான அசனர்பாலர் செயினுல் லாபிதீ னவர்களோடும்
வரிசை யாகவே திமுசுக்காக வந்தா ருடன்கொண்டு வருகும்போதில். (1033)

தரைமீ திசிக்கிலான் சருயிலவர் தாரை மீதினில் வருகும்நேரம் (போதிற்
குறைஷிக் குலத்தோர்கள் வருத்தநோக்கிக் குதாயி னிடம்சொல்லி யிருக்கும்
பரியின் சவுக்காலே மிகவடித்தான் பாங்கா யானுமே வருத்தமுற்றேன்
சிரியின் தவத்தோர்கள் நாற்றுப்பத்துக் கெழுமி மிகவந்தே யிசிக்கிலானில்.()

தரிய லார்களை முடிதூளாக்கிச் சங்கை யாகவு முடிகள்சூட்டி
இருக்கிறோம் நாங்க ளிசுக்கிலானி லிறையோன் முகம்மது நபிபேரரே
யருக்க னெழிலான பெண்மாதர்க ளவதி மிகவல்லோ சிறைச்சாலையிற்
றருக்கண் ணுடையவன் கிருபையாலே சையினுல் லாபீதினைப்பார்க்கவே. ()

வந்து சேருங்கா ளலிபாலரே வரிசை பொருந்திய சிகாமணியே
யெந்த வரசரு மெசீதுக்காக இப்போ திறைகட்டி வருகிறார்கள்
தந்திரஞ் செய்ய எசீதவனும் தளங்கள் மிகச்சேர்த்துத் திமுசினிலே
சொந்தமாய் வைத்து நமரோருடன் துணிவதாய்ச்சண்டைநினைத்தானிப்போ

கண்ணே யிதுசேதி கண்டவுடன் கல்ப திரங்கியே தயவுண்டாகி
விண்ணோர் போற்றியே நவமணியே மேன்மை துலங்கியே நாயகமே
மண்ணில முள்ள விசிக்கிலானில் வந்து சேருங்கா ளரிசிம்மேறே
எண்ணின் மனமதி லிரவுபக லெதிர்பார்த் திருப்போமென் றெழுதினரே. ()

எழுதி மடித்ததைப் பசுந்துகிலா லிலங்கும் படிவைத்தே விலாசந்தீட்டிப்
பழுதில் லாதொரு காகிறுபாற் பாசு ரங்கொடுத் தினிவர்வென்றார்
தளரின் மலர்க்கரத் தண்ணலாரும் சாதந் தனக்கானநிதியுமீந்தே
களிறு போலான காகிறையும் காலே மீதினி லனுப்பும்போதில். (1038)

இரவு பகலுமா வழிகடந்தே யிலங்கும் பாடிகள் தானிருந்தே
தாஜா மிகவுள்ள நபியைபோற்றிச் சாலை மீதினி லேகும்போதிற்
றிரைபோ லாகிய நதியிங்கண்டு சிறந்த மரக்கலந் தானேறியே
கரையு மிறங்கியே யப்பாவாகிக் கடிகி நடந்தாரே காகிறுமே. (1039)

சோலை வனங்களுந் தோப்புகளுந் துலங்கும் நகரமும் சிற்றூர்களும்
பாலை வனங்களும் கிரியின்சார்பும் பாங்காய் நடந்தரரே சரவேகம்போற்
காலை நேரத்தில் நதிகடந்தே கரியி னகில்வனந் தானேகினர்
தால மீதுள்ள மயிலனங்கள் சார்ந்த தலமுங்கண் டேகினரே. (1040)

நடந்தங் கிருபத்தி ரண்டாநாளில் நாத ரெமன்பதி தனையுங்கண்டார்
தடமுந் தாமரை வாவிகளும் சங்கை யாகிய தோப்புகளும்
கடல்போ லிருக்கின்ற அழகானதுங் கண்டே காகிறு மனமகிழ்ந்து
அடவை விலங்கிய கோட்டை வாசற் றூயோன் கிருபையால் வந்துநின்றார்,

அந்த நேரமே காவலாள ருமை யுடனழைத் தவரேகவே
யெந்த வூர்காணும் அறபியரே யியம்பு வீரென்று மவர்கள்கேட்க
மந்த ரப்புயத் திரசூல்லா வள்ளல் முகம்மது பேரனுக்கே
இந்த நிருபங்கொண் டிங்குவந்தேன் யானு மிருப்பதே மதினமென்றார். ()

அன்ன காலையிற் காவலாள ருமை யுடனழைத் தவரேகவே
மின்னுங் கதிர்போலே மணிகுயிற்றி விளங்கு மணிமாடந் தெருவுங்கண்டார்
பொன்னின் நவமணி யிலங்கபோலுப் புதியமாடங்க ளொருசார்பினி
லென்னு மிறையவன் தனைவணங்கு மிலங்கு மிகுறுபுங் கண்டேகினர்.(1043)

மதிபோ லழகான சுதைகள்தீற்றி வழங்கு மாடத்தின் வீதிகளும்
கதிரி னெழிலாகச் சுடரிலங்க கடைகள் தனில்விறகுந் துகிலாடையும்
நிதிக ளிரைச்சலு முசார்பதும் நேர்மை யாகிய தீனோர்களு
முதியோர் வனக்கமும் சலவாத்துகள் முழங்கும் வீதிகள் கடந்தேகினர். ()

கடந்து காவனத் தெருவுநீங்கி காகி றுகினர் வடபாலினிற்
றடத டென்னவே முரசதிரும் சத்தங் காரிடி போன்முழங்கத்
திடுதி டென்னவே நவுரிபம்பை கிறந்த வெக்காள மடமடென்னக்
கடலார் பதுபோலே தெருவீதிகள் கண்டு நடந்தாரே காகிறப்போ. (1045)

அருக்க னெழிலான மணிமுத்தினு லழுத்தி மரகதம் பளபளென்னப்
திருக்கண் ணுடையவன் பார்க்கவேனும் சிம்மா தனமுள்ள அலங்காரத்தை
மருவின் மலற்வாசங் கமகமென்ன மன்ன ருகாமை அரசற்சூழத்
துறுக்கி மார்களி லய்யாயிரம் சூர ரானபேற வணங்கிநிற்க. (1046)

கஞ்ச மடமாதர் கவரிவீசக் கனத்த நவுபத்தும் பிடிமுழங்க
மிஞ்சும் புகழான தர்மதானம் விளங்க ராஜர்கள் திரையளக்க
மஞ்சுகுடையிடு நபியிறசூல் வள்ளல் முகம்மது சலவாத்தோங்கத்
தஞ்ச முடையவ தன்னைபோற்றித் தகுத்தி லிருந்தாரே அலிமகனர். (1047)

அன்ன காலையிற் சஙுயில் தூத ரலியுல்லா மகன் பாதம்போற்றி
மன்னற் றனக்கெல்லா மரிசிம்மேறே வருகு தென்னுட சலாமென்றோத
முன்னர் பிரதியும் கூறிசிங்கத் முகம்ம தனிபாவு முரைசெய்குவாற்
இன்னல் வருந்துதே யெவிடமென்றுற் யானு மதினமென் றுரைத்தாரப்போ.

உரைத்த மொழிகேட்ட அலிமகனு ருரிமை மிகவாகத் தூதற்பாலிற்
துரைத்தனம் செய்யும் தமையமாறகள் துலங்கும் சேமங்க ளுரையிலென்றார்
அறத்தோற் வசனங்கள் தன்னைக்கேட்டே யருள்வாற் தூதருங் கண்ணீரோட
நிருபந் தன்னையுற் கரத்திலீந்தே நின்றுற் தூதரு மதிமயங்கி. (1049)

அன்ன முகம்மது ஹனிபாவுமே யப்போ கடுதாசி தன்னைபார்த்தே
யென்ன முகம்மது கணையாழியா லிலங்கு முத்திரை பொறியாதாலே
மன்னர் மனமது மதிமயங்கி வாகா யுடத்ததை பாற்க்கும்போது
தன்ன தாரையாக் கண்ணீரோடத் தாலத் தர்சரும் புலம்பினரே. (1050)

## பதம்.

என்ன செய்குவே னேதுசெய்குவேன் எந்த னுதியே நிறையோன சோதியோ
மூன்ன மாபியாமகனெசிதவன் மூர்க்கமாக வோநஞ்சால் தீர்க்கம்செய்தானே
வாசம் பொருந்தும் நபிசெல்விபெற்ற மன்னவர் மணியே யுங்கள் வதனகாண்
போமோ பாசனெசிது மனது துணிந்து பாரின்மீதிலே பாதகஞ்செய்தான்.

## தொங்கல்.

இலங்குந் திருமேனி யுசைனுர்வள்ள லில்லிடம் விட்டா வலசைவந்தீர்
துலங்கும் யாறசூ லுமக்காயீந்த சுல்சுனுப்பரி தமக்கிருந்தும்
அலங்கள் மணிமாற்ப நிறசூலுல்லா அருமை யுடன்தந்த வாளிருந்தும்
தலங்கள் தனைவிட்டா வெளியிலாணீர். தங்க மயமான நவமனியே. (1052)

வந்து கறுபலா தனிலிறங்க மாற்றம் செய்தானே யெசிதுப்பாவி
யந்தச் சமயத்தி லொருகடித மனுப்ப மறந்தாரே யாறகீமே
தந்தை மவுத்திலே திரும்பிபாற்க்கத் தனது வாழ்கையும் பெலனும் போச்சே
யெந்தன் மனங்களு.மிருதயமு மென்னிக் கரையுதே நவமனியே. (1053)

எங்கள் குடிக்கெல்லா மிளவரசே யிலங்கும் படிகாசீ மலியக்குபார்
சிங்கபுலிபேரர் நிருபேர்களும் சிறந்த சமர்செய்தா பதவிசேர்ந்தார்
திங்கள் வதனத்தி னவமனியே செயினு லாபிதீ னென்பாலரே
தங்க மயமான பெண்மாதரும் தனியோன் புறமென்று திமிசிலானுர். (1054)

உருகிமனமது கரைந்துவாடி யுள்ளங் கலங்கியே யழுகும்போது
மறையோ ரனைவோரும் தானழுதார் வானத் தமரோரும் கூர்லீங்களும்
தரையின் மீதுள்ள பறவையாவும் சடிலம் துல்தலும் கண்ணீர்விட்டே
யிறையோன் தனைநாடி யிருக்கும்நேர மிளமான் சைதானு மிதையறிந்தே. ()

## தொங்கல்

தன்னால் நினைத்துதான் மயில்மாதரும் தாரையாகவே கண்ணீர்விட்டே
யன்ன முகம்மது பேரனாரே யசனார் வள்ளலின் சிகாமணியே
பன்னக ஞாலத் திருக்குநஞ்சின் பானக்க முண்டா பதவிசேர்ந்தீ
ரென்னுந் தவத்தோரே யபிமகவே யிலங்கும் படியான துரைமகனே. (1056)

## பதம்.

துரைமகனே அரசே துரைமகனே தருவே
துரைமகனே திருவே துரைமகனே
துரைமகனே யிறையவன்தன்
சுடர்மணியே பதவியுற்ற துரைமகனே
பாவி யெசீதானேன் பாருலகின்
மீதே பாருலகின்மீதே மாற்றம் படைத்தவனே
பொருத்தமிதா துரைமகனே
சிங்கப் புலிசேயே தங்க மகமேரே
தங்கமய மாவளர்த்த சையதிற சூல்பேரரே துரைமகனே
காலவிதிதானோ ஆலந் தனின்மீதே
ஆலந்தனிற் பதிவுற ஆண்டவன்தன் கற்பனையோ துரைமகனே
கத்த னருளாலே பத்தினி பாத்திமா
பத்தினியா ருவந்தீன்ற பரன்பொருளே
பதவியுற்றீர் துரைமகனே.

## தொங்கல்.

துரையின் மகனை நவமணியே துஞ்ச லானீரோ நஞ்சினாலே
திரையின் மணிமுத்தே யுசைனார்வள்ளல் சிகுற னெசீது டகலகத்திலே
தரையில் ராஜாங்கம் நடாத்துநாளிற் றுக்கல் கொடுத்தானு வெசீதுப்பாவி
வருத்தமாகிய சகலோருடன் வந்துகறுபலா விறங்கினீர்கள். (1057)

## பதம்.

மதினம் நீங்கியே வலசைவாங்கிட வல்லவன் விதியோ நவமணியே
தவநிதி அரசே யென்ன மாற்றங்கள் வரலாச்சோ மதியே [மறை
யெங்கள் நாச்சியார் பெற்றுவளர்த்ததை யிறையவ னறிவான் துரைமகனே
மலரே மணியே யென்னசோதனை சோதனை யிறைவகுத்தான் கனியே. (1058)

கறுபலா வழிமீதினில் வந்துகஸ்தியோ அடைந்தீர் மனமிடைந்தீர்
கனந்தங்கிய பதியே யென்ன காலமோ காலமோ அவன்கற்பனைமதியோ
நபிகள் நாயகம்போ லழகென்றுந்தா னலியாருவந்தார் புவிதனிலே
தவந்தங்கியே கனியே யென்னப்புன்மைகள் புன்மைகளுமக்குள்ளதோசமரில்.

எந்தன் பாலரே காசிமோரெ யிலங்குந் திருமேனி யலியக்குபர்
வந்து கறுபலா வழிமீதினில் மருவ லாறுடன் சமரஞ்செய்து
சிந்தை கலங்கியா தவனமாகிச் செருனர் காத்திலே யகப்பட்டீர்கள்
மந்தரப்புயத் தசனூர்வள்ளல் மணிகளாய் வந்த வென்பாலரே. (1060)

ஆல முகம்மது தேவியாரே யருமை தானுள்ள சகருவானே
மேலோ னருள்பெற்ற நபிமகளே விளங்குந் தவமுள்ள பாத்திமத்தே
தாலம் புகழ்கின்ற துரைமகனே ஸையினுல் லாபிதீன் சிகாமணியே
கால விதியினுற் சிறைச்சாலையிற் கஸ்திப் படவல்லா னெழுதினுனே. (1061)

என்னநான்செய்வே னிறைவாவென்றே யிலங்கும் ஸைத்தூனு மழுதிருந்தார்
மன்னர் முகம்மது அனிபாவந்தே மயிலா ரழுகையை மாற்றிநீதர்
அன்ன அசனூர்க்கு முசைனூருக்கு மருமை யாகிய சிறுபாலர்க்கு
முன்னும் சடங்கெல்லா மிகமுடித்து முகம்ம தனிபாவு மனமிடைந்தே. ()

மகரிப் ராச்சியந் தனையாள்கின்ற மன்ன ருமர்ஜகு பறுக்காவே
யிகலு மிகச்செய்த யெசீதுசேதி யெழுதின ரப்போ தலிமகனூர்
ஜெகத்தில் ராஜாங்க மசனுசைனூர் செலுத்தி வருகிற நாள் மீதினிற்
பகைய தாகவு மெசீதுப்பாவி பாங்கா யொருபெண்ணை யசனூர்க்கீந்து. ()

வஞ்ச மாகிய அம்மையாரு மனதில் மாறுபா டதிகமாகி
நஞ்சுப் பானக்க மசனூர்க்கீய நாத ரருந்தியே பதவிசேர்ந்தார்
தஞ்ச முடையவன் பண்பாலென்றும் தவத்தி லுசைனூரு முடிசூடியே
குஞ்ச ரங்களின் சேனைசூழக் குவலய மெல்லாம் ஆளுநாளில். (1064)

மாபி யாமக னெசீதுப்பாவி மாற்ற மெழுதிய நிருபத்தாலே
பூவி லிருக்கின்ற மதினநீங்கிப் பிரயாண மாக வெழுந்தபோதிற்
பாவி யெசீதுதா னிதையறிந்து படையை யனுப்பியே வழிமறித்து
மேவுங் கறுபலா வழிமீதினிற் விளங்குஞ் சமராடி யுமையாவெல்லாம். ()

காசி மலியக்கு பர்தமையுங் கருதலார்கள்தான் வதைசெய்தின்னும்
தேசி தனிலேகித் தண்ணீர்கேட்டே சிறந்த பாலனை யம்பாலெய்தும்
பூச லாகவே தான்வளைந்து புதியோ னருள்பெற்ற வுசைனூர்தம்மைப்
பாச னவன்சங்கி தலையறுத்துப் பாவைமார்களை யழைத்தேகியே. (1066)

சிறந்த அசனூர்தம் மணியாய்வந்த செயினுல்லாபிதீ னவர்களையு
மரம்போல் மனத்தின னெசீதுசொல்லால் வைத்தே யிருக்கிறான் சிறைச்சாலை
குறைஷிக் குலத்தவர்க் குதவியாகக் குவலயந்தனில் சறுயில்மன்னர்
மருவலாருடன் சமரஞ்செய்தே மனதுந் துணிந்தவ ரிருப்பதாலும். (1067)

நானும் படைபதி னுயிரமும் நகர மிசுக்கிலான் வருவதாலே
தானும் படைபதி னுயிரமும் சரத்தின் வேகமாய் வழிநடந்தே
மானில முள்ள விசிக்கிலானில் வந்தே யிருவரும் படையினேடும்
தீனோர் சறுயிலே யெதிர்க்குமான செருன ருடன்சமர் பொருதுமென்றே. ()

நிருப மெழுதியே யலிமகனர் நேர்மை யாகவே யதைமடித்து
மருவின் மலர்புயத் தரிசிம்மேறு வாகாய் மொகர்வைத்துத் தூதர்பாலில்
வரிசை யுடனீந்து மகரிபுக்கே வழியைக்கூடியே நடவுமென்று
ருரையி தாகமே தூதானவ ருடையோன் கிருபையென் றேகினரே. (1069)

அன்ன காலையிற் காகாஜங்கு மவர்தம் படைகளுந் தானெழுந்தார்
மன்னருட மந்த்ரி மூசிபுடனே வாரிபோற்சன மிகவெழுந்தே
மின்னும் படைக்கலன் மிகவணிந்து வீர வாளுடன் துல்துலேறி
யன்ன முகம்மது ஹனிபாவுட னரிமேற் பதினு யிரவர்கள்சூழ. (1070)

பேரிநவுரிகள் கிடுகிடென்னப் பிடியோ டெக்காளந் திடுதிடென்னக்
காரிடி போலே முரசதிரக் கனத்த நவுபத்துப் பிடிமுழங்கப்
போரி லெசிதையே வெல்வோமென்று புகழ்சேர் முகம்மதின் சலவாத்தோங்க
வாரி யதுபோலப் படைகளேக வானத் தமரோர்க ளாமீன்கூற. (1071)

வருகு நாளினில் மகரிபுக்கே வாகா மிகவேகும் தூதுவரும்
பெருகும் பூஞ்சோலைக் காவுநீங்கிப் பிடியின் வனங்களுந் தான்கடந்தே
வரையும் வனமதிற் சந்தனமு மகிழுந் தேக்குகள் தோதகத்தி
நிறைந்தங் கோங்கிய தருக்களெல்லா நிலத்தி லிருக்கின்ற தோற்றங்கண்டே.

நடந்தார் தூதரும் பதிமூன்றுநாள் நாநிலமுள்ள பாதைமீதிற்
கடந்தார் நதியையும் லுகரொருத்திற் கண்டார் மகரிபு ராச்சியத்தைத்
தடமும் சோலையுங் காவுகளும் சாலை வீதியு மவரேகியே
மடலின் வாவிகள் தனையும்பார்த்து வந்தார் மாளிகைத் தெருவீதியில். ()

முத்தா லழுத்திய சிங்காதன முகிலின் வருமின்னல் போலிலங்க
சித்ர மெழுதியே வயிரத்தினுற் சிறந்த மணிமாடங் கதிரிலங்கத்
கத்த னருள்பெற்ற நபியிறசூல் ஹபீபு முகம்மதின் சலவாத்தோங்கச்
சுத்தம் பொருந்திய வுமர்ஜகுபர் துலங்கு மதிசிம்மா சனமிருந்தார். (1074)

அன்ன காலையில் வருந்தூதுவ ரனேக வணக்கமாய்ச் சலாமுங்கூற
மன்ன ரிருபேரும் பிரத்தியோதி மறுஹபா நீரு மெவிடமென்றார்
மின்னுங் கதிர்போலச் சுதைகள்தீற்றி விளங்கு மணிமாட மெமன்ராச்சியம்
தன்னி லரசாளு மதிபதியார் தந்தகடிதங்கொண் டிங்குவந்தேன். (1075)

நிருபந் தனைப்பார்ப்பீர் நவமணியே நேர்மை துலங்கிய மகமேரென்றே
யருமை யாகவே கரத்திலீந்தா ரன்னலார் வாங்கி முத்தியிட்டே
மருவின் மலர்ப்புயத் திருபேர்களும் வாசித் தாயாச மிகவுண்டாகி
யுருகி மனமது மிகவுஞ் சோர்ந்தே யுரைப்பா ருமர்ஜகு பறுதாமுமே. (1076)

பதம்.

ஆதியே றெப்பே அசனுசைனுரை
அமரஞ் செய்தானே விந்தஆல மீதிலே
நீதிமறந்து மாபியாவு நேர்மைதவறியே
யவனினைவு போலவே

நஞ்சினு லசனருக்குந் துஞ்சவு நாயன் தன்விதியோ
இந்தநா னிலத்திலே
பஞ்சிலே யெரியுற்றதுபோலே பற்றுதே மனந்தான்
எங்கள் நற்றவமணியே

தொட்டிலாட்டிடச் சிபுரியிலுமே துயிலும்
நாதரே யெங்கள் துய்யவாசரே
யெட்டுச் சுவர்க்கத்திலங்கும் வானவரேற்றும்
போசரே யுங்கட் கிதுவோதான் விதி

சிங்கப்புலியே தங்கமேருவே தேசம் ஆண்டீர்கள்
இந்த ஜெகத்தின் மீதிலே
பங்கனெசீது கறுபலாவிற் பாதகஞ் செய்ய
ஆதிபார்த் திருந்தானே

## தொங்கல்.

இந்த விசனமுற் றிருபேர்களு மிகவும் வாடியே யழுதுசேர்ந்தார்
வந்த பெயரெல்லா மிதையறிந்தே மனங்க ளுருகியுங் கண்ணீர்விட்டார்
சந்த்ர வதனத்தி னுமர்ஜகுபர் தனியோன் கிருபையின் சுக்கூறுசெய்தே
யந்த நேரமே தமையமார்க்கங் கவர்கள் மனம்போலே சடங்குசெய்தார். ()

பாரி லுசைனர்தம் பழியைவாங்கப் பதினு யிரஞ்சன மொழுங்குசேர்த்துச்
சாரி யாகவே தானிறுத்திச் சங்கை பொருந்திய கலனணிந்து
வாரி போலவே முரசொலிப்ப வானத் தமரோர்கள் மிகவும்போற்றப்
போரி லுமையாக்கள் தம்மைவெல்லப் புரவி தனிலேறி னார்களம்மா. (1078)

அலிதங் குமாரர்க ளிருபேர்களு மரிவாளேந்தியே பரியிலேரிக்
கலின வாம்பரி கலகலென்னக் கணக்கும் பதினு யிரவர்கள்சூழ
வலையு மதிரவே முரசொலிப்ப வானத் தமரோர்கள் ஆமீன்கூற
விலைவே லேந்தியே தீனோர்களு மெழுந்தா ரிசிக்கிலான் தனைநாடியே. (1079)

காரி னிடிபோலே பிடிமுழங்கக் கனத்த நவுபத்து முரசதிரப்
பாருங் கிடுகிடெப் பற்றலார்கள் பயந்து சனங்களு நடுநடுங்க
வாரா றுமர்ஜகு பறுதையாறு வல்லோன் முகம்மதின் சலவாத்தோங்கக்
காரார் குடைநிழல் வருமிறசூல் ஹபீபு பேர்கள் வருகும்போதில். (1080)

மருத வனங்களும் சோலைகளு மருதந் தேக்குகள் பலாநாரத்தை
மிருது வாகிய மாதளையு விளங்கும் தேங்கனி மாங்கனிகள்
தருவு தோரினுங் கனிசொரியச் சார்ந்த தீனோர்கள் மனம்பூரிக்க
பருகி யனைவோரு மிறையைப்போற்றப் பாரிற் காவுள்ள செல்வம்போலே. ()

ஈமான் மிகவுள்ள வரப்பிரசாத னிலங்கும் வதனத்தின் மலர்ப்புயத்தா
ருமம் சீதேவி மனைமீதினில் நல்லோர் சுதனுக வந்தயூகன்

மூமி ஞனேரைப் போற்றும்நீதன் முகம்மது மீருன் மனமதுபோற்
றேமாங் கனிகளும் சிறந்திலங்கச் செழிக்கும் பூஞ்சோலை கடந்தாரம்மா. ()

நாதற் முகம்மது பேரன்மார்கள் நாலு வகைத்தாளை மிகவும்சூழ
நீதர் வருகிற நாள்மீதினில் நிலத்தி லுமையாவின் குலத்தவர்க
ளேது வாகவே யெசீதினுக்கே யியம்பினு ரப்போ திதுசேதியைப்
பூதலந் தன்னி லெசீதுகேட்டுப் புகல்வான் மந்திரி மறுவானுக்கே. (1083)

போத ரலிமக்கள்கள் வருகுமுன்னே பிடிப்போ மிசிக்கிலான் கோட்டையென்
வாதுபேசிடும்சருயீலையும்வதைகள் தான்செய்யத் துணிவோமென்றும் [றும்
சூதனுமற்சாது சையாதுக்கும் சூட்ச முறைத்தரும் படைகள்சேர்த்தே
யேது வாகவு மிசிக்கிலானை யிப்போ கொடிபோட்டு வாருமென்றுன். (1084)

தரியலாற்களின் தலைவன்சொன்ன சரத மறிந்துதா னுமர்சையாதும்
பரியி லிருபத்தி யையாயிரம் பார மதயானை யேழாயிரம்
தொருவின் ரசவர்க்கப் பதினுயிரம் சூமன் படையென்பத் தையாயிரம்
முரசுந் துந்துமி நவுரிபம்பை முழக்க மாகவே யெழுந்தார்களே. (1085)

மண்ட லங்களுங் கிடுகிடென்ன மலைகள் திடுதிடு திடுதிடென்ன
ஜெண்டாக் கொடிகளுஞ் சிரந்திலங்க செருன ராயுதம் கதிர்கள்மின்னச்
சண்ட மாருதக் காற்றைபோலே தட தட வென்று மடமடத்தே
தண்டா யுதக்காரர் நெறுநெறென்னச் சாரி யாகவும் வழிநடந்தே. (1086)

அட்ட திசைகளு மிகவதிர ஆதிசேட னு முடியசைய
வட்ட வாருதி யெழுந்ததைப்போல் மருவ லாருட கெடிகளோங்கத்
துட்ட ராகிய வுமையாகூட்டம் துடிக ளாகவு முரசடித்துக்
கட்டாரிக் காரர் மிகவுஞ்சூழ காடு வெளிகளுந் தானீங்கியே. (1087)

வந்து வளைந்தானே யிசிக்கிலானை மகரி பாகிய வகுத்தானதி
லந்த நேரமே சருயீலாரு மருமை யாகிய தவத்தோற்களும்
எந்த விதமது யாறகீமே யெசீது பெருவெள்ளங் தனையும்பார்க்க
இந்தச் சமயத்தி லென்செய்குவோ மிறையே யாதியே யாகுதாயே. (1088.)

என்னநான் செய்வே னிறைவாவென்று மெழுந்தாற் சருயீலுங் கோட்டை
மன்னர் நடந்துதான் பாடியூரின் மதியோர் தாகிறு மனையில்வந்தே [நீங்கி
அன்ன லார்சலா மவர்க்கோதவே யருமையா யவர் பிரத்திகூறி
இன்னுள் மகரிபு நேரத்திலே யிளவல் நீர்வந்த துரைமினென்றுற். (1089)

ஏக னருள்பெற்ற சீமானறே யென்னதான் சொல்வே னிப்பூமியில்
வாகாய் வுசைநாற்றம் பளியைவாங்க முகம்ம தனிபாவுக் கெழுதிருந்தேன்
யூக மாகிய வதிலானதிங் கொன்றும் வரவில்லை யிதுவரையி
லேக மாகவே யெசீதுபடை யிசுக்கி லான்கோட்டை தனைவளைந்தாற். (1090)

இந்த நேரததி லீமானேடு மெனக்கோ ருபகாரம் செய்வீராகி
லந்தமில் ஹக்க னபியிறசூ லண்ணல் முகம்மது சபா அத்தாவீர்

சொந்த மாகவே தயவிரங்கித் தோகாந் துறுகியை யென்பாற்கொடு
மெந்த நாளினும் பறக்கத்தாக இறையோ னுமக்கருள் புறிவானென்றார். ()

ஈது மொழி கேட்டுத் தாகிறுமே யுயம்புவா ரப்போ சறாயிலுக்கங்
கேதுநான் சொல்வே னெங்கள்வாபா ஈமான் மிகவுள்ள சீதேவினீர்
ஆதர வாகப் பூஞ்சோலைக்கிங் கைந்நூறுகுடந் தண்ணீரூற்றும்
நீத னெனுதோகாந் துறுக்கிபோ லு நீணிலந்தனி லகப்படாதே. (1092)

வானின் மதிபோலே நபிகிளையாற் வம்பன் சிறைச்சாலை யிருப்பதாலே
தானே மனம்வைத்து சிறையைமீட்டத் தனியோனுதவிகொண்டிருப்பதாலுய்
ஆனால் முகம்மது பேரன்மாற்க ளசனா ருசைனார்தம் முகத்துக்காக
கோனே யுமக்குயா னுரிமைவிட்டேன் கூட்டிப் போமென்றார் துறுக்கியாரை

மன்ன னுரைக்கேட்டுச் சறாயீலுமே வல்லோ னுதவிதான் செய்தானென்று
தன்னால் மனமது மிகப்பூரித்துச் சங்கை பொருந்திய செல்வம்போல
என்னும் தீனோர்கள் பறக்கத்தாக இருக்கு மங்கலக் குடிமீதினில்
நன்னய முள்ள மனரஞ்சித னடனப் பறியேறி நடத்துவாகன். (1094)

சுத்தம் பொருந்திய முத்துமீரர் சுதனதாய் வந்தே யுதித்தநேசன்
முத்து மீராவின் முனிஷீபுமே முகம்மதி றசூல்தம் மணிமாலையை [னர்
மெத்த யுவந்துதான் ஹபீபைப்போற்றி விளங்கு மகிழ்ச்சிபோல் சறாயில்மன்
கத்தன் கிருபையென் றகத்திலெண்ணிக் கல்பு குளிர்ந்தாரே புவிமீதினில். ()

நலங்கள் பொருந்திய தாஹிறப்போ நவிலுவார் தோகாந் துருக்கியார்க்கே
பெலன்கள் தானுள்ள மனமுள்ளோனே பிரிய முடனுன்னை சறாயிற்கீந்தேன்
வலுவின் பசியாற்றி யிசிக்கிலான்போய் வளைந்த படைகளை செந்தூளாக்கிச்
தலங்கள் மீதிலே யுனதுநாமம் தங்கும் படிசண்டை செய்மினென்றார்.(1096)

சொன்ன படிபோலே நடப்பேனென்று துறுக்கிதா னோதி மிகவும்போற்றி
மன்னர் மணிமாடந் தனிலிருந்தே வயிற்றில் போசனங் கொணர்மினென்றான்
அந்நேரந்தனில் வேலையாள ரைந்நூறொட்டியு மதற்கிநெய்யும் [சொல்வா
முன்னா லொருமாட்டி னிறைச்சி வைத்தார் மூரி னெனுந்தோகான் துருக்கி.

மதியின் வதனரே சறாயீல்வாபா வந்தங் கிருக்கின்ற தீனைப்பாரு
துதிபோற் போசனம் கொடுக்கவேணு மெந்தன் வயிறுதா னிரம்பலாகும் [றா
சதியோ ரிடம்விட்டுப் பார்த்தீராகிற் றகர்த்து நொறுக்குவேன் துறுக்கியென்
மதிபோற்றருவேனென் றவருறைத்தார் மகிழ்ந்தேவறிவுள்ளான் பசியாறினான்

பசியு மாரியே மனந்திமிர்ந்து பாங்காய்ப் படைக்கல னணிந்துநல்ல
துசிகர முள்ள துயிலுடுத்தித் தொப்பி தலையிட்டே துறுக்கியோனும்
சசியின் வதனத்தின் தாகிறுபால் சாட்டாங்கஞ் செய்தே பயணஞ்சொல்லித்
திசையில் நூறு மன்பாரமான திடுக்கென்றொரு தண்டாயுதந் தோள்வைத்தே

வாரும் சறாயீலே வாபாநீங்கள் மனதி லொருபய மெண்ணவேண்டாம்
மாறுபா டுள்ள வுமையாக்களை மாட்டுவேன் பூசை மடமடத்தே

தேறுவீர் நீங்கள் வரலாமென்று தீர ரிசிக்கிலான் கோட்டையாகிச்
சார்ந்தக முள்ள சருயீல்வாபா சமையல் தனக்கான வகைபாரென்றான். ()

நல்லோர் வசனங்கள் சரிதானென்று நவின்றா ரதுபோல வேலையோர்க்கே
அல்லுந் தானாகி விடிந்தகாலை யவன்றன் மனம்போல பசியாறியே
யல்லா சமதாகி யிருக்கும்போதி லுமையா கூட்டத்தார் முரசடித்தே
கல்லோ [illegible]தயினிட முழக்கம்போலே தருதலார்படை வளைந்தாரம்மா- ()

அன்ன காலையில் சருயீல்மன்ன ரருள்வார் பாத்திமா சகோதரிக்கிங்
சின்னா ளெசீதுட படையோர்வந்தே யேக மாகவே வளைந்தாரிப்போ
மன்ன னுமையாக்கள் தனையும்வெல்ல வாம்பரியேறி நாமேகிறோம்
தன்னாட் களிநோடு கோட்டைமீதிற் றங்கிப் பதனமா யிருப்பீரென்றார். ()

துணைவர்தான் சொன்ன வசனங்கேட்டுத் துய்யோன் கிருபையாற் பெண்மா
மனையின் மீதினிற் சத்ராதிகள் வருவ தற்கிடங் கொடுத்திடாமற் [தர்கள்
றனியோ னருளினா லிருக்கிறோம் தாங்கள் அமர்க்களம் போயெல்லோரும்
களியி னுசைனார்தம் பழியைவாங்கும் கத்த னுதவிதான் செய்வானென்றார்.

வல்லோன் தனைப்போற்றிச் சருயீ லுமே மந்திரி காசீமும் தவத்தோர்களும்
நல்லோர் ஹாஷீம்க ளாயிரரும் நடன நடைத்தோகான் துறுக்கியுடன்
அல்லா வுதவிதான் செய்வானென்றே யாயுதம் பல பரிசைதாங்கி
யெல்லாம் பெயர்களும் பரியிலேறி யெழுந்தா ரிசிக்கிலான் கோட்டைநீங்கி.

பேரி நவுரிகள் கிடுகிடென்னப் பிடியி னெக்காள மடமடென்னத்
தாரை முரசுகள் துந்துமிகள் தம்பூர் நவுபத்துங் கொடிமுழங்கப்
பாருங் கிடுகிடப் பரிநடத்திப் பாங்காய்ச் சமர்க்களந் தனிலிறங்கிச்
சாரியா சுத்தம் படங்கடித்தே சருயீ லவர்ஜன மிருக்கும்போதில். (1105)

அந்த நெரமே யுமர்சையாதங் கவனின் படையெண்பத் தையாயிரம்
வந்து முன்னின்ற பெயர்கள் தம்மில் வாம்பரி யேறி யொருதலைவன்
சந்திப் பாகவே முன்னால்வந்து சாற்றுவா னப்ப துடியதாக
இந்த இடத்தினி லிருக்கும்பேர்க ளென்னுடன் சமர் பொருதுமென்றான். ()

காளை வயதான காசீம்மந்திரி கலன்கள் தாங்கியே விடையும்பெற்று
வாளுங் கதிர்வீசப் பரியிலேறி வந்தா ரடாவென்று கேட்டாரப்போ
கோள னுடகர்ன விச்சொற்கேட்டுக் குலுங்கச் சிரித்தவ னுரைசெய்குவான்
ஏழை யுனக்கேண்டா இந்தமூர்க்க மிந்தா பார்மினென் றேயெடுத்தான். ()

எடுத்த வாளினா லிவரைத்தாக்க எழிலோர் கசையினா லதனைத்தட்டித்
திடத்தோர் வேலினா லவனைத்தாக்கச் சிரசு மறுந்தவன் விழுந்தான்பூவி
லடுத்லோர் தலைவனும் கதிர்வா ளேந்தி அரியை நடத்தியே ஆக்ரமித்துச்
சடத்த வசனங்கள் மிகப்பேசியே சடிலம் நடத்தியே முன்னால்வந்தே. (1108)

கதிர்வா ளதினாலே யிவரைத்தாக்கக் காசி மெனுமந்திரி யிறையைப்போற்றிச்
சதியனுட வெட்டை வாளாற்றுங்கித் தாக்கினார் வாள்ரா விருதுண்டானான்
கெதிய தாகவே பரிநடத்திக கெழுமி யொருசூரன் முன்னால்வந்து
சதிப்பே னுனையென்று வேலாற்றுக்கத் தட்டிக் கசையினாலடி த்தாரப்போ.

பரியு மவனுமாய்ச் சிதறிவீழ்கப் பாங்காய் வளைந்தானே நாற்பதுபேர்
மருவ லார்களின் சமர்க்கத்தில் வாசி நடத்தியே காசிமந்திரி
குறுகி வருவோரையும் பிடித்துக் குவலயங்களும் கிடுகிடென்ன
அரிவா ளதினாலே மருவலரை யறுத்துக் குவித்தாரே பிணக்காடதாய்.

மண்டலங் கிடுகிடுவென்னவே வாம்பரி விட்டே மிகநடத்திச்
கண்ட மாருதம் போலேதாவித் தகர்த்து வசுதரைப் பிணக்காடாகத்
தண்டா யுதத்தினால் மருவலரைத் தாக்கி ரணக்கள் மிகவதிர
வண்ட னெசீதுட படைகள்தன்னில் மடிந்தார் சனம் ரண்டாயிரத்தஞ்ஞூறே

இந்த விதமான சமரஞ்செய்தே யிதய மயங்கியே காசீமந்திரி
சந்திப் பாலகவே நிற்கும்போதிற் சாந்தார் வசுதர்கள் மும்பதுபேர்
கந்தரப்புயத் தரிசிம்மேறின் கற்கிக் குசைபிடித் திழுத்தேகையி
லந்தநேரந் தோகான் துறுக்கி யரிவா ளேந்தியே பரிநடத்தி. (I112)

விட்டார் குதிரைசைச் சமர்க்களத்தில் வீரியமெல்லாம் நடுநடுங்க
முட்டாய் வளைந்துதான் கீழிறங்கி முப்பதெழும்பேரை யொருங்குசேர்த்து
கட்டி யிறுக்கியே கயிறதனாற் கற்கின் சவுக்கினா லடித்தவரும்
குட்டி யாடுகள் போலதூக்கிக் குணவான் துறுக்கியின் தோளிலிட்டே. ()

காசீ மவரையும் பரியுடனே ஹக்கன் கிருபையா லழைத்துவந்து
நேசர் கூடாரம் தனிலேவிட்டு நிலத்தில் வசுதரை யிறக்கிவைத்துக்
கூசலாய் வரும் படையை நாடிக் குரகதமேறி வாளுந்தாங்கி
வாச ருத்தார மிகவும்போற்றி வாம்பரி விட்டார் சமர்க்களத்தில். (1114)

பாச னெசீதுட படையோரெல்லாம் பகருவா ரப்போ முமர்சாதிடந்
தேசந் தனிலொரு வலுமுறடன் சேர்த்து நமரோரைக் கயிற்றாற்கட்டி
போச மாகவே தோளிற்போட்டு முழக்கத் துடனவன் படங்கிற்சேர்த்து
மீசை முறுக்கியே பரியிலேறி விரட்டும் படியான வலுப்பானென்றார். (1115)

சொன்ன மொழிகேட்டே யுமறுசாதும் சூர னப்துல்லா சையாதுமே
யன்ன காலையிற் பதினாயிர மடைய லார்தமை யேவினார்கள்
மின்னுங் கதிர்வாளும் பளபளென்ன வீரியம் பேசி வளைந்தவர்கள்
மன்னன் துறுக்கியைக் கொல்வோமென்று மாரி போலவே வாணம்விட்டார்.

வாணந் தொடுப்பார்க ளொருசாரியில் வாளா லெறிவார்கள் துறுக்கிபேரிற்
பூணிப்பாய் நின்று கவண்கல்லாலே பொடுவா ரப்போ மடமடத்தே
வீணி னெசீதுட படையோர்விட்ட வீரவா ளம்பு கவண்கல்லெல்லாம்
பாணிப் பாகவும் கசையாற் றட்டிப் படையிற் புகுந்தாரே தண்டமேந்தி. ()

## பதம்.

சண்டை செய்தாரே தோகான் துறுக்கி சண்டை செய்தாரே
சண்டைகள் செய்தாரே வண்டரைத் தாக்கியே
பண்டு மருவலரின் மண்டை மூளைகள் சிந்தச் (சண்டை)

நான்கு திசையுஞ் சுற்ற நடனத்தின் பரிவிட்டே
யோங்கு முசைனார்பழி யொருவ னெடுப்பேனென்றும் (சண்டை)
சிங்கம்போல் வசுதரைச் சினங்கொண்டு தாக்கியே

பங்க னெசீதுபடை பதறியே சிதறிடச் (சண்டை)
ஓடிய பெயர்களை யுறுமி யுறுமிக்கொன்றே
யொருநூறு மன்பர்ாக் கசையினு லடித்தவர் (சண்டை)

## தொங்கல்.

மண்டலங்களு கிடுகிடென்ன மருவலார்களை ரணங்கள் செய்து
தண்டா யுதத்தினுல் வசுதர்களைத் தகர்த்து நொறுக்கியே சோரியோடக்
கண்ட பெயர்களும் பயந்தோடிடக் கருத லார்களைச் சூறைசெய்தார்
வண்டன் படையிலே மாண்டஜனம் வசுத யேழாயிர ரத்தைஞ்ஞூறே. ()

இந்த வாறுதான் கொல்வானென்றே யெசீது படையெல்லா மெடுத்தா ரோட்
கந்தரப்புயன் மனம்பூரித்துக் கற்கி நடத்தியே படங்கில்வந்தான் [டம்
சிந்தை புளகிதத் துடனிறங்கிச் சருயீல் பாதத்தை மிகவும்போற்ற
அந்த நேரத்தில் முத்துமாலை யவன்றன் கழுத்தினி லணிந்தாரம்மா. (1119)

புனித நீராடித் துயிலுடுத்திப் போசனங்களைக் கொணர்மி னென்றுன்
கனதி யிருமாட்டி னிறைச்சிதனைக் கணக்கோ டஞ்ஞூறு ரொட்டிநெய்யும்
இனிமை கொளத்தின்று பசியாரியே மிலங்கும் பரிமள மிகத்திமிர்ந்து
மனதி லிறையோனை மிகவும்போற்றி மதியோர் சமுகத்தி லிருக்கும்போதில்.

ஏழை மதிகளா யெசீதுபடை யெடுத்தே யோட்டங்க ளயர்ந்திடாமல்
வேளை யிரவாகத் தரியலார்கள் விளம்புவா ர்ப்போ துமர்சாதிடம் [றுல்
தாளி வயிறனென் றுருவன்வந்தான் சமர்த்தை யாங்களும் சொன்னேமென்
நாளிற் பயமாகு நமரோர்க்கெல்லா நவில்க் கேளுங்கள் தலைவமாரே. (1121)

மானில முள்ள மனிதன்தானோ வந்த பெரும்பூதம் ஜின்னோ தேவோ
தானுயுசைன்பழி யெடுப்பேனென்று தகர்த்து நொறுக்கிறுன் பிணக்காடதா
யேனோ வவனுக்கு மிதுகோபமோ எங்கே யிருந்தானோ பெருமுரடன்
ஆனல் நமரோர்கள் நிலைப்பரிதே யவனுட யுத்தந் தனையும்பார்க்க. (1122)

ஈது மொழிகேட்டே யுமர்சா தங்க ளியம்புவானப்போ படையோர்க்கெல்லாம்
கோது மிகச்செய்யும் துறுக்கியோனைக் குவலயமீதில் வதைகள்செய்தே
பூதல மீதி லெசீதுகீர்த்தி புகலும்படி செய்வேன் படையோர்களே (றுன்.
வாதைப்பெரிதாகச் சொல்லவேண்டாம் வதைசெய்வோம் நாளை யவனையென்

உரைகள் மிகவோதிச் சபதங்கூறி யுமறுசாதுவு மிருக்கும்போதில்
மருவலா ரெல்லா மடிசிலுண்டு வாகா யிரவினிற் றுயின்றார்பின்னர்
தரையுந் தலமுமே வெளுப்பதாயுஞ் சங்கையாகவே கதிருதித்தான்
கரியும் பரிகளு மிகவுந்துன்னக் கசட னெசிதுட படையெழுந்தார். (1124)

பரிகளோ நாலாயிரத் தைஞ்ஞூறும் பாங்காய் மதயானை யாயிரமும்
தரிய லார்களும் பரிசை தாங்கிச் சங்கையாகவு மணிவகுத்தே
இருங்கதிர் வாளுங் கரத்திலேந்தி யிருப தாயிரம் படையெழுந்தே
முரசு மடித்துமா ஜண்டாவோங்க முழக்கத்துடன் வந்தான் சமர்க்களத்தில்.

பாச னெசிதுட படையைக்கண்டு பகருவார் தோகான் துறுக்கியாரும்
நேசரே யெங்கள் சருமீல்பாவா நிலத்தி லணுவிலும் பயங்கள்வேண்டாம்
தோச னெசிதுட படையோர்களைத் துரத்தி யடிக்கிறேன் ரணக்களத்தில்
வாசிதா னேற வுத்தாரங்கள் மவுலுவீ ரென்றான் தோகானுமே. (1126)

வ் லுவோ னுரைகேட்டே யிறையைப்போற்றி வழுத்தினரப்போ துத்தாரங்கள்
நலவா னெழுந்துதான் படங்கிலாகி நமக்கும் போசனங் கொணர்மினென்றான்
தலமே லைந்நூறு ரொட்டிகளும் தகுந்த விருமாட்டி னிறைச்சிகளும்
பலனுப் பசியாறி பாணியுண்டு பகருவா ரப்போ வேலையோர்க்கே. (1127)

நமையாள் பவனுட வுதவியாலே நானும் சமர்செய்து வருவதுக்குள்
சமையல் சரியாகி யிருக்கும்படி ஜல்தி செயுமெனச் சாற்றிமன்னன்
உமையா குலத்தோர்கள் நடுங்குமான வொருநூறு மன்பாரக் கசையுந்தாங்கி
யமையும் வாள்வில்லும் பரிசைகளு மழகா யணிந்தவர் பரியிலேறி. (1128)

விட்டார் குதிரையைச் சமர்க்களத்தில் வினைய னெசிதுட படைநடுங்க
அட்ட திசைகளுங் கிடுகிடென்ன ஆதி சேடனு முடிநெறென்ன
முட்டாய் மிகநிற்கும் படையோரிட முன்னி லவருமே வருகும்போதிற்
றிட்டமாய் நின்றே மருவலார்கள் சிறந்த கடல்போலே வளைந்துநின்றே. ()

அம்பா லெறிவாருங் கவண்கல்லாலே யாயுத மேந்தி யெறிவார்களும்
தெம்பால் வசுதர்கள் சினந்துசீறிச் சிறந்த பரிசைகளே வுவாரும்
முன்பால் மிகவந்தே புயங்கள்தட்டி மூர்க்கமாய் நின்றே யோடுவாரும்
பம்பரம்போலே வருகுமான பரிசை தனையெல்லாம் கசையாற்றட்டி. (1130)

தண்டா யுதந்தனை யெடுத்துமன்னன் தரியலார்களின் படைபுகுந்தே
மண்டலங்களுங் கிடுகிடென்ன மாட்டினு னப்போ மறுவலரைச்
சண்ட மாருதம் போலேதாவித் தகர்த்து நொறுக்கியே பிணக்காடாக்கிக்
கண்ட பெயரெல்லா மதிமயங்கக் காரிடிபோலும் தாக்கினுரால். (1131)

மதங்கொண்ட யானை தனைப்பிளந்து வாம்பரிக் காலைப் பிடித்தடித்துக்
குதிரை நடத்தியே மடமடத்துக் கொளுத்தினு ரப்போ வசுதர்களைச்
சதிய ருடமுடி பிரளத்தாக்கித் தரிய லார்களின் குடல்சரியக்
கதிரின் வாளினு லுருளவெட்டிக் காகம் பருந்துக்கு விருந்துசெய்தார். (1132)

ஒருவன் தனைப்பிடித் தொருவன்பேரி னுரம தாகவு மிகவடித்துப்
பெருகும் சமர்க்களந் தனிலேவந்த பெலவா னுமையாக்கள் தலையறுத்துக்
குருகி வருவோரைப் பிளத்தாக்கிக் குரகதம் விட்டு மிகநடத்தி
மருவலா ரெல்லா மனநடுங்க மாட்டினூர் தண்டா யுதத்தினாலே. (1133)

கொட்டு முரசுகள் தனையுடைத்துக் கூழறக்குழுறவும் பிளத்தாக்கித்
துட்ட ராகிய வசுதர்களைத் துரத்தி வாளினா லறுத்துமன்னன்
காட்டா ரியதாலுங் கசையினாலும் கருத லார்களின் முடிதூளாக்கி
விட்டார் குதிரையை ரணக்களத்தில் வெள்ளம்போல் ரத்தம் சோரியோட. ()

சூமன் படையிலே மிறந்தஜன்ம் சொல்லும் பதினாயிரத் தஞ்ஞூறு
பூமி தனிலேதான் மருவலார்கள் புதிய பயத்துட னெடுத்தாரோட்டம்
நேமி யாகிய துறுக்கியென்றும் நிகழ்த்தினா னப்போ துமர்சாதுவுந்
தாமத முண்டோ பயலேயென்று சடில னடத்தவே தோகானவர். (1135)

ஏதடா மோசம் வருமென்றெண்ணி யெடுத்தா னோட்டந்தா னுமர்சையாது
பூதலந்தனிற் பரிநடத்திப் புகழ்சேர் சமூயீலின் சமூகம்வந்து
பாதம் போற்றியே புதுநீராடிப் பாங்காய்த் துகிலாடை தனையணிந்தே
ஆதி பெரியவன் தன்னைப்போற்றி யாவரும் பசியாறி யிருக்கும்போதில். ()

கதிரோ னடையவு மெசிதுபடை கருத்த னுமர்சாதும் சையாதுமே
மதிகளாகவே யாலோசித்து வழுத்துவா ரப்போ சூச்சங்களைப்
பதியி னிசுக்கிலான் கோட்டைவாங்க பகரக் கேளுங்காள் படையோர்களே
அதிக விருளாக விருப்பதாலு மருளக் கேளுங்கள் நமரோர்களே. (1137)

எழுப தாயிரம் ஜனங்களுடன் யானை குதிரைகள் மிகுந்திருக்க
நழுவ லாகா மிருந்தோமானால் நகரி னிசுக்கிலான் வாங்கொணாது [ன்
தழுவிக்கொடிப்போட நினைத்தோமென்றுற் றுளிவயிறனு நெருங்கவொட்டா
கெழுமி யாவரு மிரவானதிற் கீர்த்தியுடன் கோட்டை பிடிப்போமென்றான்.

அன்பதாயிரஞ் சனங்களுடன் யானைப்பதாதிகள் மிகவுஞ்சூழ [போர்
முன்பாய்ச் சமூயீல் பால்வரிசை காட்டி முரசுமடித்துத்தான் முன்னில் நிற்
தென்பாற் பதினேழாயிரத் தஞ்ஞூறு சிறந்த ஜனத்துடன் முரசில்லாமற்
றன்பா லனைத்துமே சையாதேநீ தாக்கல் கொடுக்காமற் கோட்டைவாங்கி. ()

தந்திர மாகக் கொடியும்போட்டுத் தாமும் ஜனத்துட னிருமினென்று
னந்த நேரத்தில் ஹாஷிமோரு மகவ லறிந்துதா னிதுசேதியை
வந்து பாத்திமா தமக்குரைத்தே மறுபடியவர் படையிற் சேர்ந்தார்
சிந்தை மயங்கியே மடமாதருந் தியங்கி யழுதுதான் புலம்பலுற்றார். (1140)

ஆல முகம்மது நபிசல்லமே யலியுல்லர்மணந் திட்டமாதே
கால விதியிதோ ராக்காலத்திற் கசடன் மாறுதா னினைத்தானிப்போ
மாலா மனைவோரும் சமரிலானார் மனையிற் றுணைவரு மிப்போதில்லை.
மேலோன் புறமென்று பாத்திமாவும் விரைவி லிசுக்கிலான் கோட்டைமீதில்

உரிமை யாகிய பெண்மாதரை யொழுங்காய் நாற்பது பெயரைச்சேர்த்தே
அறிவோ மிரவினி லவன்சமர்த்தை யண்டா நாற்பதிற் கூழ்க்காச்சென்றார்
மருவின் குழல்மாதர் மேன்மாடத்தில் வாகா யெரிமூட்டிக் காச்சும்போதிற்
றரியலா ரன்ப தாயிரரும் தானைப் பதாதியும் ரணக்களத்தில். (1142)

முரசு மடித்தவ ணிருக்கும்போது முதலோ னருள்பெற்ற சருயீல்மன்னர்
தறஜா மிகவுள்ள ஹபீபைப்போற்றிச் சகல பெயர்களு மிகவெழுந்து
பரிக ளேறியே பரிசைதாங்கிப் பாங்காய் மிகநின்று முரசடித்துத்
தரிய லார்களின் பரிசையோடும் தாங்காட்டி நிற்கும் சமையத்திலே. (1143)

அந்த விரவினிற் சூட்சமாக அப்துல்லா சையர் தவன்படையும்
விந்தை யாகிய வுமையாக்களில் விளங்கும் பதினேழா யிரவர்சூழ
மந்தரக்கதிர் வாட்கையேந்தி மாற்றமாய் வந்தான் கோட்டைவாங்கத்
தந்திரங்களைப் பாத்திமாவும் தாக்கல் தெரிந்துதான் மேன்மாடத்தில்(1144)

சட்டை சருவந்து மிகவணிந்தே சகல ஆயுதம் பரிசைதாங்கி
யெட்டுச் சுவர்க்கத்துக் கரசராக இலங்கு முஹம்மது நபியைப்போற்றித்
திட்டமாய் நின்றே யுலாவும்போது சிகுற னெசீதுட படைகள்சூழ்ந்து
மூட்டாய் மிகவந்தே கோட்டைவாசல் முழக்கத் துடனவன் திறக்குநேரம். ()

அணியாய் மிகநின்றே அடையலார்க ளகவல் தனைக்கண்டே பாத்திமாவும்
சுணங்கு பேசலான் கூட்டத்தார்மேற் றுய்ய மயிலாரும் தட்டாய்நின்றே
மனதி லுறுதியாய் அம்பேற்றினர் வந்து முனைமீதி லேமெலிந்தார்
கனமும் பொருந்திய பாத்திமாவும் கணைகள் தொடுத்தாரே மருவலார்மேல்.

தொனிகள் மிகச்செய்தார் மழைமாரிபோற் றுளைத்தங் கோடவே வசுதர்களை
மணியில் நூல்கோர்த்த பாவனைபோல் வசுத ருயிர்களும் வானிலேகக்
கெணித மாகவே யெசீதுபடை கீளே விழுந்துதா னிறந்தஜனங்
கணிதம் ரண்டாயிரத் தைஞ்ஞூறு கசடரிறந்தாரே பிணக்காடாக. (1147)

ஈதுவிதங் கண்டே ஊசயாதவ னியம்புவா னப்போ படையோருக்கங்
கேதோ வொருராஜன் மேன்மாடத்தி லிருந்து வாணத்தா லதஞ்செய்கிறான்
சாதுவாய் நாமும் குரலைப்பார்க்கச் சத்தம்பெண்மாதர் போற்றுேணுது [றான்
கோதோன் றணுகாமல் நமரோரெல்லாம் கோட்டையைக் கன்னம் வைமினென்

சூத னுரைகேட்டங் குமையாவெல்லாம் சூழ்ந்தார் கோட்டையினருகாமையில்
மாது பாததிமா யிதையறிந்தே வல்ல பெரியோனை மிகநினைத்தே
யேதோ னெருக்கிறான் கோட்டையென்று மியம்புவா ரப்போ மாதரெல்லாம்
வாதா வருகின்ற வசுதர்பேரில் வாரி யிறையென்றார் கூழானதை. (1149)

பூராய்க் காரியம் தனையுமிட்டே பிடித்தார் கரண்டியை நாற்பதுபேர்
வாரி யிறைத்தார்கள மாற்றலர்மேல் மழைமாரி பெய்த வாறுபோலே
சோராய் வீசிய கூழினாலே சூடு மிகவாகி யடையலார்கள்
சாரி யாகவே தான்விழுந்து சத்தமிட்டாரே கண்ணீரோட. (1150)

அன்ன நடைமாதர் சூழினலே யடைய லார்முடி மிகங்கள்வெந்து
மென்ன னெசிது படைஞரெல்லாம் வாய்க ளுதடுகள் வழிந்தோடவே
யின்ன ளிரவினல் வயிறுவெந்தே ஈரற் கருகுதென் றழுவார்களும்
தன்னல் மயங்கியே கிடப்பார்களும் தயங்கி மிகநின்றே புலம்புவாரும். (1151)

சிதறுங் சூழாலே செவிழுந்து தியங்கியழுவா று மொருசாரியிற்
பதறி யோடியே கீழ்விழுந்து பல்லோ தானு கிட்டிகிடப்பார்களும்
கதறி யழுவார்கள் கையில்வீழ்ந்தாற் கரங்கள் தனைசுப்ப நாவும்வெந்தே
யுதடு போச்சுதே சூழாலென்று முருகி யழுவார்க ளுமையாக்களே. (1152)

அய்யோ யிஃதென்ன கொதிசூழப்பா ஆவி வாங்கின்ற வெமனேவென்பார்
கையில் விழுங்கூழை நாவற்சுப்பக் கனலா யெரியுதே வாயுமென்பார்
மெய்கள் போச்சுதே யென்பர்சிலற் விதன மாகுதே மூக்குமென்பாற்
தையலார்விடுங் கூழினலே சார்வதே யில்லைக் கோட்டையென்பாற். (1153)

கோட்டை மீதுள்ள தேவோஜினேே கொதிக்கக்கூழ் காச்சியிறைக்கிதென்று
கூட்டம் கலைந்துதான் நாலுக்கும் கூக்குரற் சத்த மிகுந்தாலே
போட்டியாம் நின்று பரிசைகட்கும்புன்மையுமர்சாது மெண்ணலானன்
போட்டான் கொடி யென்றே மனமகிழ்ந்து பூரிப்பாகவே சமரில்நின்ருன். ()

தந்திரஞ் செய்த சையாதவன் தையலா ரென்று மனதிலெண்ணி
யிந்தக்கூழ்ச் சண்டை யாருங்கண்டா ஷிழிவுக்கிட்மாகி நமரோக்கெல்லாம்
அந்த நிமிஷமே கலிதல்பார்த்தே யனேவோர் தம்மையு மழத்தேகியே
வந்தான் சமர்க்களம் சையாதுபால் வழுத்துவா னப்போ கண்ணீரோட. ()

மெய்ய னுமர்சாதே சொல்லக்கேளும் விளங்கு மிரவினிற் பட்டபாடு
இய்யக் கூழாலே தையலார்க் ளென்ன மோசங்கள் செய்தாரிப்போ
தையமாகவே யுமையாக்ளி லழுது கிடப்பவர் நாலாயிரம்
தைய லார்விடுங் கூழால்வெந்து ஜனத்தி லிறந்தவ ராயிரமே. (1156)

முந்திமேல்மாடங் தனிலேநின்று முகில்மா னுடஅம்பா லிறந்தஜனம்
நந்தினதுரண்டா யிரத்தைந்நூறு நானென்ன செய்வே னுமற்சாதுவே
யிந்தவிதமான கூழ்ச்சண்டையை யிந்தவுலகில்நானெங்குங்காணேன்
தந்திரஞ்செய்த மதிகளெள்ளாம் சமர் துக்கிழிவாச்சே நமரோக்கென்ருன்.

இனிமேல் யாவரு மொருமுகமா யெதிர்த்துவருவோரை வதைதான் செய்யக்
கணித மறுபதா யிரம்படைஞற் கடல்போல் சருயிலை மிகவளைந்தாற்
புனிதன் தோகனுந் துருக்கியையும் பிடித்தே யவனைத்தான் கயிற்ருற்கட்டி
தனித்துவதைசெய்வோம் புவியிலென்று சமருக் கழுமென்றே யுரைத்தானப்
[போ

பரியி லிருபத்து நாலாயிரம் பார மதயானை யேழாயிரம்
தரிய லார்களின் பெருக்கமது ஜனங்க ளறுபதா யிரவர்சூழ
முரசு துந்துமி பிடியெக்காள முழக்க மாகவே யதிர்ந்துதாவக்
கரியின் ரதகேச பதாதிகளும் கடலார்பதுபோல யெழுந்ததம்மா

மண்ட லங்களுங் கிடுகிடுடென்ன வானி னிடிபோலே முரசொலிப்ப
வண்ட னெசிதுட பதாதிவெள்ளம் லாரிபோ லாகவக்காலத்திற்
சண்ட மாருதம் போலேதாவித் தடதடவென்று மடமடத்தே
கொண்டல் வேகமாய்ப் பரிகள் துன்னக் குருகலார் வந்து வளையும்போதில்.()

என்ன நான்செய்வேன் றகீமேயென்று மிடைந்து மனம்வாகுச் சறுயீல்மனன
ரின்னு ளிரவினில் மவுத்தென்றெண்ணி யிருதய மெல்லாம் கலங்கிற்சொல்வார்
மன்னர் முகம்மது அனிபாவுக்கே வரைந்த நிருபமும் நாளாற்சுதே
யின்னம் பதிற்சேதி வரவுமில்லை யென்னைங் படைத்தோனே யாகுதாயே. ()

அலிறலியல்லா மகனார்வப்தே யசனார் தம்பழி தன்னை வாங்கித்
தலைவ னெசீதையும் வதைகள்செய்து தாய்மார் தங்களைச் சிறைமீட்டிட
நலமதாய் செய்னுல் லாபிதீனை நாய னுதவியால் முடிசூட்டியே
யிலங்குந்தகுத்தினி லாகமட்டு மென்னைக் காத்துக்கோ யாறகீமே. (1162)

வசிகறமுள்ள சறுயீலாரும் வல்லோன் புறமென்று நிற்கிம்போதி
லெசீது படையோரு முமர்சையாது மிகலாய் மிகவந்து வளைந்துசிற்றித்
திசையுங் கிடுகிட விருபடையும் செருக்கலந்தனிற் றுட்டாய்நின்றே
வசைய னுடபடை வசுதரெல்லாம் வளைந்து வில்லினி லம்பேற்றையில்(1163)

---

## அலிறலியல்லாகு அன்கவர்கள் குமார ருமர்ஜகுபறு தையார் வருதல்.

### தொங்கல்,

இரண்டு படைகளும் நடுநடுங்க விடியை நிகருக முரசொலிப்பக்
கண்ட மருவலர் மனமஞ்சிடக் கனத்த வுருமேறுங் கலைந்தோடிடச்
சண்ட மாருதக் கடலைப்பேலே சத்தப் பேரிகை யிடிமுழங்க
அண்டர் மிகப்போற்று நபியிரசூல் ஆல்முகம்மதின் சலவாத்தோங்க. (1164)

வெற்றி கொடிகளும் விருதுகளும் விளங்கும் மகரிபர் சூழ்ந்துவர
முத்து மரகதம் வயிரத்தினால் முகிவின் வருமின்னற் போலாகவே
கத்தை கவரிகள் வெண்சாமரை ஹக்க னருளினாற் றுலங்கிவர
யுத்த வலிசிம்மே றலிதம்பால் ருமறு ஜகுபர்தை யாரும்வாரார். (1165)

### பதம்.

வாரார்கள் இராஜர்கள் அலிப்புலிதம் வரிசையின்பாலர்
பூரா னெசீதை வெட்டி போற்க்களம் செய்யவே வாரார்கள் ராஜர்

முத்துங் குடைபால் வட்டந் துலங்கவே
மொய்யகதிர்போல வெண்சாமரை வீசவே
நற்றவுமாகிய நல்லோர்கள் போற்றவே
நவுரி பேரிகை பம்பை நவபத்து முழங்கவே

ரம்பையர் பாடக் கூறுல்ஹூீன்கள்
நற்கவி யோத வாரார்கள் ராஜர்

வல்லவ னருளினல் வானவரன்பேறு
மங்களங் கூறியே மலர்களுந் தூவவே
நல்லோர் படைபதி னயிர வீரரும்
நம்பு முனைசனர்பகை வம்ப னெசீதைக்கொல்ல

நாட்டிய மாடத் தவத்தினர்கள்
நற்கவி பாட வாரார்கள் ராஜர்
தேசத்துக் கதிபதி ஜெகசோதி மணியாகச்
ஜெயமெங்கும் புகழ்மெய்க்கும் செய்பிதிற சூல்நபி

வஜிகரந் துலங்கிய மருகேச ரஸிமக்கள்
வருகிற முழக்கத்தை மாற்றலர் தான்கண்டு
மனது தியங்க வெசீதுபடை
மதிகளுந் தயங்க வாரார்கள் ராஜர்.

வெற்றிக் கொடிகளுஞ் சுற்றிலும் சூழவே
வேழங்க ளானது தாளங்கள் போடவே
பற்றலர் யாவரும் பார்த்துகண் கூசிடப்
பாருங் கிடுகிடென்னப் பரிகளு மிகத்துன்ன

பகைனர்கள் நடுங்க வெசீதுட
படைகளு மயங்க வாரார்கள் ராஜர்.

## தொங்கல்.

வருகு நேரத்தி லிருபடையும் வகையொன் றறியாமல் நிற்கும்போதிற்
றிறமை பொருந்திய வுமர்ஜகுபர் செப்புவா ரப்போ தீனேர்க்கெல்லா
மிரவோ சாமத்தின் காலமீதி லிருவர் படைகளும் சமராகுது
கரவா ளேந்திய தீனேர்களே ஹக்கன் தனைப்போற்றி வாங்களென்ருர். ()

அந்த நேரத்தி லஸிதம்பால ரன்ன வுமறுஜகு பறுதையாறு
கந்த ரப்புயத் திறசூலுல்லா ஹபீபு முகம்மதை யுவந்துபோற்றி
மந்தி ரக்கதிர் வாள்கையேந்தி வாசு மேலிருந் திருவோர்களும்
சந்திப் பாய்நிற்கும் படையைக்கண்டு சத்தத் தொனியது பெருங்குரலாய். ()

ஹாஷீ மோரெல்லா விலகி நிற்பீ ரஸியுல் லாமக்கள் சம்ரில்வந்தோம்
வாசனே யுள்ள வுசைனர்பழி வாங்கநினைத்திட்டோம் ராக்காலத்தில்
ஏசு வாக்கிட மினிமேலில்லே யிறையோ னறிவானென் றெடுத்தார்வாளேப்
பூசி வாங்கவே கெடிகலக்கம் பொருந்தின ரொன்று மறியாமலே. (1168)

சேட னடுங்கவே பரிநடத்திச் செந்தூட் பறக்கவே சமர்க்களத்தி
லாட லம்பரித் தாளினலே யநேக வசுதரை முடிதூளாக்கி

நீடிப் பாகிய பெருவெள்ளத்தில் நெறுநெறெ ன்னவே படைநெளியக்
கோடை யிடிபோலக் குதிரைக்காலின் குழம்பா னெசிதுட படையுத்தாக்க

மண்ட லங்களுங் கிடுகிடென்ன வாசி நடத்தியே யிருவோர்களும்
வண்ட னெசிதுட படைகள்தன்னை வாளால் மிகவெட்டி ரணங்கள்செய்தார்
சண்டை மாருதம் போலேதாவித் தகர்த்து நொறுக்கியே மருவலாரை
மண்டை மூளைகள் சிதறிவீழ்க வாளி ஞற்றுக்கிச சூறையிட்டார். (117ப)

## பதம்.

யுத்தஞ் செய்தார்கள் உமர்ஜகுபர் யுத்தஞ்செய்தார்கள்
யுத்தஞ்செய்தார்கள் சத்திராதி யானேரைச்

சந்திர வடிவாளால் சுற்றச் சூறைகளாடி
யுத்தஞ் செய்தார்கள் உமர்ஜகுபர் யுத்தஞ்செய்தார்கள்

பற்றலர் முடிகளும் பனங்காய் போலுருளவே
பாருங் கிடுகிடென்னப் பரிகளு மிகத்துள்ள
யுத்தஞ் செய்தார்கள் உமர்ஜகுபர் யுத்தஞ்செய்தார்கள்

அட்ட திசைகளு மதிர்ந்து திடுதிடென்ன
அடையலர் முடிகளும் சோரிகொண்டோடவே
யுத்தஞ் செய்தார்கள உமர்ஜகுபர் யுத்தஞ்செய்தார்கள்

துட்ட வுமையாக்களைத் துண்டு துண்டாக்கியே
சோரி நதிகளோடத் துஞ்சும் பிணமிதக்க
யுத்தஞ் செய்தார்கள் உமர்ஜகுபர் யுத்தஞ்செய்தார்கள்

மண்டல மதிர்தரக் கண்டவ ரஞ்சிட
வாளால் வசுதர்களைத் தூளாம் ரணங்கள் செய்தே
யுத்தஞ் செய்தார்கள் உமர்ஜகுபர் யுத்தஞ் செய்தார்கள்

சண்ட மாருதமெனத் தாவி மருவலாரைத்
தாக்கவும் வேலினர் கூக்குரலாகவே
யுத்தஞ் செய்தார்கள் உமர்ஜகுபர் யுத்தஞ்செய்தார்கள்

முட்டி வருவோர்களை யெட்டிப்பிடித்தடித்தே
கொட்டு முரசுகளைத் தட்டிக் கசையினலே
யுத்தஞ் செய்தார்கள் உமர்ஜகுபர் யுத்தஞ்செய்தார்கள்

வெட்டி வசுதர்களைக் கட்டுமரங்கள்போலே
துட்டரிறந்தகளம் சோரியாறேடவே
யுத்தஞ் செய்தார்கள் உமர்ஜகுபர் யுத்தஞ்செய்தார்கள்.

## தொங்கல்.

கடகட வென்ற யானைகளைக் கதறும் படிசாய்தார் வேலினலே
தடதட வென்ற பரியானதைத் தகர்த்துக் கசையினற் றகரத்தாக்கி

படபடத் திடுமுமை யாக்களைப் பார்த்தே துறுக்கியும் வதைகள்செய்து
தடதட வென்ற ஹறபசிகளைத் தகர்த்தா ரேதண்டா யுதத்தினாலே. (1171)

கட்டு மரம்போலே பிணமிதக்க காகம் பருந்துகள் தசையையுண்ணக்
கொட்டு முரசுகள் துந்துமிகள் கொடிகள் பிடித்தொரு நதியிலேகத்
துட்ட னெசிது பட்ட படைமீதினிற் றுஞ்சும் பிணங்களோ மலைபோலாக
வட்ட வாருதி போலாகவே வசுதர் சமர்க்கள மானதம்மா. (1172)

கரிக ளிறந்தது மொருசாரியிற் கற்கி யிறந்ததோ வனேகமாகும்
தரிய லார்களில் மாண்டஜனம் சார்தல் நாற்பத்தியேழாயிர
மருவ லார்களு முமர்சையாது மதிகள் மயங்கியே யோட்டங்கொண்டார்
வரிசை பொருந்திய நபியிறசூல் வள்ளல் முகம்மது பேரமார்கள். (1173)

வருகும் பதினையி ரவர்கள்சூழ வந்தா ரிசுக்கிலான் கோட்டைமீதில்
மருவின் மலர்ப்புயத் தரிசிம்மேறு வருதல் தனைக்கண்டே சமுயீ லுமே
பெருகுந் தீனோரு முன்னால்வந்து பிரியத் துடன்பாத மிகவும்போற்றி [லானர்
யிரையோன் கிருபையால் சலாமுங்கூறி யெதிர்சென் றழைத்துதான் மனையி

வந்தங் கனைவரும் பாதம்போற்றி வள்ள லிருவரைத் தகுத்தில்வைத்துச்
சந்த்ர வதனத்தின் தயாபரரைச் சங்கை யாகவே யாரும்போற்றிச்
சிந்தைபூரிப்பா யிருக்கும்போது செப்புவா ரப்போ சமுயீலவர்
அந்தமில் ஹக்க னருள்பெற்றோங்கு மன்ன முகம்மதின் பேரனாரே. (1175)

இந்த விரவினி லிறையவனு மிதயம் போலவே யுதவிசெய்தான்
வந்திங் குசைனார்தம் பழிகள்வாங்க மகிழ்ச்சி யடைந்திட்டோம் வரிசிம்மேறே
சந்த்ர வதனத்தின் மணிவிளக்கே தலத்துக் கரசான நவமணியே
அந்தமில் ஹக்க னருளீதென்றும் ஹாஷிம்கள் போற்றி யிருக்கும்போதில். ()

முரசங் கறங்கவே நவுரிசின்ன முழக்க மிகுதமாய்ப் புவியதிரப்
பறையும் பேரிகை தவிசல்லாரி பதினெண் மேளமுங் கொடிமுழங்க
வரிசையாகிய ஆமீன்கூற வள்ளல் முகம்மதின் சலவாத்தோங்க
அரசர் பணிந்தேற்ற குறைஷிக்குல மண்ணல் முகம்மது அனிபாவாரார். ()

## பதம்.

அண்ணலே வர்ரார் எமன்தேசத்துக் கதிபதிவாரார்
விண்ணவர் போற்றிட விரைமலர் கமழ்தர
விரிகுழல் ரம்பையா வெற்றிச்சோ பனம்கூற
கண்ணுக் கினிமையான ஹபீபிற சூல்பேரர்
கருணை தங்கிய துல்துல் கற்கியின் மேலாகக்
காரணர் வருக ராஜர்களும் கண்டு சிந்திக்க அண்ணலே வாரார்

படைபதி ளுயிரம் பாவனை யாய்வர
பரிசா கதியுடன் பதனடை செய்திட
நடினத் தின்மாதர் வெஞ்சாமறை வீசிட
நவுரி பேரிகை பம்பை நவுபத்து மதிர்தர
நடினங்க ளாகப் படைமன்னர் கவியோத அண்ணலே வாரார்

வருகிற நேரத்தில் மனமது கோபமாய்
மவுலுவா ரலிமகன் வருமவர் தமைநோக்கிப்
பெருமைய தாகிய வுமையாவின் சிற்றூர்கள்
புகுந்து செவிகள் மூக்கை மிகுத்தறுத் தவர்களைப் [வாரார்
போய்ச்சொல்லுமென்றுரஎசிதிடத்தினபுவிதனில்மீதேஅண்ணலே

மன்னர் மன்னவர் சொன்ன வசனங்கள் போலவும்
மாபியா நாடுகள் தான்புகுந் தவர்களைப்
பன்னக முமையாக்கள் செவிமூக் கறுத்தவரைப்
பாதக னெசிதிடம் போகும்படி யடித்தே
பாரினில்மீதே யிறையாதி படைத்தவ னருளால்.

## தொங்கல்.

இந்த விதமுள்ள காரணமா யிறையோ னலிமகர் வருகும்போதி
லந்த நேரத்தில் சறுயிலாரு மலங்கிர்தஞ் செய்தே யிசிக்கிலானைச்
சந்த்ர னொளிவான மணிமுத்துகள் சரங்கள் தூக்கியே தகுத்தானதிற்
சிந்தை பூரிப்பாய்ச் சகலோர்களும் சிறந்த விருதெல்லா மணியாய்விட்டே. ()

உமறு ஜகுபறும் சறுயிலோரு முண்மை யாகிய தவத்தோர்களும்
தமரின் ஹாஷிம்கள் ஜனங்கள்சூழத் தம்பூர் பேரிகை பிடிமுழங்க
நமையால் பவனுட கிருபையென்றும் நல்லோர் முன்வந்தே யழைத்தேகியே
தமரூ ரிசிக்கிலான் கோட்டையாகித் தகுத்தி லிருந்தார்க ளலிபாலர்கள். ()

கஞ்ச மடமாதர் கவரிவீசக் கட்டியங் கூறத் தீனேரெல்லாம்
தஞ்ச முடையவன் தன்னைப்போற்றிச் சகல பேர்களும் பணிந்துவாழ்த்த
மஞ்சுகுடை நிழல் வருமிரசூல் வள்ளல்முகம்மது சலவாத்தோங்க
மிஞ்சும் புகழாகத் தீனேரெல்லா மேலோன் கிருபையென் றிருக்கு நேரம். ()

தடஞ்சூ ழிசிக்கிலான் தனையாள்கின்ற சறுயி லுரைசெய்தா ராசர்பாலி
ல்டைய லாருட மோசங்களு மகனு ருசைனர்தம் வரலாற்றையும்
தொடையல் மார்பின்னர் பட்டபாடுந் துலங்கும் சகோதரி சூழ்ச்சண்டையும்
திடவான் தோகானுந் துறுக்கியாரும் செய்த சமரையு மெடுத்தோதினர். ()

மன்னர் சறுயிலும் கண்ணீரோட வழுத்தும் படியான வரலாறுகேட்
டன்ன அலிபாலர் மூவர்களும் தாரா யாகவே கண்ணீர்விட்டே

என்னுந் தமையமார் தனைநினைந்தே யிதயங் கலங்கியே வதனம்வாடி
அன்ன லார்களு மாயாசமா யழுது புலம்பியே யுரைசெய்குவார். (1182)

கண்ணின் மணியான ரத்தினமே ஹக்க னருள்பெற்ற தயாபரரே
எண்ணிற் கடங்காத சிரோமணியே யெங்க ளசனுசை னார்வள்ளலே
மண்ணில மீதி லொருகடிதம் வரைய மறந்தீரோ நாயகமே
விண்ணோர் தாலாட்டு நவமணியே மேன்மை பொருந்திய வுசைனார்வள்ளல். ()

எங்கள் குடிக்கெல்லாந் தங்கமேரே யிறசூல் முகம்மது பேரனாரே
உங்கள் திதாறை நாங்கள் பார்க்க வுலகந் தனிலாரைப் பார்த்திடுவோம்
சங்கை பொருந்திய சிங்கமேரே தாலந் தனிலேயா அவதியானீர்
திங்கள் வதனமே யெங்கள்பாலா செயினுல் லாபிதீன் மணிவிளக்கே. (1184)

பாவி யெசீதுட சிறைச்சாலையிற் பாங்கா யடைத்தவ னிருக்கின்றானே
ஏவலறியாத தேள்மருந்தே யிந்த மோசமா செய்யலானாய்
பூவிற் கொடிபோட வெசுதீனுக்குப் புதியோன் தனக்கிது பொருத்தந்தானோ
ஆவி பறக்குதே யசனுசைனா ரகவல் தனைக்கேட்டுச் சறுயீலாரே. (1185)

என்னின் குலத்தோர்க்கா யுதவிசெய்தீ ரீமான் மிகவுள்ள ஸ்ரீதேவியே
மின்னு மணிமுத்தா யிலங்குகின்ற மேலோன் சுவர்கமுந் தருவானென்ன
இன்னாள் தவத்தோர்க ளாற்றுப்பத்தோ டிலங்குந்தோகானுந் துறுக்கியாரே
தன்னா லுபகாரம் செய்யலானீர் தனியோன் முகம்மதின் சபாஅத்தாவீர். ()

சறுயீல் சகோதரி மயில்பாத்திமா தரும வுருவான தாயாரேநீர் [றீர்
குறைஷிக் குலத்தோர்கள் பகையைமாற்ற கூழ்ச்சண்டைசெய்தே வருத்தமுற்
மருவின் மலர்ப்புயத் திறசூலுல்லா மகளார் பாத்திமா நாச்சியார்தம்
தறஜா மிகவுள்ள சபாஅத்தினிற் றுங்களீடேற்றம் பெறுவீரென்றார்.(1187)

ஆதி பெரியவன் கிருபையாலு மண்ணல் முகம்மது பறக்கத்தாலும்
சோதி புதல்வியால் ஹாஷீமெல்லாந் துய்யோன் சுவனத்தின் பதியாளுவீர்
நீத முடையவன் கிருபையென்றே நேர்மை யுடன் சொன்னா ரலிமகனார்
பூதலம் மீதில் ஹாஷீமெல்லாம் பெரியோ னுதவியென் றின்புற்றாப்போல்.()

நீத மிகவுள்ள விறையைப்போற்றி நிலத்தி லீமானோ டிருந்தநேசன்
காத லாகவும் வணங்கும் யூகன்காதிறு மீரா தவத்தால்வந்த
பூதலந்தனில் முஹீதீன்பிச்சை புதியோன் முகம்மது நபியைவாழ்த்தி
நாதர் மணிமாலை யுவந்துகேட்டு நானில முற்ற செல்வம்போலே. (1189)

வல்லோன் கிருபையாற் சறுயீலாரும் வாசம் பொருந்தவே விருந்துசெய்து
நல்லோர் யாவரும் பசிகளாறி நாய னுதவியால் மனம்பூரித்தே
அல்லா பெரியவன் தனைவணங்கி யாலு முஹம்மதின் சலவாத்தோங்க
எல்லாப்பறக்கத்தும்வளர்ந்தேறவே யிசுக்கிலான்கோட்டைதனிலிருந்தார். ()

ஈது படிநிற்க வுமர்சையாது மிடைந்து மனமது தயங்கிவாடிப்
பாதகனுள்ள திமுசிலேகப் பாங்காய் மறுவானு மெசீதைக்கண்டே

யோதும்சலாமுட னிருபேர்போற்றி யொழுங்காய் வரலாறுகளைச்சொல்லியே
ஏது நாம்செய்வோ மகாராஜரே யாங்கள் தாம்பட்ட புண்பாடுகள். (1191)

வேளை போதாத காலந்தானோ விதியோ நாங்கள்தாம் போனநேரம்
ஆளின் ஜனமென்பத் தையாயிர மானை யரியுட னுமேகினோம்
தாளிவயிறுமா பொருதுறுக்கி சறுயீல் கொடுவந்து வைத்தானவன்
வாளி னாலேயே கருவறுத்து வதைத்த திருபத்தி யேழாயிரம். (1192)

பின்னு லறுபத்தி யேழாயிரம் பேர்கள் கோரினி லக்காலத்திற்
சின்ன பேரிகை முரசடித்துச் செண்டாக் கொடியுடன் நாங்கள்நின்று
மன்னன் சறுயீல்தன் கோட்டைவாங்க மதியோ னப்துல்லா சையாதேகித்
தன்னு படையுடன் வளைந்துசுற்றிச் சார்ந்தவிதம்பார்த்துப் பெண்மாதர்கள்.

இய்யக் கூழாலே தையலார்க ளிறைத்து யானேகரைச் சதிகள்செய்தா
ரய்யப் படுத்தின விதமுங்கண்டே யனைவர் கூடியே யொருமுகமாய்
வைய மீதுள்ள சமர்க்களத்தில் வந்து முரசடித் திருக்கும்போதிற்
றய்ய அலீமக்களுமர்ஜகுபர் துரக தச்சேனை தளத்தினோடும். (1194)

வந்து நமரோரைக் கருவருத்தார் மடிந்து மிசப்போனார் படைகளெல்லாம்
எந்த நாதாக்க ளுதவிதானோ வெங்க ளுயிர்தப்பி வந்தோமென்று
னந்த நேரத்தில் மூக்கறுந்த வைந்நூ றுமையாக்க ளழுகையோடும்
சிந்தை மயங்கியே குணுகுணுப்பாய்ச் செப்புவா ரப்போ கண்ணீரோட. ()

திருக்கண் ணுடையவ னலிமகனார் சிறந்த முஹம்மது அனிபாவுந்தான்
வருகும் பாதையி லுமையாக்களை வையந் தனிலேதான் மூக்கறுத்தே
யுரைத்து வாங்களெடா வெசீதுக்கென்றே யனுப்பியே யவரேகினார்
கருத்தால் விளங்கிய துரைமகனே கடுக்குதே மூக்கின் வருத்தமென்றார். ()

உரைத்த வுமையாக்கள் வருத்தங்கேட்டங் கோதுவா னப்போ தெசீதுப்பாவி
வருத்தம் பாராமல் முகத்தைமூடி வாங்கெடா வோட்ட மதிகெட்டோரே
வெறியா யிருக்கிற வேளைமீதில் வீணர் முறையிட லாமோவென்றான்
தறுகண் மறுவானும் கோபமீறிச் சாற்றுவானப்போ துமையாக்கள்பால். ()

ஆலை மீதிலே மூக்கறுந்து மறிவு மனுவில்லா வசுதர்களே
சாலை வழிமீதிற் போகொணாது தவறி யொருபாடி தங்காதீர்கள்
ஏலத் தெரிந்தாக்காற் படைசேராதிங் கினிமேல் நின்றீரேல் மோசமென்றான்
மாலாயவரவர் பிழைத்தோமென்று வனத்தின்பாதையையெடுத்தாரோட்டம்.

ஈது படிநிற்க மறுவானைப்பார்த் தியம்புவா னப்போ தெசீதுப்பாவி
பூத லம்வந்த அலிபாலரிற் பெலவா னாரென்று கேட்கும்போதி
லோதுவான்பயல் மறுவான்மந்த்ரி யுசைனார்நீங்கலாய் மற்றோரெல்லாம்
நீத ரவியுல்லா சமர்கள்போலே நிலத்தில் மிகவுத்தம் செய்வாரென்றான். ()

மன்ன னெசீதுமே கோபமாகி வழுத்துவா னப்போ சினந்து சீறி
முன்னு லிதுசேதி யெனக்கோதாமல் முழுங்கி யிருக்கின்ற மறுவான்பாலே

என்னை வதைசெய்தா லென்கிரகமோடு மெனச்சொல்லி வாளெடுத்தே
யுன்னின் கரமோங்கும் சமையத்திலே சையா துமர்சாது விலக்கினரால். ()

எசீது கோபந்தான் தீர்ந்தபின்ன ரியம்புவா னப்போ மறுவானுக்கே
திசையி லிருக்கின்ற நாட்டார்க்கெல்லாஞ் செய்தி யெழுதியே வரவழைத்திங்
கொசுவாய்ப் படைகளைச் சேர்மினென்றே யுரைத்தான் மாபியா மகனெசீது
வசைய னுடமந்த்ரி யிச்சொற்கேட்டு வரைந்தா னிருபங்கள் சகலோர்கட்கும்.

சிக்கந் தருநாட்டார் ஹபஷிகளும் சிறந்த பாடிகள் நகரத்தாரு
மிக்க றாமிக ளுமையாகூட்டம் விளங்கும் புருசியி னாட்டார்களும்
திக்கில் மிகவுள்ள திமுசுதேசம் சிறக்க மிகவந்தார் நாலுலட்சம்
அக்கணந்தனி லெசீதுபார்த்தே யனேக மகிழ்ச்சிதான் மிகவுண்டாகி. (1202)

இணங்கள் தவிராமல் நிதியமிங்கே யியம்புவா னப்போ துமர்சாதுக்கே
குறைஷிக் குலமான அலிபாலரைநீ கொலைதான் செய்துநீர் வந்தீரானர்
றருவே னகரங்கள் பாதியென்றான் சாற்றுவா னப்போ துமர்சையாது
உறைபோல் நடக்கிறோம் ராஜரேயென் றுவரிபோலாகப் படையெழுந்தார். ()

பரியில் நார்பத்தி னையயாயிரம் பாரமதயானை யேழாயிரம் ,
தொறுவில் ர்சவர்க்கம் நாலாயிரந் துலங்கும் சனங்களோ நலுலட்சம்
அரிவா ளாயுதம் பரிசைகொடி யவரவர்கள ணிந்துபூவில்
முரசு பேரிகை யிடிமுழங்க மின்னுங்கொடியுட னெழுந்தாரம்மா. (1204)

மண்டலங்களும் கிடுகிடென்ன வாசுகிமுடி நெறுநெறென்னச்
செண்டாக் கவுரிகள் திமிர்ந்துவரச் செருன ராயுதக் கதிர்கள்மின்ன
வண்ட னெசீதுட வுமர்சையாதும் வாம்பரி யேறி முன்னாலேகச்
சண்டமாருத மெனவுந்தாவித் தளங்கள் நடந்தன தாலமீதில். (1205)

நடந்து பதிமூன்று நாளானபின் னகரி யிசுக்கிலான் தன்னைக்கண்டு
தடத்தின் கறையோரங் கூடாரங்கள் சாரியாகவே மிகவுங்கட்டி
யடையலா ரெல்லா மடிசிலுண்டங் கன்பதாயிரம் ஜனங்களோடு
படையின் தலைவனு முமர்சையாது பாங்காய் நடந்தானே சமர்க்களத்தில். ()

பேரி நவுரிகள் பிடியெக்காளம் பெலத்த நவுபத்தங் கொடிமுழங்கத்
தாரைசச்சரி தம்பூர்மேளந் தடதட்வென்று மடமடத்தே
போரின் களந்தனில் கொடியிழுத்துப் புரவிசாரிகள் செய்யும்போதிற்
பாரிற் காணக்கண் ணூறுவேணும் படையின் முருக்கத்தின் கோலமம்மா. ()

மருவின் மலர்புயத் தரிசிம்மேறாய் வந்த முகம்மது அனிபாவள்ளல்
பெரியோன் கிருபையாற் படையோர்களைப் பிந்தா தெழுமென்றே யுரைத்தா
வரிசை யாகவே தானெழுந்தார் மகரிப்பரசர்க ளுமர்ஜகுபார் [ரப்போ
பரியி லிருபதா யிரஞ்சனமும் பாரில் முசீபுடன் காகாஜங்கும். (1208)

நல்லோர் சறூயீலுந் தலத்தோர்களும் நானிலத் தோகாந் துறுக்கியாறும்
எல்லோர்களு நல்ல கலனணிந்தே யிலங்குங் கதிர்வாளுங் கரத்திலேந்தி

வல்லோன் முகம்மது அனிபாவுடன் வாசி தனிலேறி யெழுந்தகாலை
கல்லோசையினுள முழக்கம்போலே கனத்த படையுட னடந்தாரம்மா.

ஜெண்டாக் கொடிகளும் சிறந்திலங்கச் செகமுங் கிடுகிடப் பிடிமுழங்க
அண்ட ரனைவரு ஆமீன்கூற ஆல முகம்மதின் சலவாத்தோங்கக்
கண்டபெயர்களு நடுநடுங்க காரிடி போலே முரசதிரச்
சண்டமாருதக் கடலைப்போலே சமர்க்களத் தருகாகினாரால். (1210)

இறங்கி யனைவரும் படங்குகட்டி யிறையோன் கிருபையா லிருக்குநேரந்
தரியலார்களி லுமர்சையாது சண்டாக் கொடிகளு மிழுத்தானப்போ
வரிசையெனுந் தோகான் துறுக்கியாரும் வயிற்றுப்போஜனம் பசியாறியே
தற்ஜா மிகவுள்ள நபிபேரரின் தாளிற் பணிந்துதா னுரைசெய்குவார். (1211)

மாறுபாடாக வரும்படையை மாட்டுகிறேன் தண்டா யுதத்தினாலே
பூரா யுத்தாரங் கொடுக்கவேணும் புண்ய வரசரே நாயகமே
பாரி லுசைனார்தம் பழியைவாங்கப் படையி லனுப்புங்கள் மணியேயென்றார்
காரார் குடைவரு மிரசூல்பேரர் ஹக்கன் தனைப்போற்றி விடையளித்தார். ()

நேராய்ப் படைக்கலன் மிகவணிந்தே நிறைந்த கதிர்வாளுங் கரத்திலேந்தி
பாரம் நூறான கசையுந்தாங்கிப் பரியி லேறியே தோகாந் துறுக்கி
சோராக் குதிரையைக் களத்தில்விட்டுத் தூளி பறக்கவே மிகநடத்தி
மாறு பாடுள்ள வெசீதுகூட்ட மனங்கள் மயங்கியே சுற்றில்நின்றே. (1213)

அந்தநேரத்தில் சாரீதென்போ னரிவா ளேந்தியே பரியிலேறிச்
சந்திப் பாகவும் குதிரைவிட்டுத் தடதடவென்று மடமடத்தே
எந்தவூரெடா வயிறுதாளி யெங்கெடா வந்தாய் நீயுமென்றான்
உந்தன் படையோரே மிகவுந்தாக்கி யுசைனார் பழிவாங்க வந்ததேனென்றார்.

என்னடா சொன்னாய் நீதானென்று னியம்படா வுந்தன் பெயரென்றோத
அன்னபுகழான னெசீதுமன்ன னரிசிம் மேறான புதல்வனென்றான்
முன்ன மாபியா தேட்கடுப்பில் முடுமையால் வந்த யெசீதென்போனை
யின்னா ளரிசிம்மே றென்றுநீதா னெப்படிச்சொன்னா யிதங்கேட்டோனே. ()

அரிசிம்மே றென்ற நாக்கானதை யறுப்பேன் துறுக்கியென் றெடுத்துவாளாற்
பரியோ டவனையு மிரண்டதாக்கிப் பாருங் கிடுகிடக் குதிரை விட்டான்
தரியலா ரெல்லாம் திட்டாய்நின்று சரத்தின் வாணங்கள் மிகவும்பெய்தார்
உரத்தின் கசையுனு லதனைத்தட்டி யுன்னி நடத்தியே தோகானுமே. (1216)

தண்டா யுதந்தன்னைக் கரத்திலேந்தித் தடதடவென்று மடமடத்தே
மண்டை மூளைகள் சிதறிவீழ்க மாட்டினான் பூசை வசுதர்களைக்
கொண்ட லிடிபோலே மிகவுந்தாக்கி கொளுத்தினான் தண்டா யுதத்தினாலே
எண்டிசைகளுங் கிடுகிடென்ன வேகமாய்ச் செந்தூட்செய்தானப்போ. (1217)

பூந்தான் சமர்க்களம் வடபாவினிற் புதினமாய் நின்ற றாமிகளைக்
காந்தி மிகவுள்ள வாளால்வெட்டிக் கருத லார்களை முடிதூளாக்கி

ஏந்தா னிவனுட கோபமென்றே யேவினு ரப்போ கவண்கல்லுகள்
நீந்திக் கசையினு லவையைத்தட்டி நெறுநெறுத்திடப் பரிநடத்தி (1218)

கட்டா ரிகளாலுங் கசையினுலும் கனத்த கூர்மையின் வேலினுலும்
துட்ட வசுதரை முடிதூளாக்கி துரத்தி யடித்துதான் பிணக்காடாக
மூட்டி யுமையாவின் கூட்டத்தோரை வாளால் மிகவெட்டிச் சூரைசெய்தான்
திட்ட மாகிய ரணக்களத்திற் செவந்த சோரிதா னதியோடவே. (1219)

இந்த விதங்களா யெசீதுபடை யிறந்த திருபத்தி யேழாயிரம்
வந்த வுமர்சாதும் சையாதுடன் மற்ற ஜனங்களுந் தானுடைவே
அந்த நேரம்தோ காந்துருக்கி யரியை நடத்தியே படங்கிவந்து
சந்திப் பாகவே கீழிறங்கிச் சடிலந் தனைக்கட்டி யவனேகியே. (1220)

முகம்ம தனிபாவின் பாதம்போற்றி முன்னு லவர்நிற்கு நேரத்திலே
மகிழ்வ தாகவு முத்துமாலை வள்ள லுடகையாற் கழுத்திலிட்டே
ஜெகமேல் நீயொரு தலைவனென்றே சிறந்த அமுதவாய் திறந்துசொன்னர்
அகமும் குளிர்ந்தோ கபந்துறுக்கி அதிக மகிழ்வுற்ற செல்வம்போலே. (1221)

காரணமுள்ள சாம்ராவுத்தர் கருணை பொருந்துமங் கலக்குடியிற்
பூரண மான மனத்தையாளன் புதியோன் தனைநித்தம் வணங்குநீத
தாரணி மீதில் மிகயூகவான் சாமூராவுத்த ரம்பலவே
ஆரந்துதி தவத்தினுலே யகில மீதினி லுதித்தபாலன் (1222)

காலங்கள் மிகவான மதியூக வானயினு முஹம்மது துணைவனுகை
அலங்கள் மணிமார்ப னறங்கள்செய்யு மம்பல மீராப் பிள்ளைநேசன்
துலங்கும் பெரியவன் தனையுவந்தே துய்ய முஹம்மது பறக்கத்தாலும்
குலமுங் கோத்ரமும் பெருகிவாழக்குதாயே கிருபைகள் செய்குவாயே. ()

கந்தம் பரிமளங் கமகமெனும் ஹபீபு முகம்மது பேரனும்
பூதல முள்ள கூடாரத்திற் புனித மாகவே யிருக்குநேரம்
ஆதவன்கதி ரடைந்த பிற்றை யடையலர் ரெல்லாம் சார்பிற்சார்ந்தார்
சீதம் பொருந்திய மதியுதித்துச் சிறந்த பிரகாச மானதம்மா. (1224)

அன்ன காலையி லுமர்சையாது மறுப தாயிரஞ் சனத்துடனே
மின்னும் வாளுவிற் பரிசைதாங்கி வெம்பரிகளும் சாரியாகக்
கன்னக ஞாலமுங் கிடுகிடென்னக் காரிடி போலே முரசதிரத்
தன்னு லெசீதுட படையின்வெள்ளம் சமர்க்களம் வந்தே கொடியிழந்தார். ()

அதுகண் டலிமகர் பாதம்போற்றி யருமை தானுள்ள காகாஜாங்கு
மதியின் முகம்மது நபிபேரரே வள்ள லுத்தாரங் கொடுங்களென்றூர்
புதியோ னலிமக ரிறையைவாழ்த்தி புகன்று ருத்தார மமுதம்போலே
கெதியி லுயர்வான பரியிலேறிக் கிசுறூ கேடையம் கதிர்வாட்டாங்கி. (1226)

நடனத் துடனேதான் பரிநடத்தி நானி லங்களுங் கிடுகிடென்னப்
படியின் சேடனின் முடியசையப் பரியை நடத்தியே முன்னதாகி

அடையலா ரெல்லாம் தாட்டாய்நின்றே யம்புவாணங்க ளேவுவாரும்
படைகள் தானின்றே நான்குதிக்கும் பாய்ங்காய் கவண்கல்க ளெறிவார்களும்.

இந்த விதமாக லுகற்மட்டிலி கெசிது படையோர்கள் பரிசையெல்லாம்
சந்த்ர வதனத்தின் காகாஜங்கு தட்டிக் கசையினுற் செந்தூளாக்கி
மந்த்ர கதிர்வாட்கையேந்தி வாம்பரி விட்டே நான்குதிக்கும்
சந்திப் பாய்நின்ற மறுவலாரைத் தாக்கி வாளினல் ரணங்கள்செய்தார். (1228)

## பதம்.

சமகர்ள் செய்தாரே காகாஜங்கு சமர்தள் செய்தாரே
மண்டல மீதினிர் கண்டவ ரஞ்சிட
மருவலர் முடிகளும் மண்ணிலம் சிதறிட
வண்டர்க ளடிப்பட்டு வாயது குழறிட
வானத் தமர்கள் சோபனங் கூறிட
மருவலர் மாள ரணக்களத்தில் வாசிகளோட (சமர்கள்)

கட்டாரி யதினலு முட்டாகத் தாக்கியே
கதறிட யானைகள் சிதறிட மத்தகம்
துட்டர்கள் துஞ்சிடப் பட்டார்கள் மாண்டிட
துலைதூர மாகவே துச்சன் ரோடிடத்
துரத்தியே தாக்க மருவலரை துண்டங்களாகச் (சமர்கள்)

அஞ்சியே யுமர்சாது நெஞ்சம் துருகியே
அப்துல்லா சையாதும் அரிகள்விட் டோடவே
பஞ்சிலே யெரியுற்ற பாவனை யாகவும்
பதறிட வசுதர்கள் கதறிட யானைகள்
பாரினி லேதான் காகாஜங்கு படைவெட்டுந் திரலோர். (சமர்கள்)

பற்றலர் முடிவீழ்கச் சுற்றி வளைந்துகொண்டு
பாருங் கிடுகிடென்னத் தாக்கி மருவலாரைச்
சுத்த வீரியரெல்லாம் துர்கதம் விட்டோடத்
துரத்தியே அவர்களைச் சூறு வளிகள்போற்
றஞ்சவே குத்தக் கரையினலே பஞ்சுபோலாகச். (சமர்கள்)

## தொங்கல்

இந்த விதமாக காகாஜங்கு மெசிது படையிலே தாக்கும்போது
விந்தை யாகிய சமர்க்களத்தில் விருந்ததாய்க் காகம் பருந்துண்ணவே
கெந்திப் பாகவந் திறந்தஜனம் கெனித மிருப்பத்தை யாயிரம்பேர்
அந்த நிமிஷமே கதிரடைந்தா னடையலா ரெல்லாம் படங்கிற்சார்ந்தார். ()

பரியை நடத்தியே காகாஜாங்கு பாங்கா யலிமகர் பாலிலாகி
அரிவிட் டிழிந்துதான் பாதம்போற்றி யண்ண லார்பக்க மிருக்கும்போது

யிறையோ னுதவியாற் பசிகளாறி யெல்லோர் தானுமே துயிலும்போது
வரையின் புயத்தினன் தோகாந் துறுக்கி வாளாயுத மேந்திக் காவல்நின்றார். ()

மறுநாட் காலையி லுமர்சையா தும் மாரி போலவே படையெழுப்பி
பரியிற் பதினாயிரத் தைஞ்ஞூறும் பாங்காய் மதயானை யெழுநூறுடன்
தரியலா ரெண்பத் தையாயிரம் சண்ட மாருத மெனவெழுந்தார்
பெரிய நவுபத்தும் பிடிமுழங்கப் பேரிகைகளுங் கிடுகிடென்ன. (1231)

மண்ட லங்களு மதிரத்தாவி வானிற் றுகளெழப் பரிகளேறித்
தண்ட சிலம்புகள் கலகலெனத் தடதட வென்றுங் கரிகள்செல்ல
வண்ட னெசீதுட படைகள் நம்மில் வருகு முமர்சா துஞ் சையா துமே
சண்ட மாருதம் போலேதாவிச் சமர்க்களம் வந்தே கொடியிழுத்தார். (1232)

வாளா யுதக்கார ரொருசாரியில் வந்து மிகநிற்ப ஹாஷீம்கூட்டம்
காளைய ரான றாமிகளும் கதிர்வே லேந்தியே யொருசாரியிற்
பாளைய மான கந்தநாட்டார் பரிக ளேறியே யொருசாரியிற்
றேளன் படைநிற்குங் கோலங்கண்டு தீப்போல் முகம்மத் ஹனிபாவெழுந்தார்.

மந்திரி யாகிய முசீபானவர் வள்ள லுடபாத மிகவும்போற்றி
யிந்தச் சமரினில் நானேகிறே னியம்பு முத்தார மரசேயென்றார்
அந்த நேரத்தி லிறையைப்போற்றி யண்ண லுத்தாரங் கொடுத்தாரப்போ
சந்த்ரவதனத்தார் கலனணிந்தே சடிலந் தானேறி யரிசிம்மேறும். (1234)

சங்கை யாகிய கதிர்வேலது தரணி முழநூற்றி முப்பத்தாறும்
பங்க யக்கரந் தனிலேந்திடுப் பருதி வாள்முழ மெண்பதாகும்
திங்கள் வதனத்தார் கரத்திலேந்திச் சிறந்த சமர்க்களம் வருகும்போது
சிங்கம் போற்றோகாந் துறுக்கிவந்து செப்புவா ரப்போ முசீபுபாலில். (1235)

உங்களுட யுத்தம் யானும்பார்க்க வுரிமை மிகவானேன் புவிமீதினி
லெங்கள் தனக்கெல்லாம் அரிசிம்மேறே யானும் துணையாக வருவேனென்றார்
மங்குல் வருங்குடை நபியிறசூல் வள்ளல் முகம்மது நபியைப்போற்றித்
திங்கள் வதனத்தின் முகமிலங்கச் சிறந்த சமர்க்களம் தந்தாரப்போ. (1236)

ஆளிக் கடல்போலே வரும்படையி லதிக சூரனே சையாதென்போன்
கேளி ராகவே யவனெழுந்து செழுமி யவனின்றே யுரைசெய்குவான்
தாளி வயிறனைப் பிடித்துவாரேன் ஜனங்கள் யாவரும் பெர்றுமினென்று
வாளுங் கரமேந்திப் பரியிலேறி வந்தான் சமர்க்களம் நடுநடுங்க. (1937)

துசும னப்துல்லா சையா துமே துரகதம் விட்டே நடனமாடி
சசியின் வதனத்தார் சமுகம்வந்து சாற்றுவா னப்போ புலிபோலாக
ஒசிவாய் வருகின்ற வரிசிம்மேறே யூர்தா னெவிடனீ ரிருப்பதென்றான்
எசீது புழுக்கையா யியம்பக்கேளு மென்பேர் முசீபெனு மந்திரியென்றார். ()

நல்லார் வீரரா யிருப்பதாலும் நமது மன்னகளுந் தயவாகுது
சொல்லைத்தவறுமல் நீபோய்விடு துறுக்கி தனைப்பிடித் திழுத்தேகிறேன்

உல்லாச முள்ள தயவீதென்று முரைத்தா னப்துல்லா சையாதுமே
சல்ல வாரிக்குத் தயவானது தரணிமீதி லுண்டாபயலே. (1239)

வருகு மாற்றங்கள் சொல்லிலாவென்றும் வாளாயுதங் கொண்டே யவனைத்தாக்
அரியின் மேலிருந் தவனுந்தாங்கி யனேக வுரங்கொண்டு வேலாற்றுக்கப் [க
மருவின் மலரப்புய முசீபுமந்திரி வாளாற்றுங்கியே வேலாற்றுக்கப்
பரியு மிரண்டாக அவனுவீழ்கப் பற்றியே கூந்தற் கரத்தாற்சுற்றி. (1240)

பம்பரம் போலே மருளடித்துப் பாங்காய்த் துறுக்கியின் கரத்திலீந்தார்
தெம்ப தாகவு மவனைக்கட்டிச் செப்புவா ரப்போ துறுக்கியாரும்
வம்பு பேசியே யெனைவதைக்க வந்த பயலென்றே ரடியடித்துத் [டிவந்தார்
தும்பைக் கிடாயைத்தோட் போட்டாப்போலே தூக்கி யவனைக்கொண்டோ

வந்தார் கூடாரந் துறுக்கியாரும் வள்ளல் முகம்மது அனிபாதன்பால்
விந்தை மிகச்செய்த சையாதையும் விரைவி லிறக்கியே தரையிற்போட்டே
சந்திப்பாய் நின்றே துறுக்கிசொல்வார் தாலந் தனிலவன் பொல்லாவம்பன்
இந்த நிமிஷமே யிவன்தனக்கே யென்ன தீர்மான மரசேயென்றார். (1242)

அதுகண் டலிமகர் சையாதையு மப்போ தவனையுங் காவல்வைத்தார்
சதிய னகப்பட்ட விபரந்தன்னைத் தலைவ னுமர்சாகு தானுங்கேட்டு
விதியின் காலமோ வெசீதுக்காகவினைகள் தான்வந்து சூழ்ந்ததோதான்
மதிகள் மயங்கியே யுமறுசாது வாரிபோ லான படைகளேவி. (1243)

வந்தான் சமர்க்களந் தனிற்சாரியாய் மதங்கொண்டயானை போலாகவே
விந்தை யாகிய முரசடித்து விளங்கும் நீணிலங் கிடுகிடென்னத்
தந்தி ரத்துடன் நான்குதிக்கும் சாரி யாகவே தான்வளைந்து
கந்த ரப்புயத் தரிசிம்மேறைக் கருத லார்களும் சமர்செய்தாரே. (1244)

அம்பா லெகுவார் சிலவசுத ராயுதங் கொண்டே தாக்குவாரும்
தெம்பாய்ப் புயந்தட்டிற் தாட்டாநின்றே சினந்து வாளின லெறிவார்களு
பம்ப ரம்போலே கயறுசுழற்றிப் பற்றி யெறிவாருங் கவண்கல்லாலே
முன்பால் வசுதற்க ளோடிவந்து முரசு மடித்துமே ஆடிவாரும். (1245)

இந்த விதமாக விருகடிகை யிகலும் புரிகின்ற பரிசையெல்லாம்
தந்த்ர மாகவே கசையாற்றட்டிச் சடில நடத்தியே மருவலாரை
விந்தை யறும்வேலால் மிகவுந்தாக்க வினைய னெசீதுட ஜனங்கள்வீழ்க
மந்த ரப்புயத் தரிசிம்மேறு வாளால் மிகவெட்டி ரணங்கள்செய்தார். (1246)

பதம்.

சண்டை செய்தாரே முசீபுமந்திரி சண்டைசெய்தாரே

சண்டைகள் செய்தாரே வண்டர்க ளஞ்சிட
தாக்கி மருவலரைத் தீக்கிரை யாகவே
மண்டலங் கிடுகிடக் கண்டவர் வருந்திட
மருவலர் சடலங்கள் மண்ணிலந் தனில்வீழ்கச் சண்டைசெய்தாரே

பரிசாரி செய்கின்ற பற்றலர் தனைவெட்டிப்
பதரிட மனங்களும் சிதரிடத் தாக்கியே
கரிபரி யானவைவைக் கசையினு லடித்தவை
கதறிட யானைகளின் மூளைகள் சிதறடச் சண்டைசெய்தாரே.

அட்ட திசைகளுங் கிடுகிடு கிடென்ன
ஆதிசேடனின் முடி நெறுநெறு நெறுவென்ன
வெட்டியே வசுதரைக் கட்டுமரங்கள் போலும்
வெள்ளம தாகிய சோரியி லோடவே சண்டைசெய்தாரே.

கசையினு லடிக்கவே கண்டுவா னவரெல்லாம்
இன்று வுசைனர்பழி யெடுத்தார் முசீபென்றெண்ணத்
திசையி லெசீதுபடை செவந்த ரணக்களத்திற்
திடுதிடென் றடு[illegible]தே செருனர்கள் மாண்டிடச் சண்டைசெய்தாரே.

## தொங்கல்.

சண்ட மாருதம் போலேதாவித் தசர்த்து வசுதரைப் பிணக்காடாக்கி
மண்டல மீதில் ரத்தசோரி வழங்கு நதிபோலுக் தானேடிட
வண்ட னெசீதுட படைமீதினில் மாண்ட ஜனமுப்பத் தையாயிரம்
கண்டங் குமர்சாது கோபமாகிக் கருத லார்கள்பா லுரைசெய்குவான். (1247)

நான்போய் முசீபையும் வாளால்வெட்டி நடனத் துடன்வாரே னில்மினென்று
தானே வலுப்பேசிக் கதிர்வாளேந்தி சரகெதி யுள்ள பரியிலேறி
வானி னிடிபோலே மடமடத்து வந்தான் புலிபோலே முசீபுபாலிற்
கோனினுட மந்த்ரி யுன்னைவாளாற் கொலைதான் புரிவேன்பாரிப்போதென்றே.

விந்தை யுறும்வாளா லிவரைத்தாக்க வீரர் முசீபுமே வேலாற்றட்டிங்
கந்த ரப்புயத் தரிசிம்மேறு கசையாற் றுக்கினு ரவன்தனையே
மந்த ரக்கதிர் வாலாற்றூங்கி மடமடத்தவ் னிற்கும்போதி
லெந்த நிமிஷமே யலிகுமார ரண்ண லுமறுமே கதிர்வாளேந்தி (1249)

சந்திப் பாகவே சரகதியாம் சடில நடத்தியே வேகத்தோடும்
வந்தே லெப்பைக்கும் யானுமென்றூர் வழுத்துவா னப்போ துமர்சாதுவு
மெந்த வூர்நீயும் போசொல்லென்றான் யானு மலிமக னும்றென்றேக
விந்தா வருகிறே ணனேயென்றங் கிறக்கிப் பரிவிட்டே யெடுத்தானேட்டம்.

எசீதுப் படையோர்க ளிதனைககண்டே வேகமாயோடிப் படகிற் சேர்ந்தார்
வஜிகர முள்ள அலிபாலரு மந்த்ரி முசிபுமே பரிநடத்திச்
சசியின் வதனத்தி னரசர்பாலிற் றுன்வந் திரங்கியே மிகவும்போற்றி
யொசுவா யிருக்கின்ற நேரமீதி லுண்மை முகம்மது அனிபாவள்ளல். ()

வெற்றியாய் வந்த முசீபுக்காக விளங்கு மணிமுத்து மாலைரண்டும்
பத்தி யுடையவர் கழுத்திலிட்டே படைத்தோ னருளினு லிருக்குநேரம்
சுத்த மிகவுள்ள முசீபுமந்திரி துலங்கு மனதிலே யிறையைப்போற்றி
மெத்த மகிழ்ச்சியு மிகவுண்டாகி விளங்கு முசீபுமே பூரித்தாப்போல், (1252)

பூம்பொ ழில்களுஞ் சோலைவாவி பொருந்தி யிலங்குமங் கலக்குடியிற்
றேன்போ லமுதவாய் வசனம்பேசும் சிறந்த மதிமுகத் தழகில்வாகன்
சாமு ராவுமீத ரம்பலமுந் தவங்கள் மிகச்செயதே புவிமீதினில்
ஆம்ப லழகினும் வடிவதாக வகில முதித்திடும் பாலர்களில். (1253)

நாமந்துலங்கிய குணசாகர னயினு முகம்மது மீவர் துணைவன்
ஈமான் மிகவுள்ள மனரஞ்சித னிலத்தி லம்பல மீராப்பிள்ளை
கோமா னருளாலே மணிமாலையிற் குவலயந்தனில் மனமின்புற்முர்
சே.., மங் துலங்கவே புவிமீதினிற் சிறந்த பெரியோனே கிருபைசெய்வாய் ()

ஆதி பெரியவன் கிருபையா லு மண்ணல் முகம்மது அனிபாவள்ளல்
பூதல முள்ள விசிக்கிலானிற் பொருந்துங் கூடாரந் தனிலிருந்து
நீத முடையோனை மிகவும் போற்றி நேர்மை யாகிய படையினேடும்
சோதி யருளினு லிருக்கும்போது துலங்குந் திரைமீதிற் கதிரடைந்தான். ()

அன்று பொழுதுபோய் மறுநாளினி லசட னெசீதுட படைகள்மீதிற்
றுன்று மட்நிறப் பரிக்கூட்டங்கள் துலங்கும் பதினுயிரத் தஞ்ஞூறு
மண்டல முள்ள வசுதர்களில் வாகா யெழுபத் தையாயிரரும்
வண்ட னுமர்சாதும் கர்னர்களில் வகுத்தான் படைகளை யணியதாக. (1256)

செண்டாக் கொடிகளும் பிடித்துவரச் சிறந்த புயவீர ரொருசாரியும்
தண்டா யுத்தக்காரர் தடதடத்தே தரியலார் கூட்ட மொருசாரியும்
கொண்ட லிடிபோலே முரசதிரக் குறுகலார் கூட்ட மெருசாரியும்
வண்ட னெசிதுட படையின் வெள்ளம் வாரி யதுபோலே யெழுந்ததம்மா. ()

படையின் தலைவனே யுமர்சாதுடன் பாங்காய்ச் சமர்க்களந் தன்னிலாகி
யடையலாரெல்லாம் புயங்கள்தட்டியப்போது றுஞ்சண்டைக் கொடியிழுத்தா
தொடையல் மார்பின ரறிந்தகாலை தோகாந் துறுக்கியு மெழுந்துநின்றே [ன்
தடஞ்சூ ழெமன்பதிக் கரசரெங்கள் தங்க மயமான மணிவிளக்கே. (1258)

வந்த படைகளின் பெருகத்தாலே மகிழ்ச்சி மிகவானே னவமணியே
யிந்த நிமிஷத்தில் விடையருளும் யான்போய் ரணக்களம் செய்துவாறேன்
சந்த்ர வதனத்தின் தயாபரரே சங்கை பொருந்திய மணியேயென்று
னந்த நேரத்தி லிறையைப்போற்றி யண்ண லுத்தாரங் கொடுத்தாரப்போ. ()

மனது மகிழ்ச்சியால் துறுக்கியோனும் வயிற்றுபோஜனங் கொணர்மினென்று
னினிமை யாகிய ரொட்டியை நாறின்பா யிறச்சியும் பசியாறியே
நணியின் மணம்பூண்டு கலனணிந்து நலங்கா துறுந் தண்டாயுத மேந்தியே
தொனிக்குந் தூணியுந் தோளிற்போட்டுத் துரகத மேறிச் சாரிவிட்டார். ()

அட்ட திசைகளுங் கிடுகிடென்ன ஆதி சேடனின் முடிநெறென்ன
விட்டார் குதிரையைச் சமர்க்களத்தில் வீரியரெல்லாம் நடுநடுங்க
முட்டாய் மிகநின்றே யெசீதுபடை முழக்கினரப்போ முரசுகளை
வட்ட வாருதி போலாகவே வளைந்தே துருக்கிமுன் சமராடினர். (1261)

அம்பு விடுவாரும் கவண்கல்லாலே யதிக வுரங்கொண்டு வீசுவாரும்
பம்பரம் போலே வாட்சுழற்றிப் பற்றி யெறிவாரும் சக்ராதிகள்
வம்ப ரேவிய பரிசையெல்லாம் வாகன் துறுக்கியுங் கசையாற்றட்டி
நம்பு முசைனர்தம் பழியைவாங்க நடனத்துடன்றண்டா யுதமெடுத்தான். ()

## வேறு.

எடுத்தனன் தண்டா யுதந்தனை துறுக்கி யெசீதுட பெருவெள்ளம் புகுந்தே
அடித்தனன் தரிய லார்களை நொருங்க வடையலர்மூளைசிந் திடவே
கொடுத்தனன் மடியை யடிக்கடி தாக்கத் துஞ்சினர் மறுவலர் சடலம்
திடுதிடு திடென்ன மடமட மடெனச் செருக்களந் தனில்முருக்கினரால். ()

வாளினை யெடுத்து வசுதரை பிளந்து வரையெனப் பிணமது குவியக்
காளையர் நடுங்கத் தடதட நடத்துக் கருதலர் முடிபொடிப் பாக்கித்
தேளனன் படைகள் தியங்கியே மயங்கத் திடத்துட னடித்தனன் கசையாற்
காழைய ருமையா குலத்தவர் தமையே கொளுத்தினர் சமர்க்களந்தனிலே. ()

## தொங்கல்.

வாக னடியினல் மாண்டசனம் ஙவயங் தனில்முப்பத் தையாயிரம்
பூகமாய் நின்ற வுமர்சாதுவு முரைப்பா னிருகண்ணு நெருப்பெரியத்
தோகாந் துறுக்கியை வயிறுதரளி துடிக்கத் துணிக்கிறேன் பார்மினென்றுன்
சேகை யறிந்துதான் துறுக்கியாரும் சினந்து கோபமு மிகவுண்டாகி. (1265)

வேசை மகனேநீ நில்லெனவே விட்டான் குதிரையை யவனைநோக்கிப்
பூசை கொடுக்கவே வாரானென்று புரவி தனைவிட்டு மெடுத்தானோட்டம்
பாச னுமர்சாதே நிலடாவென்று பரியை நடத்தியே படங்கில்வந்தார்
தூசி தனைவிட்டுக் கீழிறங்கி தூயோர் பதங்களை மிகவும்போற்றி. (1266)

இருந்தாரே தோகான் துறுக்கியாரு மிலங்கும் சூரிய னடைந்தானப்போ
மருவின் மலர்புயத் திறசூலுல்லா வள்ளல் முகம்மதின் பேரரு
மிறையோன் தனைபோற்றிச் சகலோருட னிருந்தார் மதிபோலே யலிமகனர்
தறையும் வெளுப்பாகிக் கதிரவனும் சங்கை யாகவே வெளிச்சம்செய்தான். ()

மறுநாட் காலையி லுமர்சாதெனபோ வருத்தி னன்றன்னின் படையோர்கெல்
திருவின் முகம்மது நபிபேரரைச் செருக்க லத்திலே ரண தூட்செய்தே [லாங்
பெருவி தங்களை நிலைநிறுத்தி போர்வாங்கி யானும் புவிமீதிலே
யிருக்கும் படையெல்லா மெழுமினென்று னெழுந்தா ரிருலட்சத் தேழாயிரம்

ஆனை பதாதிகள்வாரிபோலே யடைய லார்கூட்ட மொருசாரியிற்
சேனைத் தலைவர்கள் பரியிலேறிச் செண்டாக் கொடியோடும் வருவார்களும்

கூனப் பிறைவாளுங் கரத்திலேந்திக் குழூகலார்களோ வோர்சாரியிச்
வர்னுட் கதிரபவுன் மறைவமே வாம்பரிக் கூட்ட மெழுந்ததம்மா. (1169)

பேரிங்வுரிகள் பிடியெக்களம் புள்ளங்குழல்முதற் றம்பூர்வீணை
தாரை சல்லரி சச்சரிகள் தடதட வென்று மடமடத்தே
பாருங் கிடுகிடம் பதாதிவெள்ளம் பாங்கா யறுபதி யேழாயிரம்
சாரி யாகவே கொடிகள்துன்னச் சமர்க்களம் வந்தா னுமர்சாதுவே. (1270)

வந்த பெருவெள்ளந் தன்னைக்கண்டு வள்ளல் முகம்மது அனிபாசொல்வா
ரிந்தப் படைவெட்ட யானேகிறே னிருங்கள் யாபேரும் படங்கிலென்றார்
சந்த்ர வதனத்தார் கலன்கள் தாங்கிச் சகல ஆயுதம் பரிசைதாங்கி
மந்த்ர மின்னற்போற் றுல்புகரு வாளுங் கரமேந்தி யிறையைப்போற்றி. ()

தங்க மயமாகத் துல்துலையும் தாவட மாலை மிகவனிந்து
சிங்கா ரஞ்செய்த பரியின்மேலே சிரந்த நபிபேரர் தாமேறியே
திங்க ளழகான வானோர்களும் ஜெயசோ பனங்கூறி ஆமீன்கூறத்
துங்கப்பு விமக ரருகாமையிற் றேகாங் துறுக்கியும் சமூகமாக. (1282)

தொடையல் மார்பினர் துல்துலுக்கே துலங்குஞ் சிமிட்டாவுங் கொடுக்கும்
நடையி லேங்கதி வேகமான நடன மிகவுள்ள துல்துலென்னுங் [போது
கடலைக் கலக்கவோ புவிமீதினிற் கருத லார்களை யுயிர்போக்கவோ
தடத்தின் வகைக்கல்லைப் பொடியதாக்கித் தால மதுதனைப் பரத்திடவோ. ()

என்ன காரண நினைத்தார்களோ யென்ற பரிதாபம் பெயர்த்தபோதிற்
பன்னக ஞாலங் கிடுகிடென்னப் பாத நட்டியங் தானடியே
மன்னர் முகம்மது அனிபாவள்ளல் வந்து சமர்கள நிற்குபோதி
லன்னலார் வந்த புதுமைகண்டேயரிமே லிருக்கின்ற தலைவனேக்கி. (1274)

அலிதம் மகனெரன் றறிந்திடாம லதிக வேகமாய் பரிநடத்தித்
தலத்திற் சமர்க்கலந் தனிலாகிச் சாற்றுவீ ருந்தம் பெயரையென்றான்
குலத்தி லுயர்வான அலிமகனர் குணங்க ளாகவே யுறைசெய்குவார்
பெலத்த வலியானோர்மகனாராக பிறந்த முகம்மது அனிபாவென்றார். (1275)

கணிக்கொணுமொழி காதுன் ளோடி கலங்க அடித்துதா னுமர்சாதுவைத்
துன்னிவை மறந்தவன் பின்னல்வந்து கொடுத்தான் மூன்றம்பு ஹனிபாபாலில்
அணுவாய் கிறுசனு.வதனைத்தட்டி யருளுவா ரப்போ தலிமகனர்
தன்வாய் நிவிட்ட கணைமூன்றையும் தடுத்தே னுமர்சாதே யானுமிப்போ. ()

எடுத்தும் புவியினி லுன்பேரிலே யோரம் பானது நான்விடுவே
னடுத்து வரும்மம்பைத் தடுத்தாயானு லடச னெசிதுட தலைவனியே
சடத்த வார்த்தயாய் வசனமோதி செங்கை யுறும்வில்லைத் தாட்டாக்கியே [மா
யெடுத்துக் கணையது தொடுக்கும்போதே யெமனு முனையில்வந்திருந்தானம்

விட்டார் பானத்தை வேகத்தோடும் வீரத் துடனேகி யுமர்சாதுட
திட்டமாய் நின்றே பரிவயிற்றிற் சினந்தங் கோடியே யப்பாலேகிச்

சட்டமாய் நிற்கு மருவலரைச் சரடாய்க் கோர்த்ததே யைந்நூறுபேரைத்
துட்ட னுடபரி மயங்கிவீழ்கச் சூம னுமர்சாது தரையிற் சாய்ந்தான். (1278)

அந்த நிமிஷமே யலிதம்பால ரன்ன முகம்மது அனிபாவள்ளல்
கந்த ரப்புய னுமர்சாதுட க்ரிய கூந்தலைக் கரத்தாற்பற்றி
விந்தை யாகிய பம்பரம்போல் வேகத் துடன்சுற்றி யவன்தனையும்
சந்திப் பாய்நின்ற துருக்கிபாலிற் சரத முடனீந்தே கொடுப்போவென்றார்.

அன்னே ரந்தனிற் றுருக்கியாரு மவனை மணிக்கயி றதனாற்கட்டி
மன்ன ருசைனரைக் கொலைபுரிந்த மதியில் லாவொரு வுமர்சாதென்றே
தன்னின் கரத்தாலோரடியும் வைத்துத் தாலத்தாடுபோற் றோள்மேற்போட்டு
மின்னுங் கூடாரந் தனிலேவந்து வீர னுமர்சாதைக் காவல்செய்தார். (1280)

ஈது படிநிற்க வுமையாகூட்ட மெழுந்து சமரினில் நாலுதிக்கும்
பூத லங்களுங் கிடுகிடென்னப் புரவி நடத்தியே கதிர்வாளேந்தி
நீத மிகவுள்ள அலிபாலரை நேராய்ச் சமராடத் தொடங்கினார்கள்
கோது மிகவான அம்புபாணங் கொளுத்து வார்களே மழைமாரிபோல் ()

அம்பா லெறிவாரும் சிலவசுரர் ஆக்ரமங் கொண்டே தாக்குவாரும்
என்பால் நீவந்தே பார்மினென்றே யிருபுயங் தட்டித் திடுவார்களும்
தும்பி தனிலேறி யிருக்கும்போர்கள் சுழற்றி வாளினா லெறிவார்களும்
பம்பரம் போலே நான்குதிக்கும் பரீட்சை தான்செய்தே வசுரர் நின்றார். ()

ஏவும் படியான பரிசையெல்லா மிலங்குந் திருமேனி யணுகிடாமற்
பூவில் முகம்மது அனிபாவள்ளல் புதிய கசையினா லதனைத்தட்டித்
தாவி வருகின்ற படையின் வெள்ளந் தனியோ னலிமகர் கோபமாகிச்
சேர்பித முள்ள வுசைனார்பழி துய்ய பெரியவ னறிவா னென்றும். (1283)

எடுத்தார் கரத்திலே துல்புகறு வெசிது படைவெள்ளந் தன்னிலாகப்
படித்த லங்களுங் கிடுகிடென்னப் பார மலைகளு நடுநடுங்கத்
விடுத்தார் குதிரையை நாலுதிக்கும் வீரி போமென மதிமயங்கத்
தொடுத்த வசுரரை வாளால் வெட்டிச் சூறைதா னிட்டார் சமர்க்களத்தில். ()

கந்து கங்களைப் புரளத்தாக்கிக் காலாட் சேனைகள் முடிதூளாகத்
தந்திரஞ்செய்த வுமையாக்களைச் சடல் மலைபோலே குவியவெட்டி
விந்தையாய் வந்த றூமிகளை வீர வாளினாற் கருவறுத்தே
பந்தியாய் நிற்கும் ஹபஷிகளைப் பாரிற் பிணம்வீழ்கத் துணித்தாரம்மா. ()

அட்ட திசைகளுங் கிடுகிடென்ன ஆதி சேடனின் முடிநெறென்ன
விட்டார் குதிரையை வடபாலினில் வீரிய முள்ள கர்னார்களைத்
தட்டிக் கசையினாற் செந்தூளாக்கிச் சன்ன பின்னங்கள் மிகவுஞ்செய்தே
கொட்டு முரசோரைச் செண்டாக்களைக் குவலயந்தனில் வேலாற்றூக்கி. ()

மதங்கொண்ட யானைக் களத்திற்பூந்து மாட்டினார் கண்டா யுதத்தினாலே
விதமாய் நின்ற பரிவீரரை வெட்டி ரணக்களந் தனிலேசாய்த்தே

அதங்கள் செய்கின்ற நாட்டார்களை யறுத்துக் குவித்தாரே பிணக்காடாகப்
பதுங்கி யேடின வயவீரரைப் பாரில் முடிவீழ்கச் சிதறத்தாக்கி. (1287)

வில்லை வளைத்ததில் நாணிபூட்டி வேகத் துடன்விட்டார் மழைமாரிபோ
லுல்லாச முள்ள மணிக்கோர்வைபோ லூர்ந்து வசுதரைத் தாம்கொன்றேகத்
தொல்லை யாகிய வுமையாக்களைத் துளைத்தங் கோடவே யம்பானது
மல்ல லம்புயத் தரிசிம்மேறாய் வந்த முகம்மது அனிபாவள்ளல் (1288)

தண்டா யுதங்களைக் கரத்திலேந்தித் தகர்த்தார் வசுதரை யொருசாரியில்
வண்ட ஹபஷிகள் தனைப்பிடித்து வாரி யடித்தாரே சிதறியோடக்
கொண்ட லிடிபோலே மிகவுந்தாக்கி கொளுத்தினார் பூசை ரணக்களத்தில்
நின்று பாராம லெசீதுபடை நிலத்தின் கானக மெடுத்தாரோட்டம், (1289)

இந்த விதமாக லுகர்மட்டிலு மெசீது படையிலே மாண்டஜனம்
கந்தரம் போலே குவிந்தபிணம் கணித நூறாயி ரத்தஞ்ஞூறே
யெந்த விடத்திலே பார்த்திட்டாலும் மேக சோரியும் பிணமுமான
அந்தச் சமர்கள மீதிலேதா னடையலார் சோரி யாறோடவே. (1290)

கட்டு மரம்போலே பிணமிதக்கக் காகம் பருந்துகள் தசையூனுண்ண
வட்ட வாருதி போலாகவே வசுத ரிறந்திடும் களமானதை
யட்ட திசையுள்ள போர்க்களத்தை யமரோர் தாம்பார்த்தங் குரைசெய்குவார்
திட்ட மாகிய வுசைனார்பழி ஜெகத்தி லெடுத்தாரென் றின்புற்றாரால். (1291)

எசீது படைகின்ற ரணக்களத்தி லிறந்த ஜனம்போக மற்றோரெல்லாம்
வசையன் மொழிகேட்டு வந்தோமென்று வனவாச முள்ள காடேகினார்
சசியின் வதனத்தி னிறசூலுல்லா சங்கை பொருந்திய பேரனாரும்
திசையி லெழுந்துல்துல் தனைநடத்திச் சிறந்த படங்கில்வந் திறங்கினாரால். ()

இறங்கி நீராடித் துகிலணிந்தே யிறையோன் முகம்மது அனிபாவள்ளல்
திரையின் மணிமுத்தா யிலங்குமான செல்வ ரிருக்கவே பவுஞ்சானது
மறையின் தீனோர்க ளுவந்துபோற்ற வசன மடமாதர் கவரிவீச
அரிய பெரியவன் தனையும்போற்றி யண்ணலிருந்தார்கள் கூடாரத்தில்.(1293)

நபியா முகம்மதின் சலவாத்தோங்க நல்லோர் யாவரு முவந்துவாழ்த்தப்
புவியி லுலமாக்க ளாலிங்களும் போற்றி வானவ ரேற்றிநிற்கக்
கவியின் புலவோர்க ளுவந்துபாடக் கதிரின் மணிமுத்து மாலைமின்ன
நபியா முகம்மது பேரனாரு நவிலுவா ரப்போ தீனோர்க்கெல்லாம். (1294)

குறைஷிக் குலத்தோர்க்கே யுதவியான குவலய முள்ள தீனோர்களே
யிறையோன் கிருபையால் நீங்களெல்லா மிறசூல் முகம்மதின் சபாஅத்தாகித்
திரையின் மணிமுத்தா யிலங்குமான சிறந்த சுவர்க்கமும் பெறுவீரென்றார்
உரைத்தமொழிகேட்டு முசிலிமெல்லா முள்ளங் குளிர்ந்துதான்செல்வமுற்றார்

மதிபோ லிலங்கிய மிகுறுப்தன்னில் வாசங் கமழுமங் கலக்குடியிற்
புதியோன் தவங்களு மிகவுண்டாகிப் பொருந்தி ஈமானோ டிருந்தவர்கள்

அதிப ரிறசூலைப் போற்றுமான அம்ப லன்சாமு தவத்தால்வந்த
நிதிகள் பெருகிய குணவாகர னெயினு முஹம்மது துணையாகினேன்.(1296)

அகில மீதுள்ள பெரியோர்களை யருமையாகவே புகழும்நேசன்
சுகிர்த குணமுள்ள மனரஞ்சிதன் துலங்கு மம்பல மீராப்பிள்ளை
மருமு திறசூலின் மணிமாலையின் வழுத்துங் கவிகேட்டு மகிழ்ச்சியாகச்
செகமேற் செல்வமும் வளந்தேறல்போல் தீனு ரனைவரு மகிழ்வுற்றூரால்.()

ஈது படிநிற்க விறையருளா லிலங்கு முகம்மது அனிபாவள்ள
லோதுவா ரப்போ அழுதவாயா லுலகின் தீனோர்கள் மிதவுஞ்சூழ
கோதி லாதொரு துறுக்கியாரே குவலய முள்ள வுமர்சையாதை
யேது வாகவே யழைத்துவாரு மென்றே முகம்மது அனிபாசொன்னர். ()

அன்ன காலையிற் றுறுக்கியாரு மப்துல் லாசையா துமர்சாதுவை
முன்னுர் கொடுவந்தே யிருபேரையு முகம்ம தனிபாவின் முன்னர்விட்டார்
தன்னு லிருபேர்கள் வதனநோக்கித் தாலத் தரசரு முரை செய்குவா
ரென்னடா பாவி யுமர்சையாதே யிசுலா மானோரா யிருந்தும்பூவில். (1299)

நஞ்சா லசனுரை மோசம்செய்தே நாச மிகவுள்ள வெசீதுசொல்லின்
விஞ்சை யதனலே ரணபாவிகள் விசளங் தனைக்கேட்டுப் பகைவளர்த்த
பஞ்ச பாதக வுமர்சையாதே பாரி லிசுலாத்தை யுவந்தபேரை
வெஞ்சமர் செய்ய மனம்வந்துதா விமல னுகிய வசுதர்களே. (1300)

மதினங் தான்விட்டு வலசையாக வள்ள லுசைனுர்தாம் வருகும்போதிற்
சதியாய் வழிமீதில் மறித்தனுரைச் சமர மேசெய்த துரோகிகளே [கள்
பதியின் வாழ்க்கையைப் பெரிதென்றெண்ணிப்பாலர்தனையுமே வதைசெய்தீர்
அதிப ரிறசூலின் முகத்தாட்சணை யணுவா யிலுமில்லா முழுமூடரே.(1301)

பாலு குடிக்கிற சிறுபாலகன் பாணி யதுகேட்டுப் பரிமேல்வரத்
தாலங் தனிலேதான் மனமஞ்சாமற் சரங்கள் தனையேவிக் கொலைபுரிந்தீர்
ஆல முகம்மது கோத்திரங்க ளங்தப் புறமென்றும் தெரிந்திருக்கத்
தால மீதுள்ள திமுசுக்காகச் சகலோ ரறியவே யழைத்தேகினீர். (1302)

ஆனுற் றுறுக்கியே சொல்லக்கேளு மப்துல் லாசையா துமறுசாதைத்
தோனும் படியான வாச்சியாலே துலங்கச் செதுக்கியே தசையைச்சிவித்
தானு யவர்களை யருந்தும்படி சாட்டை யதுகொண்டே யடியுமென்றூர்
தீனோர் மொழிகளைச் சிரமேல்வைத்துச் சிதுற னிருபேர்கள் சமூகமானர். ()

ஓதுவா னப்போ துமர்சையாது முருகி மனநொந்து கண்ணீரோட
யேதுநாம் செய்வோ மகாராஜரே யிறசூல் முகம்மது பேரனுரே
நீத மறியாமல் நாங்கள்செய்த நிஷ்டூரம் வந்து லபித்ததாலே
பாதகன் சொல்லை யாங்களெண்ணிப் பாவி களிற்பாவி யானேனென்றூன். ()

## பதம்

பாவிகளிற் பாவி யானோமே யுமர்சையாதும்
பரிதவித் தழுகலானோமே யெசீதுசொல்லால்

பாவிகளிற் பாவியானோம் மாருலகின் மீதினிலே
யேவினை யெசீதுசொன்ன வின்பமதை நாங்களெண்ணிப்
பாவிகளிற் பாவி யானோமே.

நாடுநக ரங்கள்மீதில் நான்தருவேன் பாதியென்றான்
மூடனெசி தானேன்சொல்லை முந்தியிலே
பாவிகளிற் பாவி யானோமே.

வந்தவழி தான்மறித்து வள்ளலுசை னார்மணியைத்
தந்த்ரங்கள் செய்தபாவம் தாரணியி லேலபித்துப்
பாவிகளிற் பாவி யானோமே.

பாலுகுடிப் பாலகனைப் பாணிகொடுக் காதபாவம்
பாருலகி லெங்களின்மேற் பாவங்களிந் தான்லபிக்கப்
பாவிகளிற் பாவி யானோமே.

## தொங்கல்.

ஈது வகைசொல்லி யிருபாவியு மிருகண் ணீர்விட்டே யழுகும்போதி
லோதுவா ரப்போ தலிமகனா ரூரத்தோ னெனுங்கோகான் துறுக்கியார்க்கே
யேது மறியாத வுமர்சையாதை யெந்தன் முன்னாலே நிறுத்தவேண்டாம் [து
கோதின் வாச்சியாய் கொடுமென்றோதக் கொடுத்தார் சவுக்காலே யுமர்சையா

பிடித்தார் துறுக்கிதா னிருபேர்களைப் பிடரி கரங்காலைப் பிடித்தேகட்டிக்
கடுத்த வாச்சியாற் றசையைச்சீவிக் கசடர் வாயினா லருந்துமென்று
றெடுத்த கறிதனை யிருபேர்தின்று மிருகண் ணீர்விட்டங் கழுகும்போது
படுத்த படுக்கையிற் கரங்கால் வாங்கிப் பாரிற் பூங்கழு கேற்றினாரால். (1306)

அன்ன காலையில் நபிபேரன்மா ரளுருவா ரப்போ தீனோர்க்கெல்ல
மென்னும் பாலரும் பெண்மாதார்க ளிருந்து சிறைச்சாலை வருந்துவதால்
மன்ன னெசீதையுங் கொலைபுரிந்து மதின மேகவு நினைத்தலாலே
சொன்ன பிரகார மிதுபாதையைத் துலங்கும்படையோர்களெழுமினென்றார்.

பேரி நவுரிகள் முரசுகளும் பிடியினெக்காளங் கொடிமுழங்க
நேரா யெழுந்தார்க ளலிபாலர்கள் நீதம்பெருகிய தீனோருடன்
பாரி லரசர்களுவந்து போற்றப்படையோர் முழக்கமா யெழுந்தாரப்போ
தாரி யற்கரு ளிறையைப்போற்றி யண்ண லலிமக்க ளிருக்கும்போதில்,(1308)

## பதம்.

எமசிங் வாரார் திமுசுக்காக
வெமசிங்கம் வாரார் மிகுமெதிரி
எதிரி யுமையா குலவெசீதை வதைசெய்திட
வெமசிங்கம் வாரார் திமுசுக்காக
தினோ ரிருபதி னயிரர் சூழவே
ஜெகமெங்கும் புகழ்மெய்த்த தீரர்களாகவும்
தானவ னருள்பெற்ற வானோர்கள் சூழவும்
சங்கையுட னெழுந்தார் சிங்கத்தி னலிபாலர்
தகதக வென்ன துல்துல்லது
ஜகசோதி மின்ன எமெசிங்கம் வாரார்
பரிகளுஞ் சரியாய்ப் பாரி லடர்ந்துவரப்
பாவி யுமையாகூட்டம் பயந்தோடி யொளித்திட
வரிசை முகம்மதி றசூல்சலவாத்தோத
வாசங் கமகமென வரும்வழிமீதிதே
வானவர் போற்ற கூறுல்ஹீன்கள்
வாழ்த்துத லாக வெமசிங்கம் வாரார்
கஞ்சத்தின் மடமாதர் வெஞ்சாமரைகள் வீசக்
காளாஞ்சி மிகவேந்திக் கட்டியங்கூறிட
வஞ்சனெசிதுட மனமது மருளவே
வாரார் திமுசைநாடிப் பூரா யெசீதைக்கொல்ல
வாள்கரமேந்திப் புரியின் மீதில்
வாசனையாக வெமசிங்கம் வாரார்
வருகிற கடிதத்தின் மாற்ற மெசீதறிந்து
மனங்களு மயங்கியே ஜனங்களெங்கடா வென்று
மறுவானுட னெசிது மண்ணிலங் தனைக்கூற
வானத்தமரர்களும் சோபனங்கூறிட வெமசிங்கம் வாரார்.

## தொங்கல்.

எசிது மிதுசேதி தனையறிந்தே யிருதய மெல்லாம் கலங்கிவாடி
யுசைனர் பழியது திமுசுக்காக வோடி வருகிற முழக்க மென்றே
வசன மிகப்பேசி மறுவானுமே மனமுந் தேறியே மவுல்வானப்போ
திசையி லுயிரஃ திருக்கும்வரை செலுத்துகிறேன் சண்டை பார்மினென்றும்.

அன்பதாயிரம் ஜனங்கள்சேர்த்தே யாயுதங்களும் பரிசைதாங்கி
தென்பா யெசிதுமே கலனணிந்து திரேக முழுதினும் கறுப்பிட்டானே
தன்பா லவனைப்போல் நூறுபேரைச் சரீர முழுதினும் கறுப்புடுத்தி
வன்ப னுடன்பரி தானேறியே வரிசையாய் நின்றார் நூறுபேர்கள். (1310)

மண்டலங்களுக் கிடுகிடென்ன வானி னிடிபோலே முரசொலிப்பச்
செண்டாக் கொடிகளுஞ் சிரந்துவரத் தேளன் படைகளு மிகவெழுந்தே
சண்ட மாருத மெனவேதாவித் தனியோ னபிபேரர் வரும்வழியில்
வண்ட .னெசிதுட படைகளெல்லாம் வாரிபோல் வந்தே யெதிர்த்தாரம்மா.

ரண்டு படைகளும் பொருதலாலே நெறுநெ றுத்திடக் கரிபரிகள்
வண்ட வசுதரை யலிபாலர்கள் வாளா லோங்கியே கருவருத்தார்
முண்ட ஹறுய்வந்த ஹபசிகளை மூர்க்கத் துடன்தோகான் துறுக்கிவெட்டத்
தண்டா யுதத்துடன் வந்தபேரைத் தகத்தார் முசிபுடன் காகாஜங்கும். (1312)

தோகான் துறுக்கியு நான்குதிக்கிற் றுரத்தி யடித்தாரே வசுதர்களை
சாகை மிகவுள்ள றாமிகளை சராயில் சாசீமும் பிணக்காடாக்கிக்
க்ரா மதிஜங்கும் யானைகளைக் கதறவும் படியாகத் தாக்கும்போது
யூக மாகவு மெசீதுப்பாவி யொத்தக் கொடியுடன் கலையுங்கண்டே. (1313)

விட்டார் குதிரையை முசியுமந்த்ரி வேகத் துடனேதா னெசீதிடதிற்
றுட்ட னிதைக்கண்டு மனபதறித் துரகதம் விட்டே யவனோடவே
கட்டா யத்துடன் முசீபுமந்த்ரி கற்கி நடத்தியே பற்றும்போதில்
மூட்டா யெசீதவன் சட்டைமீதில் முதுகிற பிடித்தனர் மடமடத்தே. (1314)

பருதி யடைந்துதா னிருளானதாற் பற்றி யிழுத்திடும் சட்டையப்போ
பிதிர்ந்து காகளங் கரத்திலாகப் பிசல்போ லவனுமே பரிநடத்தி
யிருண்ட வனத்திலே பரியும்விட்டார் னேதா மொருருபந் தெரியாததாற்
புகுந்தே யொழித்தானே வனவாசத்திற் புரவி திரும்பியே முசீபும்வந்தார். ()

அந்த விரவினி லடையலார்க ளாவிபோ மென்றே யெடுத்தாரோட்டம்
மந்த ரப்புய தரிசிம்மேறுய் வழங்கு முகம்மது அனிபாவள்ளல்
சொந்தமாகிய தீனோர்சூழத் துலங்கு முரசுகள் திடுதிடென்ன
வந்தார் திமிசினில் வாரிபோலே வளைந்து மிகச்சுற்றி யெசிதைப்பார்த்தார். ()

காணு ததினாலே கோட்டைபூதக் கற்கி நடத்தியே யிரவானதில்
வீண னெசீதை தேடிப்பார்த்தார் விரையின் மலர்புயத் தலிமகனார்
தோணு ததினாலே திமிசில் வந்தார் துலங்கும் சூரிய னுதயமானான்
வானோர் போற்றிடு மலிபாலர் சீர்வளர்க்கு முகம்மது அனிபாவள்ளல். ()

அனன காலையிற் சகலோருட னசட் னெசிதுட கோட்டைவந்தே
மின்னும் வடிவேலை யேனவோர்களும் வீதி மாடங்கள் தெருக்கள்தோறும்
மன்ன னெசீதைதான் பார்க்கும்போது மறைந்த இடங்களும் தெரியாததார்
றன்னால் மணிமாடம் சுவருனதிற் சரியாகத் தீட்டு மெழுத்தைக்கண்டார். ()

அண்ண லசனுசை னார்வரலா றந்தச் சுவர்மீதில் வரைந்திருந்தான்
கண்ணா லதைப்பார்த்தே யலிமகனார் ஹக்கன் தலைநினைத் துருகிவாடி
எண்ணி மனங்களு மயங்கிநீத ரிலங்கும் வதனத்திர் கண்ணீர்விட்டே
விண்ணோர்தாலாட்டு நவமணியே விதிக ளிதுதானோ வாங்கிவந்தீர். (1319)

வருந்தி மிகவாடி யலிமகனர் வழுத்துவா ரப்போ திமிசர்பாலிற்
பொருந்துந் தவத்தினர் நபிகிளையார் புண்ணதா யுறுஞ் சிறைச்சாலையை
அருந்தவமான ஹறாஷீம்களே யருளுமெனக் கேட்டார் கண்ணீரோடத்
திருந்து மதியுள்ள வொருவர் வந்து சிறைச்சாலை தன்னைக் காண்பித்தாரால்.

அந்த நேரமே மனதுவாடி யண்ணல் முகம்மது அனிபாவள்ளல்
சந்த்ர வதனத்தார் கரத்தினலே சார்ந்திடும் பூட்டைத் திறந்துமன்னர்
பந்தா யடைக்கின்ற கதவானதை வள்ள லலிமகர் திறந்துசொல்வா [ருர்.
ரெந்தன் குலத்தோரே தாய்மார்களே யிறையோன் கிருபையால் வாங்கினென்

பேசுங் குரலதுந் தெரிந்திடாமற் பேதைமா ரெல்லாம் மதிமயங்கி
மோச மீதென்ன வறியோமென்று முதலோனே யுன்றன் றஞ்சமென்ருர்
வாச ரிதுகேட்டுக் கண்ணீர்சோர வழுத்துவா ரப்போ தவர்கட்கெல்லாம்
ஆஜ ராகினேம் சிறையைமீட்ட அலியுல்லா மக்கள் நாங்களென்ருர். (1322)

ஏடார் சுவனத்தின் மாதர்போற்று மிறையோ னருள்பெற்ற பெண்மாதர்கள்
வாடும் பயிரது மழைகண்டாப்போல் வள்ளல் முகம்மது கிளையாரெல்லா
ஆடிப் பறந்திடும் தேகத்தோடே யழுதகண்ணீரு மாரியாக
நாடி முகம்மது நபியைப்போற்றி நல்லோ ரனைவோரு முன்பால்வந்தார். ()

வல்லோ னருள்தங்கு மலியின்பாலர் வதனந் தானேக்கி யுரைசெய்குவார்
அல்லா பறக்கத்துப்பெற்றவரே ஆகாச் சிறையுற்று வருந்தினீர்கள்
சொல்லநா வுண்டோ நும்பாலிலே சூமன் தான்செய்த மோசங்களை
யெல்லா பெரியோனே யாகுதாயே ஆடிப் பறக்குதே தேகமெல்லாம். (1324)

ஆல முகம்மது தோத்திரங்க ளவதி தானைக விதித்திட்டாரோ
மேலோ னலியுல்லா தேவியாக விளங்கும் படியான பேத்தியாரே
கால விதிதானே கலக்கமுற்றீர் கண்ணின் மணியான வரிசையோரே
வாலை கதிர்மேனிச் சகர்வான்பீபி வதனம் கருகியா வாடலானீர். (1325)

உடையோன் முகம்மது நபிமகளா ரும்மு குல்துமே யெங்கள்தாயே
யடைய லாருட சிறைச்சாலையி லவதி மிகுவாகி வருந்தினீரோ
படைகள் நடக்கின்ற கறுபலாவிற் பாசுர மொன்றங் கெழுமிதொண்ணைதா
இடையில்விதியிதோ தாய்மார்களே யென்செய்வே னென்றேயழுதுசொல்வார்.

சித்ர வடிவான சிறுபாலகர் செயினு லாபிதீ னவமணியைச்
சுத்தம் பொருந்திய அலீமகனர் துலங்கு மடியின்மேல் வைத்தேவள்ளல்
முத்து மணியான எழில்முகத்தின் முத்திதா னிட்டே யழுதுசொல்வா
ரித்தகை யுள்ள புண்பாடெல்லா மிறையோ னெழுதியா யிருந்தான்கண்ணே.

பதம்.

அந்தமிலியே யெந்தனுதி யர்சுக்கோர் மணியைவைத்தா
யுந்தனுட வல்லபத்தை யுலகினி லறிவாருண்டோ
என்கனியே ரத்தினமே ரத்தினயே யெவ்விதம் அதிபதியுற்றீர்
கண்மணியே வுன்வயதிற் காலவிதி காரணங்கள் வந்ததோதான்.

அன்ன லசனுர் மணியன்னுர் மணியன்னுர் அருமை யுள்ள என்கனியே
எங்கள் குலத்தங்கமே நீஇவ்விதியா வாங்கிவந்தாய்
தஞ்சமுள்ள யாறகீமே யாறகீமே தன்மையுள்ள சோதனையோ
பஞ்சிலெரி யுற்றதுபோ லுற்றதுபோல்.

## தொங்கல்.

இந்த விதமாக அலிபாலர்க ளிடைந்து மனம்வாடி யழுகும்போதிற்
சந்த்ர வதனத்தி னுமர்ஜகுபர் தாரையாகவே கண்ணீர்விட்டார்
வந்த தீனேர்கள் பெண்மாதர்கள் வானேர் கூறுக ளுயிர்கள்யாவும்
தந்த தாரையாய்க் கண்ணீர்சிந்தத் தனியோன் விதியென்று சுக்கூறுசெய்தே.

வாவி நீராடி நபிகிளையார் வல்லோ னுதவியாற் றுயிலுடுத்திப்
பூவி லறுவகை ருசிகளோடும் புதிய வடிசிலும் பசியாறியே
மேவுந் தவத்தோர்கள் துயாநீங்கி விளங்கு மிறையவன் தன்னைப்போற்றிச்
காவு மிகவுள்ள திமுசானதில் ஹனிபா மதிபோலே யிருந்துசொல்வார். ()

நீதம் தவரிய வெசீதானவ னிலத்தி லிருந்திடும் திமுசானதைப்
பூதல முள்ள நெருப்பினலே பொசுக்கி விடுமென்றுர் கோபத்தோடே
ஈது வசனங்கள் தனையறிந்தா ரிருக்கும் திமுசுள்ள தீனேரெல்லாம்
பாது காருங்க ளரசேயென்று பகருவா ரப்போ தூாரெல்லாம். (1330)

குமுச மிலங்கிய வெமன்தேசத்தின் குணரத் தினமான மணிவிளக்கே
திமுசை நெருப்புக்கே யிரையாக்கிறுற் சேத மிகவாகும் பொருள்களெல்லாம்
தமது மனங்களோ தயவிரங்கித் தற்காத் தருள்செய்குவீர் நாயகமே
யமுசு பொருந்திய நவமணியே யண்ணல் முகம்மது அனிபாவென்றுர். ()

நேர்மை யாகவே யூராரெல்லாம் நிகழ்த்து கின்றவர் வசனங்கேட்டு
பூராய் நெருப்பிடை திமுசானதைப் பொசுக்கும் படிசொன்ன வசனத்தாலே
சாரியாகவே தீனேரெல்லாம் சாமா னிதிகளு மெடுமென்றோத
மாறுப் புகழோங்கு மணிவிளக்கே ஷக்கால் மூன்றுநாட் கொடுங்களென்றுர்.

சொன்ன பிரகாரம் கொடுத்தேனிப்போ துலங்கும் தீனேர்கள் சல்தியென்றுர்
தன்னு லவரவர் பொருள்நிதியும் சங்கமாகவே யெடுத்தபின்னர்
மன்ன ருரைபோலே ஹாஷீமெல்லாம் வைத்தார் நெருப்பைத் திமுசானதி
லொன்ன லாருட வெசீதுகோட்டை யுலகிற் றுன்வெந்து முடிந்தபின்னர். ()

அன்ன கா்லெயி லலிமகனு ரருள்வார் துணைவர்க ளிருபேருக்கும்
தன்னின் படைப்பதி னுயிரமும் தளங்கள் சூழவே நமரோருடன்
மின்னு மதிகோட்டை மதினமேகி விளங்கு மாளிகை யிருங்களென்ன [ர்ளால்.
மன்ன னெசீதையும் வதைதான்செய்தே வாரேன் மதினமென் றுரைத்தார்வ

தமையனுர் சொன்ன வசனங்கேட்டுச் சங்கையாகவே வுமர்ஜகுபர்
நமையாள் பவனுட கிபையென்று நவின்றுர் கிளையாரும் பாலருடன்

தமது படைபதி னுயிரமும் தளங்கள் சூழவே வழிநடந்து
சமதாய் நிறைந்தவன் கிருபையாலே சங்கை பொருந்திய மதினம்வந்தார், ()

வந்தா ரனைவரு மதினமீதில் வள்ளல் முகம்மது றவுலவாகிச்
சந்திப் பாகவும் சியாரத்செய்து ஜனங்கள் யாவரு முடல்பூரித்தே
பந்த ரக்குடை வருநபியே வள்ளல் முகம்மது முஸ்தபாவே
அந்தமில் ஹறக்க னருளேயென்ற யவர்கள்தான்போற்றி மனைகளானூர்.(1336)

சங்க மாகவே தீனோர்வந்து தழுவி மிகப்போற்றி யலிபாலரை
எங்கள் தமக்கெல்லாம் தவமணியே யெல்லாப் பறக்கத்தும் பெற்றபூவே
சிங்கப் புலியலி பேரனரே செயினு லாபிதீன் மணிவிளக்கே
யுங்கள் பாதத்தை கண்டபோதே யுள்ளங் குளிர்ந்துதான் மகிழ்ச்சியானோம்

கண்டு புகழ்ந்துதான் தீனோரெல்லாம் கண்கொள் ளாதொரு வகைபொங்கியே
மண்ட லந்தனிர் செய்வாழ்கையும் பறக்கத் தெளவைகளுஞ் செல்வங்களும்
அண்டர் மிகப்போற்று மசனுலைசனாரவர்கள் பாரிலே பாத்திகாவும்
சென்ற விடமெல்லாம் சிறந்தலங்க தீனோர் மகிழ்வுற்ற செல்வம்போலே

மதியி னழகான மிகுருப்தன்னில் வாசங் கமழுமங்க கலக்குடியிற்
சரீர மெழிலான மனத்தயாளன் சாமு ராவுத்த ரம்பலமே
புதியோன் தனைநாடுந் தவத்தினாலே பிறந்த செயினு முகம்மதுடன்
அதிப ரிறசூலை போற்றி நீத னம்பல மீராப் பிள்ளையுமே. (1339)

வாசா முகம்மதையுவந்து வாழ்த்தி வணக்க மாய்நின்றே புவிமீதினில்
ராஜர் மணிமாலை கவிகளோத நல்லோர் மனதுடன் வரிசைநல்கித்
தேசந் தனிலே தான் மகிழ்ச்சிபெற்ற செல்வ மதுபோலே தீனோரெல்லா
மாசில்லாதொரு செல்வமோங்கி மதிகள் போலவும் துலங்கினாருல். (1340)

நாத ரலியுல்லா பாலரான நல்லோர் முகம்மது அனிபாவுமே
போதர வுள்ள தளங்களோடும் பிரயாணம் தாக எசிலைதத்தேடித்
பூதல முள்ள வனவாசங்கள் புரட ராதிடச் பார்க்கும்போதி
லேது வாகவே யெசிதவனு மிருக்கு மிடங்களுந் தோணமலே. (1341)

எந்த இடத்திலு மெசிதில்லாம லிருப்ப தானாலுங் காதமேகிக்
சந்திப் பாய் வரும் திருப்பதியூர் தளங்க ளோடுவந் திறங்கிநீதர்
அந்த மில்ஹறக்கன் கிருபையென்றே யலியுல் லாமக னிருக்குநாளி
லிந்த விபரங்க ளெசிதறிந்தே யிருக்குந் திமுசுவந் திரங்கினானே. (1342)

வந்தங் கெசிதுடன் மறுவானுமாய் மகனுமாபியா தாயாருட
னந்த நேரமே ஆலோசித்து மிழகார் மாளிகை செய்வோமென்றே
முந்தி யவன்வைத்த நிலவ்றையின் முதல்க ளஷறபிக் காசையெல்லாம்
தந்த்ர மாகவே தானெடுத்துஞ் சகல சாமானு மனம்போல்வாங்கி. (1343)

எடுத்துக் செலவுசெய் தேசமாக இல்க ளுண்டாக்கி நிதியமெல்லாங்
கொடுத்த மாடங்கள் மாளிகைகள் துலக்கமாய்ச் செய்தே சுதையுந்தீற்றி

யடுத்த பாடிகளிருக்குமான ஐயாயிரத் தைஞ்ஞூ றுமையாக்களை
இடத்திலிருக்கவே வரவழைத்து யெசீது மனம்போலே யிருப்பீரென்றான். ()
பட்டணங்களும் நிமிஷம்செய்து பாங்காய் தெருவீதி மிகவகுத்தே
மட்டி லடங்காத சரக்குவகை வைத்தாங் படைகளும் பெருக்கமாகத்
திட்டந் தான்செய்தே மறுவான் மந்திரி சிந்தை பூரித்தே யெசீதுடன்
பட்டந் துலங்கவே மிகவும்செய்து பாங்கா யிருந்தவ ரரசாளுநாள். (1345)

வயிற்றுவலி கண்டே யெசீதினுக்கு மயக்க மிகவாகி வருத்தமுற்றே
தியக்கத் துடனேதான் மறுவான்பாலிற் செப்புவா னப்போ மனம்பதறித்
கயிற்றை யிழுத்தது போலாகவே கத்துதே வாய்வு வயிற்றுக்குள்ளே
அயரும் படியான மருந்துசெய்ய ஹக்கீமை யவசியம் தருவியென்றான்.(1346)

அன்ன காலையிற் மறுவானுமே யழைத்தான் யூனனிப் பண்டிதனை
மன்ன னெசீதுட கையைப்பார்த்து வழுத்துவா னப்போ யூகவானு
மின்று ளுமக்கான வயிற்றுவலி யெந்த மருந்திலும் தீராதையா
தன்னால் வயிற்றிலே தேளிருந்து தாங்குதே ஈரர் சூலமீதினில். (1347)

தானய் மிகச்செய்த கர்மாகண்டம் தங்கி வலிர்க்கு மகராஜர்க்கே
தோனுதே யிந்தத் தரைமீதினிர் சொல்வே னிதுக்கான விபரங்கேளீர்
நானு மொருபாகம் செய்யப்போறே னசீபுக்கா ரென்ன செய்யலாகும்
யூன னுடபேரும் சொல்லவேணு முலகந் தனிலேதான் மறுவான்மந்திரி. ()

ஈனப் புருவையி லொருபுருவை யிப்போ தெனதுமுன் கொடுவானென்றான்
யூனனி மொழி போலாகவே யொழுங்காய் துருவையுங் கொணர்ந்துவிட்டார்
தானய் பண்டித னதையறுத்துப் சார்ந்த ஈறலைத் தானெடுத்தே
தோனும் படியான நரம்பைநீக்கி சுத்த படுத்தியே சிறுதுண்டாக. (1349)

பட்டு கயற்றிலே ஈரர்கட்டிப் பாங்கா யெசீதையும் விழுங்கச்சொன்னார்
சட்டென்றவனுமே விழுங்கும்போது தன்கா முள்ள கயிரானதை
வெட்டி யிழுக்கவே தேளெழும்பி விளங்கும் வாய்வந்து கொட்டலாலே
பெட்டி மகனை வெசீதுப்பாவி பிணியின் வயிறுள்ளே வலியும்நின்றே. ()

அந்தநேரத்தில் யூனனுக்கே அனேக வெகுமதி மிகவும்மீந்து
சொந்த மகனை மாயியாவைத் துலங்கு முடிசூட்டி மறுவானென்றான்
சந்திப் பிதுவென்றே சகலபேரும் சங்கையாகவே தெருவீதிகள்
சிந்தை பூரிப்பா யலங்கரித்துச் சிறந்த பெரியவன் தன்னைப்போற்றி. (1351)

மஞ்ச னீராட்டி மாயியாவை வானக் கதிர்போன்ற துகிலுடுத்தித்
தஞ்ச முடையவன் தனையும்வாழ்த்திச் சங்கையாகவு முடிசூட்டினார்
கஞ்ச மடமாதர் கவரிவீசக் கதிர்ச்சிம் மாதனந் தனிலிருந்தான்
செஞ்சொ லுமையாக்க ளுவந்துபோற்றச் சிகுறன் மகனுமே யரசாளுநாள் ()

அன்ன காலையு லெசீதுப்பாவி யவனும் பயித்திய மிகவுண்டாகி
யென்னடா கூட்ட மறுவானென்றே யெழுந்தே யவனோடிப் பாய்கிறதும்

தன்னு லலறியே தெருக்கள்தோறும் சத்தம் போட்டவ னேடுறது
மின்னம் புலப்பங்க ளதிகமாகி யியல்பு தெரியாத பித்தனுனன். (1353)

## பதம்.

பித்த னுனே யெசீதவன் பித்தனுனே
வாளேந்தி யுசைனரும் வாரார்க ளென்றும்
வாங்கடா யுமையாக்க ளெந்தனைக் காரென்றும்
தேளே கடிக்குது செனனித்துக் குள்ளென்றும்
சிந்தை கலங்கவே வந்தவர்க ளாரென்றும். பித்தனுனே

நம்முட சேனைகள் நானிலந் தனிலெங்கே
நாட்டார்கள் கூட்டமும் நமதுட தளமெங்கே
கம்மாதே மறுவானே கடிக்குது தேட்குஞ்சு
காரண ரலிமக னிந்தா வாராரென்றும். பித்தனுனே

அம்பினு லேவது அதிலொரு பாலகன்
அதுசெய்யும் வாதைகள் யான்சொல்ல முடியாதே
தெம்புசொல் வாரில்லை செகந்தனி லிருப்பெங்கே (தனுனே
திடஞ்சொல்லு மறுவானே அடஞ்செய்வே னுனையென்றும். பித்

என்மகன் மாபியா வென்னடா பேசுறேன்
இமசிங்க மெந்தனைக் கொலைசெய்ய வருகிறுர்
முன்பதாய் வாளது மூடுகி வருதேபாரு
முகம்மது கனிபா யிந்தா வாராரென்றும். பித்தனுனே

## தொங்கல்.

இந்த விதமுன்ள புலப்பத்தாலே யேக ஜனம்வந்து கூடிச்சொல்வா
ரெந்த மதியுள்ள புலப்பமென்பர் ரெசீதுப் பாவியின் கன்மமென்பார்
முந்தி யிவன்செய்த கர்மகாண்ட முனக்கம் பிடித்ததோ விவனுக்கென்பார்
விந்தை யாகிய வெசீதவனும் விரட்ட அவர்களு மெடுத்தாரோட்டம். ()

அந்த நேரமே யூனன்வந்தே யருமை யாலத்தி னீரைவாங்கி
யிந்தா சருபத்து குடியுமென்று னிதுவே யதிட்டமென் றவனருந்த
முந்தி யிருந்திடும் பயித்தியங்கள் முற்றி அதிகமாய்ப் புலம்பலானு
னிந்தா அலிமகன் வாராரென்றே யெடுத்தா னோட்டங்கள் மேன்மாடத்தில்.

ஓடி மேன்மாடந் தனிலாகியே யிரத்தி ருந்தவ னடியிற்பாய்ந்தான்
பீடிப் பாகவும் பவனவாயிற் பூந்தே வாயினி லெசீதவனும்
ஆடி விழிகளும் பார்வைசுற்றி அசட னிறந்தானே கழுமீதினி
லோடி யனைவரு மெசீதைநீங்கி யுசைனர் பாதக மிதுதானென்றுர். (1356)

அன்ன காலையிற் குளிப்பாட்டியே யழகாய்க் கபனிட்டு மணந்திமிர்ந்தே
யென்னும் பெரியவன் தன்னைநாடி யியல்பா யுமைபாக்கள் மிகத்தேருது
மன்ன னெசினைதயு மடக்கஞ்செய்து வாகாய்ச சடங்கெல்லா முடித்தாரப்போ
மின்னு மதுகோட்டை சாமூர்தேசம் விளங்கும் ஹாஷீம்கள் திமிசில்வந்தே.

எசிது மிறந்திடும் வரலாறெல்லா மெழுதி மடித்துத்தான் தூதர்பாலில்
வசிகர முள்ள அலிமகனர் வள்ளல்முகம்மது அனிபாவிடம்
ஓசிவாய் கிருபமுங் கொடுமென்றோத வுடனே பிரயாணந் தானுகியே
திசைகள் தனிலுள்ள காடுநீங்கிச் சேர்ந்தார் திருப்பதி யூரானதில். (1358)

நாத ரவிமகன் சமுகமாகி நல்லோர் பாதத்தைப் பணிந்துபோற்றி
நீதர் கரத்தினில் கிருபமீந்தார் நேசர் வாசித்துச் சகலர்க்கோதி
ஆதி யருளாலே பயணமென்று ரனைவோ ராயுதம் பரிசைதாங்கிச்
சோதி பெரியவன் கிருபையாலும் துல்து லேறியே அலிமகனர். (1359)

பரியிற் பதினுயி ரஞ்சனமும் பாங்காய் மிகநிற்க வேந்தர்பாலில்
வரிசை பொருந்திய சருயீலுடன் மன்னர் தோகனுந் துறுக்கியாறும்
பிரிச மிகவுள்ள தவத்தோர்களும் பெரியோ னருளாலே தானெழுந்து
தறஜா வரிசையும் புகழோங்கவே தாரை மீதினில் நடக்கும்போதில். (1360)

தடமும் வாவியிற் றுமரைகள் சங்கை யாய்வருந் தோற்றங்களும்
குடம்போல் மிகத்தூங்கும் பலாக்கனிகள் கொய்யா நாரத்தை துரியாங்கனி
படியின் மீதிலே தேன்சொரியப் பார்த்தே யனைவோரும் பிரசமுற்றே
தொடையல் மார்பின ரனைவோர்களும் துய்ய கனிதின்று மகிழ்வுற்றூரால். ()

மகிழ்ச்சி மிகவான வாறுபோலே மங்க லக்குடி தன்னில்வாழும்
ஜெகத்தி லீமானே டிருந்தவர்கள் சிறந்த முகம்மதைப் போற்றும்நீத
னகங்கள் மிகச்செய்யுந் துட்டர்களை யடக்கு மம்பலம் சாமுருவுத்தர்
ககத்தி லவருட தவத்தாலவந்த சுதனும் நெயினு முகம்மதுவும். (1362)

அறுமை யாகிய துணையாய்வந்த அம்பலம் மீராப் பிள்ளைநேசன்
பொறுமை யுட னல்ல மணிமாலையின் புகழை யுவந்தவன் மனம்பூரித்தே
உ[illegible] யாகவும் வரிசைநல்கி யுலகில் மழ்வுற்ற செல்வம்போலே
வருகும் பாதையிற் கனிசொரிந்து வாசங் கமழத்தா னிருந்ததம்மா. (1363)

சங்கை யாகவே வழிநடந்து தனியோன் முகம்மது அனிபாவள்ளல்
செங்கை யுடவேந்தர் தளத்தினேடும் திமுசு தான்வந்தே யிறங்கினரே
திங்கள் வதனத்தா ரதிலிருந்து செப்புவார் தோகான் துறுக்கியார்க்கே
பங்கனுகிய மறுவான்றன்னைப் பார்த்ததோர் நிமிஷத்திற் கொணர்மினென்றூர்

தோகான் துறுக்கியு மனம்வெகுண்டு துலங்கும் வாளேந்திக் கயிறுங்கொண்
பாக மாகவே திமுசிலேகிப் பார்த்தார் மறுவான்தன் மனைமீதிலே [டே
யேகச் சனத்துட னவனிருந்தா னிலங்கும் புலிபோலே யவனைப்பாய்ந்தே
சேகை மிகச்செய்த பயலேயென்று திடத்தா லவனையுங் கயிற்றூர்கட்டி. ()

தொம்பை யாடுபோற் றூளிற்போட்டார் சூழ்ந்த ஜனங்களு மெடுத்தாரோட்
வம்பன் தனைநங்கொண்டு புலிபோலாக வந்தானேட்டந் தோகாந்துறுக்கி [டம்
தம்பியே மெள்ள மோடுமென்றுன் சாத்தினர் பூஜை யவன்முதுகி
லெம்மால் விதியுட காலமென்று னிவனை ஹனிபாபா லிறக்கினரால். (1366)

கூட்டை யவித்துத்தான் முன்னால்விட்டுக் கசடன் வதனத்தைத் தானேக்கியே
மட்டவிழ்ப்புயத் தலிமகனர் வள்ளல் முக்ம்மது அனிபாகேட்டார்
அட்ட திசைமீதி லுன்னைபோலே யசடன் கிடையாது மாபாவியே
யெட்டுத் திசையாண்ட வுதுமானரை யென்ன மோசங்கள் செய்துபோனாய்.()

எந்தன் பிதாவுட ராஜாங்கத்தி லென்னமாறுபா டுணற்றிவைத்தா
யுந்தன் தன்னையே யிறைவகுற்றிங் கொழுங்கு தவறியா நடக்கச்சொன்னன்
சந்த்ர வதனத்தி னசனர்வள்ளல் தாக்க தாகிய ராஜாங்கத்திற்
சொந்தமாகிய பெண்ணைரந்து துஞ்சவும் நஞ்சைக் கொடுத்தாயப்போ. ()

ஏண்டா மறுவானே யிம்மோசங்க ளேதினற்செய்தே புவிமீதிலே
மாண்டா லொருவரிங் குனதுவஞ்சம் வையக மீதில் நிகழுகாது [றூர்
கூண்டசனபயிலே சகலோர்பார்க்கக் கொளுத்தும் நெருப்பிடை யிவனையென்
வேண்டும் வெறகெல்லா மிகவடுக்கி விளங்கு மெரிமூட்டி யிருக்கும்போதில்.

நல்லோர் பாதத்தை மிகவும்போற்றி நவிலுவானப்போ மறுவானுமே
பொல்லா வெசீதவன் பிறக்கும்போதிற் புன்மை வரலாச்சே புவிமீதுனிற்
சல்ல வாரியி னெசிதுனலே தனல்வுட் டெரியுதே நெருப்பானது
சொல்லவா யுண்டோ மகாறஜரே சுத்தமதி கெட்ட மறுவானுக்கே. (1370)

உருகி மிகநொந்தே யவனேதவு முலகி லெனுந்தோகான் துருக்கியாரும்
பெருகு நூறுமன் பாரமான பெலத்த தடியினி லிவனைக்கட்டி
யெரியு நெருப்பிடை வைத்தாரப்போ திருந்த வுமையாக்கள் கண்பார்க்கவே
புருகி மறுவானும் சாம்பலான னுசைனர் பழிகளுந் தீர்ந்ததென்றூர். (1371)

இதுகண் டெசீதுட மகன்மாபியா வெழுந்து வணக்கமாய் முன்னால்வந்தே
மதியி னழகான அலியுல்லாவின் மகனர் பாதத்தை மிகவும்போற்றிக்
கெதியுங் நமக்கில்லை நாயகமே கிருபைக் கடலான நவமணியே
பதியுள்ளரசர்கள் போற்றும்பூவே படைத்தேன் முகம்மதின் பேரனே. ()

சிங்கப் புலியலி செல்வனரே ஜெகத்தில் லெனைகாருந் துரைமகனே
பங்க னெசீதுபோல் மனமுடைய பாலன னல்ல வலிசிம்மேரே
யுங்கள் மனம்போலே யானடப்பே னொழுங்கு தவறுமா றிறையளப்பேன்
சங்கை பொருந்திய தயாபரரே தயவு செய்தருள் புரிவீரென்றூர். (1373)

அங்கம் மொழிகேட்டே புலிபோல் ரண்ணல் முகம்மது அனியாசொல்வா
ரெங்கள் முகம்மது நபிநாயகம் நாங்கள் செயித்தது மும்மதுநாடு
சிங்கப் புலிமகர் ராஜாங்கத்தின் ஜெகத்தி லிருக்கின்ற மாபியாவே
சங்கையாகவே திமுசிருந்து ஷருத்தின் படியாகத் திறையளப்பீர். (1374)

மந்திரி யாகவுங் காசிமோரை வைத்தோ முமதிட மதிகளோத
வெந்த யோசனை யவர்சொன்னாலு மியல்பாநீ கேட்டு நடக்கவேணு
முந்தன் மனம்போலே நடப்பீராகி லுடனே வாள் தனக் கிறைசெய்குவேன்
சிந்தை மீதிலே மதிகள்வைத்துத் திறையுங் கொடுத்துநீ திமுசாளென்றார். ()

அன்ன லுரைகேட்டு மாபியாவு மடிகள் பணிந்தவ ருரைசெய்குவார்
சொன்ன பிரகாரம் நடந்துவாரேன் துய்யோ னருள்பெற்ற நாயகமே
யென்னு முகம்மதி னபிபேரரே யிறையோ னருள்பெற்ற தயாபரரே
மன்னர் தமக்கெல்லாம் சிகாமணியே மனது வைத்தருள் புரிவீரென்றார். ()

ஈது மொழிகேட்டே அலிதம் பால ரிப்போ துரையிது சரிதானென்று
கோதில் லாமலே தீனேரெல்லாம் குவல மீதில் வாழ்ந்திருப்பீ
ராதி கிருபைதான் செய்வானென்று மண்ணல் முகம்மது அனிபாசொன்னர்.
நீத ருடவாக்கா லுரைசெய்யவு நிறைந்த தீனோர்க ளாமீனென்றார். (1377)

நாத ருடவாக்குப் பெற்றேமென்று நாடுந் தீனோர்கள் மனம்பூரித்துச்
சீதம் பொருந்திய முகமலர்ந்து செல்வ மிகவான மகிழ்ச்சிபோலே
காத லாகவே மணிமாலையின் காரனந் தன்னை புவியிலோத
நீத னெயினு முகம்மதுவு நிலமே லம்பலம் மீராப்பிள்ளை. (1378)

ஈது படிநிற்க புவிமீதினி விறசூல் முகம்மது நபிபேரரும்
நாதர் தளங்களும் புடையிற்சூழ நடன மடமாதர் கவரிவீசச்
சீதம் பொருந்திய ஆலவட்டம் ஜெண்டாக் கொடிகளும் சிரந்திலங்கச்
நீத ரெழுந்தார்கள் மதினமேக நிலத்தி லரசர்கள் மிகவும்போற்ற (1379)

வாரா ரலிமகர் வழிநடந்தே வானத் தமரோர்க ளுவந்துபோற்ற
நேர்மை யாகிய அரசர்வாழ்த்த நிறைந்த தீனோர்கள் ஆமீன்கூற
காரார் குடைதரு மிறசூலுல்லா ஹபீபு முகம்மதின் சலவாத்தோங்க
மாருப் புகழோங்கு மதினமீதில் வந்தா ரனைவோரும் பெருக்கத்தோடும். ()

---

## சைபினுல் லாபிதீனவர்க ளரசு நிலை.

வந்து முகம்மதின் றவுலாவாகி வணக்கந்தான் செய்துஹபீபையம்போற்றி
யந்தமில் ஹக்க ளருளினலே யழகின் மணிமாடங் கதிரிலங்க
[illegible] மாளிகைவந் திறங்கினு ரப்போ தலிமகனு
ரெந்த ராஜரு முவந்துபோற்ற வெழில்சிம் மாதனந் தனிலிருந்தார். (1381)

மதினந் தனிலுள்ள தீனேரெல்லாம் வந்தே யலிமகர் பாதம்போற்றி
புதியோ னருள்பெற்ற மணிவிளக்கே பொருமை மிகவுள்ள நவமணியே
யதிபர் முகம்மதின் பேரனரே யண்ண லாகியவலிசிம்மேரே
பதியி லரசர்கள் போற்றும்பூவே பாரா ளரசர்க்கு முடிவேந்தரே. (1382)

எங்கள் தனக்கெல்லாம் தங்கமேரே யிறசூல் முகம்மது நபிபேரரே
சிங்கப் புலியலி செல்வனரே சிறந்த வயசீரர் போற்றுங்கோவே
யுங்கள் பாதத்தைக் கண்டபோதே யுடையோன் பரக்கத்து மிகவுண்டாகிச்
சங்கை மிகவானே நாயகமே சைபி திறசூலின் கிருபையென்றார். (1383)

அன்ன காலையிற் சகலோர்களு மசட னெசிதுட விபரங்களைத்
தன்னு லவியுல்லா பாலரோதச் சகல ஜனங்களும் தானறிந்தார்
மன்னர் முகம்மது அனிபாவள்ளல் மவுலுவா ரப்போ தீனோர்க்கெல்லா
மென்னின் தமயனு ரசனுர்வள்ள லிருதய மாக ஈன்றபாலர். (1384)

செயினு லாபிதீன் பாலர்க்காகச் சிறந்த முடிசூட்டப் புவிமீதினில்
நயங்கள் பொருந்திய மாடகூடம் நாதர் மாளிகைச் சிம்மாதனம்
தயங்கு மணிமுத்து மரகதத்தாற் சங்கை யாகவே சிங்காரிக்கச்
சுயம தாகிய தெருக்கள்தோறும் துலங்க மிகப்பந்த லடுவீரென்றார். (1385)

உரைத்தமொழிக்கேட்டுத் தீனோரெல்லா மொழுங்கா யாவர்க்குந்தெரியவேதா
முரசக் காரரைப் பறைசாற்றவு மொழிந்தார் முசிலிம்கள் மதினமீதில்
திறத்தோ ரேகியே முரசடித்துச் சிறந்த வசனங்கள் மிகவோதியே
தறஜா வரிசையு மிகவோங்கிய ஸைனுல் லாபிதீன் பட்டமென்றே. (1386)

மதின மீதுள்ள மனைகளெல்லா மதிபோற் சுதைதீற்றி மிகத்துலங்கப்
புதின மாகிய காவணங்கள் பூமலர்ப் பந்த லிடுவார்கோடி
சதுரங்க முள்ள மாடங்களிற் சரஞ்சரமாக மணிகள் தூக்கி
யிதுவுஞ் சேட்டிளம் பருத்தியுமே விளங்கும்கோற்றம்பேரலெழிற்செய்தாரே

தெருக்கள் தோறினு மலர்பந்தலிற் சிறந்த நவமணி மிகப்பதித்து
மருக்கொள் வாசனை கமகமென்ன மதிசிம் மாதனம் சிங்காரிப்பா
ருக்க னெழிலான மணிமுத்துக ளழுத்தி மரகத மிகத்துலங்கத்
திருக்கண் ணுடையவன் பார்க்கவேணும் சிம்மாதனமதி னலங்காரத்தை. ()

ஈது படிநிற்க அரசர்க்கெல்லா மெழுதி நிருபங்கள் மிகவனுப்பி
நாதர் கடிதாசி கண்டபோதில் ராஜ ரனைவோரு மகிழ்ச்சியாகப்
பூதல முள்ள அன்பத்தாறு புருட ராதிபர் மதினம்வந்து
நீதர் முகம்மது றவுலவாகி நேர்மையாகவே வணக்கம்செய்தார். (1389)

வந்த அரசர்கள் தளத்தினோடு முகம்ம தனிபாவின் சமுகமாகிச்
சந்த்ர வதனத்தார் கதம்போற்றியே சங்கை யாகவே யிருக்குநாளிற்
சிந்தை பூரித்தே தீனோரெல்லாம் செனு லாபிதீன் னவமணியில...
மந்த ரக்கதிர் மெய்யானதில் மஞ்சன மாட்டித் துயில்புனைந்தே. (1390)

மதியி னெழிலான அங்கிசேர்த்து மாலை யாபரணம் பூட்டியே
கதிரின் பிரகாச மவுலிசூட்டி ஹக்கன் முகம்மது கணையாழியைப்
பதியில் மடமயில் சகர்வானிடம் பாங்காத்தான்வாங்கி விரலணிந்தே
யதிபர் முகம்மதின் சலவாத்தோங்க அசனுர் பாலரும் தவிசிலானுர். (1391)

ராஜ ராஜர்கள் மிகவும்போ...டின மடமாதர் கவரிவீசப்
போசர் மிகநின்று கட்டியங்கூறப் பூச்சக் கரக்குடை மிகத்துலங்க
வாசங் கமகம கமகமென்ன வானத் தமரோர்க ளுவந்துபோற்ற
மாசொன் றணுகாத சு...ல்ஹீன்கள் மங்க ளஞ்சொல்லி ஆமீன்கூற. (1392)

(

பேரி முரசுகள் கிடுகிடென்னப் பிடியோ டெக்காள மடமடென்னத்
தாரா தரமுள்ள தீனோரெல்லாம் சங்கை யாய்வந்தே மிகவும்போற்ற
மாரி வருஷிக்கச் சந்தனத்தால் வல்ல மெரியவன் குதறத்தாலே
நேர்மை வளந்தேரத் தகுத்திலானார் நீதர் முகம்மது பேரனாரே. (1393)

ஈது படிநிற்கத் தீனோர்க்கெல்லா மின்ப மிகவாக விருந்தளித்துப்
பூதலந்தனில் வரிசைநல்கிப் பூரிப்போங்கவே முசுலீமெல்லா
நாதர் முகம்மது நபியைப்போற்றி நாலி யார்களை மிகவும்வாழ்த்திச்
சீதம் பொருந்திய ஹாஷீமெல்லாம் செல்வ மிகவுற்ற மகிழ்ச்சிபோலே. ()

ஜெகமே லிலங்கிய பூஞ்சோலைகள் சிறந்தங் கிலங்குமங் கலக்குடியிற்
றகுதி யாகிய மனரஞ்சித சாமு ராவுத்தர் அம்பலமே
மிகுதி தவத்தினா லுதித்தபாலன் விளங்கு நெயினா முகம்மதுடன்
அகில மீதினி லுதித்தநேச னம்பல மீருப் பிள்ளையூகன். (1395)

புவியி லனுதின மிறையைப்போற்றிப் புதியோன் முகம்மது நபியைவாழ்த்திக்
கவிசொல் வாணர்க்கு வரிசையீந்த கனத்த மகிழ்ச்சிபோல் தீனோரெல்லாம்
புவியிற் பறகத்து மிக்வுண்டாக்கிப் புதியோ னருளாலே செல்வமோங்கித்
தவமுந் தன்மங்கள் பெருக்கமாகிச் சங்கை யாகவே யிருந்தாரம்மா. (1396)

வானின் மதிபோலே தகுத்திலான வள்ள லசனார்த்தம் பாலர்க்காக
நானி லந்தனி லவிதம்பாலர் நல்லோர் முகம்மது அனிபாசொல்வார்
தேனின் மலர்மாலைப் புயந்தாங்கிய செய்யி திறசூலாம் நபிபேரரே
நானில மெல்லா மொருகுடையில் ராஜாங்கஞ் செய்ய வந்தபூவே.

எந்தன் தமையனா ரசனார்வள்ளற் கின்ப மாய்வந்த நவமணியே
சந்த்ர வதனத்தின் தயாபரரே ஸெயினு லாபிதீ னெமதுகண்ணே
அந்த மில்ஹக்க னருளினாலே யான்சொல்லுமதி கேள்மினென்ன
இந்த வுலகத்தி லுள்ளராஜ ரெல்லோ ருந்திறை யளப்பாரென்ன. (1398)

வருஷந் தவறும[illegible]திறையும்வாங்கி பை[illegible]துல் மாபிலே கணக்கிட்டுத்தான்
தர்ம தானங்கள் [illegible]கவும்செய்[illegible] தரணி தன்னையே யாள்வீரென்னத்
[illegible]க ளள[illegible]காத அரசர்பேரை[illegible] தெரியும் படியாக நமக்கெழுதும்
குறைஷிக் குலத்தி[illegible]னில் வருங்கனியே குணறத்தினமான மகனேயென்றார். ()

அப்போ தேஸைனு லாபிதீனு மருள்வா ரலிமகர் வதனநோக்கி
இப்போ தேயுங்க ளெமன்பதிக்கு மிசிக்கி லான்கோட்டை மகரிபுக்கு
மெப்போ துந்தபாலிருக்க வேணும் மெங்கட்கு வாபாத் தங்கமேரே
தப்பா துரையென்றே யலிமகனார் தபாலை நேமித்தே மனம்போலாக. (1400)

ஹாஷிம் குலத்திலேயப்துல்லாவு மதிக மதியூக[illegible]ாகிரயுப்
நதீசர் பகுறுதீ னப்பாசெயும் நேமித் தரசரு மந்[illegible]யா[illegible]க்கி
வாசர் தமக்கான தளம்பெருக்கி வைத்து முகம்மது ஹ[illegible]ிபாசொல்வார்
தேசந் தனையெல்லா மொருகுடையிற் செலுத்தும் ராஜாங்கம்கனியேயென்றே

அன்ன காலையி லம்சர்க்கெல்லா மருள்வார் முகம்மது அனிபாவள்ளல்
என்னின் பாலர்க்குத் திறையுங்கட்டியெல்லோர் பறக்கத்தா யிருங்களென்றூர்
மன்ன ரனைவோரு மிதனைக்கேட்டு மனம்போல் நடக்கிறோம் வலிசிம்மேறே
என்னம் வழக்கம் போற்றிறையுங்காட்டி எப்போதும்போற்றி வருவோமென் /

தோகாந் துருக்கிபோற படைத்தலைவன் தொல் லுலகிலே காண்பரிது [றூர்.
வாகான் வயுற்றுக்கஞ் ஞாறுமொட்டி வழங்கு மொருமாட்டி னிறைச்சியீந்தே
தோகாந் துறுக்கியை மதினமீதிற் றுலங்கும் கருணலாய் வைப்பாரெகன்று
பாக மாகவே முத்துமணிப் பதக்க மெனுமாலை யவருக்கீந்தார். (1403)

இந்நிலமீதி லிமானேரெனது குடும்பத்துக் குபகாரியே
மன்னர் சமுயிலே நீர்செய்நன்றி மறப்ப தொருநாளு மில்லையென்றும் [மற்
என்னுந்தவத்தோரைத் துணையாய்வைத்தேயெதிரி யுமையாக்கட்கிடங்கொடா
றன்னி னிசுக்கிலான் தனியிருந்து சங்கையாகவு மரசாளென்றே. (1404)

விலைகள் மதிக்காத முத்துமாலை வேங்கை யலிமகர் தானுமீந்தே
நலமு மிகவுள்ள தவத்தோர்கட்கு நல்லோ ராபரண மிகக்கொடுத்தே
தலங்கள் தன்னிலே பறக்கத்தாகச் சங்கை யாகவு மிருங்களென்றூர்
நலங்கள் பொருந்திய அலிமகனர் நல்லோ ரமிர்தவாய் தனைத்திருந்தே. ()

வந்த ராஜர்க ளனைவோர்களும் வள்ளல் நபிபேரர் பாதம்போற்றி
யந்தமில் ஹக்க னருள்பெற்றோங்கு மண்ணல் முகம்மது நபியைவாழ்த்தி
வந்த ஜனத்துட னவரவர்கன் வாகா யெழுந்துதா னடந்தாரப்போ
தெந்த ராஜரு முவந்துபோற்ற வேக னலிமக ருமர்ஜகுபர். (1406)

வந்த படைபதி ளுயிரும் வாழ்த்தி முகம்மது ஹனிபாயைப் போற்றி
மந்த ரப்புயத் தலியின்பாலர் மகரிபுப் பதி பயணமானர்
சந்த்ர வதனத்தி னலிமகனர் தனியோன் முகம்மது ஹனிபாவள்ளல்
சொந்தமர்கிய கிளையாருக்கும் துலங்கு மதீனத்தா ரனைவோருக்கும். (1407)

யணந்தான் சொல்லி வலிசிம்மேறுய் பதினுயிரஞ்சன மிகவுஞ்சூழச்
சயங்கள் பொருந்திய கொடிதுலங் சிறந்த துல்துவின் மிசை[illegible]யே
சனியங்களின் கெடிமுழங்கத் தம்பூர் நவுபத்து முரசொலிப்ப
ங்கள் பொருந்திய மதினம்நீங்கி நல்லோர் சாறுயி னடைந்தாரம்மா. ()

று ஜகுபறு மகரிபாகி யுடையோ னருளாலே தவசிலாறு
மனுக் ரதிபதி யலிமகறு ரிருபத்தி யேழு நாள்நடந்தே
காய் நிறைந்தவன் கிருபையாலே சங்கை மிகவுள்ள பதியில்வந்தே
ரோர் போற்றவும் தவிசிலாறு ரண்ணல் முகம்மது ஹனிபாவள்ளல். ()

லான் கோட்டை ச[illegible]ரு வெ[illegible]லாய்த் தவத்தோர்கள்புடைசூழவே
ரமுள்ள கோட்டையாகி ம[illegible] மாதனந் தனிவிருந்தார்
ன் வதனத்தார் மிகவும்போற்றச் சங்கையாகிய பெயர்கள் வாழ்த்தத்
ர முன்ள துகிலிலங்க[illegible]யோன் தனைநாடி யிருந்தாரப்போ. (1410)

சிங்கப் புலிமக ரசனார்பாலர் செய்னு லாபிதீன் ராஜாங்கத்தி
லெங்குந் துலங்கவே தர்மதான மிலங்கு மும்மாறி வருஷிக்கவே
பக்கையாப் வந்து விலங்கினங்கள் தனித்தே யொருதுறை நீரருந்தச்
செங்கை யுளவேந்தர் தகுத்திலாகச் செல்வம் பெருகவே புவிமீதினில். ()

நபியா மூகம்மதின் சலவாத்தோங்க நல்லோர் மார்க்கமும் பெருகிவாழ்க
புவிவரசர்கள் திறையளக்கப் புகழ்சேர் வணக்கமு மிகவுண்டாகக்
கவிக ளுவந்தோதும் பக்கீர்மதாறு ஹக்க னுதவியா லுவந்துபோற்ற
நபியா முகம்மதின் பேரனரும் நல்லோர் மகிழ்ச்சியூம் வளர்மதியாம். (1412)

## வாழி.

திருவின் திருவான பெரியோன் நூதரிம் சிறந்த முகம்மது நபியும்வாழி
தருவின் கரமான நாஸியார்கள் சங்கை பொருந்தவே மிகவும்வாழி
யிறையோ னருள்பெற்ற அசனுசைன ரிலங்கு முகம்மது ஹனிவாழி.
மருவின் மலாப்புய மும்மர்ஜகுபர் வள்ளல் செயினுலாபி தீனும்வாழி.

வல்லோ னருள்பெற்ற அசுஹாபிமார் வணக்கம் வளர்ந்தேறி மிகவும்வாழி
மல்லிகை வாசர் மணிமாலையை வழுத்துங் கவிஞர்கள் மிகவேவாழி
யெல்லா பறக்கத்து மதியாகவே யின்பமுடன் கேட்ட தீனோர்வாழி
அல்லா பெரியவன் தனைநினைந்தே யகத்திற் றுதிசெய்வோர் வாழிவாழி.

## ப த ம்.

சித்த நோக்கி அருள்செய்வீரையா நபிமுகம்மதே
திருவடி தந்தே ஆளுவீரையா

முத்தொளிவினுங்கிந்தீ லாகிமுகில்பதுல்லா னுதவிலிருந்து
பத்தினிமங்கை யாமினரீன்ற பாலரேயது கூலரேயுங்கள் சித்தநோக்கி

கத்தோனறுஷியிற் கபுசோடேறிடக் கருதிவசன மிகவும்பேசி
நற்றவத்துடன் பிவியில்வந்தராஜரே யெங்கன்போஜரேயுங்கள் சித்தநோக்கி

எத்தலத்திலு மேன்மையன்பரே யேழைகள் தனைகாக்கும் அன்பரே
முத்திபெற்றிடும் நாதநீதரே முகிற்குடை நிழல்வரு முகம்மதே சித்தநோக்கி

விஸ்தனமுள்ள ஆலமெங்கணு மேவித்தீன் பயிரேற்றும் செல்வரே
கஸ்தூரி மனமிகக் கமழ்ந்திடும் காரண வுங்கள் பூரணமனம் சித்தநோக்கி

---

அல்லாஹ் ... ஆலாவுடைய கிருபையினாலும் வள்ளலாகிய முகம்மது முஸ்
தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய பறக்கத்தினாலும்
குதுபுமீரான் முகியித்தீ னண்டகை கடாட்ச்சத்தாலும்
இ ரா ஜ ம ணி மா லை
முற்றுப் பெற்றது.

---

இந்த இராஜமணிமாலை முன்னச்சிட்ட பிரதியிலே ஏழுவானம் பூமிபோற்
... வெழுத்துச் சொற்பிழைகளை யொருவாறு காளைஹசன் அலிப்புலவர்
அவர்களைக்கொண்டு மிலேசாகத் திருத்தி அச்சிடப்பட்டன.

British Press, Madras.

224311

# புத்தக விளம்பரம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இராஜமணி மாலை | 1 | 4 |
| முகியித்தீன் மாலை | 0 | 8 |
| டை இரண்டு புஸ்தகம் ஒன்ருய் சேர்ந்தது கலிகா பயிண்டு | 2 | 0 |
| சத்துரு சங்காரம் | 1 | 0 |
| மெஞ்ஞான ரத்தின லங்கார கீர்த்தனை | 0 | 12 |
| நாகை யந்தாதி மூலம் உரையும் | 0 | 8 |
| தேவரஹசியம் என்னும் மலை மாந்திரீகம் 3-பாகம் | 0 | 6 |
| **கதை புஸ்தகங்கள்.** | | |
| பாரிஸ்கதை கலிகோ பயிண்டு | 3 | 0 |
| பெரிய எழுத்து விக்கிரமாதித்தன்கதை கிளேஸ் | 3 | 0 |
| டை திக்கு கலிகோ பயிண்டு | 2 | 0 |
| மதனகாமராஜன்கதை | 0 | 6 |
| சித்ராபுத்திரன்கதை | 0 | 4 |
| கூலிக்கு தாலிகட்டினகதை | 0 | 4 |
| மதுரைவீரன்கதை | 0 | 2 |
| நாரிபட்டபாடு | 0 | 4 |
| தமிழறியும்பெருமாள்கதை | 0 | 2 |
| பொப்பிலிராஜன்கதை | 0 | 4 |
| ஆரவல்லிகதை | 0 | 4 |
| நளசக்கரவர்த்திகதை | 0 | 4 |
| நல்லதங்காள்கதை | 0 | 2 |
| கோவிலன்கதை | 0 | 4 |
| தேசிங்குராஜன்கதை | 0 | 4 |
| மயில்ராவணன்கதை | 0 | [illegible] |
| சிறுத்தொண்டபத்தன்கதை | 0 | 3 |
| புரூவசக்கரவர்த்திகதை | 0 | 4 |
| தென்னாலிராமன்கதை | 0 | 3 |
| **தமிழ் நாவல்கள்.** | | |
| கமலநாதன் | 1 | 4 |
| குலசேகரன் | 0 | 12 |
| அழகானந்தன் | 0 | 12 |
| மரகதசுந்திரம் | 0 | 10 |
| நித்தியானந்தன் | 0 | 6 |
| மேகவர்னன் | 0 | 8 |
| ஞானசம்பந்தம் | 1 | 0 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| பூலோகவிநோத கதை | 1 | 0 |
| டை 2-ம் பாகம் | 1 | 0 |
| டை 3-ம்-பாகம் | 1 | 0 |
| டை 4-ம் பாகம் | 1 | 0 |
| டை 5-ம் பாகம் | 1 | 0 |
| அஞ்சலாக்ஷி 2 பகம் | 2 | 4 |
| பத்மலோசனி | 0 | 12 |
| லீலா | 0 | 12 |
| சுந்தரன் | 0 | 12 |
| ஆனந்த சுந்தரி | 0 | 12 |
| கன்னியின் முத்தம் 1ம் பாகம் | 1 | 4 |
| ,, ,, 2ம் ,, | 1 | 4 |
| ,, ,, 3ம் ,, | 1 | 4 |
| ,, ,, 4ம் ,, | 1 | 4 |
| அம்புஜாக்ஷி | 1 | 12 |
| நீதிபாலன் | 0 | 12 |
| புருஷோத்தமன் சரித்திரம் | 0 | 10 |
| பன்னிரு நீதிக் கதைகள் | 0 | 10 |
| சிவானந்தன் | 0 | 10 |
| நீலகண்டன் | 0 | 14 |
| இரஞ்சிதசிங் | 0 | 10 |
| ஸரளா | 0 | 10 |
| இராமநாதன் | 1 | 0 |
| சாரதாம்பாள் சரித்திரம் | 0 | 8 |
| சுயப்பிரகாசம் | 0 | 8 |
| வத்ஸலா | 0 | 8 |
| இரத்தினபுரி ரகசியம் | 3 | 4 |
| நவரத்தினம் | 0 | 8 |
| ஜான்டிகிரிஸ்டோ 2.பாகங்கள் | 3 | 0 |
| மீனாக்ஷா .2பாகம் | 1 | 12 |
| இந்திராணி | 1 | 4 |
| இரங்கநாயகி | 1 | 4 |
| திரிலோக மோஹனாங்கி | 1 | 0 |
| இந்திரஜித்தன் | 1 | 0 |
| கோஹர்ஜான் | 0 | 8 |
| தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி | 1 | 0 |
| காலனைவென்ற கற்பகவல்லி | 0 | 12 |
| தலைவெட்டி தயாபரசுந்தரி | 0 | 12 |
| திணைத்தூங்கி தடிராமன் | 0 | 5 |
| நாட்டுபுறத்தான் நகரபிரவேசம் | 0 | 4 |

கேட்போர் வேண்டியவர்கள் அரையணு ஸ்டாம்பு அனுப்பினல் அனுப்பப்படும்.

இட்டா-சக்கரபாணி நாயுடு,

நெ-13, நம்புலையர் தெருவு, மதராஸ்.